1250

உ

சிவமயம்

# ஆரிய

# க்ஷத்திரியகுல விளக்கம்.

கிராமணி குலத்தைக் குறித்து
எழுதிய
ஓர் பிரபந்தம்.

இஃது
தண்டையார்ப்பேட்டை
விஜய துரைசாமி கிராமணி அவர்களால்,
இயற்றப்பட்டு

திருமயிலை
சா. பொன்னுசாமி ராஜா அவர்களாலும்,
த. விஜய இராஜரத்ன கிராமணி அவர்களாலும்,

சென்னை,
"புரோகிரஸிவ்" அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1910.

RS 1—4—0. *Copy Right Registered.* ரூபா க—ச—௦

## வெண்பா.

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும் (அறநெறிச்சாரம்)

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

---

காஞ்சிபுரம் மஹாவித்வான், மஹா-ள-ள-ஸ்ரீ,

## இராமசாமி நாயுடு அவர்கள்

இயற்றியது.

நலமேவுதண்டைநகர்வருமேகாம்பரவள்ளல்நற்றவத்தால்
தலமேவுவிஜயதுரைசாமிமால்தன்குலத்துத்தகவுசாண
குலமேவுநூல்கள்பலவினிதாய்ந்துக்ஷத்திரியகுலவிளக்கம்
நிலமேவத்தந்தனனாலிவன்சீர்த்தியெந்நாளுநிலவுமாதோ

---

சென்னை, வேப்பேரி

S. P. C. ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், மஹா-ள-ள-ஸ்ரீ,

## கா. நமச்சிவாயமுதலியார் அவர்கள்

இயற்றியது.

தண்டையார்ப்பேட்டைவருமேகாம்பரப்புனிதன்றவமாப்போந்து
பண்டையார்பலநூலுமுணர்விஜயதுரைசாமிப்பண்ணவன்றான்
அண்டினோர்துயர்தீரக்கண்டுமகிழ்சான்றோர்களடைவுமுற்றும்
விண்டிடுமோர்க்ஷத்திரியவிளக்கமெனப்பெயர்தந்துவெளியிட்டானால்.

---

தமிழ்ப்பண்டிதரும், சைவப்பிரசாரணருமாகிய

## மஹா-ள-ள-ஸ்ரீ, ஈக்காடு இரத்தினவேலு முதலியார் அவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கருத்தொண்டர் கரிசகன்று முத்திநெறி யெய்தவுயர் காமர் மேய [தம்முன்
திருத்தொண்டத் தொகைவிளங்கு மடியவரோன் பானெழுவர் சிறந்தோர்
மருத்தொண்டை வாய்மடவார் வதியெயின னூருதித்து மாற்றாரோட
வுருத்தொண்ட வளவள்வாட் படைபயிற்றி யதனில்வரு மூதியத்தால்.

சிவனடியர்க் கமுதூட்டித் திருநீற்றுப் பத்திமையைத் தினமுஞ்செய்தே
யவமகல வுறையேல்வை யவ்வினை செய் யதிசூர னாற்றா னையத்
தவனிடம்போ யறைகூவி வைகலிற்போர் செய்துபுலர் தருணநோக்கி.
யவனுதலி னீற்றைமறை கேடகத்தை யகற்றக்கண் டடியா னென்றே.

இன்னவன்மேல் வானோர்ச்சன் முறையலவென் றுயிர்நீத்த வேனாதிப்பேர்
மன்னவன்றன் மரபில்வரு மாட்சிமையான் பரிதிகுல மாண்பனுத்தித்
துன்னுமலர் மாலையினான் காசிபநற் கோத்திரமே துலங்க வந்தோன்
கன்னவிலோட் கட்டழகன் விஜயதுரை சாமிப்பேர்க் கல்வி வல்லோன்.

கண்டவர்க ளிறும்பூது நனிசிறப்ப வளனோங்கிக் கவினுலாய
தண்டலைய தருக்களெலாம் பெருக்கமுடனெருக்கமுறத் தகவினுற்ற
தண்டலைநன் னகரில்வரு மேகாம்ப ரக்குரிசில் தவப்பேறானோன்
விண்டளித்த க்ஷத்திரிய குலவிளக்கச் சிறப்பிதென விளம்பற் பாற்றே.

---

சென்னை தொண்டைமண்டலம் ஐஸ்கூல் தமிழ்த்தலைமைப் பண்டிதர்,
திருமழிசை - வீரசிம்மாசனமடம் ஸ்ரீ சாந்தலிங்க ஸ்வாமிகளாதீனம்
மஹா-ள-ள-ஸ்ரீ,

## வித்வான்-சிவப்பிரகாசையரவர்களியற்றிய

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

### குளகம்.

திருக்கமல வயன்வகுத்த வருணநான்கிற்
றிகழுற்ற விருசுடரின் வழியிற்போந்த
பெருக்கமுறு க்ஷத்திரிய ரிருவருள்ளும்
பெருஞ்சுடரா யிருளகற்றுஞ் சான்றோனுய
தருக்கறுமா யிரங்கிரணத் தரணிவர்ச
க்ஷத்திரிய மரபினராய்ச் சகத்திலங்கும்
வருக்கமுறு சான்றோர்தம் மாட்சியாட்சி
மற்றுமுள சேனைத்து மகங்கைமேவும்.

நெல்லியங்கனி யெனவே சுருதியாதி
நெடுநூர்காட் டனுபவநல் லுத்திக்கேற்ப
வெல்லையில்சீர் க்ஷத்திரியகுல விளக்க
மெனுநூலொன் றெழிற்சென்னை யிணையேசார்ந்த
வல்லையைய தனமடவார் பயிலுஞ்சோலை
வளர்தண்டை யார்பேட்டின் வாழுநல்லோன்
சொல்விரவி குலனுயர்கா சிபகோத்ரத்தன்
சூட்சிமிகு மேகாம்பர வள்ளலாற்றும்.

தவம்விளக்க வருபுதல்வன் சாற்றுமும்மைத்
தமிழ்விஜய துரைசாமித் தம்மனோர்தத்
துவம்விளக்க வெனவெழுதி யச்சிட்டானச்
சுயநூலின் பொருட்பொலிவுந் தொகுப்புங்காணும்

நவம்விளக்கு நற்புலவோ ரெழுத்துக்குற்றம்
நாடாமலின்னுமவன் பன்னூற்செய்தே
சிவம்விளக்குந் திறனுறுமா ருசிகூறின்
செப்புவதெ னந்நூலின் சிறப்பைமாதோ.

---

சென்னை, இராயபுரம், மஹா-ள-ள-ஸ்ரீ,

## வித்வான் A. S. ஜெகராவுமுதலியார் அவர்கள்

### இயற்றியது

புகழ்மேவு முடம்பினையே நாடிபலப் பலதருமம் புரியுமேலோர்
திகழ்மேவு சான்றோர்கள் சரிதமதைக் காட்டுபல சேரக்காட்டி [த்தி
அகழ்வாவரத் தாங்குநில மெனும்பொறையைத் தள்ளதா வடைந்தசீர்
மகிழ்மேவக் கொளும் விஜய துரைசாமி நாவலவன் வழங்கினுல்.

---

சென்னைப் பெரிமெட்டு,

சைவசித்தாந்தப் பிரசங்காமிருதம், மஹா-ள-ள-ஸ்ரீ,

## கந்தசாமிப்பிள்ளை யவர்கள்

### இயற்றியது.

மெய்த்திறத்து நூறன்னில் மேவுமுறையாற் காட்டி
பொய்திறத்தோர் கொள்கையைப் போக்க—க்ஷத்திரியப்
பேர்விளக்க நூறந்தான் பீடுபெறவே நின்றான்
ஏர்விஜய துரைசாமியே.

---

வித்துவான் அ. ச. ஜெகராவு முதலியாரவர்கள் மாணாக்கரும்
திருமயிலை செக்தோம் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்பண்டிதருமாகிய
மஹா-ள-ள-ஸ்ரீ,

## ம. செல்வநாத முதலியார் அவர்களால்

### பாடியது.

### எண்சீராசிரிய விருத்தம்.

பொன்னுலவு வான்றருவின் வண்மை காண்பான்
பொழிநறவ மலர்ப்பொழில்கள் விண்ணளாவும்
மன்னுலவு சான்றவர்சேர் தொண்டை நாட்டில்
வளர்தண்டை யார்பேட்டை யெனும்புரத்தோன்
கொன்னுலவு கசிபமுனி கோத்திரத்தோன்
குலவுகதிர் விண்மணியின் குலத்துதித்தோன்
மின்னுலவு கலைமாட்சி நிறையு ளத்தோன்
விஜயதுரை சாமியெனு மபிதா னத்தோன்

மூளுமகிழ் வுடன்பூதி சாதனத்தை
    முடியாத செல்வமென மதித்துயர்ந்த
நாளுமா தவர்பரவே னாதிநாத
    நாயனார் குலமகிழ விளக்க வேண்டி
நீளுமா வர்ச்சுபொறை யாகு மண்ணி
    னிலவுக்ஷத் திரியகுல விளக்க மென்றே
யாளுமொரு நூலியற்றி யெந்த ஞான்று
    மழியாத புகழுடம்பும் பெற்றா னம்மா.

---

திருவொற்றியூர், மஹா-ள-ள-ஸ்ரீ

## அகிலாண்டகிராமணியார் அவர்களால்

**இயற்றியது.**

**எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.**

நீற்றினைப்பொருளா யுணர்ந்துமெய்நீறு நிலவியமேனியைக்கண்டால்
ஏற்றுடைக்கடவு ளென்றுவீடடைந்த வேனாதிநாதனார்மரபிற்
றோற்றியவிஜய துரைசாமியென்போன் றுகளில்க்ஷத்திரியகுலவிளக்கந்
தேற்றமாய்தொகுத்துச் செப்பினனஃது சிறப்பினுஞ்சிறப்புடைத்தம்மா

---

திருமயிலை வித்துவான்

வெள்ளியம்பலப் பிள்ளையவர்கள் குமாரர், மஹா-ள-ள-ஸ்ரீ,

## சிவராஜப்பிள்ளையவர்களால்

**இயற்றியது.**

**எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.**

கண்ணுதலிற் கொண்டபிரான் கழலேபோற்றிக்
    கதியடைந்த வடியவர்தந் தொகையினுள்ளே
எண்ணரிய வாட்படையே பயிற்றி யேற்றோர்க்
    கொருதுணையா யிருந்துதவு மெமதேனாதி
விண்ணவன்றன் மரபிரவி மரபில்வந்த
    விஜயதுரை சாமியால் புலவோ ரேத்த
நண்ணரிய க்ஷத்திரிய குலவிளக்க
    நன்கியற்றிப் பல்சிறப்பு நண்ணினானே.

---

சென்னை ப்ரோகிரசிவ் பிரஸ் தலைவர்,

மஹா-ள-ள-ஸ்ரீ

## பு. வே. சபாபதி முதலியார் அவர்கள்

**இயற்றியது.**

பொன்னாட்டுப் புலவரொடு மண்ணாட்டுப் புலவர்குழாம் புகழுந்தொண்டை
நன்னாட்டின் வருமேலோன் விஜயதுரைசாமியெனு நளினச் செல்வன்
பன்னாட்டுச் சரித்திரமும் பழங்கதையுமாராய்ந்து பகர்ந்தநூலாம்
விண்ணாட்டு க்ஷத்திரிய குலவிளக்கமென்னாளும் விளங்கமாதோ.

---

# விஷயசூசிகை

முகவுரை.

இந்தியா ... ... ... ... 1
திராவிடர் ... ... ... ... 2
ஆரியர் ... ... ... ... 5
க்ஷத்திரியர் ... ... ... ... 9

நூல்

க. சூரியன் .. ... ... ... 2
சாக்ஷி என்பது சூரியனுக்குரிய பரியாயப்பெயர்களில் ஒன்றெனல். 2
சாக்ஷி என்பது சான்று என்று ஆகி, ஆண்பால் விகுதியைப்பெற்று சான்றான், சான்றோன் ஆகுமெனல் ... ... 4
சான்றோன் என்பது சூரியனுக்குரிய பலபெயர்களில் ஒன்றெனல். 5
கிராமணி என்னும் பட்டப்பெயரை அரிச்சந்திர மகாராஜன் அடைந்து வந்தானெனல். ... ... ... 10
கிராமணி என்னும் பெயர் அரசனைக் குறிக்குமெனல் ... 12
கிராமணி என்னும் பட்டப்பெயர் ஸ்ரீராமருக்குரியதெனல். ... 16
கிராமணி என்னும் பட்டப்பெயரை சிந்து தேசத்தரசர்கள் பெற்றிருந்தார்களெனல். ... ... ... 24
இருக்கிராமணி என ஸ்ரீராமரை அழைக்கப்பட்டதெனல். ... 27
தேவேந்திரனை சுரக்கிராமணி எனவும், ஸ்ரீராமரை நரக்கிராமணி எனவுங்கூறப்பட்டதெனல் ... ... ... 28
சீதை சூரிய குலத்தவள் எனல். ... ... ... 30
சான்றோர்மாது என்னும் பெயர் சீதைக்குரியதெனல் ... 31
சான்றோர் என்பது இடுகுறியால் சூரியனையும் காரணத்தால் அறிவுடையோனையுங் குறிக்குமெனல் ... ... 32
பரசுராமன் க்ஷத்திரியரை முற்றும் அழிக்கவில்லையெனல் ... 33
பரசுராமனால் சூரிய சந்திரகுலம் அழிக்கப்பட்டதெனவும், பிறகு அக்கினிகுலம் ஆபூமலையில் இருந்து உண்டானதெனவுங் கூறுவது தவறெனல். ... ... . 35
உ. சோழன் ... ... ... ... 40
இரணியவன்மனே சோழகுலத்திற்கு மூலபுருடனெனல் ... 42

தென்னாட்டின் பிரிவுகள் ... ... ... 45
சோழநாட்டின் எல்லை ... ... ... 46

௩. தொண்டன் ... ... ... ... 46
தொண்டநாட்டினெல்லை ... ... ... 51

௪. ஈழன் ... ... ... ... ... 54
மைசூரையே ஈழநாடு எனப்படுமெனல் ... ... 56
ஈழராஜன் மைசூரிலிருந்தே இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றதெனல் ... ... ... ... 60
இலங்கையும் அதன் பூர்வ குடிகளும் ... ... 62
இலங்கை யரசவம்ஸாவளி ... ... ... 64
விஜயனும் இலங்கையும் ... ... ... 65
ஈழராஜனும் இலங்கையும் ... ... .. 67
ஈழராஜனது கீர்த்தி... ... ... ... 71
ஈழராஜனால் இலங்கை ஈழம்; ஈழநாடு, ஈழமண்டலம் எனப்பட்டதெனல் ... ... ... ... 74
ஈழராஜன் சூரியகுலத்தவனெனல் ... ... ... 77
ஈழராஜனது காலம் ... ... ... ... 80
ஈழராஜன் ஆத்திமாலையை யுடையவனெனல் ... ... 85
ஈழராஜன் வளவன் என்னும் பெயரைப் பெறுவனெனல் ... 88

௫. ஏனாதிநாதநாயனார் ... ... ... ... 92
ஏனாதிநாத நாயனார் ஈழராஜன் வம்ஸத்திலுதித்தவரெனல் ... 93
ஏனாதிநாதநாயனார் சாக்ஷி குலத்தி லுதித்தவரெனல் ... 101
பக்தவிலாசம் பெரிய புராணத்திற்கு முதநூலெனல் ... 102
சான்றான் என்பது சான்றோன் ஆகுமெனல் ... ... 104
சான்றவன் குலம் எனினும் சான்றான் குலம் எனினும், சான்றோன் குலம் எனினும் சூரியகுலத்தையே தெரிவிக்குமெனல் 109
சூரியன் பெயர்கள் சூரியகுலவரசர்களைத் தெரிவிக்குமெனல் ... 120
உமாபதியார் தவறு ... ... .. ... 128
பெரியபுராணத்துள் கூறிய நாயன்மார்களுக்கு சேக்கிழார் திவாகர நிகண்டிற்கூறிய சாதிப்பெயர்களையே குலப்பெயர்களாக வளித்திருக்கின்றாரெனல் ... ... ... 133

௬. குலத்தொழில் ... ... ... ... 139
பார்ப்பார் அறுதொழில் ... ... ... 140
அரசர் அறுதொழில் ... ... ... ... 141
வணிகர் அறுதொழில் ... ... ... ... 144
வேளாளர் அறுதொழில் ... ... ... 145
ஏனாதிநாதநாயனார் சஸ்த்திரத்தொழிலை யுடையவரெனல் ... 147

சஸ்த்திரத்தொழில் அரசருக்குரிய அறுதொழிலில் ஒன்றெனல் .. 148

சஸ்த்திரமென்றால் வாள் வேல் வில் முதலிய ஆயுதங்களைக்குறிக்குமெனல் ... ... ... ... 149

ஏனாதிநாதநாயனார் வாட்டொழிலை உடையவரெனல் ... 153

ஏனாதிநாதநாயனார் வாட்பயிற்சியோடு வில்வேல்பயிற்சிகளினும் மிகவல்லுநர் எனல் .. ... ... 150

உபமன்னியரும் சேக்கிழாரும் ஏனாதிநாதநாயனாருக்கு ஆயுதத்தொழிலைக் குலத்தொழில் என்கின்றார்களெனல் ... 155

அரசருக்கு ஆயுதப்பயிற்சியே குலத்தொழிலெனல் ... ... 182

ஏனாதிநாதநாயனார் வம்சத்தவர்களை வாட்சுற்றத்தாரெனல் ... 175

பிராமணர் மறைச்சுற்றத்தாராவர் எனல் ... ... 192

வைசியர் வணிக சுற்றத்தாராவர் எனல் ... .. 193

வேளாளர் பயிர்ச்சுற்றத்தாராவர் எனல் ... .. 194

குயவர் மட்கலமாக்குஞ் சுற்றத்தாராவர் எனல் ... ... 194

ஏனாதிநாதநாயனார் வம்சத்தவர்கள் தோள்கொண்ட சுற்றத்தாராவர் எனல் ... ... ... ... 197

பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் பிரமாவின்முகம் தோள் தொடைபாதம் இவைகளில் பிறந்தார்களெனல் அவர்களின் தொழில்நோக்கியே யென்க ... ... 198, 202

பிராமண ருற்பத்தி ... ... ... 200

வைசிய ருற்பத்தி ... ... ... ... 201

சூத்திர ருற்பத்தி ... ... ... . 201

அரசர்களது குலத்தொழில் தோள்பலத்தில் நிற்றலால் அவர்களை தோள்கொண்ட சுற்றம் எனவும், (பாகுஜா) தோளர் எனவுங் கூறல் வழக்கெனல் ... ... ... 204

ஏனாதிநாதநாயனார் சூத்திரராயிருந்தால் ஆயுதத்தொழில் அவருக்கேற்படாதெனல் ... ... ... 218

தாழ்ந்தசாதியான் உயர்ந்தசாதித்தொழிலைச் செய்யின் அரசன் அவனைத் தண்டிப்பானெனல் ... ... ... 208

எ. சந்திரன் ... ... ... ... 219

கிராமணி என்னும் பட்டப்பெயரை புரூரவச்சக்கிரவர்த்திப் பெற்றிருந்தானெனல் ... ... ... 220

கிராமணி என்னும் பட்டப்பெயரை நளமஹாராஜன் பெற்றிருந்தானெனல் ... ... ... ... 221

அ. கிருஷ்ணன் ... ... ... ... 221

கிராமணி என்னும் பட்டப்பெயரை கிருஷ்ணன் பெற்றிருந்தானெனல் ... ... ... 222

௰. பாண்டியன் ... ... ... ... 222

பாண்டியன் துருவசு பரம்பரையி லுதித்தவனெனல் ... 223

பாண்டியன் சந்திரகுலத்தவனெனல் ... ... 224

௰௧. துருமஹாராஜன் ... ... ... ...

குருக்கிராமணி என திருதராஷ்டிர மகாராஜனையும், திரியோதனனையும் அழைக்கப்பட்டதெனல் ... .. 229

கிராமணிபட்டம் துரியோதனன் முதலியோருக் குண்டெனல் ... 230

௰௧. சேரன் ... ... ... ... 232

சேரன் குசநாபன் பரம்பரையி லுதித்தவனெனல் ... ... 233

சேரன் சந்திரகுலத்தவனெனல் ... ... ... 234

அரசருக்கு சூரிய சந்திர குலந்தவிர வேறுகுலம் இல்லை எனல் ... 236

௰௨. முடிவுரை ... ... ... ... 241

கலியில் மேற்குலத்தவர் கீழ்க்குலத்தவர் தொழிலைப் புரிவரெனல்... 242

இராஜாங்க மாறுதல் காலத்தில் எவ்வித ஆபத்தும் அரசகுலத்தவர்களுக்கே யேற்படுமெனல் ... ... ... 247


## அநுபந்தம்.


கிராமணிகள் ஆரிய வகுப்பினர்களெனல். ... ... 259

கிராமணிகள் க்ஷத்திரிய வம்ஸத்தவர்களெனல் ... ... 259

கிராமணிகள் சூரிய குலத்தவர்களெனல். ... ... 260

கிராமணிகள் சோழன் பரம்பரையர்களெனல். ... ... 260

கிராமணிகள் கசிபக் கோத்திரத்தவர்களெனல். ... ... 261

கிராமணி என்னும் பட்டப் பெயரை யுரியவர்களெனல். ... 261

கிராமணிகள் வசிஷ்ட வம்ஸத்தவர்களாகிய பிராமணரையே ஆசாரியராக வகித்திருக்கின்றார்களெனல். ... ... 261

கிராமணிகள் சோழனுக்குரிய தசாங்கத்தைப் பெறுவார்களெனல். 261

கிராமணிகள் சைவ சமயத்தவர்களெனல். ... ... 262

கிராமணிகள் படைத்தொழிலை யுரியவர்களெனல்,... ... 262

கிராமணிகள் காலபேதத்தால் பல தொழில்களை புரிந்து வருகின்றார்களெனல். ... ... ... ... 262

# இந்நூலில் மேற்கோளாக எடுத்தாண்ட நூற்களின் பெயர்கள்.

---

## கிரந்த நூற்கள்.

அமரம்
அலாயுத நிகண்டு
அகத்திய பக்தவிலாசம்
ஆபஸ்தம்ப ஸ்மிருதி
இருக்குவேதம், புருஷசூக்தம்
இரகுவம்ஸ காவியம்
உபமன்னிய பக்தவிலாசம்
கௌதம ஸ்மிருதி
சங்கலிகித ஸ்மிருதி
சைவபுராணம்
நீதிசாஸ்திரம்
பராசர ஸ்மிருதி
பகவத்கீதை
பிரஹஸ்பதி ஸ்மிருதி
புதஸ்மிருதி
மநுஸ்மிருதி
யாஞ்ஞவல்கிய ஸ்மிருதி
வால்மீகி ராமாயணம்
வியாச பாரதம்

---

## தமிழ் நூற்கள்.

அரிச்சந்திரபுராணம்
அருணாசலபுராணம்
அருணகிரிபுராணம்
அருணகிரிநாத சுவாமிகள் புராணம்
இரேவண சூத்திரம்
இலிங்க புராணம்
உரிச்சொல் நிகண்டு
ஏரெழுபது
கட்டளைக் கலித்துறை
கம்பர் தனிப்பாசுரங்கள்
கல்கி புராணம்
கம்ப ராமாயணம்
காசிகாண்டம்
குசேலோபாக்கியானம்
கூர்மபுராணம்
கோயிற்புராணம்
சதுரகராதி
சாதகாலங்காரம்
சாதி நூல்
சிதம்பர புராணம்
சிவநாமபஃறொடைவெண்பா
சீவக சிந்தாமணி
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்
சூடாமணி நிகண்டு
செவ்வந்திப் புராணம்
சேக்கிழார் நாயனார் புராணம்
தஞ்சைவாணன் கோவை
திருமந்திரம்
திருவிளையாடற் புராணம்
திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்
திவாகரம்
திருவாதவூரர் புராணம்
திருக்கழுக்குன்றப் புராணம்
திருவேற்காட்டுப் புராணம்

திருக்குறள்
தொல்காப்பியம்
நன்னூல்
நல்லாப்பிள்ளைபாரதம்
நம்பியாண்டார் நம்பியந்தாதி
நீதிவெண்பா
நைடதம்
பழனித்தல புராணம்
பாகவதம்
பிங்கல நிகண்டு
பிரமோத்தரகாண்டம்
புறநானூறு
புகழேந்தித் தனிப்பாசுரங்கள்
பெரியபுராணம்
பெருந்தேவனார் பாரதவெண்பா
பேரகராதி
வாயுபுராணம்
விஷ்ணுபுராணம்
வில்லிபாரதம்
விநாயக புராணம்
வெற்றிவேற்கை


---

## தெலுங்கு நூற்கள்.


அரிச்சந்திரோபாக்கியானம்
உத்தரராமாயணம்
குருபால ப்ரபோதிகா
சுவாரோசிஷ மநுசரித்திரம்
ஸ்ருங்கார நயிஷதம்
பாகவதம்
பாரதம்


---

## இங்கிலீஷ் நூற்கள்.


Ancient History of India by Acupia.
Assam District Gazetteer By B. C. Allen:
A Brief History of Indian people by W. W. Hunter.
A Statistical Accounts of Bengal, by W. W. Hunter.
Ancient India by Romesh Chunder Dutt.
Burma, Past and Present by Albert Fytche.
Bengal District Gazetteer by L. S. S. Omalley.
Biblical cyclopadia or Biblical Dictionary by John Eadie.
Census of India in 1901.
Chingalput District Manual.
Colebrook's Essay on the Religion.
Colebrook's Digest of Hindu Law.
Charles Wilkin's Bhagwat Gita.
Ceylon Observer.
Davy's Ceylon, Account of the Interior and its Inhabitants.
Dr. Rev. Caldwell's Lectures on Tinnevelly and the Tinnevelly Mission.

Essay on Hindu Caste by Rev. H. Bower.
Epitome of the History of Ceylon
Forbie's Eleven years in Ceylon.
Geography of Ceylon.
History of India by Pope.
History of British India by Hugh Murray.
History of India by Sinclair
History of India by Garrets.
History of India by Talboys Wheeler.
History of Ceylon.
Hindu Caste.
Halled's Code of Gentoo Laws, Vol. IV.
Ibid
Japan.
Journal of the Royal Asiatic Society. Vol. IV.
Kongu History.
Longman's School Geography.
Letters to Indian Youth.
Life in the Land of the Fire Worshippers.
Little Arthur's History of England by Lady call coott.
Madras Journal of Literature and Science. For the Session. 1849. 1850. 1877 to 1880, 1888-1889.
Mysore and Coorg by Lewis Rice.
Matters on Mirasi Right.
Mahavanso by George Turnour.
" L. C. Wijisinha.
Macnaughten's Hindu Law.
Montgomery Martin's Indian Empire.
Madura District Gazetteer.
Madura District Manual by J. H. Nelson.
Oriental Historical Manuscripts by W, Taylor.
On the Original Inhabitants of Bharatavarsa or India by Gustav Oppert.
Orme's History of the Hindustan.
Pondian coins.
Percival's English and Tamil Dictionary.
Rottler's Dictionary.
Rajavali.

Rajaratnacàri.
Rickard's India.
Rev. Trevor's India, Its Natives and Mission.
Salem District Manual by H. Lafanu.
South Arcot District Manual J. H. Garstin.
Sketches of Kazan.
The Manual of the Administration of the Madras Presidency.
The Industrial arts of India by Dr. G. C. M. Birdwood.
The Prem Sagur by W. Holling.
Tod's Rajasthan.
The Indian Companion or general Statistics of India.
The Tanjore Maharatta Principality.
Taylor's Catalogue Raisonne.
Tennent's Ceylon.
Turnour's Epitome.
The Modern Orator by Edmund Burke.
The Voyages and Adventures of Vasco-Da gama.
The Pictures of Women in many Lands.
The Land of the Perumall by Day.
The Buddhist code of Manu.
The Book and its story.
The Native states of India and their Princes
Wilk's History of Mysore.
Winslow's Dictionary
Wilson Sanskrit Dictionary
Webster's Dictionary
Wars of the Rajas by C. P. Brown
Ward s Account of the Hindoo

ORIENTAL MANUSCRIPTS' LIBRARY * MADRAS * GOVT



த. விஜயதுரைசாமி கிராமணி

(இந்நூலாசிரியர்.)

# முகவுரை.

எப்பொருளெத்தன்மைத் தாயினுமப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (திருக்குறள்)

I. இந்தியா:—சீர்பொலிந் தோங்கு மிந்நெடிய கடலால் சூழப்பட்ட "உலகத்தை" அங்கிலேயர் "ஆசியாகண்டம், ஆப்பிரிக்கா கண்டம், அமரிக்கா கண்டம், அவுஸ்டிரேலியா கண்டம், ஐரோப்பாகண்டம்*" என ஐந்து கண்டமாகப் பிரித்திருக்கின்றனர்கள். அவற்றுள் ஆசியா கண்டம் எல்லாமதங்களுற்பத்திக்கும், எவ்வித மனிதர்கள் பிறத்தற்கும், மற்றெவ்வித நாகரீகத் தொழிலுக்கும் காரண பூதமாயுள்ளது. அத்தகைய ஆசியாகண்டத்தின் ஓர் பகுதியாகிய தென்பாகத்தையே "பரதகண்டம்" எனப்படும். இதுவே ஆரியர்கள் உற்பத்திக்கும், வசித்தற்கும் இடமாயுள்ளது. இப்பரதகண்டம் "உத்தரபதம், இமயவருஷம், ஆரியவர்த்தம், தட்சணபதம்" என நான்காகப் பிரிக்கப்படும். இமயமலைக்கு வடபாகத்தை அதாவது தீபத்தை "யுத்தரபதம்" அல்லது "இளவத வருஷம்†" எனவும், இமயமலையை "இமயவருஷம்" எனவும், இமயமலைக்கும், விந்தியமலைக்கும் மத்தியிலுள்ள பாகத்தை "ஆரியவர்த்தம்" எனவும், விந்தியமலைக்குத் தெற்கிலுள்ள பாகத்தை "தட்சணபதம்" எனவும் பேசப்படும்‡. இந்தியாவை ஆசியாகண்டத்தின் மற்றத் தேசங்களிலிருந்து இமயமலை வரையறுக்கின்றது. "சம்புத்தீவு" எனினும், "இந்தியா" வெனினும், பரதகண்டத்

* இந்துக்கள் "கேதுமாலகண்டம், பத்திராச்சுவகண்டம், இரம்யகண்டம், இரண்மயகண்டம், குருகண்டம், கிம்புருடகண்டம், அரிகண்டம், இளாவிருதகண்டம், பரதகண்டம்." என ஒன்பதாகப் பிரிப்பர்.

† சூரியனது புத்திரருள் ஒருவனாகிய இளவதனால் ஆண்டமையால் இளவத வருஷமெனப்பட்டது.

‡ Vide P. 103 and 104. Ch. VII. Part II. Vol. I. Ancient History of India.

த்தையே தெரிவிக்கும்*. இது வடக்கில் தாத்தாரி, தீபத்தேசத்தையும்; கிழக்கில் பர்மதேசம், வங்காளக்குடாக்கடலையும்; தெற்கில் இந்து மகாசமுத்திரத்தையும்; மேற்கில் யவனக்கடல், ஆப்கான் தேசத்தையும் எல்லைகளாகவுடையது. இவ்வெல்லைக்குட்பட்டதையே ஆரியர்களால் வசிக்கப்பெறும் இந்தியா வெனப்படும்.

II. திராவிடர்:—இவர்கள் ஆசியாகண்டத்தின் கீழ்ப்பாகத்திலுதித்தவர்கள். அது சற்றேறக்குறைய சீனுவைச்சார்ந்த மங்கோலியாவில் ஆஷூர்நதியின் உற்பத்திஸ்தானமெனயூகிக்கப்படுகின்றது†. அவ்விடத்தில் உற்பவித்தமையால்தான் இப்பூர்வகுடிகள் "மங்கோலியர்" எனப்பட்டனர். இம்மங்கோலியா தீபத் சைனு முதலிய தேசங்களையே "சாகத்தீவு" எனப்படும். இதில் உற்பவித்தவர்களே தார்த்தாரி தீபத் தேசத்தில் வசித்து மங்கோலிய சித்திய வம்ஸத்தவர்களாகிய "திராவிடர்" ஆகுவர்.

"The Saka—Dwipa, or country north of Himalaya, we believe to have been the earlist cradle of the human race, in its renovations after the flood." Vide. p. 9. Appendix, A. Vol. II, of Tylor's Oriental Mss.

"இமயமலையின் வடதேயம் அல்லது சாகத்தீவை பிரளயத்திற்குப் பிறகு மனிதருற்பத்திக்கு வாஸஸ்தானமென நம்பப்படுகிறது." என்ருர் டைலர்துரை. இராவணுதி வம்ஸத்தவர்களும் சாகத்தீவினரே!

கம்பராமாயணம்,

உயுத்தியகாண்டம்,

படைகாட்சிப்படலம், 10-வது செய்யுள்.

சாகத்தீவினி னுறைபவர் தானவர் சமைத்த
யாகத்திற்பிறந் தியைந்தவர் தேவரை யெல்லாம்

---

* சிலகாலம்பொறுத்து உத்தரபசத்தை நீக்கி மற்றதையே "பரதகண்டம்" எனப்பட்டது.

† Vide. P. 19. Ch. II. Vol. I. Assam District Gazetteer by B. C. Allen, C. S. and Vide. P. 1. Ch. I. Vol. II. Burma. Past and Present, by Albert Fytche.

மோகத்திற்புக முடித்தவர் மாயையின் முதல்வர்
மேகத்தைத்தொடு மெய்யின ரிவரென விரித்தார்.

என்பதால் விளங்கும். திராவிடர்களேயே நூற்களில் இராக்கதர்களாகப் பாவிக்கப்படுகின்றது. இவர்கள் பிரமனது தாமத குண ரூபத்தினின்று பிறந்தமையால் கருநிறமேனியும், வஞ்சங் கொலை பொய்முதலிய பாவத்தொழிலும் பொருந்தப்பெற்றனர்* இறக்கமில்லாது ஜீவராசிகளை வதைக்குந் தொழிலால் இராக்கதர் எனவும், கிராதர் எனவுங் கூறப்பட்டனர்.

**கூர்மபுராணம், நவகண்டத்துறைவோர் இயற்கையுரைத்த வத்தியாயம், 17-வது. கவி.**

குடக்கினில் யவனர்வாழ்வர் குணக்கினிற் கிராதர்வாழ்வர்
அடுத்திடு நடுவண்வேத மறையவர் அரசர் நாய்கர்
ஒடிப்பில் சீர்ச்சதுர்த்தர் யாருந் தத்தம வொழுக்கின் வாழ்வர்
தடுப்பருநதிகள் குன்றப் பெயரிவை சாற்றலுற்றும்.

இச்செய்யுள் பூர்வகுடிகளது வாஸஸ்தானம் இந்துதேசத்தின் கீழ்ப்பாகமெனவரையறுக்கின்றது. அது "குடக்கினில் யவனர் வாழ்வர்குணக்கினிற் கிராதர் வாழ்வர்†" என்பதால் விளங்கும். இதனால் இந்தியாவிற்கு மேற்கில் யவனர் அதாவது துலுக்கரும், கிழக்கில் கிராதர் அதாவது பூர்வகுடிகளும் வசிக்கப் பெறுவர் எனப்பட்டிருத்தலால் பூர்வகுடிகளது வாஸஸ்தானமும் உற்பத்தியும் சாகத்தீவெனவே சாதிக்கப்படும். இந்தியாவின் கீழ்ப்பாகத்திலிருப்பது சீன பர்மதேசம் எனப்படும். இவைகள் சாகத்தீவின் ஓர் பகுதியே. அன்னரியர் சீன பர்மதேசத்தில் வசித்தமையாலேயே "தீபத் பர்மர்" என்னும் பெயரைப் பெற்றனர். இதனாலும் பூர்வகுடிகள் சாகத்தீவினரென விளங்கிற்று.

"The Non-Aryans or Aborigines:—The oldest dwellers in India consisted of many tribes, who, in the absence of a race-name of their own, are called the

---

* கூர்ம புராணம்.

† குணக்கு=கிழக்கு.
குடக்கு=மேற்கு. } சதுரகராதி.

Non-Aryans or aborigines*" Vide P. 33. Ch. III. of A Brief History of Indian people by W. W. Hunter.

“அன்னாரியர் அல்லது பூர்வகுடிகள் :—பூர்வகுடிகள் பல சாதிகளாகப் பிரிந்து சாதிப்பெயரைப் பெறுதற்குமுன் அன்னாரியர் அல்லது பூர்வகுடிகள் என்றழைக்கப் பெற்றனர்கள்” என அண்டர்துரை கூறுகின்றார். இவர்கள் பிறகு சிலகாலம் பொறுத்து மூன்று† வகுப்பினராகப் பிரிந்தார்களெனப் பட்டிருக்கின்றது. அவையாவன :—

க. திபத்பர்மர் :—சாகத் தீவிலிருந்து வடகிழக்கு வழியாய் இந்து தேசத்தில் பிரவேசித்து இமயமலைச் சாரலில் வசித்தவர்களையே “திபத்பர்மர்” எனப்படும்.

உ. கொல்லேரியர் :—சாகத்தீவிலிருந்து வடகிழக்கு வழியாய் பெங்காலில் பிரவேசித்து ஆரிய வர்த்தத்திலுள்ள குன்றுகளில் வசித்தவர்களையே “கொல்லேரியர்” எனப்படும்.

ங. திராவிடர்‡:—சாகத் தீவிலிருந்து வடமேற்கு வழியாய் பஞ்சாப்பில் பிரவேசித்து இத் தென்தேசமலைகளிலும் அதை யடுத்த ஊர்களிலும் வசித்தவர்களையே “திராவிடர்” எனப்படும்.

ஆகிய இம்மூன்று வகுப்பினர்களும் பிறகு தொழிலாலும், இடத்தாலும், பாஷையாலும், ஆச்சாரியராலும், நிறத்தாலும், விவாகபேதத்தாலும் பல குலத்தவர்களாகப் பிரிந்தனர்கள். இவர்களுக்குப் பிறகு குடியேறிய ஆரியர்கள் இப் பூர்வகுடிகளை “தஸ்ஸு” என்று அழைத்தனர். இவர்களை வேதாதிகள் “தஸ்ஸு” என்றும், புராணாதிகள் “சித்தியர்” என்றும் புகல்கின்றன. “தஸ்ஸு” என்றால் “சத்ராதிகள்” அல்லது “அடிமைகள்” என்னும் பொருளைப் பயக்கும்§. இவர்கள் ஆரியருக்கு எதிர்

* Vide P. 32. Ch. II. Hunter's Brief History of Indian people.

† Vide. P. 62. 109. Longman's School Geography; and P. 41. Ch. III. Hunter's Brief History of Indian people.

‡ Vide. P, 42. Ch. II. On the Original Inhabitants of Bharatavarsha or India.

§ The victorious Aryans called the early tribes "Dasyus" or "enemies" and "Dasas" or "slaves." Vide. P. 33. Ch. III A Brief History of the Indian people. and P. 40 and 41. Ch. I. On the Original Inhabitants of Bharatavarsha or India (The Madras Journal for the session 1887—88).

மறை அல்லது விரோதிகளாதலால் "அன்னாரியர்" என்றறையப் பெற்றனர்கள். இக்கருத்தை யுட்கொண்டே இம்மங்கோலிய சித்திய வம்ஸத்தவர்களை "கெட்ட" என்னும் பொருளைத் தரர்நின்ற "துர்" என்னும் பதத்தைச்சேர்த்து (துர் + ஆரியர்) "துராரியர்" என்றழைக்கப்பட்டது. இத்துராரியர் என்பது நாளாவர்த்தியில் "துரானியர்" ஆகி, பிறகு "திராவிடர்" என மருகியது. இத்திராவிடர் ஆரியர் இந்தியாவில் பிரவேசிப்பதற்கு முன் மாட்சிமையோடு புழங்கப்பட்டு ஆரியர் பிரவேசித்ததும், மலைகளிலும், குகைகளிலும் வசிக்க நேரிட்டது*.

III. ஆரியர்:—இவர்கள் இந்தியா அல்லது பரதகண்டத்திற்கு வடக்கெல்லையாகவுடைய இமயமலையில் உற்பவித்தவர்களெனப்படும். அதை சில வேதுக்களால் தீர்மானிக்கப்படும்†. அவை யாவன:—

க. பரதகண்டம் நான்காகப் பிரிக்கப்பட்டு, இமயமலையின் வடசாரலை இளவதவருஷ மெனவும், தென்சாரலை ஆரிய வர்த்த மெனவும், மத்திய பாகத்தை இமயவருஷ மெனவும், புராணதிகள் சம்மதிப்பதாலும்; அவற்றுள் இளவதவருஷ மெனப்படும் இமயமலையின் வடசாரல் தேவர்களாலும், கந்திருவர்களாலும், ருஷீஸ்வரர்களாலும் வசிக்கப்பெற்றதாக ஸ்மிருதியாதிகள் வரையறுப்பதாலும், இவ்வேதுவை முன்னிட்டே அம்மேருவை "சுராலயம்" (ஸுராலயம்) சுரர்=தேவர், ஆலயம்=இடம்; சுராலயம்=தேவர் வசிக்கும் இடம் எனவும், அதில் உற்பத்தியாகி வருங் கங்கா நதியை "சுரநதி" எனவுங் கூறப்பட்டதென அமரத்தார் அறைவதாலும்; இச்சுராலயமாகிய மேருவின் சிகரங்களாகிய "குமடு, இமயம், ருத்ரு, கைலை‡" இவைகளின் மத்தியில் சிருஷ்டிக்குக் காரணமாகிய பிர்மபுரி பிரகாசிப்பதாலும், இப்பிர்மபுரி

* Vide. P. 34. Ch. I. of History of India by Pope, and P. 37, 38. Ch. I On the Original Inhabitants of India or Bharatavarsha.

† Vide. P. 70 to 73. Ch. IV. Part II. Vol. I. Ancient History of India.

‡ Vide. P. 20. ch. I. History of British India by Hugh Murray, and P. 21. Introduction of History of India by Pope.

யிலேயே நவ் பிர்மாக்கள் வசித்து ஜீவராசிகளை உற்பத்தி செய்திருக்க வேண்டுமென யூகிக்கப்படுவதாலும்; நவ் பிர்மாக்கள் வசித்ததனாலேயே அப்பாகம் பிர்மபுரியென்னும் பெயரைப் பெற்றிருக்கவேண்டுமென விளங்குவதாலும் ; இமயமலையே ஆரியர் உற்பத்திக்கு மூலமெனத் தெளிவுபெறும்.

உ. இளவத வருஷம் அதாவது தீபத்தை சூரியனின் இளைய குமாரனாகிய இளவதன் ஆண்டதென விளங்குவதாலும் ; சூரியன் தன் இராச்சியத்தை இரண்டாகப் பங்கிட்டு இமயமலையின் வடசாரலை இளவதனுக்கும், தென்சாரலை வைவஸ்வதனுக்கும் கொடுக்கப்பட்டதெனக் கூர்ம புராணம்* கோஷிப்பதாலும்; இவ்விருபாகமாகிய இளவதவருஷத்திற்கும், ஆரியவர்த்தத்திற்கும் மத்தியபாகமாக நிற்பது இமயமலையென விளங்குவதாலும் இமயமலையே ஆரியருற்பத்திக்கு மூலமெனத் திடப்படும்

ங. ருக்குவேதத்தில் சில மலையினது சமப்பரப்பில் ஆரியர்கள் கல் வீடுகளையும், கற்கோட்டைகளையும் கட்டினதாக வாசிக்கின்றோம். அம்மலை இமயமலையே! அதிலேயே அக்கட்டடங்கள் நாளதும் காணப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இதனாலும் ஆரியருற்பத்திக்கு இமயமலையே மூலமென முந்துகின்றது.

ச. ஆரியர் உற்பத்தி சம்புத்தீவிற்கும், சாகத்தீவிற்கும் மத்திய பாகமெனக் கூறுவர். அம்மத்திய பாகமாக நிற்பதும் இமயமலையே! இந்தியாவை சம்புத்தீவுயெனவும், தீபத் மங்கோலியாவை சாகத்தீவுயெனவுங் கூறுவர்.

ரு. "The Aryans entered India from the colder north, and prided themselves on their fair complexion." Vide, P, 33. Ch. III. A Brief History of the Indian people by Hunter.

"ஆரியர்கள் குளிர்ச்சியுள்ள இந்தியாவின் வடபாகத்திலிருந்து இந்தியாவில் பிரவேசித்தனர்" என்றனர் அண்டர்துரை. இப்

---

* சூரியன் மரபுரைத்த வத்தியாயம், 4-வது செய்யுள் காண்க.

பகுதியிற் கூறும் வடபாகம் இமயமலையே! அதுவே இந்தியாவிற்கு வட வெல்லையாக நிற்பது.

சு. சுரகெங்கை கைலையிலிருந்து கொண்டுவந்ததாக சம்பிரதாயம்* கைலைமலை ஓர் சிகரமாக நிற்பதும், கெங்காநதி† உற்பத்திற்குக் காரணபூதமாயுள்ளதும் இமயமலையே.

எ. சிந்துநதி, பிர்மபுத்திரநதி, கெங்காநதி இவைகளின் உபநதிகளின் சங்கமத்தில் ஆரியர்உற்பத்தியெனயூகிக்கப்படுகின்றது. மநு‡ சொல்லுகிறபிரகாரம் சரஸ்வதி நதிக்கும், திருஷத்துவதி நதிக்கும் மத்தியபாகமெனவும்; இப்பாகத்தையே பிர்மவர்த்தம்§ எனவுஞ் சொல்லுகிறார். இந்நதிகளின் உற்பத்தி ஸ்தானத்திலேயே "கைலைமலை" எனவும், "ருத்ருமலை" எனவுங் கூறும் மலைகளுள்ளது. உயர்வும், உன்னதமும், அழகும், மாட்சிமையும் பொருந்திய "கைலைமலையில்$" ஜெகதீசன் எழுந்தருளியதற்கும் பிர்மபுரியில் ஜெகஜீவபரங்கள் தோற்றியதற்கும் இலக்காய் நிற்றலோடு, மேற்பகுதிகளும் இமயமலையையே குறிக்கின்றமையால் ஆரியர்கள் உற்பத்திக்குக் காரணபூதமாயுள்ளது இமயமலையெனவே நாட்டப்படும்.

ஆனால் சிலர் ஆரியர் உற்பத்தி மத்திய ஏஷியாவில் எனவும், சிலர் இந்துகுஷ்மலையில் எனவும், சிலர் காக்கஸஸ் மலையில் எனவுங் கூறுவர்¶. அவ்விதங் கூறுவதற்கு நூற் சான்றில.

இமயமலையின் சிகரங்களாகிய குமடு, இமயம், மேரு, ருத்ரு, கைலை இவைகளை எல்லைகளாகவுடைய பிர்மபுரியில்பிரக்கியாதியும், மாட்சிமையும்பெற்ற முதலரசன் அதாவது வைவஸ்வதமநு உற்பவித்தனன். இவன் குலத்தவர்களாகிய ஆரியர் தகுந்த பூமியை சுவா

---

* Vide P. 23. Introduction of History of India by Pope.

† Vide, P. 28. Vol. I. A Statistical account of Bengal.

‡ மநுஸ்மிருதி, 2-வது அத்தியாயம், 17-வது சுலோகம் காண்க. Vide P. 2. Ch. I. History of India by Sinclair.

§ Vide, P. 35. Ch. I. of History of India by Pope.

$ பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, 1-வது செய்யுள்.

¶ "No record of the existing Aryan literature shows that either the Hindu-Kush or the Central Asia, or the plateau of the Caucasus was their first home." Vide. P. 67. Ch. IV. Part II. Vol. I. The Ancient History of India.

தீனமாக்கிக்கொள்ள இந்துநதிக் கரையோரமாக அணியணியாய் வடமேற்குக் கணவாய் வழியாக* திராவிடர் அல்லது அன்றியர்களைத் துரத்திக்கொண்டு சம்புத்தீவெனப் பெயர்பெறும் இந்தியாவில் பிரவேசித்து இந்துநதியின் மேற்குக்கரையில் வசித்தனர்†. இதனால் இந்துக்கள் என்னும் பெயரைப் பெற்றனர். பிறகு சிந்து அல்லது இந்துநதியைக் கடந்து, இமயமலைக்கும் விந்தியமலைக்கும் மத்தியிலுள்ள பாகத்தை யாண்டமையால் அப்பாகம் "ஆரியவர்த்தம்" (ஆரிய+அவர்த்தம்=ஆரியர்களால் நிறைந்தது) எனப்பட்டது‡. இதை அமரத்தார் "ஆரியாவர்த்தா புண்ணியபூமி" என்பர். பாரசீகர் "இந்துஸ்தானம்" என்பர். ஆரியர்களால் துரத்தப்பட்ட திராவிடர்கள் விந்தியமலைக்குத் தென்பாகத்தில் வசித்தலால், இத்தென்பாகம் "திராவிடம்" எனப்பட்டது. இத்திராவிடதேசமும் சிலகாலத்திற்குப்பிறகு ஆரியர்களாகிய சூரியகுல இரணியவன்மன் பரம்பரையில் "சோழன், ஈழன், தொண்டன்" என்னுமரசர்களுதித்து, இத்திராவிடத்தின் ஓர் பகுதியை "சோழமண்டலம், ஈழமண்டலம், தொண்டமண்டலம்" என வகுத்தும், சந்திரகுல துருவசு பரம்பரையில் "பாண்டியன்" உதித்து, இத்திராவிடத்தின் மற்றோர்பகுதியைப் "பாண்டியமண்டலம்" என வகுத்தும்; சந்திரகுல குசநாபன் பரம்பரையில் "சேரன்" உதித்து, இத்திராவிடத்தின் மற்றோர்பகுதியை "சேரமண்டலம்" என வகுத்தும் அரசாண்டனர்கள். ஆகிய இவ்வேதுக்களால் ஆரியர்கள் இமயமலையிலுதித்து, இந்துதேசம் முழுமையும் கைக்கொண்டாண்டனர்கள் எனச் செவ்வனே துலங்குகின்றது.

---

* Vide. P. 43, 44. Ch. IV. Hunter's Brief History of Indian people, and P. 37. Ch. I. On the Original Inhabitants of India or Bharatavarsha.

† "The Vedas mention the Aryans as living in the "Sapta Sindhava," or "The country of the seven rivers," the modern Punjaub. These seven rivers are the Indus, Vitastah (Jhelum) Asiknee (Chenaub), Irauvatee (Rauvy), Vipaushah (Beas), Shatadroo (Sutlej), and Saraswatee (Sarsooty). Vide P. I. In footnote Ch. I. Vol I, of Manual of The Administration of The Madras Presidency in 1885.

‡ மநுஸ்மிருதி, 2-வது அத்தியாயம், 22-வது சுலோகம் காண்க.

IV. க்ஷத்திரியர் :—ஆரியர்கள் "சாதிபேதம், சமயபேதம்" என்னும் இருபேதத்தையு மனுசரித்துவந்தனர். இதை புராணாதிகளுஞ் சமயபேதத்தின் உயர்வு தாழ்வுகளை விளக்கி, அதோடு சாதிபேதத்தின் உயர்வு தாழ்வுகளையும் விளக்குகின்றது. சாதியினுஞ் சமயமே யதிகம். என்றாலும் உலகத்திற்கு சாதிமேன்மை வேண்டுவது ஆவசிகமாதலால் அதைக் கருதியே "சூதசங்கிதை, சைவ புராணம்" முதலிய புராணாதிகள் புகல்கின்றன. அவற்றுள் மோட்சவுயர்வுக்குச் சமயமும், உலக உயர்வுக்குச் சாதியும் பொருந்தற் பாலது. இருப்பினும்,

தேவாரம்.

சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென்செய்வீர்
பாத்திரஞ் சிவமென்று பணிந்திரேன்
மாத்திரைக்கு ளருளு மாற்பேறரே.

என்னும் ஞானசம்பந்தர் வாக்கால் பிரயோஜனமற்றதெனத் தெளியினும் "வளம்படவேண்டாதார் யார் யாருமில்லை" என்பதையொத்து, இவ்வுலக வுயர்வுக்கு "சாதி" என்பது ஓர் படித்தரமாய் நிற்றலால், அதை ஒருவாறு விவகரிக்கத் துடங்கினம்.

ஆரியர்கள் சாதியால் "பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்" என நான்கு பெரும் பிறிவினையுடையவராகுவர். ஈண்டு விசாரிக்கத்துடங்கியது க்ஷத்திரியகுலத்தையே யாதலால், பிறகுலத்தைப்பற்றி எழுதாது விட்டனம். ஆரிய க்ஷத்திரியர்களும்* "சூரியகுலத்தவர் †, சந்திரகுலத்தவர்" என இரு வகுப்பினராகுவர்.

* Vide. P. 38. The Industrial Arts of India, by Dr. G. C. Mr. Birdwood.

† கிரேக்கதேசத்து அரசர் தங்களை "யூப்பித்தர்" (சூரியன்) தேவனுடைய பிள்ளைகளென்றும், தென் அமரிக்காவி லுள்ள பெரு தேசத்திற்குரிய இங்கா (Incas) வரசர்கள் தங்களைச் சூரியவம்சத்தவர்கள் என்றும் கூறுவதால், ஆரியர்கள் சம்புத் தீவில் நுழைந்ததைப்போல் பிறத்தீவிலும் பரவியிருப்பர். அப்படிப் பரவியது கிறிஸ்து பிறப்பதற்கு 3000 வருடத்திற்கு முன்னென யூகிக்கப்படுகின்றது. Vide. P. 79. Ch. VII. Hunter's Brief History of Indian people and P. 137. No. 37. Vol. XVI. The Madras Journal of Literature and science in, 1850.

இவர்களுள் வடதேசத்தில் இராஜ்யபாரஞ் செய்த ஸ்ரீராமர் முதலி னோரையும், தென்தேசத்தில் இராஜ்யபாரஞ் செய்த "சோழன், ஈழன், தொண்டன்" முதலினோரையும் சூரியகுலத்தவர்களெனச் சொல்லப்படும். இதுவே ஆரிய நூற்களின் துணிபு. இச்சோழன் ஈழன்வம்சத்திலுதித்தவர்களே சான்றோன்குலக்* கிராமணிகள்† எனப்படுவர். இச்சூர்யகுலக் கிராமணிகள் கலியுகதருமத்தால் அர சிழந்து "மேற்குலத்தர் தொழில் வாணிபமாதிவெய்ய தன்மை பல செய்குவர்" என்னும் பாரதப்பனுவலை யொத்தும், மநுவும்,‡ பிரகஸ்பதியும் "ஆபத்துக்காலத்தில் க்ஷத்திரியன் தனக்குக் கீழ்ப் பட்ட சாதியான் தொழிலைசெய்து பிழைக்கலாம்" என்பதற் கிணங்கவும், இக்கிராமணிகள் பலதொழில்களை வயற்றின் ஜீவ னார்த்தத்தின் பொருட்டு புரிந்து வரலாயிற்று. அதனால் இவர்களை க்ஷத்திரியர் என்பதற்குச் சந்தேகப்படுதலோடு, பலவாறாகவும் கூறுகின்றனர்கள். இதோடு,

In wilk's History of Mysore, vol. I. P. 231. We read thus :—"These ceremonies are reserved for the three higher castes only ; and of these, the second is entirely extinct." again in P, 179. "The second pure Caste (Kshatriya Caste) has become extinct."§

"இந்தக் கிரிகைகள் பிர்ம க்ஷத்திரிய வைசியர் என்னும் முக்குலத்தவர்களுக்கே ஏற்படுத்தப்பட்டது, இவர்களுள் இரண் டாவது சுத்தசாதி அதாவது க்ஷத்திரியசாதி முற்றும் அழிந்து விட்டது."

என அங்கிலேயர் அறைவதால் அம்மயக்கங் கெடும்பொருட் டும் ; கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் தாம்பாடிய சேக் கிழார் நாயனார் புராணத்துள் தம்குண அழுக்கின் குறையை வெளி

* சான்றோன்குலம் = சூரியன்குலம் (நிகண்டு)
= சான்றோன்குலம் (நன்னூல்.)

† கிராமணி = அரசன்
= அதிபதி
= சிரேஷ்டன் } அமரம்

‡ மநுஸ்மிருதி 10–வது அத்தியாயம் 95–வது சுலோகம் காண்க.

§ Vide. P. 5. Ch. I. Essay on Hindu Caste.

யிட்டிருத்தலால், அத்தெளிவின்மை யொழியும்பொருட்டும்; இவ்விந்துதேசத்தின்கண் ஜாதிபேதம், சமயபேதம் என்றிரு வகைப் பேதங்களின் உயர்வு தாழ்வுகளை விளக்கிக்காட்டுவது நூற்களே யாதலால், அந்நூற்களின் ஆதாரவைக்கொண்டும், "மண்ணியறிப மணிநலம்" என்பதை யொத்து, நெடுநாளாக மாசுபடர்ந்து கிடந்த மாணிக்கத்தைக் கண்டெடுத்தவன் அதை பிரகாசம்பெறத் துலக்கிக்காட்டு தலைப்போலும்; நெடுநாளாகத் தூர்ந்துகிடந்த கிணத்தைக் கண்டுபிடித்தவன் தூரெடுத்து அதன் நீரை யுண்ணுதலைப் போலும், வடுகு மகமதிய அரசர்களால் பீடிக்கப்பட்டு, தாழ்ந்த ஸ்திதியை யடைந்திருக்கும் கிராமணி குலத்தவர்கள் சூரியகுல க்ஷத்திரிய வம்ஸத்தவர்கள் என மகிமைபெறத்துலக்குவம். நாம், எவ்விஷயத்தை எடுத்துரைப்பினும் அவைகள் நியாயசமூகத்தில் புராதனநூற்களுக்கு மாறுமல் நிலைத்து நிற்பதுதான் கனம்பெறும். ஆகையால் யாம் கூறத்துடங்கியதும் நியாயவாதிகள் சமூகத்தில் கனம்பெறுவதேயுசிதம். இனி ஆன்றோர்களுக்கு வந்தனம் அளித்து யாம் எழுதிய "ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம்" என்னும் பிரபந்தத்தைப் பிரகாசப்படுத்துவாம்.

உ

சிவமயம்.

# ஆரிய
# க்ஷத்திரியகுல விளக்கம்

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (திருக்குறள்)

## முதலத்தியாயம்.

மங்களகரமானதும்; இந்திரியங்களால் தெரிந்துக்கொள்ள முடியாததும்; முடிவற்றதும்; காரணாந்தரா பேக்ஷையற்றதும்; உபமானமற்றதும்; பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், சப்தம், அர்த்தாபத்தி, அநுபலப்தி என்கிற ஆறுவித பிரமாணங்களைக் கடந்ததும்; எல்லாவற்றிற்குங் காரணமாயுள்ளதும்; எல்லாவற்றிற்கும் மேலானதும்; விகல்பமற்றதும் ஆகிய சிவம் ஆதியில் பிர்ம, விஷ்ணு, ருத்திரன் என்கிற திரிமூர்த்திகளைத் தோற்றுவித்தார். திரிமூர்த்திகளில் ஒருவரான பிர்மாமூலமாக நவபிர்மாக்கள் உதித்தனர். நவபிர்மாக்களுள் மரீசி அத்திரி என்பவர்கள் இருவர்.

### I. சூரியன் பரம்பரை. *




* Vide. P. 213 to 217 and 228 to 230. Vol. I. Oriental Historical Manuscripts.

## க. சூரியன்.

1. மரீசி பிர்மாகலையினிடமாக காசிபரையளித்தனர். காசிபருக்கு * விவசுவான் என்னுஞ் சூரியன்பிறந்தான். இச் சூரியன் வம்ஸத்திலுதித்தவர்களேயே சூரியகுலத்தவர் எனச் சொல்லப்படும்.

அமரம்.

பிரதமகாண்டம், வ்யோமவர்க்கம் 103-வது சுலோகம்.

கர்மஸாக்ஷீ ஜகச்சக்ஷு:
ரஶ்மிமாலீ த்ரயீதநு:

கர்மசாக்ஷி ஜகச்சட்சு
ரம்ஸமாலீ த்ரயீதநு:

அலாயுத நிகண்டு.

கர்மசாக்ஷித் சாக்ஷிணக
துவாதஸாத்மா: திவாகர:

இவ்விரு சுலோகங்களும் "கர்மசாட்சி" என்பதை சூரியனுக்குரிய பல பெயர்களில் ஒன்றென விளக்குகின்றது.

கர்மம்=கர்மங்களுக்கு
சாட்சி=சூரியன்

சூரியன் கர்மங்களுக்குச் சாக்ஷி†யாய் நிற்றலால் "கர்மசாட்சி" எனப்பட்டது.

வால்மீகராமாயணம், யுத்தகாண்டம் 107-வது சர்க்கம்,
ஆதித்யஹ்ருதயம், 21-வது சுலோகம்.

త ప్తచామీకరాభాయ వహ్నయే విశ్వకర్మణే।
నమ స్తమోభి నిఘ్నాయ రుచయేలోకసాక్షిణే॥

தப்தசாமீக ராபாய வஹ்நயே விஸ்வகர்மணே: |
நமஸ்தமோபிநி க்நாயருச்யே லோகசாக்ஷிணே: || *

---

* கசிபுருஷி சூரியகுல வரசருக்கு மூலபுருடனாதலால், இச்சூரியகுல கிராமணிகளை நாளதும் கசிபக் கோத்திரத்தவர் எனவும், சூரியனுக்கு பாஸ்கரன் என்னுமொரு நாமதேயமிருத்தலால் பாஸ்கரக் கோத்திரத்தவர் எனவுங் கூறிவருதல் வழக்கு.

† குருபால ப்ரபோதிகாவில் "కర్మలసాక్షి" எனப்பட்டிருக்கிறது.

(இ-ள்,) உருக்குப் பொன்னுருவமானவனும், வன்னிவடிவமாகி அவிஸ்ஸையேற்பவனும், எல்லாவற்றையும் படைப்பவனும், அஞ்ஞானந்தகாரத்தை யோட்டுகின்றவனும், ஸ்வயம்ப்ரகாசமானவனும், லோகசாட்சியுமான உனக்கு நமஸ்காரம். என்று சூரியனைப் பூஜித்து வணங்கல் வேண்டுமென அகஸ்தியர் ஸ்ரீராமருக் குபதேசித்தனர்.

## திவாகரம்.

பனிரெண்டாவது தொகுதி.

வைகத்தன் விவச்சுதன் மார்த்தாண்டன் பாற்கர,
னிரவியுலோகப் பிரகாசனு லோகசாட்சி.

இவ்விரு பிரயோகமும் "லோகசாட்சி" என்பதை சூரியனுக் குரிய பல பெயர்களில் ஒன்றென விளக்குகின்றது.

லோகம்=உலகங்களுக்கு
சாட்சி=சூரியன்

லோகசாட்சி = The Divine being;
= The Universal Witness. (Rottler.)
(Winslow).

சூரியன் உலகங்களுக்கு சாக்ஷியாய் நிற்றலால் "லோகசாட்சி" எனப்பட்டது.

"கர்மசாட்சி" என்பதும், "லோகசாட்சி" என்பதும் முதற் குறைந்து "சாக்ஷி" என நின்றும் சூரியனைத் தெரிவிக்கும். அது செங்கதிரோன் என்பது முதற்குறைந்து கதிரோன் என நின்றும் சூரியனைத் தெரிவித்ததைப்போலென்க.

இப்பகுதிகளில் வரும் சாக்ஷி என்பது சூரியனுக்குரிய பல கிரந்தப் பெயர்களுள் ஒன்றென விளங்குகின்றது. இதனால் சூரியன்மரபிலுதித்த அரசர்களை "சாக்ஷி குலத்தவர்" எனினும் ஒக்கும். இது வடநூன் முடிபு. இவ்வேதுவை யனுசரித்தே சூரியகுல கிராமணி வம்ஸத்தவராகிய ஸ்ரீமத் ஏனாதிநாத நாயனாரை பக்தவிலாசத்தில் (ஸாக்ஷீக-லொத்ஹவ:) "சாக்ஷிகுலோத்பவா" எனக் கோஷித்தனர் ஸ்ரீமத் உபமன்னியு மகருஷி.

"சாக்ஷி" என்னும் கிரந்த பதத்திற்கு தமிழ்ப் பிரதி பதம் "சான்று" எனப்படும். இச்சான்று என்னும் பதம் "அன் ஆன் அள் ஆள் அர் ஆர்" என்னு நன்னூற் சூத்திரவிதியை யேற்று, "சான்று + ஆன்" என நின்று, "தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்" என்னும் விதியை யேற்று, நிலைமொழியின் யீற்றுகரங்கெட்டு வருமொழியின் ஆகார உயிரேறி "சான்றான்" என வாட்சிபெறும்.

தொல்காப்பியம்.

"ஆ ஓவாகும் பெயருமாருளவே
யாயிடனறிதல் செய்யுளுள்ளே."

நன்னூல், பொதுவியல்.

353-வது சூத்திரம்.

பெயர்வினையிடத்து னளரயவீற்றயல்
ஆ ஓவாகலுஞ் செய்யுளுளுரித்தே.

(இ-ள்.) "பெயர்க்கண்ணும், வினைக்கண்ணும், னகார, ளகார ரகார, யகார ஈற்றயல்நின்ற விகுதி முதல் ஆகாரம் ஓகாரம் ஆதலும் செய்யுளிடத்துரித்தாம்," என்பதாம்.

இச்சூத்திர விதிகளால் அச் "சான்றான்" என்பது "சான்றோன்" எனவாகும். அது "வில்லான்" என்பது "வில்லோன்" என வாதலைப்போலும், "நல்லான்" என்பது "நல்லோன்" என வாதலைப் போலும், "சென்றான்" என்பது "சென்றோன்" என வாதலைப்போலுமென்க. அப்படியாகிய "சான்றோன்" என்பது சூரியனுக்குரிய பல பெயர்களுள் ஒன்று.

திவாகரம்.

தெய்வப்பெயர்த் தொகுதி.

சூரியன் பெயர்.

சான்றோனரியே தபநனென்றினையவு
மான்றவருக்கற் கனந்தம்பெயரே.

பிங்கலநிகண்டு, வானவர்வகை.—210-வது சூத்திரம்.

பகவன் சான்றோன் வேந்தன்றபநன்
சுடரோன்மாலி சூரியன்பெயரே.

சூடாமணி நிகண்டு, தெய்வப்பெயர்த்தொகுதி, 55-வது சூத்திரம்.

தரணிசெங்கதிரோன் சண்டன்
தபநனேயொளியே சான்றேன்.

இரேவண சூத்திரம்.

சான்றேனென்பது மான்றலைநாளுஞ்,
சூரியனெனவுஞ் சொல்லுமிருபெயர்.

| | | |
|---|---|---|
| சான்றேன்=சூரியன் | } | சதுரகராதி. |
| =அறிஞன் | } | பேரகராதி. |
| =**The sun** | } | Winslow. |
| =A learned man | } | Rottler. |

இத்தியாதி நூற்களால் " சான்றேன் " என்பது சூரியன் பெயர்களில் ஒன்றெனத் துணியப்பட்டது. இத்திறத்தானே சூரியகுலத்திலுதித்த கிராமணிகளை நாளதும் சான்றார்குலத்தவர் எனவும் இக்குலத்திலுதித்த ஸ்ரீமத் ஏனாதிநாதநாயனாரை சேக்கிழார் பெரிய புராணத்தில் " சான்றார் ஏனாதி நாதர் " எனவும் பேசிமுடித்தது அதுவேதியன் (பிர்மன்) குலத்தவர் வேதியர் ஆனதைப்போல் " சான்றேன் " (சூரியன்) குலத்தவரும் " சான்றோர் " அல்லது " சான்றார் " ஆகுவர். இதனால் சான்றோரும் சான்றாரும் ஓர் பொருளிலேயே நின்று சூரியனைத்தெரிவிக்குமென பசுமரத்தாணியறைந்தாற் போல் தீட்டப்பட்டமையால் " சான்றார் குலத்தவர்" எனக் கூறும் கிராமணிகளையும் சூரியகுலத்தவர் எனவே நாட்டப்படும்.

• **2.** சூரியனுக்கு மநு உற்பவித்தான். இம்மநு விவசுவான் என்னுஞ் சூரியன் புத்திரனாதலால், வைவஸ்வதன்* எனப்பட்டான். இவ்வைவஸ்வத மநுவுக்கு இரு மனைவியருண்டு. இவர்களுள் முன்னவளிடம் இரண்யவன்மன் உதித்து திராவிடதேசத்திற்கரசனாக முடிசூட்டப்பட்டான். பின்னவளிடம் இட்சுவாகு உதித்து ஆரியவர்த்,தம் அதாவது அயோத்திக் கரசனாக முடிசூட்டப்பட்டான். அயோத்தி சூரியகுலவரசருக்கு இராஜதானியாயிருந்த

* Vide. The Ancient History of India. Vol. I., Part. II. Ch. X. P. 162.

சிறப்புறு பட்டினம், இது (Faizabad) "பெஸ்ஸபேட்" என்னும் நகருக்கு மூன்றுமயில் தூரத்திலுள்ளது. இட்சுவாகுவையே அயோத்திக்கு முதலரசனென மொழிவர். இவருக்கு நூறு புத்திரருண்டு. அவர்களுள் சகுனி முதலிய ஐம்பது புத்திரர் உத்தராபதம் என்கிற வடநாட்டையும், நாற்பத்தெட்டு புத்திரர் தக்ஷணாபதம் என்கிற தென்னாட்டையும் ஆண்டுவந்தார்களெனக் கூறப்பட்டிருக்கின்றது*. இவர்களுள் "விகுக்ஷி, நிமி†, தண்டகன்" என்னு மூவர் சிரேஷ்டர். மூவருள் மூத்தவனாகிய விகுக்ஷியைச்சுட்டி :—

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்த வத்தியாயம், 8-வது செய்யுள்.

நெய்மிதி கவளந் தெவிட்டி நின்றடர்க்கு
நிழல்சுழி தறுகண் மால்யானை
பெய்முகி லென்னக் கொடைக்கட னிறுக்கு
மிக்குவாகுப் பெயர்ப் பெரியோன்
ஐயசெங்கமல மலரினுற் கங்குன்
முகத்தினி லரனடி யேற்றி
வெய்யவன்குலத்து விளக்கெனப் பெற்ற
விடலைவேல் விகுக்கியென் றுரைப்பார்.

இதில் விகுக்கியை சூரியகுலத்தவனெனத் தெரிவிக்க, அச்சூரியன் பெயர்களில் ஓர் பெயராகிய வெய்யவன் என்னும் பெயரால் விளக்கியிருக்கின்றது. வெய்யவன் என்பது சான்றனேடொரு பொருட் கொண்டபெயரே!

| | | | |
|---|---|---|---|
| வெய்யவன்குலம்=சான்றன்குலம் | } = சூரியன்குலம் | { | நிகண்டு |
| வெய்யோன்குலம்=சான்றேன்குலம் | | | நன்னூல் |

திவாகர நிகண்டார் சூரியனைச் "சான்றேன்" எனக் கூறினர்களேயன்றி "சான்றன்" எனக் கூறினர்களில்லையென்பர். அதே திவாகர நிகண்டார் சூரியனை "வெய்யோன்" எனக் கூறினர்களேயன்றி, வெய்யவன்" எனக் கூறினர்களில்லை. கூறுதிருப்பினும், தொல் காப்பியவிதியை யனுசரித்து தொல்லாசிரியர்கள் எடுத்தாண்டிருப்பதால், "சான்றன்" எனினும் "சான்றேன்" எனினும் ஓர் பொருளிலேயே நிற்குமென்பது நூற்றிடம். இக்கருத்தை

* விஷ்ணுபுராணம்; நாலாமம்ஸம், இரண்டாமத்தியாயங் காண்க.

† இக்ஷ்மி வம்ஸத்திலேயே சீதை யுதித்தது.

முன்னிட்டே நாளதும் சூரியகுலக் கிராமணிகள் சான்றூர் குலத்தவர் எனக் கூறி வருவது. இதனால் அவர்கள் சூரியகுலத்தவர்க ளென அவர்களது குல உண்மை பெறப்பட்டது.

விருக்கியின் பரம்பரையில்

7. காகுத்தன்
8. சுயோதனன்
9. பிருது
10. விச்சுவகன்
11. யுவனாசுவன்
12. பிரகதாசுவன்
13. குவலயாசுவன்
14. திரிடாசுவன்
15. பிரமேயன்
16. அரியாசுவன்
17. நிகும்பன்
18. சம்பவாசுவன்
19. கிருதாசுவன்
20. இரணாசுவன்
21. யுவனாசுவன்
22. மாந்தாதா
23. புருகுச்சன்
24. இருசதேச்சு
25. சம்பூதி
26. விருத்தன்
27. ஹரிதாசுவன்
28. விடதாசுவன்
29. அறியச்சுவன்
30. ஹஸ்தன்
31. திரிதன்
32. அருணன்
33. சத்தியவிரதன்
34. அரிச்சந்திரன்*

**3.** அரிச்சந்திரன் சூரியகுலத்தவன் என்பது ஜெகப்பிர சித்தி. அதனாலேயே அரிச்சந்திரனை சூரியனது பலபெயர்களால் சூரியகுலத்தவன் என விளக்கியிருக்கின்றது. வருமாறு:—

அரிச்சந்திரபுராணம் விவாககாண்டம் 61-வது செய்யுள்.

ஆதித்தனருங்குல மன்னவர்தங்
நீதிப் புகழெங்கு நிறைந்த தெனச்
சோதிக்கவரித் தொகையுங் கொடியும்
வீதித்தலைதோறு மிடைந்தனவால்.

ஆதித்தன்
சான்றவன் } = சூரியன் (நிகண்டு.)

இப்பிரயோகத்தில் அரிச்சந்திரன் வம்ஸத்தவர்களை ஆதித்தன் குலத்தவர் எனப்பட்டிருக்கின்றது. ஆதித்தன் என்பதற்கு சூரியனைத்

* இவர்களை புராணங்கள்தோறும் பலபெயர்களால் அழைக்கப்படு கின்றது.

தெரிவிக்க எவ்வளவு பாத்தியதையுண்டோ, அவ்வளவு பாத்தியதை சான்றன் என்பதற்கும் உண்டு என் நிகண்டு நன்னூலால் நிலைநாட்டப்படும்.

அரிச்சந்திரபுராணம், நகர்நீங்குகாண்டம் 12-வது செய்யுள்.

உரைபெறுசீரவிகுலத்தர சர்க்குவழிவழியேயுரிமையாய, சரையு
வெனுந்தாதி யரிச்சந்திரற்கு வந்தவினைதானேதென்ற, விரை
மலர்த்தாள் பூண்டுகிடந்தரற்றிடவுமிழிந்தேகிவிரைந்து பொய்மேல்,
கரையணுகிவிரிமணலில்விரிமலர்கள்சொரியுநறுங்காவிற்புக்கான்.

இரவிகுலம் } = சான்றேன்குலம் (திவாகரம்.)
சூரியகுலம்

இதில்வரும் இரவிகுலத்தவன் என்பதும், சான்றேன் குலத்தவன் என்பதும் சூரியகுலத்தையே தெரிவிக்கும். சான்றேன் என்பது சூரியனது பலபெயர்களில் ஒன்றென்பது திவாகரத்தார் முடிபு.

அரிச்சந்திரபுராணம் சூழ்வினை காண்டம், 33-வது செய்யுள்.

பழிவழியொழுகாநீதிப் பாநுவின்குலத்து வேந்தர்
வழிவழிவந்தகொற்றக் கவிகையை வழங்கமாட்டேன்
விழிவழிகண்டவேறு கவிகையை விளம்பினுங்கள்
மொழிவழிதருவேனென்று மொழிந்தனன்மன்னர்கோமான்

பாநுவின்குலம் } = சூரியகுலம் (பிங்கலன்)
சான்றன்குலம்

மேற்போந்த பிரயோகங்களில் வரும் "ஆதித்தன், இரவி, பாநு" என்னும் பெயர்கள் சூரியனைத் தெரிவித்து, அவன் குலத்தினுதித்த அரிச்சந்திரன் முதலினோரை சூரியகுலத்தவரென விளக்கலைப்போல்; "சான்றன்" அல்லது "சான்றேன்" என்னும் பெயரும் சூரியனது பெயரென நிகண்டார் நிலை நாட்டுதலால், அதுவுஞ் சூரியனைத் தெரிவித்து அக்குலத்தினுதித்த அரசரை தெரிவிக்குமென்பது தெளிவு. இவ்வியல்பு நோக்கியே அரிச்சந்திரன் பரம்பரையி னுதித்த கிராமணிகள் நாளதும் சூரியகுலத்தவரெனப் பொருள்பட "சான்றன்* குலத்தவர்" அல்லது "சான்றேன்குலத்தவர்" எனக் கூறிவருவது.

* சான்றான் என்பது சான்றோனின் திரிபு.

அரிச்சந்திரபுராணம் விவாககாண்டம், 9-வது பிரயோகம்

அந்தநாட்டினின் கன்னமாபுரி நகராள்வோன்
சந்திரன் வழிச் சந்திரதயன் றவம்புரிந்து
கந்தவார் சடைக்கடவுடன் வரத்தினுற்பயந்த
தந்தமா மூலைத்தையல் சந்திரமதியென்பாள்.

இதில் அரிச்சந்திர மகாராஜன் மனைவியை "சந்திரன்வழி சந்திரமதி" எனப்பட்டிருக்கின்றது. சந்திரமதி சந்திரகுலத்தவளாதலால் "சந்திரன்வழி" எனப்பட்டது. இதைப்போல் ஸ்ரீராமர் மனைவியாகிய சீதை, மிதுலைக்கரசனுகிய சூரியகுல நிமி வம்ஸத்தவளாதலால் சூரியகுலத்தவள் எனத் தெரிவிக்க "சான்றோர்*மாது எனப்பட்டிருக்கின்றது.

கம்பராமாயணம், உயுத்தியகாண்டம், பிரமாஸ்திர படலம், 215-வது பாசுரம்.

சான்றோர்மாதைத்தக்க வரக்கன் சிறைதட்ட
ஆன்ரோர்சொல்லு நல்லறமன்னுன் வயமானுல்
மூன்றுய்நின்றபேருல கொன்றுய்முடியாவேல்
தோன்றுவோவென்வில் வலின்வீர்த்தொழிலம்மா.

இதில் சீதையை "சான்ரோர்மாது" எனப்பட்டிருக்கின்றது.

சான்றேன்=சூரியன் (நிகண்டு)
=சான்றன் (நன்னூல்)
=**Sun** (Winslow)
மாது=பெண் (சதுரகராதி)

சூரியகுலப்பெண்ணேன்பது திரண்டபொருள். அது.—

மறையவன் = பிர்மன்
மறையவர் = பிராமணர்,
அந்தணன் = பிர்மன்
அந்தணர் = பிராமணர்
} திவாகரம்.

என்பதைப்போல்;

* பொருளின் உயர்வுநோக்கி ஸ்ரீராமன் எனக்கூருது, ஸ்ரீராமர் ,எனக் கூறியதைப்போல்; சான்ரோன் எனக்கூருது சான்ரோர் எனக் கூறப்பட்டது.

சான்றேன் = சூரியன்
சான்றோர் = சூரியகுலத்தவர் } நிகண்டு.

என வாகும்.

சான்றேன் என்பது சூரியனது பல பெயர்களில் ஒன்று. அது, "தரணிசெங்கதிரோன் சண்டன் தபநனேயொளியே சான்றேன்" என்னும் நிகண்டால் விளங்கும். இதை நோக்கியே அக்குலத்திலுதித்த கிராமணிகளை நாளதும் சான்றார்குலத்தவர்* என்பது. சான்றரும் சான்றேரும் ஓர்பொருட் பெயர்களென நன்னூலால் நாட்டப்படும்.

**4.** அரிச்சந்திரன் அரசருக்குரிய அநேகபட்டப்பெயர்களுள் ஓர் பெயராகிய "கிராமணி" என்னும் பெயரையும் குலப்பட்டப் பெயராகப் பெற்றிருந்தனன். அது வருமாறு :—

அரிச்சந்திரோபாக்கியானம், 3-வது காண்டம், 4-வது பத்தியம்.

ఆమఱునాడు కౌశికమహామునియుం గృతకాల్య కృత్యుడై।
ప్రేమదలిర్ప శిష్యజన బృందముగొల్వ వసుంధరాధిప।
గ్రామణిపూనిబొంగ సముకట్టునుపాయము నాత్మలోపలన్।
వేమఱునుగ్గడించుచును వేడ్కనయోధ్యకువచ్చె జెచ్చెరన్।

(பொ-ரை) விஸ்வாமித்திரன் தன் சிஷியவர்க்கத்தோடு அயோத்தியை பரிபாலனஞ்செய்யும் கிராமணியாகிய அரிச்சந்திர மகாராஜனிடம் வந்தார். என்பதாம்,

இதில் வரும் கிராமணி என்பது அரசன் என்னும் பொருளில் நிற்கும். அது :—

புரம்=நகர், அதையுடையவன் புரவலன்,
பார்=பூமி, அதனையுடையவன் பார்த்திபன்,
அரசு=நாடு, அதனையுடையவன் அரசன்,

என்பதைப்போல்;

* உலகவழக்கில் சான்றார் எனக்கூறி, செய்யுள்வழக்கில் சான்றோர் எனக் கூறவேண்டுமென விதியிருத்தலால்; அதை முன்னிட்டு கிராமணிகளுக்கு சான்றார் என உலகவழக்கில் வழங்கிவருகிறதெனக்கூறினும் பொருந்தும்.

கிராமம்=நகரம், அதனையுடையவன் கிராமணி*
எனப்படும்.

"நகரம் பக்கணங் கிராமம்
நவில் கருவடங் குறும்பு"

என்னும் நிகண்டால், கிராமம் எனினும் நகரம் எனினும் ஒரு பொருட் கிளவிகளெனத் துணியப்பட்டது.

அரிச்சந்திரோபாக்கியானம், 2-வது காண்டம்.

భూపగ్రామణివర్ధికల్పకమహాంభోరాశిగాంభీర్యరే।
ఖాపారీణుఁడవద్రిధీరుఁడవులోక స్తుత్యసత్యవ్రతా।
లాపశ్రీవిభవోజ్జ్వలుండవదియేలాచింతతర్కించినన్।
నీపైనల్గెడువారలుంగలరెయోనిత్యప్రతాపోదయా

(பொ-ரை.) உலகத்திற்கு அரசனே! கர்ப்பக விருக்ஷத்திற்கும் சமுத்திரத்திற்கும் சமானமானவனே! மேருவைப் போன்றவனே! சத்தியமே விரதமாக அனுஷ்டிப்பவனே! அஷ்ட அயிஸ்வரியமுடையவனே! உனக்கென் சிந்தை என்பதாம்.

இதில் அரிச்சந்திரனை பூபக்கிராமணி யெனப்பட்டிருக்கின்றது.

பூ=உலகத்திற்கு
கிராமணி=அரசன் } அமரம்.

உலகத்திற்கு அரசன் என்பது சப்தார்த்தம். இதனால் கிராமணி எனினும், அரசன் எனினும் ஒருபொருட்கிளவிகள் என்றேற்பட்டது.

அரிச்சந்திரோபாக்கியானம், 4-வது ஆசிவாசம், 46-வது பத்தியம்.

కూపంబుల్ తగుతోఁటలుం జెఱువులుంగాల్వల్ ధరన్నిల్పగా।
నేపుణ్యంబొనగూడుమర్త్యులకు ధాత్రీశాన్వయగ్రామణీ।
యాపుణ్యంబురయంబప్రాప్తమగు నిత్యస్ఫూర్తిమైసత్యభా।।
షాపారీణులకున్ వివేకముమదిన్ సందిల్లనూహించినన్

* வேதி=ஓமகுண்டம், அதையுடையவன் வேதியன். மறை=வேதம், அதையுடையவன் மறையோன். அலர்=மலர், அதையுடையவன் அலரவன் (பிர்மன்.) மடம்=அறியாமை, அதையுடையவள் மடந்தை என்பதைப்போல் கிராமணியுமென்க.

(பொ-ரை.) அரிச்சந்திரன் காட்டிற்கேகுங்கால் நட்சத்திரேசன் பாதையைப்பொறுக்காது வருத்தமுற்றுங்காலத்து சந்திரமதி அரிச்சந்திரனை நோக்கி, ஓ! தாத்ரீசான் வயக்கிராமணி!! சத்தியமே முக்கியம். விசனமுறவேண்டாம் என்பதாம்.

இதில் அரிச்சந்திர மகாராஜனை தாத்ரீசான் வயக்கிராமணி எனப்பட்டிருக்கின்றது.

தாத்ரீ=உலகம்
ஈஸான்=அரசருக்கு } அமரம்.
கிராமணி=அரசன்

அரசருக்கரசன் என்பது பொருள். இதனாலும் கிராமணி என்பது அரசன் என்னும் பொருளிலேயே அமையுமெனப் பெறப்பட்டது.

"கிராமணி" என்னும் பெயர் "இராஜன்" என்பதைப் போன்ற க்ஷத்திரிய பதம். இராஜாதிபதிக்கு இராஜன் என்றும், க்ஷேத்திராதிபதிக்கு க்ஷத்திரியன் என்றும் பெயரானதுபோல், கிராமாதிபதிக்கு கிராமணி என்னும் பெயர் பெறும். இது வடநூன் முடிபு.

சூரியகுலத்தவருக்குள் "கிராமணி" என்பதும், இராஜபுத்திரருக்குள் "பூமியான்" (Bhoomia) என்பதும், பார்சீகருக்குள் "ஜெமின்தார்" என்பதும் ஒன்று. இம்மூன்று பதத்திற்கும் "பூமிக்குடையோன்" என்பதே திரண்டபொருள்.

அமரம், 3-வது காண்டம், 208-வது சுலோகம்.

ഗ്രാമണീ-ൎനാവിതെ-പ്രവി
ശ്രേഷ്ഠെ ഗ്രാമാധിപെ-ത്രിഷു ।
கிராமணீர்ணுபிதேபும்ஸி
சிரேஷ்டேகிராமாதிபேத்ருஷு

(பொ-ரை.) கிராமங்கள்' அல்லது பூமியையுடையவனுக்கும் சிரேஷ்டனுக்கும் கிராமணி* என்னும் பெயர் உடையது" என்பதாம்.

கிராமணி = சிரேஷ்டன்
= அதிபதி
= அரசன்

---

* நீதிசாஸ்த்ரம் 98-வது சுலோகங் காண்க.

"கிராமம்" என்றது ஊரைக் குறிக்கும். கிராமணி என்றது அவ்வூரையுடைய சர்தியாரைக் குறிக்கும். அதாவது அரசர் எனப்படும். கிராமணி என்னுஞ்சொல் அரசகுலத்தாருக்கு இடுகுறியுங் காரணமுமாம். சிரேஷ்டருக்குக்காரணமுமாத்திரமாம். சிரேஷ்டருக்குக் கூறுங்காரணம் அரசகுலத்தாருக்குக் கூறுங்காரணத்தால் விபசரித்திடும், அரசகுலத்தாருக்கு இடுகுறியே முக்கியமாதலால் விபசரித்திடாது சிறந்திடும். அது உடையார் என்பது காரணத்தால் பௌதகுருக்களையும், இடுகுறியால் மைசூர் அரசவம்ஸத்தவர்களையுங் குறித்தலைப்போலென்க*.

சூடாமணி நிகண்டு, மக்கட் பெயர்த் தொகுதி, 45-வது கவி.

"அடைவுள கிராம முற்றேன்
கிராமணி யாது மன்றே."

அடைவு=எல்லாம், (சதுரகராதி, பேரகராதி) "அடையவு மடங்கலு மனைத்தும் யாவையு, முழுவது முற்றுஞ் சமத்தமு முட்டவு, மெவையு மெல்லா மென்றலின் பெயரே;" (பிங்கலன்); "All, The whole" (Rottler, Winslow) "அநேகம்" எனினும்பொருந்தும்.

உள=உள்ள, அடைவுள=எல்லாவளனு முள்ள எனினும் பொருந்தும்.

கிராமம்=ஊர், "நகரம் பக்கணங் கிராமநவில் கருவடங்குறும்பு" (சூடாமணி நிகண்டு) "வைப்புக் கிராமம் வசதியருப்ப, முறையுளிருக்கை யூரின்பெயரே" (பிங்கலன்) மருத நிலத்தூர் (சதுரகராதி) "சுரந்தநீரும் வயலுஞ் சூழ்ந்தவூர், கிராமமாகக் கிளக்கப்படுமே." (திவாகரம்) என்பதாதியால் கிராமம் என்பது நாடு ஊர் என்னும்

* "Odeyar Wodeyar, or Wadeyar is the plural and honorific form of Odeya, a Kannada word meaning Lord, Master. Wilks states that it indicated, at the period of which we are writing, the Governor of a small district, Generally of 33 Villages. Vader a modification of the word, is the title of respect by which Jangama priests are addressed" Vide. P. 240, in footnote, Vol. I Mysore and Coorg. and P. 101, Vol, II, Oriental Historical Manuscripts. இதைப்போல் கிராமணியுமென்க.

இடத்தை யுணர்த்தலால், அவ்விடப் பெயர் அடியாய் கிராமணி என்பது தோன்றி அதனையுடைய அரசனை விளக்கும்.

உற்ரேன் = உடையவன் (அகராதி)

கிராமணி = சிரேஷ்டன்
= அதிபதி } அமரம்
= கிராமியன் { சதுரகராதி, பேரகராதி }
= கிராமமுற்றேன் { Winslow, Rottler }
= அரசன். (வால்மீகி ராமாயணம், வியாச பாரதம்)

கிராமணி என்பது அரசர் பெயர்களில் ஒன்றென திவாகரத்தார் விளக்காதிருப்பினும் "இதற்கிது முடிபென் றெஞ்சாதியாவும், விதிப்பளவின்மையின் விதித்தவற்றியலால், வகுத்துரையாதவும் வகுத்தனர்கொளலே". என்னு நன்னூல் விதியால் கிராமணி என்பதை அரசர் பெயர்களில் ஒன்றெனத் துணியப்படும். சொல்லப்படாத பெயர்களை உபலக்கண விதியால் கொள்ளப்படும். உபலக்கணம் என்ருல் ஒன்றற்கு கூறிய விதியைக்கொண்டு, அதனேடு இயைபு உடைத்தாய்க்கூருது ஒழிந்துள்ள பிறவற்றினையுமெடுத்தாளுதல். இவ்விதியைக்கொண்டே நூலாசிரியர்கள் கிராமணி என்னும் பெயரை அரசருக்குரிய பெயரென நூற்களில் எடுத்தாண்டது.

ஆதும் = ஆவான் என்பதாம்.

அநேக அல்லது எல்லாவளனுமுள்ள கிராமங்கள் அல்லது ஊர்களையுடையவனுக்கு கிராமணி என்னும் பெயர் உரியதென உரைத்திருக்கின்றது. ஊரையாளுவோர் அரசரே! அது "ஓதலே வேட்டலீதல் உலகோம்பல் படைபயிற்றல்" என்பதால் விளங்கும். அவ்வரசர்களுக்கு கிராமணி என்னும் பெயர் அமைவுடைத்தே! இது சர்வசாஸ்திர சம்மதம். இவ்வியல்பு நோக்கியே சூரியகுல அரிச்சந்திரனை கிராமணி என்றழைத்தனர் அரிச்சந்திரோபாக்கியான நூலாசிரியர். இதனல் கிராமணி என்னும் பெயர் க்ஷத்திரியர்களுக்குரிய பலபட்டப் பெயர்களுள் ஒன்றென மேற்போந்த நூற்களால் மயக்கமறத் துலங்குகின்றது. இவ்

வேதுவை யனுசரித்து அரிச்சந்திரன் மரபிலுதித்த சூரியகுலத்தவர் அல்லது சான்றன் குலத்தவர்களுக்குக் கிராமணி என்னும் பெயர் குலப்பெயரும் பட்டப் பெயருமாய் பூர்வமுதல் நாளது புரியந்தம் தொன்று தொட்டு வழங்கிவருகின்றது.

அரிச்சந்திரன் பரம்பரையில்.

| | |
|---|---|
| 35 ரோகிதாசன் | 51. அயுதாயு |
| 36. அரிதன் | 52. ருதுபர்னன் |
| 37. துந்து | 53. சாருவபூமன் |
| 38. விஜயன் | 54. சுதாசன் |
| 39. குருதன் | 55. சவுதாசன் |
| 40. விரதன் | 56. அசுமாதன் |
| 41. வாகு | 57. மூலகன் † |
| 42. சகரன் | 58. தயரதன் |
| 43. அசமஞ்செனன் | 59. இளிபிளன் |
| 44. அஞ்சுமான் | 60. விச்சுவகன் |
| 45. தீலீபன் | 61. கட்டுவாங்கன் |
| 46. பகீரதன் | 62. தீர்க்கவாகு |
| 47. சுருதன் | 63. இரகு |
| 48. நாபகன் | 64. அசன் |
| 49. அம்பரீடன் | 65. தயரதன் |
| 50. சிந்துதீபன் | 66. ஸ்ரீராமர் ‡ |

**5.** ஸ்ரீராமர் தயரத மகாராஜன் மனைவிகள் மூவருள் கௌசலா தேவியிடம் பிறந்தவர். சூரியகுலதீபம். அயோத்திக்கரசர். இவரோடு கைகேசியிடம் பரதனும், சுமுத்திரையிடம் இலட்சுமணர் சத்துருக்கரும் பிறந்தனர்கள்§.

---

* இவன் சந்திரகுலநளனை சூதினல் தோர்க்கச்செய்தவன்.

† இவனை பரசுராமன் கொல்லமுயன்றும் ஸ்திரீகளால்முடியாதுபோய் விட்டது. அதனல் நாரிகவசன் என்னும் பெயரைப்பெற்றான். பரசுராமன் இவன் காலத்திலிருந்தே க்ஷத்திரியரையழிக்குஞ்சபதத்தைமேற்கொண்டது.

‡ கல்கிபுராணவசனம். மூன்றாமம்ஸம் மூன்றாமத்தியாயங் காண்க.

§ கூர்மபுராணம் இராமனவதரித்தவத்தியாயம் 9-வது செய்யுள் காண்க

கம்ப்ராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், வாலிவதைப் படலம், 87-வது செய்யுள்.

காரியன்ற களங்கநிறத் தொன்மை
ஊரியன்ற மதிக்குள தாமென்ப
சூரியன்மர புக்குமோர் தொன்மறு
ஆரியன்பிறந் தாக்கின யாமரோ.

சூரியன் மரபு=சான்றேன் மரபு (நிகண்டு)
=சான்றன்மரபு (நன்னூல்)

கம்பராமாயணம், உயுத்தியகாண்டம், வீடணனடைக்கல படலம் 45-வது செய்யுள்.

பகலவன்வழிமுதற்பாரிநாயகன்
புகலவன்கழலடைந்துய்யப்போந்தனன்
தகவுறுசிந்தையன்தருமநீதியன்
மகன்மகன்மைந்தனுன்முகற்குவாய்மையான்'

பகலவன் வழி=சூரியன்வழி
=சான்றேன்வழி } நிகண்டு

இவ்விருகவியிலும் ஸ்ரீராமர் சூரியகுலத்தவராதலால் அதை விளக்குவான் தொடங்கி "சூரியன்மரபு, பகலவன்வழி" என்னுஞ் சூரியன் பெயரால் விளக்கப்பட்டமைபோல், இவ்விராமர் குலத்தி லுதித்த கிராமணிகளை நாளதும் "சான்றேன்மரபு, சான்றன்மரபு" என்னுஞ் சூரியன்பெயரால் விளக்கப்படுகின்றது.

6. இதோடு "கிராமணி" என்னும் பட்டப்பெயரும் ஸ்ரீராமருக்குரியதென சாஸ்திரங்கள் சம்மதிக்கின்றது.

வால்மீகிராமாயணம், யுத்தகாண்டம், 120-வது சர்க்கம், 15-வது சுலோகம்.

అజితః ఖడ్గధృద్విష్ణుః కృష్ణశ్చైవ బృహద్బలః।
సేనానీర్గ్రామణీ త్వం బుద్ధిస్సత్త్వం క్షమాదమః॥

அஜிதகட்கத்ருத்விஷ்ணுக்ருஷ்ணச்சேய்வபுருஅத்பலா:
சேனநீர்க்கிராமணிஸ்சத்வம்புத்திச்சத்யஞ்க்ஷமாதமா:

(இ-ள்.) "நந்தகமென்னும் கட்கத்தைக் கைக்கொண்டவனும், விஷ்ணுவும், கிருஷ்ணனும், அஸாதாரணமான ஸாமார்த்தியமுடையவனும், தேவர்களது சேனைகளை நிர்வகிப்பவனும், கிராமணியும், புத்தியும், ஸத்துவமும், க்ஷமையும், தமமும், தேவரீரே!" என்று பிர்மதேவர் ஸ்ரீராமரைத் துதித்தார்." என்பதாம்.

இச்சுலோகத்தில் ஸ்ரீராமரை கிராமணி என்றழைத்தனர் வால்மீகிருஷி*. அது அரசியற்றலால் அரசன் எனவும், க்ஷேத்திர சம்பந்தத்தால் க்ஷத்திரியன் எனவும், இராஜ்யமாளுகையால் இராஜன் எனவும் பலபெயர்கள் க்ஷத்திரியர்களுக்கு வழங்கிவந்ததுபோல்; கிராமவாட்சியால் கிராமணி எனவும் ஓர் பெயர் க்ஷத்திரியர்களுக்குண்டு. ஸ்ரீராமர் அநேக கிராமங்களடங்கிய அயோத்தியை ஆண்டதால் அவரை கிராமணி எனல் ஸர்வஸம்மதம். இக்கருத்தை யுட்கொண்டே மேற்சுலோகத்தில் வரும் "கிராமணி" என்னும் பதத்திற்கு "உலகரட்சகர்" என்னும் பொருளைத் தந்து எழுதியிருக்கின்றார் தாததேசிக தாதாசாரிய சுவாமிகள்† "உலகம்" என்னும் பதத்திற்கு "பதிநான்குலகம், பூமி" என்னும் பொருள்களைப் பயந்து நிற்கின்றது சதுரகராதி. இவர் தெய்வாம்சையால் பதினான்கு உலகத்திற்கு இரட்சகராயிருப்பினும்‡ தசரதன் வம்சத்தை விளக்கவந்து அயோத்தியை யாண்டதால் புவிரட்சகருமாகுவர். இரட்சிக்குந் தொழிலையுடையோர் தெய்வத்திற்கு இரண்டாவது அரசரே! அதனாலேயே நிகண்டாரும் "புரந்தரித்திடுதலாலே புரந்தரனென்னு நாமம்" என்றார். "புரந்தரித்தல்=இரட்சித்தல், காப்பாற்றல்." இதனால் இரட்சிக்குந் தொழில் அரசருக்குண்டென்றேற்பட்டது. இக்கருத்தையே நம் தாதாசாரிய சுவாமிகள் "கிராமணி" என்னும் பதத்திற்கு மேற்றியிருக்கின்றார், அதனால் "கிராமணி" என்னும் பெயரைப் பெறுவோர் இரட்சிக்குந் தொழிலையுடைய க்ஷத்திரியரே யாகுவர். க்ஷத்திரியர் என்னும் பதமும், கிராமணி என்னும் பதத்தின் கருத்திலேயே நிற்கும். க்ஷதாத்=ஆபத்தினின்று,

---

* Vide. P 106. Vol II. of Mysore and Coorg.

† இவர் வால்மீகி ராமாயண வுரை யாசிரியர்.

‡ ராஜாநம் மாநுஷம் ப்ராஹு-ர்தேவத்வே நமதோமம:
யஸ்ய தர்மார்த்த ஸஹிதம் வ்ருத்தமாஹு-ர மாநுஷம். (வால்மீகி.)

திரியா = நீக்குபவன் அல்லது இரட்சிப்பவன்." பிரஜைகளை ஆபத்தினின்று காற்பவன்" என்பது பொருள். அரசர்களை "நரபதி" என்பதும் இக்கருத்தை நோக்கியே! நர=மானிடர்களுக்கு, பதி=தலைவன், அரசன் (நிகண்டு) மானிடர்களுக்குண்டாகிய ஆபத்தை நீக்குதற்குத் தலைவன் எனப்படும். இதனால் கிராமணி என்பதும், க்ஷத்திரியன் என்பதும், நரபதி என்பதும், புரந்தரன் என்பதும் ஒருபொருட் கிளவிகளெனத் துணியப்படும்.

அமரம் பிரதமகாண்டம், திக்வர்க்கம் 102-வது சுலோகம்.

த்யுமணிஸ்தரணிர்மித்ர
ஸ்சித்ரபாநுர்விரோசந:

த்யூமணிஸ் தரணிர்மித்ர
ஸ்சித்ரபாநுர்விரோசன:.

இதில் சூரியனை "த்யூமணி" எனப் பட்டிருக்கின்றது.

த்யூ = ஆகாயத்திற்கு*
மணி = இரத்தினம்.

சூரியன் ஆகாயத்திற்கு இரத்தினம்போன்றவன் என்பதுபொருள்.

"இரவிவிண்மணி யருக்கன்
ஏழேழுஞ் சூரியன்பேர்"

எனச் சூரியனை நிகண்டாரும் "விண்மணி" என்கின்றனர்.

விண் = ஆகாயத்திற்கு
மணி = இரத்தினம்.

விண்மணி = ஆகாயத்திற்கு இரத்தினம்

என்பதைப்போல்,

கிராமம் = ஊர் அல்லது பூமிக்கு
மணி = இரத்தினம்

கிராமணி = புவிக்குரத்தினம் அதாவது அரசன்.

எனப்படும்.

---

* அமரம், திக்வர்க்கை, 72-வது சுலோகம்.

எவ்விதம் சூரியன் ஆகாயத்திற்கு ரத்தினமாக நிற்கின்றானோ அவ்விதமாகவே அரசனும் புவிக்கு ரத்தினமாகுவன், அதனாலே யே அரசனை கிராமணி யென்கின்றார் வால்மீகர், அரசனை " பார்த்தீபன் " என்பதும் இக்கருத்தே! பார்=பூமிக்கு, தீபன்=விளக்கைப்போன்றவன். அதாவது பூமிக்கு விளக்கைப்போன்றவன் என்பது சப்தார்த்தம். இதனால் பாருக்கு தீபம்போன்றவனும் கிராமத்திற்கு இரத்தினம்போன்றவனும் ஏககுலத்தவர் என்பது தீர்ப்பு. அதாவது அரசன் எனப்படும். இக்கருத்தை முன்னிட்டே கிராமணி என்னும் பெயரை பாருக்குரிய அரசர்கள் தங்குலப்பெயராகப் பாவித்து வந்தது.

அமரம், பிரதமகாண்டம், திக்வர்க்கம், 104-வது சுலோகம்.

𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤𑌨𑍋 𑌦𑌿𑌨𑌮𑌣𑌿
𑌖𑌦𑍍𑌯𑍋𑌤𑍋 𑌲𑍋𑌕𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌃

பிரத்யோதநோ தினமணி
கத்யோதோலோகபாந்தவ:।

இதில் சூரியனை " தினமணி " எனப்பட்டிருக்கின்றது.

தினம் = பகலுக்கு
மணி = இரத்தினம்.

சூரியன் பகலுக்கு இரத்தினம்போன்றவன். அரசன் ஊருக்கு இரத்தினம்போன்றவன். அதனால் அவன் கிராமணி என்னும் பெயரைப்பெற்றனன்.

சூரியன் வானத்திலிருந்து உலகத்திலிருக்கும் இருளைப்போக்கி பிரகாசத்தைக்கொடுத்தலால் அச்சூரியனை விண்மணி எனக் கூறுவதைப்போல்; க்ஷத்திரியன் பூமியிலிருந்து மானிடர்களுக்குரிய தீமையாகிய இருளைவிலக்கி நன்மையை யூட்டுதலால் அவ்வரசனையும் புவிமணி அல்லது கிராமணி எனல் அமைவுடைத்து.

" விண்மணி " என்பது " விண் + மணி " எனப் பகுதி விகுதியாகப் பிரியுமேயன்றி " விண் + அன்னி " எனப்பிரியாது. இதைப்போல் கிராமணியுமென்க. " கிராமம் + அணி " சேர்ந்து கிராமணியாகும். கிராமம் = ஊர், மருதநிலத்தூர்; அணி=அலங்காரம், அழகு ஆபரணம், பெருமை (சதுரகராதி) உலகத்திற்கு சிரேஷ்ட ஆப

ரணமாய் நிற்பவர் க்ஷத்திரியர் ஆதலால் அவர்களை கிராமணி எனப் பட்டது. ஆம், உலகத்திற்கு அரசன் ஆப்ரணமே! அவன் இருந்து ஆளுதலாலேயே அவ்வூர் அழகையும், அலங்காரத்தையும் பெறும், அதோடு பெருமையையும் அடையும். அரசனில்லாத வூர் உயிரற்றவுடலுக்குச் சமம்.

பெரிய புராணம்.

மூர்த்திநாயனார் புராணம், 28-வது கவி.

தாழுஞ்செயலின் றொருமன்னவன் றங்கவேண்டும்
கூழுங்குடியு முதலாயின கொள்கைத்தேருஞ்
சூழும்படை மன்னவன் றோளிணை காவலன்றி
வாழுந்தகைத் தன்றிந்த வையகமென்று சொன்னார்.

29-வது செய்யுள்.

பன்முறையுயிர்களெல்லாம் பாலித்து ஞாலங்காப்பான்
றன்னெடுங்குடைக்கீழ்த்தத்த நெறிகளிற் சரித்துவாழ
மன்னரையின்றிவைகு மண்ணுல கெண்ணுங்காலை
யின்னுயிரின்றிவாழும் யாக்கையை யொக்குமென்பர்*

என்றார் சேக்கிழார், உயிரில்லாது உடல்தன்றொழிலிற் செல்லாததைப்போல், அரசனது கட்டளையின்றி உலகம் இயங்கா. இதனாலேயே அரசர்களை பாருக்குத் தீபம்போன்றவர், கிராமத்திற்கு இரத்தினம்போன்றவர் என்னும் பொருளைப் பயக்கும் "பார்த்திபன் கிராமணி" என்னும் பெயர்களைச்சூட்டியழைப்பது. பாருக்குதீபம் எனினும், கிராமத்திற்கு இரத்தினம் எனினும் ஒன்றுக்கொன்றிணக்கம், தீபம் இல்லாவிட்டால் இருளடர்ந்துள்ள காட்டிற்குச்சமம்.

" Rather than dwell in an ancient country without rulers, it is better to live in the woods among wild people who feed on honey"†. Vide. W. Taylor's Oriental Manuscripts. Vol. II; Appendix. C; P. 23.

---

* கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், பள்ளியடைப் படலம் 143-வது செய்யுளையும், ஆற்றுப்படலம், 7, 8-வது செய்யுளையுங் காண்க.

† "சான்றோரில்லாத் தொல்பதி யிருத்தலின் தேன்றேற்குறவர் தேயம் நன்றே" (வெற்றிவேற்கை).

அரசர்களில்லாத ஊரில் குடியிருப்பினும், காட்டில் மலைத்தேனுண்டுவேடர்களுடன் குடியிருப்பு நன்று" என்றார் டைலர் துரை. மநுதருமசாஸ்திரம், 7-வது அத்தியாயம், 3-வது சுலோகம்.

அராஜகெஹிலொகெஸ்மிந்ஸவ்வதொவித்ருதெபயாத்
ரக்ஷார்த்தமஸ்யஸவ்வஸ்ய ராஜாநமஸ்ருஜத்ப்ரபுः ॥

(இ-ள்.) "உலகத்தில் அரசனில்லாமற்போனால் பலமுள்ளவனிடத்தில் பலமில்லாதவர்கள் பயத்தினா லழிந்துபோவார்கள். ஆகையால் இவ்வுலகமெல்லாம் அழியாமலிருக்கும் பொருட்டு சுவாமியானவர் அரசனை யுண்டுபண்ணினார்* "எனப்பட்டிருக்கின்றது. அதனாலேயே அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய சூரியனை "விண்மணி" எனவும், பரந்துயர்ந்த உலகத்திற்கு விரிந்தகன்ற மார்பையுடைய அரசனை "கிராமணி" எனவுங் கூறப்பட்டது

நீதிசாஸ்திரம்.

కగనేరవిరత్నాని కృకరత్నానిపాలకః।
సయనేశ్రీరత్నాని సభారత్నానిపండితాః॥
ககனேரவிரத்னானி க்ருகரத்னானி பாலகः
சயனேஸ்ரீரத்னானி சபாரத்னானி பண்டிதா :

நீதிவெண்பா.

கண்ணுக்கினியமணி சபைக்குமணி கற்றோரே
விண்ணுக்கினியமணி வெய்யோனே—வண்ணநறுஞ்
சந்தமுலையார் சயனத்தினியமணி
மைந்தன் மனைக்குமணி.

இதில் வித்துவானை சபைக்கு மணி எனப்பட்டிருக்கின்றது. சபைக்கு மணி என்றால் சபையிலுள்ளோருக்குத் தலைவன். சபையானது வித்துவானையே தலைவனாக வரித்து அவன் வாக்கை யெதிர்பார்க்கும். இதுவே உலக இயற்கை. இதைப்போல் சயனத்திற்கு மனைவியையும், வீட்டிற்குப் புத்திரனையும் மணியாகக்கொள்ளப்பட்டது, புத்திரனில்லாத வீடு ஒருவீடாகா† இதைப்போல் அரச

* வால்மீகிராமாயணம் அயோத்தியாகாண்டம் 67-வது சருக்கத்தையும் சங்கலிகித ஸ்மிருதி. 21-வது சுலோகத்தையுங் காண்க.

† "அபுத்ரஸ்ய கிருஹம் சூந்யம்". "அபுத்ரஸ்ய கதிர் நாஸ்தி"

னில்லாத ஊர் ஒரு ஊராகா! புத்திரன்வீட்டிற்கு மணியாயிருத்த லால் "மனைமணி" எனப்பட்டது. அரசன் ஊருக்கு மணியாயிருத்தலால் கிராமணி எனப்பட்டது. இவ்வியல்பு நோக்கியே அரசருக்குக் கிராமணி என்னும் பெயர் நூற்களில் வகுத்தோதியது மென்க. கிராமம் இடவாகுப்பெயர் நாடு அல்லது ஊர் என்பது பொருள், அதை யுடையவர்களை கிராமணி என விளக்கும். கிராமணி* என்பது காரணத்தால் சிரேஷ்டனையும், இடுகுறியால் அரசனையுங் குறிக்கும்.

சாதகாலங்காரம், யோகபலன் 292-வது செய்யுள்.

துரையாஞ்சனிக்குஞ்சுக்கிரர்க்குநடுவேசோமன்றுனிருந்தால்
உரையாயன்பாயோகமிதிற் பலன்கணீதியுளன்போகி [ட்டன்
தரையாண்மன்னர்கைப்பொருளைத் தான்கைக்கொள்வன்குலசிரே
புரையாசாரபாவன்றனியவான் புரக்கிராமணியாமே.

புரம்=நகரம்
கிராமணி=அரசன் } சதுரகராதி.

புரக்கிராமணி=நகருக்கரசன்.

சாதகாலங்காரம், உச்சபலன், 252-வது செய்யுள்.

உள்ளதொருகிரகமுச்சமேவிற் கிராமணியாம்
உபயமுச்சம்பெறிற் பலவூர்க்கிராமணியுமாவன்
தெள்ளியதோரொருமூன்று கிரகமுச்சமானாற்
செங்கோன்மன்னவனுகிச் சிறிதவனிபுரப்பன்

(இ-ள்) ஒருகிரகம் உச்சம்பெற்றவன் ஒரு ஊர்க்கிராமணி எனவும், இருகிரகம் உச்சம்பெற்றவன் பலஊர்க் கிராமணி எனவும், மூன்று கிரகம் உச்சம்பெற்றவன் செங்கோன் மன்னன் அதாவது முடிமன்னன்" எனவுங் கூறியிருக்கின்றது. இப்பாவில் கிராமணியை மன்னரோடு சேர்த்தெண்ணியிருப்பதால் கிராமணி என்னும் பதம் அரசரென்னும் பொருளிலேயே நிற்கும், அது :—

ஒரு ஊர்க் கிராமணி=சிற்றரசன்
பல ஊர்க் கிராமணி=பேரரசன்.

எனப் பொருள்விரியும்.

அடைவுள கிராமமுற்றேன்
கிராமணி யாதுமன்றே.

* "குருபால ப்ரபோதிகா" வில்காண்க.

என்னும் நிகண்டை யொத்துவருகின்றது. இதனல் கிராமணி என்னும் பெயர் சிற்றரசருக்கும், பேரரசருக்கும் உரிய பட்டப் பெயரென மயக்கமறத் துலங்குதலோடு, அப்பட்டப்பெயரை யுடையோர்களே அரசவம்ஸத்தவர்கள் எனவும் நிலைநாட்டப்படும்.

கூர்மபுராணம், ஆதவச்சிறப்புரைத்த வத்தியாயம், 4-வது கவி.

வருசதக்கிருத்து ரதவுசன் சுவாகுக்
கிருதன்வேற்சுரத னீள்வருணன்
அருடருசுசேனன் சேனசித்தொடுதார்
அரக்கனல் லரிட்டநேமியனு
டொருவருமிரசசித்து வாட்டடக்கைச்
சத்தியசித்தெனு முரவோர்
பருதிதேர்க்கயிறுபற்றியூழ் முறையின்
மதிதொறும்பயில் கிராமணியர்.

இப்பாசுரத்திற்குமுன் இரண்டாவது செய்யுளில், சூரியன் பனிரெண்டு நாமதேயங்கள் பெற்று மாதங்கள் தோறும் விளங்குவானெனவும்; மூன்றாவது செய்யுளில் "புலத்தியன், புலகன், அத்திரி, வசிட்டன், அங்கிரசு, பிருகு, பாரத்துவாசன், கவுதமன், காசிபன், கிருது, சமதக்கினி, கவுசிகன்"* முதலிய பனிரெண்டு பிர்மருஷிகள் முறையே அப்பனிரெண்டு சூரியர்களை மறைமொழியால் துதிப்பார்கள் எனவும்; மேற்படி நான்காவது செய்யுளில் "சதக்கிருது, அதவுசன், சுவாகு, கிருதன், சுரதன், அருணன், சுசேனன், சேனசித்து, அரக்கன், அரிட்டன், மிரசசித்து, சத்தியசித்து" முதலிய பனிரெண்டு அரசர்கள் அதாவது கிராமணிகள் முறையே அப்பனிரெண்டு சூரியனது தேரை விடுவார்களெனவும்; ஐந்தாவது செய்யுளில் "கேதி" முதலிய பனிரெண்டு அரக்கர்கள் முறையே அப்பனிரெண்டு சூரியனது தேர்முன் உலாவுவார்களெனவும்; ஆறாவது செய்யுளில் "வாசுகி" முதலிய பனிரெண்டு நாகங்கள் முறையே அப்பனிரெண்டு சூரியனது தேரை இழுப்பார்களெனவுங் கூறப்பட்டிருக்கின்றது.

இவற்றுள் சூரியனைபாடி யேற்றினவர்கள் பிராமணுளாகுவர். அது "தொன்மறைப்பாடி யேற்றுவரால்" என்னும் மூன்றாவது பிரயோகத்தால் விளங்கும். மறை=வேதம், அதையுடை

*மநு 1-வது அத்தியாயம், 35-வது சுலோகத்தால்பிராமணரெனவிளங்குவர்.

யவன் மறையோன். வேதாத்தியானஞ்செய்தல் வேதியரது அறு குலத்தொழில்களில் ஒன்று*. அதனால் துதித்தவர்கள் வேதியர்க ளென விகுசிதப்பட்டது.

இதற்கு அடுத்த செய்யுள் அதாவது மேற்கூறிய நான்காவது செய்யுளில் சூரியனது இரதத்தை விடுத்தவர்களைத் தெரிவிக்கின் றது. அதில் "கிராம்ணி" என்னும் பதத்தோடு "அர்" என்னும் பன்மை விகுதியைச் சேர்த்தெழுதி யிருப்பதால் அப்பனிரேண்டு வரசர்களும், அவர்கள் வம்ஸத்தவர்களும் கிராமணிகளாதவர் என்பது நன்னூல் முடிபு. அப்படி விடுத்தவர்களை அரசர்களென விளக்க "வாட்டடக்கை கிராமணியர்" என்பதால் வலியுறுத்தினர். "வாள்" அரசரது அறுகுலத்தொழிற் கருவிகளுள் ஒன்று†. இது ஸ்மிருதி சம்மதி. இதை யனுசரித்தே "வாட் கிராமணி" என்பது அதி வீரராமபாண்டியர். சேக்கிழாரும் "வாட் சுற்றத்தார்" என்றார் இக் கிராமணிகுல ஏனாதிநாத நாயனார் வம்ஸத்தவர்களை. வாட் சுற்றத்தார் எனினும், வாட் கிராமணியர் எனினும் ஏககுலத்தவரையே தெரி விக்கும். அது அரசகுலத்தவர் எனப்படும். இதனாலும் கிராமணி கள் அரசர்கள் எனத் துணியப்பட்டது. இக் கிராமணி என்னும் பெயரை குலப்பெயராகப் பெற்றவர்கள் சூரியனது தேரைவிடும் அப்பன்னிரண்டு அரசர்களும் அவர்கள் வம்ஸத்தவர்களு மாத் திரமல்ல, இந்து (Indus) நதிதீரத்திலுள்ள சிந்து (Sindu) தேச த்தரசர்கள் முற்றிலும் கிராமணி என்னும் பெயரையே குலப் பெயராகப் பெற்றிருந்தனர்கள்.

வியாசபாரதம், நகுலன் மேற்குதிக்கு விஜயபர்வம்,
32-வது அத்தியாயம், 8-வது சுலோகம்.

గణానుత్సవ సంకేతాన్ వ్యజయత్పురుషర్షభః
సింధుకూలా(శ్రితాయేచ (గ్రామణ్యా మహాబలాః

கணானுத்ஸவசங்கேதான் விஜயத் புருஷர்பவ ஃ।
சிந்துகுலாஸ்ரீதாயேசா கிராமண்யாமஹாபல ஃ॥

(இ-ள்.) "பாண்டவர்கள் திக்கு விஜயஞ்செய்த காலத்து நகுலன் மேற்குதிக்கை நோக்கி சிந்துதேசத்தை யடுத்து, அதையரசு

* மநு 10-வது அத்தியாயம், 75-வது சுலோகங் காண்க.

†மநு 10-வது அத்தியாயம், 79-வது சுலோகங் காண்க.

புரிந்த பலசாலிகளாகிய கிராமணிகளை சமரிற்ஜெயித்து திரைவாங்கிக்கொண்டுவந்தான்.*" என்பதாம், இதில் "கிராமண்யா" எனப் பன்மையில் விளித்திருத்தலால் அச்சிந்துதேசத்தரசர்களது வம்ஸமுந் நிலுங் கிராமணி என்னும் பெயரையே பெறுவர். சிந்துதேசம் குருக்ஷேத்திரத்திற்கு மேற்கேயும், பம்பாயின் ஓர் பாகமாகவுமுள்ளது. அச்சிந்துதேசத்தரசர்களை "கிராமணிகள்" என்றழைக்கின்றனர் வியாசர். பாரதம் சுயம்வர காலத்தில்ஜெயாத்ராதன் என்னும் அரசன் இருந்தான்.

" Jayadratha was the King of Sindu, Souvera at the time of the war of Mahabharata†, and was a great warrior." Vide. P. 114, Ch. VII. Part II. Vol. I Ancient History of India.

" பாரதம் சுயம்வரகாலத்தில் ஜெயாத்ராதன் என்பவன் சிந்து தேசத்திற்கு அரசனாக இருந்தான். அவன் யுத்தவீரனாகவும் இருந்தான்" எனப்பட்டிருக்கின்றது. இப்பகுதியிற்கூறிய ஜெயாத்ராதனும் அவன் குலத்தவர்களும் பாரதப்பகுதியை யொற்று கிராமணி என்னும் பெயரை குலப்பெயரும் பட்டப்பெயருமாய் வகித்து வந்ததைப்போல் அக்குலத்திலுதித்த அரசர்களுக்கு அதுவே குலப்பட்டப் பெயராய் பூர்வ வழக்கை யனுசரித்து நாளதுபரியந்தம் தொன்று தொட்டு வழங்கிவருகின்றது. இதோடு ஜெயாத்ராதனை யுத்தவீரனெனப் பட்டிருக்கின்றது. யுத்தத்தொழில் அரசரது அறுகுலத்தொழில்களில் ஒன்று. அது "ஓதலே வேட்டலீதலுல கோம்பல் படைபயிற்றல், மேதகு போர்செய்திட்டல் வேந்தர்செய் தொழிற்களாறும்," என்பதால் வெளிப்படும். இவ்வரசத் தொழிலாகிய படைபயிற்றலேயே கிராமணி குல ஜெயாத்ராதன் வம்ஸத்திலுதித்த ஏனாதிநாத நாயனாரும், அவர் சுற்றத்தார்களாகிய கிராமணிகளும் புரிந்துவந்தது. அது "சஸ்த்ர குலோத்பவர்"‡ என்னும் உபமன்னியர் வாக்காலும், "மறப்படைவாட சுற்றத்தார்"§ என்னும் சேக்கிழார் வாக்காலும் இனிது விளங்கும். "தள்ளாததங்கள் தொழி

---

* Vide The Prem Sagur, Ch. LXXIII, P. 224,

† வியாசபாரதம், ஆதிபர்வம், 201-வது அத்தியாயங் காண்க.

‡ உபமன்னியு பக்தவிலாசம், ஏனாதிநாதர் சரிதம், 4-வது சுலோகங்காண்க.

§ பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம், 12 - வது செய்யுள்காண்க.

லுரிமைதாயத்தின், * தங்கள்குலத்தாயத்தின் ஆனுதசெய்தொழிலாம்"* என்னும் பிரயோகங்களால் அதுவுங் குலத்தொழிலெனப் பிரகாசிக்கும். இப்பகுதிகளாலும் சான்றார் † குலக்கிராமணிகள் சூரியகுல க்ஷத்திரியர்கள் என்பதே முடிந்த கருத்து.

சுவாரோசிஷமநு சரித்திரம், பிரதமாசிவாசம்
28-வது சுலோகம்.

వితరణఖనియైతిమ్మ ।క్షితిపగ్రామణికి దేవకి దేవికినం।
చితమూర్తియీశ్వరప్రభుఁ ।డతిపుణ్యుఁడుపుట్టెసజ్జనావనపరుఁడై

இச்சுலோகத்தில் திம்மக்ஷிதிபக்கிராமணிக்கும் தேவகிதேவிக்கும் இஸ்வரராஜன் பிறந்தான் என்பதாம். "திம்மக்ஷிதிபராஜன்" என்பதற்குப் பதிலாய் "திம்மக்ஷிதிபக்கிராமணி" எனப்பட்டிருக்கின்றது. இதனுல் "இராஜன்" எனினும் "கிராமணி" எனினும் ஓர் பொருட்கிளவிகளென ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது.

திராவிடதேச அரசர்களுக்குரிய "சேரன், சோழன், பாண்டியன்" என்னும் பெயர்கள் குலப்பெயரும் பட்டப்பெயருமாய் நிற்றலைப் போலும், வைசியருக்கு செட்டி யென்பது சாதிப்பெயரும் பட்டப்பெயருமாய் வழங்கிவருதலைப்போலும், சூரியகுல ஏனுதிநாத நாயனர் வம்ஸத்தவர்களுக்கும் கிராமணி என்பது குலப்பெயரும் பட்டப்பெயருமாய் வழங்கிவருகின்றது. இது திராவிடதேச வழக்கு.

" It is the Dravidian custom to call rulers by their title and not by any personal name". Vide, The Manual of the Administration of the Madras Presidency 1885. Vol. I. P. 120.

"திராவிடதேச வழக்கப்பிரகாரம் அரசர்களை பட்டப்பெயரால் கூப்பிடுதலே யன்றி, இயற்பெயரால் கூப்பிடுகிறதில்லை" என அட்மினிஸ்டிரேஷன் புத்தகத்தில் கூறியுள. இதையொத்தே சூரியகுலத்தவர்கள் அதாவது சான்றார்குலத்தவர்கள் நாளதும் கிராமணி என்னும் பட்டப்பெயரையே குலப்பெயராக வழங்கிவருகின்றனர்கள்.

---

* பெரியபுராணம், ஏனுதிநாதநாயனர் புராணம், 5, 7-வது கவிகள் காண்க.

† சான்றார்குலம் = சூரியகுலம் (திவாகரநிகண்டு)

உத்தரராமாயணம், 1-வது. ஆசிவாசம்,
85-வது, சுலோகம்.

హరకోదండవిఖండన ప్రవణ బాహాదండపాండిత్యవి।
స్ఫురణం జెందిన కీర్తిలక్ష్మివలెభూపుత్రీలలామంబు సే
కుజనకోర్వీమలికొప్పతేటి తెగడంగందంబులర్పించుబా।
ల్కిరఘుగ్రామణిక్రొత్తముత్తియపుబ్రాల్పించెన్వివాహంబునన్

இதில் சீதையின் சுயம்வரத்தில் வில்லையொடித்து திருமணஞ் செய்தவர் இரதக் கிராமணியாகிய ஸ்ரீராமர் என்பதாம்.

ஸ்ரீராமர் இரகுமகாராஜன் பரம்பரையி லுதித்தவ ராதலால் இரதக் கிராமணி எனப்பட்டது. அது ஈழராஜன் வம்ஸத்தி லுதித்த ஸ்ரீமத் ஏனாதிநாத நாயனாரையும் அவர் சுற்றத்தார்களையும் ஈழக்குலக் கிராமணிகள் என்றழைப்பதைப்போ லெண்க.

மறை=வேதம், அதையுடையவன் மறையோன்.
செட்டு=வர்த்தகம், அதையுடையவன் செட்டி,
என்பதைப்போல்;

கிராமம்=ஊர், அதை யுடையவன் கிராமணி எனப்படும்.

ஊருக்குடையோர் எனப் பொருள்படும் கிராமணி என்னும் பட்டப்பெயரோடு (ஸாக்ஷிக–வொஹூவஃ) "சாக்ஷிகுலத்தவன்*, சான்றார்குலத்தவன்†" என்னுஞ் சாதிப்பெயரும்; (ஶஸ்த்ரகுலோத்பவஃ) சஸ்திரகுலத்தவன்*, மறப்படைவாட்சுற்றம்† (க்ஷத்ரகுலக்ரமஸமுத்பூதவ்ருத்தி) குலக்க்ரமசமுத்பூதவ்ருத்தி,* தங்கள் குலத்தாயத்தின் ஆனா செய்தொழில், தள்ளாத தங்கள் தொழிலுரிமைதாயம்† என்னுஞ் சாதித்தொழிலாலும் க்ஷத்திரியர் என ஒத்துவிளக்குவதால் கிராமணி என்னும் பட்டமுடையோர் க்ஷத்திரியர் யெனவே நூல்வழியால் துணியப்படும்.

உத்தர ராமாயணம், 6-வது ஆசிவாசம்,
32-வது வசனம்.

ఇత్తైలంగునవిహరింపుచున త్త్రరణీకుల
గ్రామణిజనకకన్యామణితోనిట్లనియె॥

---

* உபமன்னியு பக்தவிலாசம். † பெரியபுராணம்.

இவ்வாக்கியத்தில் தரணிகுலக் கிராமணி யாகிய ஸ்ரீராமர் ஜனக மகாராஜன் குமாரத்தியாகிய சீதையோடு சிலவிஷயம் புகன்றார் என்பதாம்.

ஸ்ரீராமர் சூரியகுலத்தவ ராதலால் அக்குலத்தை விளக்க "த்யூமணிஸ் தரணிர்மித்திர ஸ்சித்திரபாநுர்விரோசநு" என அமரத்தாரும், "தரணிசெங்கதிரோன் சண்டன் தபநனே யொளி யே சான்றேன்" என நிகண்டாரும் ஒப்பிய சூரியன்பெயரால் அவர் சூரியகுலத்தவரெனவும் பொருள்பட தரணிகுல கிராமணிஎனக் கூறி னதுபோல்; இவ்விராமர் வம்ஸத்தவராகிய கிராமணிகளை "தரணி" என்னும் பெயருடன் ஒருபொருட் கொண்ட பெயராகிய சான் றேன் அல்லது சான்றன்* என்னும் பெயரால் சூரியகுலத்தவ ரெனப் பொருள்பட சான்றேன்குலக் கிராமணி அல்லது சான்றன்குலக் கிராமணி என நாளதும் நூல் வழக்கிலும் உலகவழக்கிலும் தொன்று தொட்டு வழங்கிவருகின்றது.

உத்தர ராமாயணம், 3-வது ஆசிவாசம்,
35-வது பத்யம்.

ఆమాణిభద్రుఁగదిసి శౌమితశరవృష్టిఁగురియనతఁడతికుపితుం
డైమూఁడుతూపులసుర గ్రామణిపేరురమునాటఁగానేయుటయుఁ ।

"இராவணன் திக்கு விஜயஞ்செய்தகாலத்தில் சுரக்கிராமணி யாகிய தேவேந்திரனை எதிர்த்து யுத்தஞ் செய்தான்" என்பதாம்.

உத்தர ராமாயணம், 3-வது ஆசிவாசம்,
212-வது பத்யம்.

ఘనసాలోన్న తిగాంచినాఁడుమరుసింగారంబునఁ మించినాఁ
డునదిక్ స్త్రీయభుజాస హస్రములనాటోపించిబందించినాఁ
డునవీనాంకవిహారతత్పరతనాంద్రుండావిజృంభించినాఁ
డునరగ్రామణియెవ్వఁడో యొకబలిష్ఠుండాసురగ్రామణీ

"இராவணனுடைய வேவுக்காரர்கள் நரக்கிராமணி என்னும் ஸ்ரீராமர் சேதுபந்தனஞ் செய்கிறதைக்கண்டு அசுரக்கிராமணியாகிய இராவணனுக்குச் சொன்னார்கள்" என்பதாம்.

* சான்றான் என்பது சான்றோன் என வாகுமாவென நன்னூலாசிரிய ரிடம் தட்சணைவைத்துக் கேட்டால் தெரியவரும்.

இவ்விரு சுலோகத்திலும் தேவேந்திரனைசுரக்கிராமணி எனவும், ஸ்ரீராமரை நரக்கிராமணி எனவும், இராவணனை அசுரக்கிராமணி எனவும் அறைந்திருக்கின்றது. தேவேந்திரன் சுரராகிய தேவர்களுக்கு அதிபதி அதாவது அரசனாயிருத்தலால் சுரக்கிராமணி எனப்பட்டது " சுரர் = தேவர், கிராமணி = அரசன்; சுரக்கிராமணி = தேவர்களுக்கரசன் " ஸ்ரீராமர் நரராகிய மானிடர்களுக்கு அதிபதி அதாவது அரசனாயிருத்தலால் நரக்கிராமணி எனப்பட்டது. நரர் = மானுடர், கிராமணி = அரசன், நரக்கிராமணி = மானுடர்களுக் கரசன், இராவணன் அசுரராகிய இராட்சதாளுக்கு அதிபதி அதாவது அரசனாயிருத்தலால் அசுரக்கிராமணி எனப்பட்டது. அசுரர் = இராட்சதாள், கிராமணி = அரசன்; அசுரக் கிராமணி = இராட்சதாளுக் கரசன் எனப்படும். இதனால் கிராமணி என்பது அதிபதி என்னுங் கருத்தில் அமைகின்றது. இதைநோக்கியே திவாகர நிகண்டாரும் அரசனை "நரபதி"* என்றழைத்தனர். அமர நூலாசிரியர் கிராமணி என்னும் பெயர் சிரேஷ்டன், அதிபதி என்னுங் கருத்திலமையுமென்றனர். அதனால் நரக்கிராமணி எனினும், நரபதி எனினும் ஏககுலத்தவரையே தெரிவிக்கும். அது அரசரெனப்படும். உலகத்தில் அதிபதியாயிருப்பவர் அரசரென அருநூற்கள் அறைவதால், அத்தகைய வரசர்கள் அடைந்துவந்த பட்டப்பெயராகிய கிராமணி என்னும் பெயரை நாளதும் மாறுதலின்றி பெற்றுவரும் சூரியகுலக்கிராமணிகள் அல்லது சான்றான்குலக்கிராமணிகள் க்ஷத்திரியர்களேனவே சொல்லாமலே யமையும்.

**7.** சூரியகுல இட்சுவாகுவின் இளையகுமாரனாகிய நிமிக்கு[6] ஜனகன்[7] உதித்து மிதுலா என்னும் ஓர் நகரங்கோலி அதற்கரசனானான்.

வால்மீகி ராமாயணம், பாலகாண்டம்,

69-வது சர்க்கம்.

దిష్ట్యా మే నిర్జితావిఘ్నాః దిష్ట్యా మే పూజితం కులం
రాఘవైస్సహసంబన్ధాద్వీర్యశ్రేష్ఠైర్మహాత్మభిః

---

* நல்லாப்பிள்ளை பாரதம், வீடுமப்பருவம், அண்டகோச வடுக்குரைத்த சருக்கம், 16-வது செய்யுளில் அரசர்களை "நரபதி" எனவும், தேவேந்திரனை "சுரபதி" எனவுங் கூறப்பட்டிருக்கின்றது.

திஷ்ட்யாமேஙிர்ஜிதாவிக்நா: திஷ்ட்யாமேபூஜிதம்குலம்:
ராகவைவஸ்ஸஹஸம்பந்தம் வீர்யச்ரேஷ்டைர்மஹாத்மபி:

(இ—ள்.) "சிறந்த தோள்வலி பெற்றவர்களும் அவதாரப் புருஷர்களும், இரகுகுலத்திற் தோன்றினவர்களுமாகிய அரசர்களுடன் எனக்குக் கொள்வது கொடுப்பது கிடைத்தமையால் என் தீவினைகளெல்லாங் கெட்டு, என்குடியுஞ் சிறந்தது" என்பதாம். இது தாததேசிக தாதாசாரிய சுவாமிகள் உரை.

இதில் மிதிலைக்கரசரை தசரதர் இரகுவம்ஸத்திற் தோன்றியவரென்றார். இரகுவம்ஸத்தவர் சூரியகுலத்தவர் என்பது சொல்லாமலே யமையும். அதனால் மிதிலைக்கரசரும் சூரியகுலத்தவரே!

"Ayodia was founded by the race of Soorya by Ikshwaku, Mithila was founded by Mithilan, the grandson of Ikshwaku," Vide P. 44 Ch. IV. Vol. 1. of "Tod's Rajasthan."*

"அயோத்தி சூரியகுல இட்சுவாகுவாலும், மிதிலை இட்சுவாகுவின் பேரனாகிய மிதுலன் அல்லது ஜனகனாலும் ராஜதானியாக ஸ்தாபிக்கப்பட்டது." இப்பகுதியாலும் மிதுலன் சூரிய குலத்தவன் என விளங்கின.

**மிதுலன் அல்லது ஜனகன் பரம்பரையில் :**

| | |
|---|---|
| 8. உதகவசு | 18. பிரத்யக்கன் |
| 9. நந்திவர்த்தனன் | 19. கிருதிரன் |
| 10. சுகேது | 20. தேவமீடன் |
| 11. தேவரதன் | 21. விபுதன் |
| 12. பிருகுதத்தன் | 22. மகாதிருதி |
| 13. மகாவீரியன் | 23. கிருதிரதன் |
| 14. சுதிருதி | 24. மகாரோமன் |
| 15. திருட்டகேது | 25. சுவணரோமன் |
| 16. அரியசுவன் | 26. இருசுரோமன் |
| 17. மரு | 27. சீரத்துவசன் |

* வால்மீகிராமாயணம், பாலகாண்டம், 71—வது சர்க்கத்திலும், விஷ்ணுபுராணம், நாலாமம்ஸம், 5-வது அத்தியாயத்திலும், and also Vide Table I. and P. 41, ch III. Vol I. of Tod's Rajasthan.

## 28. சீதை.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுதபடலம், 59-வது செய்யுள்.

உன்பெருந்தேவி யென்னுமுரிமைக்கு முன்னைப்பெற்ற
மன்பெருமருகியென்னும் வாய்மைக்கு மிதிலைமன்னன்*
தன் பெருந்தனயை யென்னுந் தகைமைக்குந் தலைமை சான்ருள்
என் பெருந்தெய்வமையா வின்னமுங் கேட்டியென்பான்.

இப்பாசுரத்தால் மேற்கூறிய சீதை ஸ்ரீராமர் மனைவியெனவும், மிதுலைராஜன் பெண்ணெனவும் விளங்கும். மேலே மிதுலனை சூரியகுலத்தவனென விளக்கியிருத்தலால், அவன் வம்ஸத்திலுதித்த சீதையும் சூரியகுலத்தவளே யாகுவள். அதைவிளக்கவே கம்பர்—

கம்பராமாயணம்,
உயுத்திய காண்டம், பிரமாஸ்த்ரப்படலம்,
215-வது செய்யுள்

சான்ரோர்மாதைத் தக்கவரக்கன் சிறைதட்ட
வான்ரோர் சொல்லு நல்லறமன்னுன்வயமானுல்
மூன்ருய்நின்ற பேருலகொன்ருய் முடியாவேல்
தோன்ருவோ வென்வில்வலின் வீரத்தொழிலம்மா.

(இ-ள்) "சான்ரோர்மாதை=சூரியகுலப்பெண்ணை, தக்கவரக்கன்=இராவணன், சிறை=காவல்வைத்து, தட்ட=தடுக்கவும், ஆன்ரோர்=பெரியோர், சொல்லும்=சொல்லும்படியான, நல்லறம்=தருமதேவதையும், அன்னுன்=அவனுக்கு, வசமானுல்=வசப்பட்டால், மூன்ருய்நின்ற=மூன்றுபிரிவாய் நிலைபெற்றிருக்கும், பேருலகம்=பெரிய உலகம், ஒன்ருய்=ஒருமிக்க, முடியாவேல்=முடியவேண்டும். (அப்படி முடியாவிட்டால்) என்=என்னுடைய, வில்வலி=வலிமைபொருந்திய கோதண்டத்தின், வீரத்தொழில்=வீரச்செய்கை, தோன்ருவோ=வெளிப்படல்வேண்டும்." என்பதாம்.

இலட்சுமணர் இந்திரசித்துவால் விடப்பட்ட பிரமாஸ்திரத்தால் கட்டுப்பட்டபோது ஸ்ரீராமர் துக்கித்தது.

*Vide. The Indian Companion or general Statistics of India P 243.

சான்றோர்மாது=சான்றார்குலப்பெண் } நன்னூல்.
=சூரியகுலப்பெண் } நிகண்டு.

மேற்பாசுரத்தில்வரும் சான்றோர்*மாது என்னும் பகுதி இராவணனால் சிறைவைக்கப்பட்ட சீதையைத் தெரிவிக்கும். சீதை சூரியகுலத்தவள் என்பது ஜெகப்பிரசித்தி. இதனால் சீதையைத் தெரிவிக்கும் சான்றோர்மாது என்பதற்கும் சூரியகுலப்பெண் என்பதே திரண்டபொருள். இச்சான்றோன் என்பது சூரியனுக்குரிய "தரணி செங்கதிரோன் சண்டன் தபனனே யொளியே சான்றோன்" என்னும் அநேகம் பெயர்களில் ஒன்றென நிகண்டார் நிலைநாட்டியிருக்கின்றனர். கம்பர் சீதையை சூரியகுலத்தவள் என விளக்க "சான்றோர்மாது" எனக் கூறியதைப்போல்; இச்சீதை சந்ததியிலுதித்த ஸ்ரீ ஏனாதிநாதநாயனாரையும் அவர் வம்ஸத்திலுதித்த கிராமணி குலத்தவர்களையும் நாளதும் சான்றார்குலத்தவர் சான்றோர் குலத்தவர் எனக் கூறப்பட்டுவருகின்றது. அதனால் கிராமணிகளை சூரியகுலத்தவர்களேனவே முடித்துரைக்கப்படும்

சான்றான்
சான்றோன் } =அறிவுடையோன் (காரணப்பெயர்.) அறிவு காரணத்தை முன்னிட்டு அறிவுடையோரைக் குறிக்கும்.

சான்றோன்
சான்றான் } =சூரியன். (இடுகுறிப்பெயர்.) குலத்தை முன்னிட்டு அறிவிருப்பினும் இலாதுபோயினும் அக்குலத்தவரைக் குறிக்கும்.†

இது அந்தணன் என்பது அழகுடைய பிறகுலத்தவரைத் தெரிவித்து அழகிலாத பார்ப்பனக்குலத்துக்குக் குலப்பெயராகநிற்பதைப்போலென்க.

" சான்றான் " அல்லது "சான்றோன்" என்னுஞ்சொல் சூரிய குலத்தாருக்கு இடுகுறியுங் காரணமுமாம், அறிவுடையோருக்குக் காரணமுமாத்திரமாம், அறிவுடையோருக்குக் கூறுங் காரணம்

* "ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவி" என்னும் தொல்காப்பியச்சூத்திரத்தால் உயர்வினால் ஒருமைப்பெயர் பன்மைப்பெயராக வழங்குதல் உலக வழக்கு.

† Vide. Ibid.

சூரியகுலத்தாருக்குக் கூறுங் காரணத்தால் விபசரித்திடும் சூரிய குலத்தாருக்கு இடுகுறியே முக்கியமாதலால் விபசரித்திடாது சிறந்திடும்.

"சக்கிரி குயவன் செக்கான் தராபதி நெடுமால்பாம்பு" என்பது நிகண்டின்வாக்கு. இதில்வரும் "சக்கிரி" என்பது குயவனுக்கும், செக்கானுக்கும், அரசனுக்கும், விஷ்ணுவுக்கும், பாம்புக்கும் பெயரென் றேற்படுகின்றது. இதைப்போல் சான்ருன், சான்றோன் என்னும் பெயர்களும் சூரியனுக்கும் அறிவோனுக்கும், பெரியோனுக்கும் வழங்கும். அதனால் சூரியனையுந் தெரிவித்து அவன் குலத்தி லுதித்த அரசர்களையுந் தெரிவிக்குமென் றேற்பட்டது.

8. ஸ்ரீராமருக்குப் பிறகு அயோத்தியை குசன் முதலிய அறுபது சூரியகுலத் தரசர்களும்*, சீதைக்குப் பிறகு மிதுலையை முப்பத்திரண்டு சூரியகுலத்தரசர்களும்† ஆண்டுவந்ததாக விளங்குகின்றது, இதையோராது பரசுராமனால் க்ஷத்திரியர்கள் அழிவுண்டார்களென்கின்றனர்கள். இது புராணவிருத்தம். சமதக்கினி முனியின் புத்திரராகிய பரசுராமன் தன் தந்தையை கார்த்த வீரியார்ச்சுனன் புத்திரர் கொலைசெய்த பழிக்குப் பிரதிபழியாக க்ஷத்திரியரை இருபத்தோரு முறை நாசஞ்செய்வேனென்று சபதஞ்செய்துகொண்டு, தனக் கெதிர்ப்பட்ட கார்த்த வீரியார்ச்சுனன் புத்திரர்கள் முதல் சில க்ஷத்திரியர்களை யழித்துவருங்காலத்து தசரதன்பட்டபு தேவியாகிய கௌசலாதேவியிடம் ஸ்ரீராமர் திருவவதாரஞ்செய்து பரசுராமனால் கொடுக்கப்பட்ட வில்லைவளைத்து அவன் சபதத்தைக் கெடுத்து, காட்டிற் கொட்டிவிடப் பட்டது‡.

---

* கூர்மபுராணம், சூரியன்மரபுரைத்த வத்தியாயத்திலும், பாகவதம் ஒன்பதாவது ஸ்கந்தத்திலும், விஷ்ணுபுராணம், நாலாமம்ஸம், நான்காமத்தியாயத்திலும், இருபத்திரண்டாவது அத்தியாயத்திலும், P. 52. Ch. V. Vol. I. of Tod's Rajasthan and Table II; P. 59. Ch. V. of Garrets History of India; and P. 36. Ch. I. of Pope's History of India.

† விஷ்ணுபுராணம், நாலாமம்ஸம், ஐந்தாமத்தியாயத்திலுங் காண்க.

‡ Vide, P. 179 to 181 Vol. I. of Mysore and Coorg; and P. II. III. Introduction, Part I. Vol. XX Cochin, Census of India. 1901.

கம்பராமாயணம், பாலகாண்டம், பரசுராமப்படலம்,
36-வது, செய்யுள்.

பூதலத்தரசையெல்லாம் பொன்றுவித் தனையென்றாலும்
வேதவித்தாய மேலோன் மைந்த னீவிரதம்பூண்டாய்
ஆதலிற்கொல்லலாக தம்பிது பிழைப்பதன்றால்
யாதிதற் கிலக்க மாவதியம்புதி விரைவினென்றான்.

கூர்மபுராணம்.

இராமனவதரித்த வத்தியாயம், 111-வது செய்யுள்.

பாற்றினன் சுழலுஞ் சூலப்படையினோ னளித்தவில்லை
யாற்றல்கோ லிறுத்ததென்ன வணிமணி முறுவல்கோட்டி
யேற்றுதி யிந்தவில்லென் றளித்தலு மிமைப்பினேற்றிக்
கூற்றுறழ்பகழிக் கென்கோவிலக்கு நீ கூறுகென்றான்,

என்னும் பகுதிகளால் பரசுராமன் சபதம் பாழ்பட்டதாகப் பரக்கக்காணலாம் * ஸ்ரீராமர் இராவண சம்மாரஞ்செய்து அஸ்வமேதயாகஞ் செய்தகாலத்து, அந்தயாகத்திற்கு வங்ககலிங்காதி கீழ்நாட்டரசர்களும், சோளபாண்டியாதி தென்னாட்டரசர்களும், சிந்து சவ்வீராதி மெனாட்டரசர்களும், குருபாஞ்சாலி வடநாட்டரசர்களும் வந்ததாக வால்மீகிராமாயணத்தில் † வரையப்பட்டிருக்கின்றது, இதனால் பரசுராமன் சபதம்கார்த்த வீரியார்ச்சுனன் புத்திரர்காலத்தில் யேற்பட்டு, இராமர்காலத்தில் அழிந்ததென்பது நூற்றிடம். இதோடு இக்குலத்திலுதித்த வரசர்கள் திராவிடதேசத்தை சாலி. 1400-ம் வருடம்வரைக்கும் ஆண்டுவந்ததாக ஸ்தலகாவியங்கள் ஸ்தாபிக்கின்றது. ஸ்ரீராமரின் இருபத்தாறாவது பரம்பரையிலுதித்த பிரகதபெலன் காலத்திலுள்ள பீஷ்மரிடத்தில்

* பாரதம் ஆரணியபருவம் இராமனுற்பவச்சருக்கம். 17-வது செய்யுளிலும்; விஷ்ணுபுராணம், நாலாமம்ஸம் நான்காமத்தியாயத்திலும்; கம்பராமாயணம், சுந்தரகாண்டம் காட்சிப்படலம், 27-வது செய்யுளிலும்; அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம், 61-வது செய்யுளிலும்; மந்தரை சூழ்ச்சிப் படலம், 1-வது செய்யுளிலும் காண்க.

† வால்மீகிராமாயணம், பாலகாண்டம், பதின்மூன்றாவது சர்க்கத்திலுங் காண்க.

பரசுராமன் பத்துநாள் சண்டைசெய்து தோல்வியடைந்ததாகப் பரிஷ்கரிக்கப்பட்டிருக்கின்றது.

மகாபாரதம் ஆதிபர்வம், சந்தனுசருக்கம்,
110-வது, செய்யுள்.

இவ்விராமனு மறுத்தமன்னவனு மையிரண்டுதின மிகலுடன்
வெவ்விராவு மொழியாதுவெஞ்சமர் விளைத்தகாலை யடல்வீடுமன்
கைவிராயசிலையோடு மெய்வலிகவர்ந்து முன்றளர்வுகண்டுபோ
ரவ்விராமனிகரென்னு மாறிவனையஞ்சிநின்றெதி றடர்க்கவே.

என்பதால் போதரும். சிஷ்யனிடத்தில் சண்டைசெய்து தோர்த்தோடிய இவ்வதிசூரன், க்ஷத்திரியரை முற்றும் அழித்தானெனக் கூறின் எங்ஙனே உலகம் ஒப்பும். அக்கதையிது :—

"பரசுராமனால்* முற்றும் க்ஷத்திரியகுலம் ஒழிந்ததால் அசுரர்கள் மேலிட்டு, பிராமணர்களுக்கு பாதை யேற்பட்டது எனவும்; அதையொழிக்க இராஜஸ்தான் தேசத்திலுள்ள ஆபூமலையில் அக்கினி குண்டம் வெட்டி அதன்மூலமாக இந்திராம்ஸமாகிய பிரமரானும், பிரமாம்ஸமாகிய சொலாங்கியும், சிவாம்ஸமாகிய புரியராவும் விஷ்ணு அம்ஸமாகிய கோஹானும், உற்பவித்து இராட்சதர்களை யொழித்தார்கள் எனவும், இவர்களே அக்கினிகுலத்திற்கு மூலபுருடர்கள்" எனக்கூறுவர். இதைக்கட்டுக்கதையென்றும் அப்படிக் கூறப்பட்டவர்கள் அன்னியர்கள் என்றும் (Romesh Chunder Dutt's Ancient India Book V. ch II.) "ரோமச்சந்திரதத்தால்" எழுதிய "பூர்வ இந்தியா" என்னுஞ் சரித்திரத்திலும், (Tod's Rajasthan, Vol. I. P. 86-87. and Vol. II. P. 406-407. 440.) "டாட்" துரையால் எழுதிய "இராஜஸ்தான்" சரித்திரத்திலும்; (On the Original Inhabitants of Bharatavarsa or India P. 118-119-121.) "ஆபர்ட்" துரையால் எழுதிய "இந்து தேசப் பூர்வகுடிகள்" என்னும் புத்தகத்திலும் கூறப்பட்டிருக்கின்றது, அவ் வாபூமலையைத் தாயகமாகக் கொண்டவர்கள் 'பில்ஸ்" முதலிய அன்னியர்களே! இவர்களைச்சுட்டி :—

---

* Vide P. 92. 93. Vol II. of Mysore and Coorg and P. 66. 67. 80. No. 37. Vol XVI. of Madras Journal in 1850.

" The Aravulli chain running from north-east to south-west dividing the province into two portions. This is the water-shed. The highest peak is **mount Alen**, which is 5800 feets above the level of the sea. In these hills **the wild tribes of Bhils and grassias**, who lived by plunder, **have their home**". Vide. P. 27· Introduction, History of India by Pope.

இப்பகுதியில் " ஆபூமலையில் பெல்ஸ் " முதலிய காட்டுவாசிகள் வசிப்பதாகவும், அம்மலையே அவர்களுக்குத் தாயகம் என்றும் " கூறப்பட்டிருக்கின்றது. மேற்கூறிய நூலாசிரியர்களும், பின்னால் கூறப்போகும் பகுதிகளும் ஆபூமலையிலுதித்த அக்கினி குலத்தவர்களை அன்னாரியர்களென்று கூறுவதாலும், அவ்வன்னாரியர்களே ஆபூமலையில் வசிக்கும் " பெல்ஸ் " முதலிய காட்டுவாசிகளெனத் துணியப்படும். இப் "பெல்ஸ்" முதலிய சாதியாரை அன்னாரியர்களெனவும், இவர்களே அக்கினிகுலத்தவர்களெனக் கூறி வெளிவந்தவர்களெனவும் ஒபர்ட்துரை* தாமெழுதிய நூலில் கூறியிருக்கின்றார். இதோடு அக்கினிகுலத்தவர் எனக்கூறும் ஓர்சாராரே பரசுராமனால் க்ஷத்திரியர் அழிந்தார்களெனக் கூறுமவர் " விவேக சூனிய ஸ்திரிகளுக்கு ஒப்பானவர்கள் எனவும், அப்படிக்கூறுதல் கட்டுக்கதை யெனவும், அதை நம்புமவர்கள் புத்தியீனர்களெனவும்,"† அதன் முகத்தில் காரிமுழிகின்றனர். இவ்வக்கினிகுல சரித்திரத்தை யெழுதிய அங்கிலேயரே அதை அவ நம்பிக்கையான கட்டுக்கதை யென்பதோடு, அக்கினி குலத்தவர்களை " அன்னாரியர்கள் " என்றனர்கள்.

" If the origin of the Agnikulas throughout India Can be eventually proved as Non-Aryan, a very important historical fact will have been ascertain ". Vide P. 121. Ch. VI. On the Original Inhabitants of Bharatavarsha or India.

---

* On the original Inhabitants of India or Bharatavarsha by Oppert.

† சாதி சங்கிரகசாரம், 110-வது பக்கத்திலுங் காண்க.

"இந்தியாவில் பரவியிருக்கும் அக்கினிகுலத்தவர்கள் அன்னாரிய வம்ஸத்தவர்கள் என்றே ருசுப்படுத்தப்படும். இதை முக்கியமான சரித்திரங்களால் ஸ்தாபிக்கப்படும்."

இதில் கூறும் அன்னாரியராகிய அக்கினிகுலத்தவர்கள்* ஆரிய க்ஷத்திரியரைச் சேரப்பார்த்தல் அசம்பவமாகும். இவ் வக்கினி குலக்கதை சம்பவக் கதையாயிருப்பின் ஆரிய நூற்களாகிய புராணங்களில் வினியோகிக்கப்பட்டிருக்கும், அவ்வித கௌரவமும் இவ்வக்கினிகுலத்திற்குக் கிடைத்தில. ஸ்ரீராமன் காலத்தில் பரசுராமன் சபதம் பாழ்பட்டுப்போயிற்று†, அக்காலத்தில்தான் இவ் வக்கினிகுலத்தவர் உதித்திருக்கவேண்டும். இராமருக்கு இரண்டாயிரம் வருடத்திற்குப் பிறகு ஆண்ட அரச பரம்பரைகளை புராண இதிகாசங்கள் புகல, அக்காலத்தில் இவ் வக்கினிகுலத்தவர்கள் ஏற்பட்டிருப்பின் அந்நூற்கள் கூறுதற்குப் பின்னிடையா? கூறியே நிற்கும். அசம்பவக்கதை யாதலால் கூறிநிற்றில.

"The Legend goes that after Parasurama had swept the kshatriya race from the surface of the earth, ignorance and infidelity began to spread again in the land". Vide P. 118. Ch.VI. On the Original Inhabitants of Bharatavarsha or India.(Madras Journal in 1888.)

"பரசுராமனுக்குப்பிறகு க்ஷத்திரியவம்ஸம் உலகத்திலிருந்து அழிக்கப்பட்டது என்றுகூறும் கட்டுக்கதையொன்றுண்டு. அது அறியாமையாலும், அவ்விசுவாசத்தாலும் பரவப்பட்டது."

இப்பகுதி மேற்கூறிய கட்டுக்கதை இந்தியாவில் பரவியதற்குக் காரணம் அவ்விசுவாசமெனப்படுகின்றது. மகமதியர் காலத்தில் அந்நாரியவம்ஸத்தவர்கள் மகமதியருடைய அனுசரணையைப் பெற்று அரசராயினர்‡. ஆரிய க்ஷத்திரியரின்பேரில் அவர்களுக்குண்டாகிய ஆயாசத்தை வெளிப்படுத்தவே ஆரிய க்ஷத்திரியர்கள் அழிந்துவிட்டார்களெனவும், தாங்கள் ஆபூமலையிலிருந்து விழித்துக்கொண்டோமெனவும் முடிபோட்டுவிட்டனர்கள். அப்

* அன்னாரிய வம்ஸாவளியை இந்நூல் பாயிரம்திராவிடரின் கீழ்காண்க.

† இரகு வம்ஸகாவியம் 11-வது சருக்கம் 84-வது சுலோகங் காண்க.

‡ Vide. P. 42. ch. I. of history of India by Pope, and P. 47. Vol. IV. of A Statistical Account of Bengal by W. W. Hunter.

படி முடிபோட்டுவிட்டவர்கள் பின்னால் ஒன்பதாவது பாராவில் கூறப்போகும் அரசர்களே! அவர்கள் . ஆரிய க்ஷத்திரியர்களைப் போல் தாங்களும் ஒருகுலம் வகித்து இயங்கவேண்டி "**அக்கினி குலம்**" என்னும் ஒரு குலப்பெயரை கடன்வாங்கிக்கொண்டனர்கள். இதோடு நிற்காது ஆரிய நூற்களிலும் தலைவாலில்லாது இரண்டொரு செய்யுட்களை நுழைத்துவிட்டனர்கள். சூரிய சந்திர குலத்தைக்குறித்து புராணங்கள் பேசுதலைப்போல் இவ்வக்கினி குலத்தில் இன்னானுக்கு இன்னான் பிறந்தான், இன்னானுக்கு இன்னான் பிறந்தான் என்றுகூறும் தலையையுங்காணோம். இன்னின்னவன் அக்கினிகுலச் க்ஷத்திரியன் எனக்கூறும் வாலையுங் காணோம். முண்டங்களைப்போல் இரண்டொரு நூற்களின் மத்தியில் முரண்பட்டு நிற்கின்றது. அந்த முண்டங்களைச்சுட்டி :—

"Every incident whether it Originated in vadic, Brahmanic, or Buddhist times, **has been reproduced in Brahmanical forms** by compilers, who apparently flourished in the age of Brahmanical revival. In other words, every legend and tradition has been systematically Brahmanized for the purpose of bringing all the religions, laws and usages of the different races of India into conformity with Brahmanical ideas*". Vide. P. 6 Ch. I. of "The History of India". by Talbays Wheeler.

"பாரதம், இராமாயணம் என்னும் இதிகாசங்களைப்பற்றிச் சொல்லிய இடத்தில் இதிகாசங்களிலுள்ள ஒவ்வொரு சரித்திரமும், ஐதீகமும் வேணுமென்றே மாற்றி யெழுதியிருக்கின்றது." என்றார் உவீலர்துரை.

"With regard to the epics themselves, it will probably ever remain a hopeless task to separate the portions which are genuine and ancient, from those which are later additions". Vide. P. XVIII. of the preface to "Ancient India". by Romesh Chunder Dutt.

---

* Vide P. 104, 105, 107. Let. XI. of Letters to Indian Youth.

" இதிகாசங்களில் பூர்வசம்பவங்கள் இவைகள்தான்யென்று பிரித்தெடுக்கக்கூடாத விதமாய் அநேக விஷயங்கள் இடைக்கிடையே நுழைக்கப்பட்டு இருப்பதால் உண்மையானவைகளைக் கண்டுபிடித்தற்கு அசாத்தியமாயிருக்கின்றது" என்றார், வங்காளதேச சிவிலியனாகிய ரோமஷ்சந்திரதற்று. இவ்விதம் நுழைந்த கதைகளில் இவ்வக்கினி குலமும் ஒன்று. இதையறிந்தே ஆங்கிலேயரும் அக்கினி குலத்தை அடியோடு கெல்லி, அந்நாரியர்கள்* என வெந்நீர் விட்டனர்கள். ஆகிய இவைகளால் பரசுராமனால் க்ஷத்திரியகுலம் அழிந்ததெனவும், பிறகு அக்கினிகுலம் உண்டாயதெனவுங் கூறுதல் அவலக்கதையென அப்பாலொதுக்கினம்.

**9.** சூரிய சந்திரவம்ஸ க்ஷத்திரியகுலத்தவருக்குப்பின் அவர்களுக்குக்கீழ்ப்பட்ட குடும்பஸ்தர்கள் ஆண்டார்கள்†, இதற்கு முதல் அரசன் இயாரசந்தயென்பவன். இவன் முதல் இருபது ராஜாக்கள் ஏறக்குறைய ஆயிரம் வருடம் ஆண்டார்கள். இந்த குடும்பத்தின் கடசியரசனை மந்திரியால் கொல்லப்பட்டு அவன் குமாரனாகிய பிரதியோத்தாவை சிம்மாசனத்தில் ஏறப்பண்ணினான். அந்தப் பிரதியோத்தா முதல் நந்தன் வரைக்கும் பதினைந்துபேர் நானூற்றுதொண்ணூற்றெட்டு வருடம் ஆண்டார்கள். நந்தன் என்பவன் நூறுவருடம் ஆண்டபிறகு ஒரு பிராமணனால் கொலைசெய்யப்பட்டான். அந்த பிராமணன் மவுரியா குடும்பஸ்தனாகிய சந்திரகுப்தனை சிம்மாசனத்திலேத்தினான். அவனுக்குப்பிறகு ஒன்பது இராஜாக்கள் நூற்றிமுப்பத்தேழு வருடம் ஆண்டார்கள். இராஜா இறந்தபிறகு அவன் சேனாதிபதியாண்டான். அவனும் அவனுக்குப்பிறகு ஒன்பது பேரும் நூற்றிப்பனிரெண்டு வருடம் ஆண்டார்கள். ஒன்பதாவது அரசன் கொலைசெய்யப்பட்டப்பிறகு அவன் மந்திரியாகிய வாசுதேவன் ஆண்டான். அவனும் அவனுக்குப்பிறகு நாற்பதுபேர் முன்னூற்று நாற்பத்தைந்து வருடம் ஆண்டார்கள். எஜமானைக்கொன்று தானே இராஜாவானான். அவனும் அவனுக்குப்பிறகு இருபத்தோர் பேர்கள் நானூற்றியைம்பத்தாறு வருடம் ஆண்டார்கள். அவர்களின் கடசியானவன் சந்திரபீஜன். இவனுக்குப்பின் மகதோனியா தேசத்தையாண்ட அலேக்கு சந்தர் இந்தியாவில் பிரவேசித்து

* Vide P. 42. ch. II. On the Original Inhabitants of Bharatavarsha.
† Vide. P. 210. ch. V. of History of India by Pope.

அநேக ராஜாக்களை ஜெயித்து கீழ்ப்படுத்திக்கொண்டான். இவனுக்குப்பிறகு அநேகர் ஆண்டு கடைசியாக அங்கிலேயர் வசப்பட்டு ஆளப்பட்டுவருகின்றது.* இவ்வித மாறுதல்கள் ஏற்பட்ட காலத்திலேயே அக்கினி குலம்போன்ற அசம்பவக்குலங்கள் ஏற்பட்டதென்றறியவும்†.

## உ. சோழன்.

1. மேற்கூறிய சூரியனுக்கு மறலியும், இளனும், வைவஸ்வத மநுவும் உதித்தனர்கள். அது :—

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்த வத்தியாயம்,
3-வது செய்யுள்.

அறம்பொருதுகுத்தபொற்பிதிறன்ன வயிர்சுணங்கணிந்தெழில்வாய்ந்து
கரும்புகைசெய்தபச்சிளங்குரும்பைக் கதிர்முலைதாங்குசங்கங்கை
முருந்தெழில்கவற்றுநகைவிருந்தருந்தி மொய்கதிர்ப்பருதிநன்களித்த
திருந்துசீர்மைந்தன்றெவ்வடுசுடற்வேற் றிறல்கொள்வைவச்சுதனென்பார்.

4-வது செய்யுள்.

எழுதவாட்டடங்கணின்னிளமுறுவ லிராக்கினியிருட்குறும்பெறியு
மழசதிர்ப்பருதிவேந்தனைப்புணர்ந்தாங் களித்திடுமக்கள்வாளெயிற்று
முழுவலித்திண்டோள்மறலியும் வெள்வேலேந்திளவந்தனுமுதிராக்
கழையுறழ்பசுந்தோள் யமுனையென்றுரைக்குங் கதிர்முலைக்கன்னியுமன்றே.

என்னும் பிரயோகங்களில் சூரியனது புத்திரர்கள் எண்மர் எனவும், அவற்றுள் மறலி, இளவந்தன், வைவஸ்வதன் என்னுமூவர் சிரேஷ்டர் எனவும் பார்க்கின்றோம்.

கோயிற்புராணம், இரணியவன்மச் சருக்கம், 7-வது செய்யுள்.

வானவர்கோனுரைத்திரவிமைந்தர்களிலொருவனுக்கு
ஞானவிழிநல்கிநமனற்பதியுங்கொடுத்தகற்றி
ஈனமிலாவொருவனுக்கங்கிலகுமணிமுடியளித்துத்
தேனகுதாரணிவித்துத்தேவர்கடங்கைக்கொடுத்தான்.

இதில் சூரியனுக்குரிய புத்திரருள் இருவரைத் தெரிவித்து, ஒருவனுக்கு எமபுரமும், மற்றொருவனுக்கு முடியுஞ் சூட்டியதாக

* Vide. P. 14 Introduction, of The History of India by Pope.
† விஷ்ணுபுராணம் நாலாமம்சம். இருபத்துநாலாமத்தியாயத்தில் காண்க.

விளங்குகின்றது. முடிசூட்டப்பெற்றவன் வைவஸ்வத மநுவே னப்படும்.

ஆகிய இம்முச்செய்யுட்களில் கூர்மபுராணத்தார் கூறியதையே கோயிற்புராணத்தாருங் கொண்டிருத்தலால், அவ்விருவர் கொள்கையும் ஒன்றெனத் துணியப்பட்டது. அதாவது சூரியனுக்கு எட்டு புத்திரருண்டெனவும்; அவ்வெண்மருள் மறலி, இளவதன், வைவஸ்வதமநு என்னு மூவர் சிரேஷ்டர் எனவும்; இம்மூவருள் மறலிக்கு எமபுரமும், இளவதனுக்கு இமயமலையின் வடசாரலும்*, வைவஸ்வதனுக்கு இமயமலையின் தென்சாரல் அதாவ்து ஆரியவர்த்தத்தையும் அளிக்கப்பட்டதென விளங்குகின்றது. இவர்களுள் வைவஸ்வதமநுவைக் குறித்து :—

கோயிற் புராணம், இரண்யவன்மச்சருக்கம்
9-வது செய்யுள்.

அன்னவர்கள் பின்னவனு மனுவாகி வவனுக்கு
மன்னுமனை வியரிருவ ருளராகி மற்றவரின்
மூன்னவள்பா லுடன்படங்கள் முழுநிறமா மகவுதிப்பப்
பின்னவள்பா லெழிலினரா யிருதநயர் பிறந்தார்கள்.

இதில் சூரியன் புத்திரனாகிய வைவஸ்வதமநுவுக்கு இருமனைவிகளுண்டெனவும்; அவற்றுள் முன்னவளுக்கு ஒரு புத்திரனும், பின்னவளுக்கு இரு புத்திரர் உண்டெனவும் உரைத்திருக்கின்றது. இதை கூர்மமும் அங்கீகரிக்கின்றது.

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்தவத்தியாயம்,
7-வது செய்யுள்.

கடல்திரை யுடுத்தநெடு நிலமுழுதுங் களைகணாய்த் தனதடிப்படுத்து
மடுதிறல்வைவச் சுதன்றருமைந்தரா டல்வேலிக்குவாகுவுமந்
தொடிபுனை தடங்கைதலை யணையாகச் சுரும்புண விரிந்ததாராசு
ரிடுதிறைகொணர்ந்து துயின் மணிமுன்றிலினனென வுரைக்கும்வேந்தனுமே,

இதில் வைவஸ்வதமநுவுக்கு இரு புத்திரருண்டெனக் கூறியிருக்கின்றது. அவர்கள் கோயிற்புராணத்தில் கூறிய பின்னவள் புத்திரரே! கூர்மபுராணம் ஆரியவர்த்தத்தின் அரசரைக் குறிக்க வந்ததேயன்றி, திராவிடதேசத்தரசரைக் குறிக்க வந்ததல்ல. அத

* இவ்வடசாரல் நாளதும் இளவதவருஷமெனப்படுகின்றது.

னால் கூர்மபுராணத்தார் ஸ்ரீராமன் பரம்பரையை விளக்க, அப்பரம்பரைக்கு மூலபுருஷனாகிய இட்சுவாகு பின்னவள் புத்திரராகையால், அப்பின்னவள் பரம்பரையை தெரிவித்து, முன்னவள் பரம்பரையை மொழியாதுவிட்டனர். முன்னவள் புத்திரன் திராவிடத்தின் ஓர் பகுதியை முடிசூட்டப்பெற்ற இரண்யவன்மனாகுவன்*. இவனைக் குறித்து திராவிடதேசத்தின் சரித்திரத்தை விளக்கவந்த கோயிற்புராணம் கோஷிக்கின்றது.

இரண்யவன்மனுக்கு வியாக்கிரபாத முனிவரால் தென்தேசம் முடிசூட்டப்பட்டது. இவன் தில்லைக்கொடியின்கீழ் எழுந்தருளியிருந்த சிவபிரானுக்கு நவரத்தின கசிதமாகிய ஒப்பற்ற பொன்னம்பலத்தைச் சமைத்து அதைச் சூழதில்லை மூவாயிரவருக்கு திருமாளிகை கட்டுவித்து அரசாண்டான்.† இவ்வொப்பற்ற திருவம்பலத்தைச் சமைத்த இரண்யவன் மன் வம்ஸத்தவர்களே சோழர்கள் என்ப்படும்.

நம்பியாண்டார் நம்பியந்தாதி, 65-வது செய்யுள்.

சிங்கத்துருவனைச் செற்றவன்சிற்றம் பலமுகடு
கொங்கிற்கனக மணிந்த வாதித்தன் குலமுதலோன்
திங்கட்சடையர் தமரதென் செல்வமெனப் பறைபோக்
கெங்கட்கிறைவ னிருக்கு வேளூர்மன் னிடங்கழியே.

(பொ-ழி) நரசிங்க உருவங்கொண்ட திருமாலின் செருக்கைச் சரபமாய் அழித்த நடேசபிரானது திருவம்பலத்தை பொன்னினால் அலங்கரித்த‡ சூரியகுல இரண்யவன்மன் வம்சத்திற்கு முதலாயுள்ளவரும், என்னுடைய செல்வம் சிவபிரான் அடியாரதென்று பறையறைவித்த எங்கள் முதல்வராயுள்ளவர் இருக்குவேளூரில் அவதரித்த இடங்கழிநாயனார் என்பதாம்.

---

* திருவாதவூரர் புராணம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், 11-வது செய்யுள் காண்க

† கோயிற்புராணம், இரண்யவன்மச் சருக்கம், திருவிழாச் சருக்கங்களையுங்காண்க.

‡ சிதம்பரபுராணம், பாயிரம், 11-வது செய்யுள் காண்க.

பெரியபுராணம், இடங்கழி நாயனார் புராணம்,
3-வது செய்யுள்.

அந்நகரத்தினிலிருக்கும் வெளிர்குலத்தரசளித்து
மன்னியபொன்னம்பலத்து மணிமுகட்டிற்பாக்கோங்கிற்
பன்னுதலைப் பசும்பொன்னாற் பயில்பிழம்பாமிசையணிந்த
பொன்னெடுந்தோளாதித்தன் புகழ்மரபிற்குடிமுதலோன்.

இச்செய்யுள் மேற்செய்யுளின் கருத்தைக்கொண்டதே! இவைகளில் இடங்கழி நாயனாரை "கனகமணிந்த ஆதித்தன் குல முதலோன்" எனவும், "பசும்பொன்னணிந்த ஆதித்தன் மரபிற் குடிமுதலோன்" எனவும், அறைந்திருக்கின்றது. கனகம் எனினும், பொன்னெனினும் பொருள் ஒன்றே! சிதம்பர ஆலயத்தை பொன்மயமாக்கினவன் இரண்யவன்மன். இவன் சூரியகுலத்தவன் என மேலே எண்பித்தனம், இடங்கழி நாயனாரை சூரியகுல இரண்யவன்மன் வம்ஸத்திற்கு முதலாயுள்ளவர் என விளக்கவே "ஆதித்தன்குல முதலோன்," "ஆதித்தன் மரபிற்குடி முதலோன்" என்றனர்கள். ஆதித்தன் என்பது சூரியனது பல பெயர்களில் ஒன்று. இப்பிரயோகங்களால் சோழன் சூரியகுலத்தவனும், இரண்யவன்மன் வம்ஸத்தவனும் ஆதுவன் என விளங்கின. சிலர் சோழனை கலியுகத்திற்குப் பின்னிட்ட இட்சுவாகு வம்ஸத்தில் சாக்கியனுடைய பரம்பரையில் உற்பத்தியானவனெனவும், சிலர் முசுகுந்தன் வம்ஸத்தவன் எனவுங் கூறுவர். அப்படி கூறுதற்கு நூல் வழக்கில.

நம்பியாண்டார் நம்பியந்தாதி, 82-வது செய்யுள்.

செம்பொன்னணிந்து சிற்றம்பலத்தைச் சிவலோகமெய்தி
நம்பன்கழற்கீழிருந்தோன் குலமுத லென்பர் நல்ல
வம்புமலர்த்தில்லை யீசனைச்சூழ மறைவளர்த்தான்
இம்பனறுந்தொங்கற் கோச்செங்கணானெனுமித்தனையே *

(பொ-ரை.) தில்லையின்கண் நடேசபிரானைச் சூழும்படி தில்லை மூவாயிரவருக்குத் திருமாளிகை செய்வித்தவராகிய கோச்செங்கட்சோழ நாயனார், சிதம்பரசபையைப் பொன்னாலலங்கரித்து,

* கோயிற்புராணம், திருவிழாச்சருக்கம் 15-வது செய்யுள் காண்க.

சிவபிரான் திருவடி நீழலையடைந்த இரண்யவன்மச் சோழனது குலத்திலவதரித்த முதல்வர் என்பர்.

மேற்கூறிய செய்யுட்களின் கருத்தே இதிலும் அமைந்திருக்கின்றது. பெரியபுராண உரையாசிரியராகிய ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் "சிற்றம்பலத்தை பொன்னணிந்தோன் குல முதலென்பர்" என்பதற்கு "சிதம்பரசபையை பொன்னாலலங்கரித்த இரண்யவன்மச் சோழனது குலத்திலவதரித்த முதல்வர்" எனவே உரையெழுதியிருக்கின்றார். இதனாலும் சோழர் இரண்ய வன்மன் வஸ்த்தவர்கள்* எனவே இனிது விளங்குகின்றது. இதை யொத்தே அங்கிலேயரும் அறைகின்றனர்.

"**Trichinopoly** is supposed to have been **the first seat of the cholakingdom**, and its founder, one **Taymanall**† who is supposed to have been a **native of Oude**, or some part of upper Hindustan. **Wariur**‡ **was his capital**" §Vide, The Tanjore Mahratta Principality. Ch. II. P. 38.

"முதலில் சோழராஜாங்கத்திற்கு திரிசிரபுரதிலுள்ள உரையூரே தலைநகர மாகியது. இதை ஸ்தாபித்தவன் அயோத்திதேசத்தவன்" எனப்பட்டிருக்கின்றது.

அயோத்திக் கரசனாகிய இட்சுவாகுவுக்கு இரண்யவன்மன் மூத்த சகோதரனானமையால், சோழராஜாக்களுக்கு மூல புருடனாகிய இரண்யவன்மன் அயோத்திதேசத்தவன் எனப்பட்டான் அயோத்திதேசத் தரசர்கள் சூரியகுலத்தவர்கள் என்பது சொல்லாமலே யமையும். மேலே இரண்யவன்மனை சூரியகுலத்தவன் என விளக்கினம். இதனால் இரண்யவன்மன் சூரியகுல சோழன்

---

* Vide. Wilk's History of mysore. Vol. II. P. 532.

† அக்காலத்தரசர்களை அவன்து புஜபலபராக்கிரமத்தை நோக்கி பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

‡ சோழன் :—"The Titular name of a Dynasty of ancient kings, whose first capital was Uriyur, and afterwards Tanjore" (Rottler.)

§ Oriental Historical manuscripts Vol. II. P. 65. and appendix. E. P.35.

சந்ததிக்கு முதலாயுள்ளவன் எனவும், தென்திசைக்கு சிதம்பரத்தை தலைநகராக்கி ஆண்டவரசரில் முதல்வன் எனவும் இனிது விளங்கும்.

சிதம்பரத்தையாண்ட சூரியகுல இரண்யவன்மன் வம்சத்திலுதித்த ஓர் சோழன் இக்காலத்து (Surat) சூரத்து என்று சொல்லப்படும் "சௌராஷ்டிரம்" என்னும் பட்டணத்தையுண்டாக்கி அரசுபுரிந்து வந்தான். இச்சௌராஷ்டிரத்தை யுண்டாக்கி சோழன் அரசுபுரிந்தது இராமருக்கு சுமார் 600-வருடங்களுக்கு முன்* நடந்ததாக (Tod) "டாட்" என்னும் "இராஜஸ்தான்" சரித்திராசிரியர் உத்தேசிக்கின்றார். இச் சோழன் குலத்திலுதித்த ஜனநாதச்சோழன் மகன் அரசர்சூழாமணிச்சோழன் சௌராஷ்டிரத்திலிருந்து திக்கு விஜயஞ் செய்தற்பொருட்டு சைனியங்களோடு புறப்பட்டு கம்பை பம்பை காவேரியைக் கடந்து செல்கையில் ஆங்கொரு காட்டிற்குள் கோழியொன்று சோழனது யானையோடு சமர்செய்தலால் அவ்விடம் மகுத்துவமானதென யூகித்து, ஆங்கொரு நகரத்தையுண்டாக்கி அதற்கு கோழிக்கோடு என்னும் பெயர் வகித்து ஆண்டதாக செவ்வந்திப்புராணம் சூரவாதித்தசருக்கத்தில் சோபிக்கின்றது. கோழிக்கோடுஎன்னும் பெயரையுடைய நகர் இரண்டு. ஒன்று மலையாளஞ்ஜில்லா கள்ளிக்கோட்டைக்கருகிலுள்ளது. மற்றொன்று திருசினப்பள்ளி ஜில்லா ஸ்ரீரங்கத்திற்கருகிலுள்ள உறையூராகும். கோழிக்கோடு சோழராஜர்களுக்கு உறைவிடமாயிருத்தலால் உறையூர் எனப்பட்டது. "கோழியுறையூர்" (பிங்கலன்). இதை உறைந்தை யெனவும், நிசுளாபுரம் எனவுங் கூறுதல் நூல்வழக்கு. இதனால் உறையூருக்கு முதலரசன் அரசர்சூழாமணிச்சோழன் என யூகிக்கப்படும். இவன் வம்ஸத்தில் இடங்கழி நாயனார், புகழ்ச்சோழ நாயனார், மங்கையற்கரசியார், கோச்செங்கட்சோழ நாயனார் என்பவர்கள் உதித்தனர்கள். அதனாலேயே அவர்கள் சோழகுலத்தவர், என்னுஞ் ஜாதிப்பெயரைப் பெற்றனர்கள்.

## 2. தென்னாட்டின் பிரிவுகள்.

பாண்டியநாடு :—மதுரை, திருநெல்வேலி, திருவாங்கூரின் தென் பகுதியுமாகும்.

*கம்பராமாயணம், கிஷ்கிந்தைகாண்டம், ஆறுசெல்படலம், 52-வது, செய்யுள்.

சோழநாடு :—தஞ்சாவூர், திருசினப்பள்ளி, புதுக்கோட்டையையு முள்ளடக்கும்.

தொண்டநாடு:—வட ஆர்க்காடு, சென்னை, செங்கல்பட்டையும் உட் படுத்தும்.

ஈழநாடு :—சேலத்தின் வடமேற்பகுதியும், மைசூரின் தென்கீழ்ப் பகுதியுஞ் சேர்ந்ததாகும்.

மகதநாடு:—தென் ஆர்க்காடு, சேலத்தின் தென்கீழ்ப்பகுதியு மடங் கும்.

கொங்குநாடு :—கோயம்புத்தூர், நீலகிரி, சேலத்தின் தென்பகுதியு மாகும்.

சேரநாடு :—மலையாளம், கொச்சி, திருவாங்கூரின் வடபகுதியுஞ் சேரும்.

என இத்தமிழ்நாடாகிய தென்னாடு ஏழாகப்பிரிக்கப்படும். அதில்,

சோழநாட்டெல்லை.

கம்பர்.

கடல்கிழக்குத்தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக்கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப்பெண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக்கெல்லை யெனச் சொல்*.

ஏணாடு=ஈழநாடு.
சோணாடு=சோழநாடு†.

புகழேந்தி.

கடல்கிழக்குத்தெற்கு கரைபுரளும் வெள்ளாறு
குடதிசைக்குக் கோட்டைக் கரையாம்—வடதிசைக்கு
ஈழமுதலா யிருபத்து நாற்காதம்
சோழநாட்டெல்லை யெனச் சொல்*.

---

* Vide. William Taylor's Oriental Historical Manuscripts. Vol. II, Appendix. D. P. 26.

† சோணாடு = **Poetical contraction from** சோழநாடு, **The Chola Country**, (Rottler, Winslow.)

கிழக்கு :—வங்காளக்குடாக்கடல்.

தெற்கு:—வெள்ளாறு. இது பாண்டியநாட்டிற்கு வடவெல்லே.

மேற்கு :—கோட்டைக்கரை அல்லது குளித்தலே. இது அமராவதியும் காவேரியும் ஒன்று கூடுமிடமாகும்*. இதுவே கொங்குநாட்டிற்குக் கிழக்கெல்லே.

வடக்கு :—ஈழநாடு அல்லது ஈழநாட்டுப்பெண்ணே. மைசூர் பிராந்தியத்தையே ஈழநாடு அல்லது எருடு எனப்படும்,

Mr. W. Taylor, at Page XI. Vol, I. of the Preface to his "Historical manuscripts" says **the Cholamandalam** extending "From the Cauvery on the South; to the Palar, at least, on the North; and from the sea on the East; to the Ghauts on the West. But this extensive tract of country, was in after ages, we believe, divided into two portions, the Cholamandalam proper and the Tondamandalam."

"சோழமண்டலம் தெற்கில் காவேரியையும், வடக்கில் பாலாற்றையும், கிழக்கில் வங்காளக் குடாக்கடலேயும், மேற்கில் மேற்கு மலேத்தொடர்ச்சியையும் எல்லேகளாக வுடையது. அது பிற்காலத்தில் சோழமண்டலம் தொண்டமண்டலம் என இருகூறுக்கப்பட்டது" என்ருர் டெயிலர் துரை.

இதனல் சோழநாடு "புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருசிருப்பள்ளி, தென் ஆற்காடு, சேலமுஞ்" சேர்ந்ததாகும். ஆனல் தென் ஆர்க்காட்டையும் சேலத்தையும் மகதநாடு எனப்படும். ஒருக்கால் மகதர்களால் இவ்விரு ஜில்லாவும் கம்பர் புகழேந்தி காலத்திற்குமுன்பு அல்லது பின்பர்வது ஆளப்பட்டிருக்கலாம். அதேனென்ருல் சோழநாட்டிற்கு வடவெல்லே ஈழநாடு எனப்பட்டிருத்தலாலென்க. அதனல் அவ்வீழ நாட்டிற்கு அல்லது மைசூர் நாட்டிற்கு தெற்காயுள்ள ஜில்லாக்களே எல்லாம் சோழநாட்டோடு சேர்த்தெண்ணப்படவேண்டும்.

---

* Vide, Kongu History, P. 3.

**3.** கடைசி சோழனாகிய வீரசேகரச் சோழன் சாலி 1355 அதாவது அங்கிலேயவாண்டு 1432 வரைக்கும் சோழநாட்டை யாண்டு வடுகரிடம் ஒப்புவிக்கப்பட்டது*. வடுகருள் கடைசி யரசனாகிய இராமபத்திரன் தன் தம்பியின் செல்வத்தைப் பார்த்து பொறாமைகொண்டு, ஷஹாஜி என்னும் மராட்டிய அரசனோடு கலந்து துர் ஆலோசனை செய்து சகோதரனுக்கெதிரியாக சண்டைசெய்து தோற்கடித்தான். இவ்விதமாக வடுக அரசு ஒழிந்தது†. சோழநாட்டிற்கு இராஜதானியாகிய தஞ்சாவூர் பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் ஷஹாஜி அரசனால் கைப்பற்றப்பட்டது. ஷஹாஜீ சிவாஜீ மகாராஜாவின் தகப்பன்‡. இவன் வம்ஸத்திலுதித்த துளசிஜீ மகாராஜா ஆண்டுவருங்காலத்தில், 1773-ம் வருஷத்தில் கருனாடக நவாப்பு அங்கிலேயர் உதவியைக்கொண்டு தன்வசப் படுத்திக்கொண்டான். பிறகு 1775-ம் வருடத்தில் துளசிஜீ மகாராஜாவுக்கு அங்கிலேயரால் கொடுக்கப்பட்டது. இவரும் இவர் குமாரன் அமிர்சிங்கு மகாராஜாவும், 1798-ம் வருடம் வரைக்கும் ஆண்டார்கள். அவ்வருடத்தில் அத்தேசத்தை அங்கிலேயர் ஆளவும், அதன் வரும்படியில் ஐந்திலொருபங்கு பெற்றுக்கொள்ள வேண்டியதென்றும் ஓர் உடன்படிக்கை துளஜாஜீ மகாராஜாவின் புத்ரனாகிய சர்போஜ மகாராஜாவிடத்தில் செய்துக்கொண்டு பட்டங்கட்டினர். இப்போது இராஜாவில்லை. இவ்விதம் சோழ ராஜாங்கம் நசித்துப்போயின.

## ௩. தொண்டன்.

**1.** தொண்டன் சூரியகுலத்தவன், சோழன் வம்ஸத்தி லவதரித்தவன். இவனைச் சுட்டி :—

திருக்கழுக்குன்றப் புராணம், நாட்டுப்படலம், 2-வது செய்யுள்.

முக்கணான் கணநாதர்க்குண் முதன்மைத் துண்டீரனாண்டு
மிக்கதுண்டீரநாடாய்த் தண்டகவேந்தன் றாங்கித்
தக்கதண்டக நன்னாடாய்த் தபநன்மா குலத்துச்சோழன்
றொக்கதார்த் தொண்டமான் காத்தாயது தொண்டநாடே.

* Vide. Pope's History of India Ch. IV. P. 133.

† Vide. The Tanjore Mahratta Principality. Ch. II. P. 44. and Oriental Historical Manuscripts. Vol. II. P. 91-92-201-203.

‡ Vide. Mysore and Coorg. Vol. II. P. 22, 23.

இதில் தொண்டமானை "தபனன்குலத்துச் சோழன்" எனச் சொல்லி யிருக்கின்றது.

தபனன்குலம் = சூரியகுலம்
= சான்றேன்குலம் } நிகண்டு
சோழன்=சோழராஜன்.

"சூரியகுல சோழவம்ஸத்தவன்" என்பதுபொருள். "தரணி செங்கதிரோன் சண்டன் தபநனே யொளியே சான்றேன்" என்னு நிகண்டால் தபநன் எனினும், சூரியன் எனினும், சான்றேன் எனினும் பொருள் ஒன்றே!

திருவேற்காட்டுப் புராணம்.

தண்டகனுண்டு தண்டகநாடாய்த் தாவறுதுண்டீரனுண்டு
வண்டலர்சோலைத் துண்டீரநாடாய் மலிபுக ழிரவிதன்குலத்தான்
தொண்டநன்மாலைத் தொண்டமானுண்டு தொண்டநாடாயது தூய
வண்டர்வான்சுரபிசொரிந்துபால்பெருகியமர்ந்தவிப்பாலிநன்னுடே

இதில் தொண்டமானை "இரவிதன்குலத்தான்" எனப்பட்டிருக்கின்றது. இரவிகுலம் எனினும் சூரியகுலம் எனினும் பொருள் ஒன்றே! இதை யொத்தே அங்கிலேயரும் அறைவர்.

The inhabitants first settled in the Dandacaraniyum, were not sufficiently thrifty and industrious to make any great progress in clearing the land and giving a scanty subsistence, they frequently removed to other parts of the country; which occasioned the **Chola Rajah** at the time, known by the name of **Audonda chakravarti**, to adopt a new scheme of turning this tract to advantage."* Vide. Matters on Mirasi Right

*Vide. Wilks History of Mysore, Vol. I; note to appendix II. Chingalput District Manual. Ch. III. P. 110; and Ch. IV. P. 137, 138; The Madras Journal of Literature and Science. For the session 1888-1889. Ch. XII. P. 212, 222, 223, 226 to 237; The Oriental Historical manuscripts. Vol. II. P. 65, 66, 144; Salem District manual. Ch. I. P. 5 to 7 and Matters On Mirasi Right Madras-1862.) P. 234. Taylor's Catalogue Raisonne. Vol. III. P. 41-42.

Selected from the Records of Madras Government. Para 59. P. 40.

"தண்டகாரணியத்தில் பிரதமத்தில் குடியேறினவர்கள் பூமியைத் திருத்துவதில் போதுமான உழப்பாளிகளாயில்லாது சொற்பவரும்படி யுள்ளவர்களாயிருந்தபடியால் அடிக்கடி அந்நிய தேசங்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் தொண்டமான் சக்கிரவர்த்தி யென்னுஞ் சோழன் பூமியில் பலனுண்டாக வேறொரு உபாயஞ்செய்தான்." என மிராசு ரயிட்டில் கூறியிருக்கின்றது.

The country was called Dandakanadu as it was ruled by Dandaka. Then it was named Tundiranadu in consequence of the reign of Tundira. Afterwards it was called **Tondanadu** as **Tondaman, a descendant of the Solar race**, governed the Kingdom." Vide. On the Original Inhabitants of Bharatavarsa or India. (In Madras Journal 1888-89.) Ch. XII. P. 229.

"கடசியில் சூரியகுலத்திலுதித்த தொண்டமான் ஆண்டதால் தொண்டநாடாகியது" எனப்பட்டிருக்கின்றது. மேற்பகுதிகளால் தொண்டன் சூரியகுலத்தவனும், சோழவம்ஸத்தவனுமாகுவன் எனத் துணியப்பட்டது. இத்தொண்டமான் ஆண்டநாட்டை இவனுக்கு முன் தண்டகனால் ஆளப்பட்டது. தண்டகன் இட்சுவாகுவின் இளைய்குமாரன். இவன் திராவிடரிடமிருந்த பெரிய ஆரணியத்தை வெகுதூரம் அழித்து வடதேசத்திலிருந்து அரசுக்குரிய அங்கங்களெல்லாம் அழைப்பித்துக் குடியேற்றி* "மதுமா" என்னும் ஒரு நகரம் உண்டாக்கி, சுக்கிராச்சாரியை குருவாக வகித்துக்கொண்டு அரசாண்டான்.

கூர்மபுராணம், இராமன் வைகுந்தமடைந்த வத்தியாயம்,
98-வது செய்யுள்.

வெளிறில்கேள்விச்சுக்கிரனையாசானுக்கிவியப்பினொடு
மொளிறும்வடிவேற்றண்டனந்தவுலகங்காத்துவருநாளில்
வளையார்மென்றோளாசையெனும்வெள்ளிமகளைவலிதாகக்
களிசேர்தண்டன்கலந்திடலுங்கன்னிதாதையொடுமுரைத்தாள்.

* Vide. Ellis' Papers on Mirasi Right. P. 246.

99-வது செய்யுள்.

மண்டுநீர்வளங்கூர்தேய மறைமுனி சாபந்தன்றாற்
தண்டகாரணியமாகிக் கிடந்தது சனங்களெல்லாம்
விண்டவனுறைத றன்றால் வியன்சனத்தானமாகி
யண்டரூர்போன்றதைய வவ்விடமென்று சொன்னான்.

என்னுஞ் செய்யுட்களால் தண்டகன் குருவின் புத்திரியாகிய அனலையைக் கற்பழித்தமையால் இவன் இராஜ்யம் மாரியினால் அழிவுண்டுபோயிற்றென்றுந் துலங்குகின்றது. இதற்குப்பிறகே தொண்டமானால் ஆளப்பட்டது.

விநாயகபுராணம், நாட்டுப்படலம், 2-வது செய்யுள்.

அண்டரும்புகழ்துண்டீரனாண்டுதுண்டீரநாடாய்த்
தண்டகன்பின்னராண்டுதண்டகனாடாய்ப்பின்னர்த்
தொண்டமானாண்டுதொண்டனாடெனத்துலங்கிற்றென்ப
பண்டயன்படைப்புத்தொட்டுப்பயிலுமித்தொல்லைநாடு.

இதில் துண்டீரனாண்டு, பிறகு தண்டகன் ஆண்டு, கடசியில் சூரியகுலசோழன் பரம்பரையிலுதித்த தொண்டமானால் ஆளப்பட்டதெனப் பரிமளிக்கின்றது. இத்தண்டகாரணியத்தை தொண்டமான் ஆண்டதால் "தொண்டநாடு, தொண்டமண்டலம்" எனப்பட்டது*.

## 2. தொண்டநாட்டெல்லை.

### கம்பர்.

மேற்குப்பவளமலை வேங்கட நேர்வடக்காம்.
ஆர்க்குமுவரி யணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப்பினாங்கி திகழிருபதின் காதம்
நற்றொண்ட நாடெனவே நாட்டு†.

மேற்கு :—கீழ்காற்று மலைத் தொடர்ச்சியினோர் பாகமாகிய பவளமலை.

வடக்கு :—திருப்பதி அல்லது திருவேங்கடம்.

* Vide On The Oiginal Inhabitants of Bharatavarsa, or India P. 225, 226.

† Vide, The Madras Journal of Literature and Science for the session 1888—89. Ch. XII. P. 229.

கிழக்கு :—வங்காளக்குடாக்கடல்

தெற்கு :—பினாங்கிநதி. இப்பெயர்கொண்ட நதிகளிரண்டு. இவ்விரண்டும் நந்தி தூர்க்கமாலையி லுற்பத்தியாகி ஒன்று வடபினாங்கி என்னும் பெயரைப்பெற்று கடப்பை நெல்லூர் ஜில்லாக்களுக் கூடே சென்று சமுத்திரத்தில் விழுகின்றது. தென்பினாங்கி சேலம், தென்ஆற்காடு ஜில்லாக்களுக்கூடே சென்று கூடலூருக் கருகில் சமுத்திரத்தில் விழுகின்றது. இக் கவியில் குறிக்கப்பட்ட தெற்கெல்லை இத்தென்பினாங்கிநதியே! இதை சேயாறு என்றும், பெண்ணையாறுயென்றும், ஈழநாட்டுப் பெண்ணை யென்றுங் கூறுவர்.

தொண்டமண்டலத்தின் வடகோடியிலிருக்கிற புலிக்காட்டேரிக்கு (Pulicat lake) அருகாமையில் சுவர்னமுகி நதியோரமாயிருக்கும் ஸ்ரீ அரிக்கோட்டை என்னுங் கிராமத்திலிருந்து தென்பினாங்கி நதியின் முகத்துவாரத்திற்கு நேர்கோடொன்றிழுந்தால் சற்றேரக்குறைய 160-மயில் தூரமென யூகிக்கப்படுகின்றது. இதனால் இத்தொண்டநாடு நேர்தென்வடல்தூரம் 20-காதம் அதாவது 160-மைல் என விளங்குகின்றது.

புகழேந்தி.

செயாறுதெற்குத் திருவேங்கடம் வடக்கு
மாயாகடல் கிழக்கு மானனையீர்—மேய
இடபகிரி மேற்கே யிதுதொண்டநாட்டின்
இடந்தனைச் சொன்னு ரிசைந்து.

மேற்கு :—இடபகிரிமலை, இது நந்தி தூர்க்கத்தின் அருகிலுள்ளது.

வடக்கு :—திருவேங்கடம்.

கிழக்கு :—வங்காளக் குடாக்கடல்.

தெற்கு:—சேயாறு*. இப்பெயர்கொண்ட நதிகளிரண்டு, ஒன்று ஈழநாட்டுப் பெண்ணைக்கு உபநதியாகிய புண்ணிய ஆற்றுக்கு வடக்கும்; "சென்கமா" (Senga-

* *Cheyar*, Vide, Chingalput District Manual. Ch. I. P. 1-2.

-ma.) என்னும்இடத்திற் கருகிலுள்ள "சாவடை மலை" (Jawadi) யிலுதித்துச் சென்று, காஞ்சி புரத்திற்குச் சற்று தென்கிழக்கே திருமுக்கூடல் என்னுமிடத்தில் பாலாற்றோடு கூடுகின்றது. மற்றொன்று ஈழநாட்டுச் சேயாறு என்று சொல்லப் படும். அதுதான் சேலம் தென்ஆற்காடு ஜில்லாக் களின் வழியே செல்லும் தென்பிணுங்கினி யென்னும் தென்பெண்ணையாறு. இதுவே தெற்கெல்லை.

தென்பிணுங்கியென்னும் நதிக்கு ஈழநாட்டுச் சேயாறு என்னும் பெயருண்டானதற்குக் காரணம் சோழவம்ஸத்தைச் சார்ந்த ஈழன்* இலங்கையை கைபற்றுமுன், தற்காலத்தில் மைசூர் எனப்படும் இராஜ்யத்தின் தென் கிழ்ப்பகுதியை யாண்டுக்கொண் டிருந்தபடியால் அந்தநாட்டிற்கு ஈழநாடு என்னும் பெயருண்டாயிற்று. தென் பிணுங்கி என்னுஞ் சேயாறு அந்த ஈழநாட்டில் உற்பத்தியாகின்றபடியால் அதற்கு ஈழநாட்டுச் சேயாறு எனப்பட்டது.

திருக்கழுக்குன்றப் புராணம், நாட்டுப்படலம்

1-வது, செய்யுள்,

வண்டரமலர்த்தேன் மாந்தும் பெண்ணையின் வடபால்வேழங்
கண்டரவங் கண்டார்க்குக் காளத்தி வரையின்தென்பால்
றண்டரப்புணரி மேல்பாற் பவளமா சைலக்கீழ்பாற்
றுண்டரத்திருநாடென்னு மதன்வளந் தொகுத்துச்சொல்வாம்.

மேற்கு—பவளமலை

வடக்கு—காளத்திமலை

கிழக்கு—வங்காளக்குடாக்கடல்

தெற்கு—பெண்ணையாறு.

தொண்டமான் ஆளுங்காலத்தில் வடக்கெல்லை திருவேங்கடத்தையும், அதற்கு வடகிழக்கில் சில பத்துமயில் தூரத்திலுள்ள காளஸ்திரியையும் வரையறுத்திருக்கின்றது. இவனுக்கு முன்

* Vide Tennent's Ceylon, Vol. I, Part III. Ch. X. P. 395, அருணசைலபுராணம், தீர்த்தச்சருக்கம், 21-வது செய்யுள்காண்க.

தடகன் ஆளுங்காலத்தில் விந்தயமலை வரைக்குமுள்ள பூமியை தண்டகாரணிய* மெனப்பட்டது.

கம்பராமாயணம், ஆரணியகாண்டம், அகத்தியப்படலம்
3-வது செய்யுள்.

பண்டயவயன்றரு பாலகில் லரும்
முண்டரு மோனரு முதலி ஞோர்களத்
தண்டகவனத்துறை தவத்துளோர்கடாம்
கண்டனரிராமனைக் களிக்குஞ் சிந்தையார்.

என்பதால் ஸ்ரீராமர் வருங்காலத்தில் இத்தண்டகநாடு காடாகி இடைக்கிடையே இருடிகளாலும், திராவிடராலும், வசிக்கப் பட்டுவந்தது. பிறகு அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை காலத்திலும், இராஜசூயாகத்தில் சகாதேவன் தட்சணம் நோக்கி திக்குவிஜயஞ்செய்த காலத்திலும், ஏறக்குறைய காடுகள் முழுவதும் எடுபட்டுப்போயிற்று. பிறகே சூரியகுலசோழன் வம்ஸத்தவனாகிய தொண்டமானால் ஆளப்பட்டுவந்தது. கடசியில் இத்தொண்டநாட்டின் ஓர் பகுதியாகிய வடஆர்க்காடு, திருப்பதிக்கருகிலுள்ள சந்திரகிரி பட்டணத்தையாண்ட ஓர் அரசனால் ஆளப்பட்டுவந்தது. இவன் உத்தரவால். 1639-ம், வருடத்தில் அங்கிலேயர் குடியிருக்கும்படி அனுமதிபெற்று, பிறகு 1646-ம் வருடம் அவ்வரசுதுலுக்கரால் நசித்துவிடப்பட்டது. கடசியில் 1752-ம் வருடத்தில் அங்கிலேயரால் பிடித்துக்கொள்ளப்பட்டது. 1763-ம் வருடத்தில் செங்கல்பட்டை ஆர்க்காடு நவாப்பால் அங்கிலேயருக்கு ஜாகீராகவிடப்பட்டது. இவ்விதம் தொண்டவம்ஸம் நசித்தது.

ச. ஈழன்.

அருணாசலபுராணம், தீர்த்தச்சருக்கம்,
21-வது செய்யுள்.

புண்ணிய வாறுதெய்வ மலைக்குமேற் றிசையிற்போங்கும்
நண்ணிய புண்ணியாற்றா ரென்றுபேர் நகரந்தானும்

*தண்டகாரணியம்:—"It appears to have designated the greater portion of the Country South of the Kristna River, down to the extreme of the Peninsula of India and especially the district afterwards called Tondamandalam." Vide Rottler's Dictionary, Part III P. 13, "A forest South of Oude" (Winslow Dictionary.)

எண்ணிய நதியின்மூழ்கி யீழனேன் றரசன்றீங்காம்
பெண்ணியல் வடிவந்தீர்ந்தான் வடிவமும் பேறும்பெற்றான்.

(இ-ள்.) "தெய்வீகம்பொருந்திய அருணாசலமலையின் மேல் பாரிசத்தில் புண்ணியநதி என்று ஒருநதியுண்டு, அதனருகே புண்ணியாற்றூர் என்று ஒருநகரம் உண்டு, அதையாண்ட ஈழன் என்கிற அரசன் தனக்குத் தீங்காகவந்தடைந்த பெண்ணுருவத்தை அந்நதியில் மூழ்கித்தீர்ந்து, நல்ல உருவமும் வேண்டியபேறும் பெற்றான்"* என்பதாம்.

இதில் கூறும் அருணாசலமலை தென் ஆர்க்காட்டின் வடமேல்கோடியிலுள்ளது. இதை சோணசைலம் எனினும், திருவண்ணாமலை எனினும் ஒக்கும். இதற்கு மேல்பாரிசத்திலேயே புண்ணிய ஆறு என்னும் நதியோடுகின்றது. இதை விருஷதாவதிநதி எனவும் அழைக்கப்படும். இவ்விருஷதாவதிநதி† அல்லது புண்ணிய ஆறு தென்பெண்ணையாற்றின் உபநதியாகும். அது மைசூர் கோலார் ஜில்லாவின் மேற்கிலும், நந்திதுர்க்க மலையின் தெற்கிலுமுள்ள வேக்கலேரி மலையின் கீழ்ச்சருகிலுதித்து தென்கிழக்காய் சேலத்தினூடேசென்று, அங்குஷக்கிரிக் கருகில், மேற்படி வேக்கலேரிமலையின் தென்மேற்குச் சருகிலுள்ள மார்க்கண்டேஸ்வரர் கோவிலுக்கருகில் உதித்து, தென்னோக்கியோடி வரும் மார்க்கண்டாநதி ‡ யோடு கலந்து, திருவண்ணாமலைக்கு சில மயில் மேற்கிலும், சேலத்தின் கிழக்கெல்லையிலும், உள்ள கிருஷ்ணகிரிக்கருகில் தென்பெண்ணையோடு சேருகின்றது. இப்புண்ணிய ஆறு அல்லது விருஷதாவதி நதியின் தென்கரையிலேயே புண்ணிய ஆற்றூர் உள்ளது.

"**Atur**§:—Chief town of the taluk of the same name; situated on the trunk road from Salem to Cuddalore, and on the **Varishthavathi river**. A large Fort and Post Office. Vide, The Indian Companion or General Statistics of India, P. 870.

---

* இவ்வுரை மழவை—மகாலிங்கையரது.

† Vide The Mysore and Coorg, Vol. II, P. 138.

‡ Vide, The Mysore and Coorg, Vol. II, P. 126, 128.

§ Vide, A Manual of the Salem District, Ch. III, P. 81-82.

இதில் "ஆற்றூர் என்பது சேலத்திலுள்ள ஒன்பது தாலுக்காக்களுள் ஒன்று. அது விருஷதாவதிநதி அல்லது புண்ணிய ஆற்றின் கரையிலுள்ளது" எனவுங் கூறுகின்றது. இப்பகுதி மேற்கூறிய அருணசலபுராணச் செய்யுளை யொத்துவருகின்றது, அருணசல புராணத்தில் கூறிய புண்ணிய ஆத்தூரையே அங்கிலேயப் பகுதியில் ஆற்றூர் எனப் பட்டிருக்கின்றது. ஈழராஜன் தனக்குத் தீங்காகவந்தடைந்த பெண்ணுருவத்தை அவ்விருஷதாவதி ஆற்றில் மூழ்கிப் போக்கியதால், அவ்வாறு புண்ணிய ஆறுயெனவும், அதையடுத்த ஊர் புண்ணியவாற்றூர் எனவுங் கூறப்பட்டது. இப் புண்ணிய ஆற்றூர் அல்லது புண்ணியநகரம் மைசூரின் தென் கீழ்ப்பகுதியும், சேலத்தின் வடபகுதியுமாகிய ஈழநாட்டிற்கு ஈழராஜன் ஆளுங்காலத்தில் இராஜதானியாயிருந்த சிறப்புறுபட்டினம். அப்பாகத்தை ஈழராஜன் ஆண்டமையால், அப்புண்ணிய ஆற்றுக்கும், ஜாவடைமலைக்கும் மத்தியிலுள்ள ஓர் மலைக்கு ஈழகிரி* எனவும்; இவ்விழநாட்டேடேசெல்லும் தென் பெண்ணையாற்றிற்கு ஈழநாட்டுப் பெண்ணை யெனவும் பெயரளிக்கப்பட்டது. ஈழநாட்டுப்பெண்ணை எனினும், தென்பெண்ணை யெனினும், தென்பிணுங்கினி எனினும் பொருந்தும். இத்தென் பெண்ணையாறு மைசூர் நந்திதுர்க்கத்தின் கீழ்ச்சருகில் சென்னகேசவமலைக்கருகில் உதித்து, தென்னோக்கி பெங்களூர் ஜில்லாவினூடேசென்று, பிறகு கீழ்நோக்கி சேலத்தில் கிருஷ்ணகிரிக்கருகில் புண்ணிய ஆற்றையேற்று, தென் ஆர்க்காட்டைக்கடந்து, கூடலூருக்கு சில மயில் வடக்கில் சமுத்திர சங்கமாகின்றது†. இப்பெண்ணையாற்றைச் சுட்டி :—

கம்பர்.

கடல்கிழக்குத்தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணட்டுப்பெண்ணையிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.

---

* Vide The Salem District Manual Vol. I. P. 90, 91, 97, 129, 176, 289, 291, 362, 363; 440, 413 to 416, 446 : The Indian Companion or General Statistics of India, P. 876, and The Madras Journal of Literature and Science Vol. XV, No. 34, P. 41.

† Vide, The Mysore and Coorg, Vol. II, P. 75 The Indian Companion or General Statistics of India, P. 819; Pope's History of India. Introduction, P. 26 ; and Manual of The South Arcot District, Part II, P. 175.

இப்பிரயோகத்தில் சோழநாட்டிற்கு வடவெல்லை ஏணாட்டுப் பெண்ணை எனப்பட்டிருக்கின்றது. "வடதிசையில்=வடக்கில், ஏணாட்டு=ஈழநாட்டு. பெண்ணை=பெண்ணையாறு; அதாவது, சோழநாட்டிற்கு வடவெல்லை ஈழநாட்டுப்பெண்ணை. யெனப்படும். இதை "உல்லியம் டெயிலர்" (William Taylor.) மொழிபெயர்த்திருக்கின்றார்.

"East as far as the sea, to the south as far as the Vellar, to the West as far as Cotta-Karei, **as far as the Penniyar (river) of the Yenad (country) to the north**; to the extent of twenty-four kadams (240 miles); are the boundaries of the Solam Kingdom." Vide Oriental Historical Manuscripts, Vol. II, Appendix D, P. 26.

இவ்விரு பகுதிகளிலுங் கூறும் ஏணாடு என்பது ஈழநாடு எனப் பொருள்படும், அது "சோழநாடு, சோணாடு" எனப்படுவதைப் போலெண்க.

கட்டளை கலித்துறை.

ஈணாட்டிரண்டு மலைநாட்டிலொன்று கொங்கேழுவையை
வாணாட்டீரேழு நடுநாட்டெழுமூன் றொன்றைந்தாம் வடக்கிற்
சோணாட்டொருநூற்றுத் தொண்ணூறென்றோர்வர் துளுவத்தொ
நாணாட்டியதொண்ட நன்னாட்டிலாறைந் திருநகரே. [ன்று

என்னும் இப்பாசுரத்தில்வரும் ஈணாடு ஈழநாடைக்குறிக்கும் இதனால் ஈணாடு எனினும், ஏணாடு எனினும், ஈழநாடு எனினும் பொருள் ஒன்றே! இதை யனுசரித்தெ கம்பரும் ஏணாட்டுப்பெண்ணை என்பது ஈழநாட்டுப்பெண்ணையை. இத்தென்பெண்ணையாறு ஈழராஜன் ஆண்ட ஈழநாட்டில் உற்பத்தியாகி, அவ்வீழநாட்டுடே செல்லுதலால் ஈழநாட்டுப்பெண்ணை யெனப்பட்டது. இதைப்போல் நந்திதுர்க்கமலையில் "பாலாறும், வடபெண்ணையும்" உற்பத்தியாகின்றது. பாலாறு நந்திதுர்க்கமலையில் உற்பத்தியாகி கீழ்நோக்கி தொண்டநாடாகிய வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களுக் கூடேசென்று சமுத்திரசங்கமாகின்றது*. வடபெண்ணை, நந்தி

* Vide, A Manual of The Chingleput District, Ch. I, P. 1.

துர்க்கமலையில் உற்பத்தியாகி வடநோக்கி அனந்தபுரம்சென்று, அதற்குக் கிழக்கிலுள்ள கடப்பை நெல்லூர் ஜில்லாக்களுக்கூடே சென்று சமுத்திரசங்கமாகின்றது*. இவ்வட பெண்ணையும், பாலாறும் பாயும் பாகத்தை ஈழன் ஆண்டதாகப் புலப்படவில்லை, ஆண்டிருந்தால் அவைகளும் அப்பெயரைப்பெற்றே யிருக்கும், அப்படி ஆளவுமில்லை. அப்பாகம் தொண்டநாட்டோடு சேர்க்கப்படும். தென்பெண்ணைபாயும் பாகத்தையே அதாவது மைசூரின் தென் கீழ்ப்பகுதியையும், சேலத்தின் வடபகுதியையுமே ஈழன் ஆண்டதாக நூற்கள் தெரிவிக்கின்றது. அதனால் அத் தென் பெண்ணையாறு ஈழநாட்டுப் பெண்ணை யெனப்பட்டது.

## புகழேந்தி.

கடல்கிழக்குத்தெற்கு கரைபுரளும் வெள்ளாறு
குடதிசைக்குக் கோட்டைக் கரையாம்—வடதிசைக்கு
ஈழமுதலா யிருபத்து நாற்காதம்
சோழநாட்டெல்லை யெனச் சொல்.

இங்கே சோழநாட்டிற்கு "வடதிசையில் ஈழமுதலா" எனச் சொல்லியிருக்கின்றது, "வடதிசைக்கு=வடக்கில், ஈழம்=ஈழநாடு, முதலா=ஆதியாக; அதாவது "சோழநாட்டிற்கு வடவெல்லை ஈழநாடு முதல்" எனப்படும். இதை "உல்லியம் டெயிலர்" மொழிபெயர்த்திருக்கின்றார்.

"The sea to the East, to the South the Vellar, to the West Cotta-Karee, **to the North as far as Ila;** being twenty four kadams is the boundary of the Solam country." Vide, William Taylor's Oriental Historical Manuscripts, Vol. II, Appendix D. P. 26.

இதில் "டெயிலர்துரை" ஈழம்வரைக்கும் (As far as Ila.) என்றார். மேலே "புகழேந்தி" ஈழமுதலா என்றார். இருவர் வாக்கும் சோழதேசத்திற்கு வடவெல்லை ஈழநாடு எனப்படுகின்றது. அதாவது "மைசூர், சேலத்தையே" ஈழநாடு எனப்படும்.

* Vide, Pope's History of India, Introduction P. 25, and Mysore and Coorg, Vol. II, P. 134.

**Mirtanjeya Pattar.**

"To the East the Sea, on the South the Vellar, on the West Cottei-karei, **on the North Izham** (**or Ilam**), from East to West twelve Kadams, from South to North twelve Kadams; making together twenty-four Kadams. The boundaries of the Cholam country". Vide. Oriental Historical Maunscripts, vol, II. Appendix D. P. 27.

இப்பிரயோகங்களில் கூறும் ஈழம் என்பது ஈழநாடு எனப் பொருள் படும். "சேலத்தின் தென்பகுதி, தென் ஆர்க்காடு, திருசினுப்பள்ளி, தஞ்சாவூர்" என்பவைகளையே சோழநாடு எனப்படும். இச்சோழநாட்டிற்கு வடக்கிலேயே "சேலத்தின் வடபகுதியும், மைசூரும்" இருப்பது. அப்பகுதியையே ஈழன் ஆண்டதாக அருணசலபுராணத்தாரும், டென்னட் (Tennent), டெயிலர் (Taylore) துரையும் தேடித்தீட்டியிருக்கின்றார்கள். அதுகளை யனுசரித்தே கம்பரும், புகழேந்தியும் சோழதேசத்திற்கு வடவெல்லை ஈழம், ஈழநாட்டுப்பெண்ணை என்றது. இதை இன்னும் வற்புறுத்துகின்றார் கம்பர்.

ஏரெழுபது, பாயிரம், 4-வது கவி.

ஈழமண்டலமுதலென வுலகத்
தெண்ணுமண்டலத்தெரி படைவேந்தர்
தாழமண்டலஞ் செம்பியன் மரபிளுேர்த்
தாமெலாம் பிறந்தினிய பல்வளத்தின்
வாழுமண்டலங் கனகமு மணிகளும்
வரம்பில் காவிரிசூரம் பினிற்கொழிக்குஞ்
சோழமண்டலமிதற்கிணை யாமெனச்
சொல்லுமண்டலஞ் சொல்வதற்கில்லையே.

இச்செய்யுள் சோழராஜாக்களது ஆட்சிசெல்லக்கூடியதேயம் "ஈழமண்டலமுதல்" என வரையறுத்திருக்கின்றது. ஈழனுந்தோண்டனும் சோழனுக்குப் பகுதிகட்டக்கூடியவர்கள். அதனாலேயே கம்பர் "ஈழமண்டலமுதல் செம்பியன்மரபிளுேர்க்கு தாழமண்டலம்" என்

பது. இதை வாதவூரர் புராணத்திலும், சேலஞ் சரித்திரத்திலுங்* காண்க. இக்கம்பர் வாக்கு மேலே "ஈழ்முதலா" எனக் கூறிய புகழேந்திவாக்கிற்கு ஒத்துவருகின்றது. அதனால் இருவர் வாக்கும் ஈழநாட்டைச் சோழநாட்டிற்கு வடவெல்லையெனத் துணிகின்றது.

"In 205. B. C. The easy success of the first usurpers encouraged the ambition of fresh aspirants, and barely ten years elapsed **till the first regular invasion of the island took place, under the illustrious Ela, who, with an army from Mysore, (then called Chola) subdued the entire of Ceylon**, north of the Mahawelliganga, and Compelled the chief of the rest of the island, and the kings of Rohuna and Mayah., to acknowledge his supremacy and become his tributaries."† Vide. Sir James Emerson Tennent's Ceylon. Vol. I. Part III. ch X, P. 395.

"கி. மு. ‡ 205-ம் வருடத்தில், இலங்கைக்குப் போனவர்கள் எளிதில் ஜெயமடைந்த காரணத்தால் தைரியமடைந்து, மற்றவர்களும் போய் இராஜ்யத்தைக் கைபற்ற வேண்டுமென்றபேட்சித்தனர். **பத்துவருடத்திற்குள்ளாக மைசூரிலிருந்து கீர்த்திப்பெற்ற ஈழராஜன் இலங்கைத்தீவின்மேல் படை யெடுத்துச்சென்று,** மகாவல்லி கங்கைநதிக்கு வடக்கிலுள்ள **பூமிமுழுமையுஞ் ஜெயித்து,** மிகுதிபாகமாகிய "ரோகண்ணு,மேயா" என்னும் பட்டணங்களின் அரசர்களையுந் தனக்குக் கீழ்ப்படுத்திக் கப்பங்கட்டும்படி செய்தான்" எனச் சிலோன் சரித்திரத்தில் செப்பியிருக்கின்றது. இப்பகுதி ஈழன்

---

* To this grand old empire the Barahmahal and the adjacent districts of Salem, North and South Arcot, and Mysore, belonged from the earliest historical period in which traces of them have been discovered, when they were conquered and annexed to their dominions by the chola kings of Tanjore". vide, Salem District manual, Vol. I. ch. I. P. II.

† Vide. Turnour's Epitome. P. 17; Rajavali. P. 188; and Rajaratnacari. ch. II.

‡ கி. மு. (B. C, Before Christ) என்பது கிருஸ்து பிறப்பதற்கு முன் காலத்தையும், கி. பி. (A. C. or A. D. After Christ.) என்பது கிருஸ்து பிறந்ததற்குப் பின் காலத்தையுங் குறிக்கும்.

என்னும் அரசன் மைசூர் பிரதேசத்தை யாண்டவன் எனவும் அருணாசலபுராணத்தை யொத்துவருகின்றது.

" Near Elloora, a fine tank has of late years been repaired by government, and affords the means of irrigation to a very fertile tract of land. **The spring that here rises, is supposed to possess miraculous properties, and to have cured the Rajah Eloo of his leprosy** ; in gratitued for which, he is said to have excavated the remarkable temple of Kailas, in the neighbouring hills. This most excellent Princess, whose life was devoted to acts of Philanthropy and Piety, has built many wells and baolees in this part of the country for the use of the way farer." Vide The Madras Journal of Literature and Science in 1849. Vol XV, No. 36, P. 519.

" எல்லூராவுக்கருகில் சில வருடங்களுக்குமுன் கவர்ன்மெண்டாரால் பழுதுபார்க்கப்பட்ட ஒரு நேர்த்தியான தடாகம் உண்டு, அதில் **ஈழராஜன்மூழ்கி தனக்குண்டாகிய குஷ்டநோயை* போக்கியதால்,** அற்புதப்பொருளை யுடைத்தாயிருப்பதாகவெண்ணி அதைச்சூழ்ந்த பிரதேசங்களில் யாத்திரீகர்களுக்கு உபயோகப்படும்படி கோயில் தடாகம் முதலியவைகளைக்கட்டி, பரோபகாரச்சிந்தையையும், பக்தியையும் வளர்த்துவந்தான்." என " மதராஸ் ஜர்னலில்" கூறியுள்ளது.

இப்பகுதியிற்கூறிய **ஈழராஜனைப்போல்**, இரண்யவன்மன் சிவகெங்கையில்மூழ்கி வெண்குஷ்டத்தை போக்கியதாக கோயிற்புராணத்திலும்; நிருகச்சக்கிரவர்த்தி நெகனைநதியில் மூழ்கி குஷ்டத்தைப் போக்கியதாக " மைசூர் அண்டு கூர்க்கு " (Mysore and Coorg. Vol. II. P. 147. 175.)' சரித்திரத்திலுங் கூறியுள்ளது. ஆனால் " மதராஸ் ஜர்னலில் " **ஈழராஜன்** நதியில்மூழ்கி குஷ்டநோயை தீர்த்ததாகவும், "அருணாசல புராணத்தில்" பெண்ணுருவத்தைப் போக்கியதாகவும் பாடபேதம் ஏற்பட்டிருப்பி

* Vide The Indian Companion or General Statistics of India, P. 689, 1016, 1083,

னும்; ஈழராஜன் என்பவன் ஒருவன் உண்டெனவும், அவன் ஏதோ ஒரு நோயைப்போக்கிக் கீர்த்தியோடு, மைசூர் பிரதேசத்தை யாண்டான் எனவும். அதனால் அம் மைசூர் பிரதேசம் "ஈழம், ஈழநாடு, ஈழமண்டலம்" என்னும் பெயரைப் பெற்றதெனவும் புகழேந்தி, கம்பர் முதலியோர் வாக்கால் செவ்வனே துலங்குகின்றது. எவரால் எந்நகர் விளக்கமுற்றதோ அவர் பெயரால் அந்நகரை அழைக்கப்படல் ஆன்றோர் வழக்கு*. அது சோழராஜனால் ஆளப்பட்ட திருசிறாப்பள்ளி, தஞ்சாவூரை சோழம் எனவும், பாண்டியராஜனால் ஆளப்பட்ட மதுரை, திருநெல்வேலியை பாண்டியும் எனவுங் கூறுவதைப்போல்; ஈழராஜனால் ஆளப்பட்ட சேலத்தின் வடபாகத்தியையும், மைசூரையும் "ஈழம், ஈழநாடு, ஈழமண்டலம்" எனப்பட்டது.

**2.** இலங்கை என்பது இந்துதேசத் தரசாட்சிக்குட்பட்ட ஓர் தீவு. இது இந்தியாவுக்குத் தெற்கில் இந்துமகாசமுத்திரத்திலுள்ளது. "லங்கா" என்பது ஸமஸ்கிருதவார்த்தை. "சிறப்புள்ள, சோதியுள்ள" என்பது சப்தார்த்தம். இத்தீவை புத்தர் தங்களது காவியத்தில் "இந்தியா ஓரத்தில் பதிப்பிக்கப்பட்ட முத்து" என்றனர், சீனர் "இரத்தினத்தீவு" என்றனர், கிரேக்கர் "மாணிக்கத்தீவு" என்றனர் † இத்தகைய சிறப்புறு தீவை பூர்வம் இராவணனால் அரசாட்சி செய்யப்பட்டது, இராவணன் இராட்சதக்குலத்தவன், ஸ்ரீராமர் காலத்தவன், இராவண சம்மாரத்திற்குப் பிறகு இலங்கை முக்கால்பாகம் சமுத்திரத்தால் முழுகப்பெற்று, ‡ நின்ற கால்பாகம் யாக்கர் நாகர் என்னுஞ் சாதியார்களால் வசிக்கப்பட்டு வந்தது, யாக்கர்பேயையும், நாகர் பாம்பையும் வணங்கப்பட்டவர்கள்§. இவர்கள் நம்தேசத்து திராவிடர்

---

*சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம். திருநாட்டுத்தொகை, 7வது பதிகத்தையும், பழனித்தலபுராணம், நகர்செய்சருக்கம், 18-வது செய்யுளையுங்காண்க and vide Bengal District Gazetteers, Vol. III, Ch. I, P. 1.

† Vide. Tennent's Ceylon. Vol.I. Part. I, ch. I. P. 3-4; and Pope's History of India. Introduction, P. 28.

‡ Vide. Rajavali. Vol. II. P. 180. 190; and Tennent's Ceylon Vol. I. Part. I. ch. I. P. 9.

§ Vide Tennent's Ceylon. Vol. 1. Part. III. ch. II. P. 330 and History of Ceylon Part. I, P. 3.

ளாகிய "குறவர், மறவர், வேடர்" இவர்களைப் போன்றவர்கள். இவர்களையே இலங்கைக்குப் பூர்வகுடிகள் எனப்படும்*. இவர்கள் இலங்கையை இராவணனுக்குப் பிறகு, 543, B. C. வருடம் வரைக்கும் அதாவது கலியுகம் 2558-ம் வருடம் வரைக்கும் சுயேச்சையாய் புழங்கப்பட்டு வந்தார்கள். பிறகு 543-B, C, வருடத்திலிருந்து, 277 A. D. வருடம்வரைக்கும், அதாவது, 821 - வருடம் சூரியகுல வரசனாகிய விஜயன் பரம்பரையிலுதித்த, 54 அரசர்களால் வரிசைக்கிரமமாக ஆளப்பட்டுவந்தது, "சூரியகுல விஜயனி" லிருந்து "மஹாசன்" வரைக்கும் ஏற்பட்ட 54, அரசர்களது அரசாட்சிக்கு பெரிய அரசாட்சியென்று "மஹாவம்சோ" என்னும் புத்தகத்தில் கூறியுள்ளது. "மஹாவம்சோ" என்றால் "பெரிய அரசாட்சியின் வம்ஸம்"† என்பது சப்தார்த்தம். இம் "மஹாவம்சோ" என்னும் புத்தகம் சிங்களரது பல முக்கியபுத்தகங்களுள் ஒன்று, இது "டாட்டுசேனு" அரசனது மாமனாகிய "மஹானமோ" என்பவரால் இயற்றப்பட்டது. இதை முன்பாகமெனப்படும். இம் முன்பாகத்தை "டர்னர்" துரையால் 1836-ம் வருடத்தில் அங்கிலேய பாஷையில் மொழி பெயர்க்கப் பட்டது. பின்பாகம், 278-A. D. வருடத்திலிருந்து 1799-A. D. வருடம் வரைக்கும் அரசாண்ட 120-அரசர்களது அரசாட்சியைக் குறிக்கும்‡. இவ்விரண்டாம்பாகம் § பராக்கிரமபாகு அரசனது உத்தரவால் இயற்றப்பட்டது. இவ்விருபாகத்திலும் ஏற்பட்ட இலங்கையரசர்கள் 174 ஆகும், 2342. வருடம் ஆண்டார்கள். ¶ அதாவது அங்கிலேயவாண்டு 1799-ம் வருடம்வரைக்கும் இலங்கையை அரசாண்டார்கள். பிறகு அங்கிலேயரால் சுவாதீனமாக்கிக்கொள்ளப் பட்டது.

---

* Vide. Tennent's Ceylon. Vol. I. Part. III. ch. II. 328.

† Vide. Tennent's Ceylon. Vol. I. Part. III. ch. I. P. 315; and The History of Ceylon. Part. II. ch. IV. P. 19.

‡ Vide. Tennent's Ceylon. Vol.I. Part. III. ch. I. P. 320. to 324; and Mahavansa.

§ இரண்டாம்பாகம். 1889 ஹூ (வருஷத்தில்) (I. C. Wijesinha) "விஜசின்ஹ" என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது.

¶ Vide. Tennent's Ceylon. Vol. I. Part. III. ch. I. P. 317, and Epitome of the History of Ceylon.

## இலங்கை அரசவம்ஸாவளி.

| அரசர் பெயர். | ஆண்டவருடம். | அரசர் பெயர். | ஆண்டவருடம். |
|---|---|---|---|
| 1. விஜயன் I | B.C. 543 | 28. மகாநாகன் | A.D. 9 |
| 2. உபதீசன் | ... 505 | 29. அமந்த காமினியபயன் | 21 |
| 3. பாண்டுவாசன் | ... 504 | 30. கானஜெயானுதீசன் .. | 30 |
| 4. அபயன் | ... 474 | 31. குலாபயதீசன் | ... 33 |
| 5. பாண்டபயன் | ... 437 | 32. சிவாலயன் | ... 35 |
| 6. முத்துசிவன் | ... 367 | 33. ஈழன் or ஈழநாகன்† II | 38 |
| 7. தேவநம்பி | ... 307 | 34. கந்தமுகசிவா | ... 44 |
| 8. உதயன் | ... 267 | 35. அகலலேகதீசன் | ... 52 |
| 9. மகாசிவன் | ... 257 | 36. சுபயராஜன் | ... 60 |
| 10. சுரதீசன் | ... 247 | 37. வாசாபயன் | ... 66 |
| 11. சேனன் | ... 237 | 38. வங்கணேசதிசன் | ... 110 |
| 12. அசீலன் | ... 215 | 39. கஜபாகு | ... 113 |
| 13. ஈழன்* I | ... 205 | 40. மகாலகநாகன் | ... 135 |
| 14. துத்தகாமநு | ... 161 | 41. பக்திகன் | ... 141 |
| 15. சதாதீசன் | ... 137 | 42. கனிததீசன் | ... 165 |
| 16. துலுலதன் | ... 119 | 43. குலநாகன் | ... 193 |
| 17. லஜதீசன் | ... 119 | 44. குத்தநாகன் | ... 195 |
| 18. கலதநாகன் | ... 109 | 45. ஸ்ரீநாகன் I | ... 196 |
| 19. வலகம்பயண் | ... 104 | 46. உரகதீசன் | ... 215 |
| 20. உதயன் | ... 90 | 47. அபயதீசன் | ... 237 |
| 21. வேதகாபயன் | ... 88 | 48. ஸ்ரீநாகன் II | ... 247 |
| 22. மகாகுல மகாதிசன் .... | 76 | 49. விஜயன் II | ... 245 |
| 23. கோரநகன் | ... 62 | 50. சிங்கதீசன் | ... 248 |
| 24. குடதீசன் | ... 50 | 51. ஸ்ரீ சிங்கபூதன் | ... 252 |
| 25. அநுலன் | ... 47 | 52. கோதபயன் | ... 254 |
| 26. மாகலதீசன் | ... 42 | 53. சடதீசன் | ... 267 |
| 27. பக்திக்கபயன் | ... 20 | 54. மகாசன் | ... 277 |

* இவ்வீழன் மைசூரிலிருந்து படை யெடுத்துவந்தவன். இவ்வீழனாலேயே இலங்கை ஈழம் எனவும், ஈழநாடு எனவும், ஈழமண்டலம் எனவுங் கூறப்பட்டது.

† இவ்வீழன் மாணிக்கவாசகர் காலத்தவன். இவனை ஈழநாகன் எனப்பட்டிருக்கின்றது. "நாகன்" என்பது இலங்கை அரசருக்குள்ள பலபட்டபெயர்களில் ஒன்றென விளங்குகின்றது, அதனாலேயே "ஈழன்+நாகன்=ஈழநாகன்" எனப்பட்டது, "கலதநாகன், கோரநாகன், மஹாநாகன், குட்டநாகன, ஸ்ரீநாகன்" என மற்ற அரசர்களையும் அழைத்தலா லறிக. Vide. The mahavanso, Part. I. II; Tennent's, Ceylon. Vol. I. Part. III. P. 320 to 324, and The History of Ceylon. Under "**The List of Kings**"

இவ்வைம்பத்துநாலு அரசர்களும்பெரிய அரசாட்சி அல்லது மகா வம்ஸத்தைச் சார்ந்தவர்களாகும்.

**3.** விஜயனும், இலங்கையும்:—"கௌதமபுட்டா" இவ்விலங்கைக்கு மூன்றுதரம் வந்திருக்கின்றார், இவரால் இலங்கைத்தீவினர் புத்தசமயத்தவர் ஆயினர்கள். இப்புத்தப் பிரசங்கியாகிய "கவுதமா" (543, B. C.) 2450, வருடத்திற்குமுன் அதாவது கலி 2558-ம் வருடத்தில் இறந்துவிட்டார். அதேவருடத்தில் கங்காநதி தீரத்திலுள்ள ஓர் சிற்றரசனின் குமாரனாகிய விஜயன், தன் தகப்பனால் துரத்தப்பட்டு சில சேனையோடு "புட்லாம்" என்றழைக்கப்படும் இடத்தில் வந்திறங்கினன்* பிறகு அவ்விடத்திலுள்ள ஓர் அதிபதியின் குமாரத்தியை கலியாணஞ்செய்துக்கொண்டு, அவளுடைய முகாந்திரத்தால் அத்தீவை கைபற்றிக்கொண்டு "தமனவீயூரா" என்னும் பட்டணத்தை தலைநகர மாக்கிக்கொண்டு, தன் பிதாவழியாய் வந்த "சியாலா" (Sihala) என்னும் பெயரை அத்தீவுக்களித்து அரசாண்டான். "சியாலா" என்பது நாளாவர்த்தியில் "சிங்களம்" எனமருகியது† இதைநோக்கியே நாளதும் சிங்களம் என்பது இலங்கையை. விஜயன் கலியாணஞ்செய்துக்கொண்டவள் யாக்கர் வம்ஸத்தவள். இவர்களை தற்காலம் வேடர்கள் என்றழைக்கப்படும். பூர்வம் இந்தியா எவ்விதம் திராவிடர் வசப்பட்டிருந்ததோ அவ்விதம் இலங்கையும் இராவணனுக்குப் பிறகு யாக்கர் வசப்பட்டிருந்தது‡. விஜயன் தனக்கு ஆதிக்கம் ஏற்பட்டதும், யாக்கஸ்திரீயை நீக்கி§ பாண்டியராஜன் பெண்ணை கலியாணஞ்செய்துக்கொண்டான்¶, இதையனுசரித்து அவ்விஜயன் வம்ஸத்தவர்க

---

* Turnour's Mahawansa. ch. VI. P. 50; Tennent's Ceylon. Vol, 1, Part. III. ch. II. P. 330, 332. ch. III. P. 335.

† Vide. Tennent's Ceylon. Vol. I. Part. III. ch. III. P. 336. and also footnote of the same Page. "Sihala, Singhala, (and Singhalese) Silan, Seylan and Ceylon

‡ Vide. Tennent's Ceylon. Vol. I. Part. III. ch. II. P. 328.

§ Vide. Tennent's Ceylon. Vol. I. Part. III. ch. III. P. 336.

¶ Vide. Tennent's Ceylon. Vol. I. Part. III. ch. X. P 395; ch. VII. P. 371; Ibid. P. 53; Gustav Oppert's On the Original Inhabitants of Bharatavarsa or India. ch. VI. P. 130; Mahawanso, ch. VII. P. 53; The Rajavali. P. 173; The Geography of Ceylon, P. 14; History of Ceylon. Part. II. ch. I. P. 5; and Oriental Historical Manuscripts Vol. I. ch. III. P. 183. Note section. I.

ளும் இந்துதேச வரசகுமரிகளையே மணந்துவந்தனர்கள், இவர்கள் எல்லாம் அதாவது, 54. அரசர்களும் சூரியகுலத்தவர்கள் ஆகுவர்.

"It was necessary, however, that they should be of the **Soorea** or **Rajahwanse** in consequence, **the king of kandy** were obliged to procure queens from the continent of India, and Madura was the state that was usually applied to, to furnish princess." Vide Davy's Ceylon, Account of the Interior and its Inhabitents. P. 164.

"கண்டி அரசர்கள் சூரியவம்ஸம் அல்லது இராஜவம்ஸத்தைச் சேர்ந்தவர்கள் ஆகும். அவ்வரசர்கள் இந்தியா தேசத்து இராஜகுமரிகளையே பெண்சாதிகளாகத் தெரிந்துக்கொள்ளுதல் அவற்றுள் மதுரையே விசேஷமாக வரிக்கும் இடம். கண்டி இலங்கையிலுள்ள ஓர் சிறப்புறுபட்டினம்."

In theory the singhalese monarchy was elective in the **Descendants of the Solar race**; in practice primogeniture had a perference, and the crown was either hereditary or became the prize of those who claimed to be of royal lineage. On revieving the succession of kings from. B C. 307 to A. D. 1815 Vide. Forbie's Eleven years in Ceylon, Vol. I. ch. IV. P. 80.

"சூரியகுலத்திலுதித்த சிங்கள அரசர்கள் பரம்பரையாகவாவது. அவ்வம்ஸத்தவர்களாகவாவது தொடர்ந்து சற்றேறக்குறைய 2200-வருடம் இலங்கையை ஆண்டுவந்தார்கள்." இவ்விரு பகுதிகளால் விஜயனும் அவன் வம்ஸத்தவர்களும் சூரியகுலத்தவர்கள் என்று சொல்லப்படும்.

இவ்விஜயன் கலிங்கதேசத்தரசனது பெண்ணின் புத்திரன்* கலிங்கதேசம்† அமராவதிக்கு வடகிழக்கிலுள்ளது. அதற்குத்

* Vide. Mahawanso. ch. VI. P. 43; Tennent's Ceylon, Vol. I Part. III. ch.X. P. 395; and History of Ceylon. Part. II. ch. I. P. 4.

† Kalinga:—"The name of a country supposed to extend from below Cuttack to the vicinity of Madras" (Winslow)

தற்காலம் "கஞ்சம்" ஜில்லாவென்று பெயர். இப்பொழுது ஓர் நகரம் கஞ்சம் ஜில்லாவில் கலிங்கபட்டணம் என வழங்கிவருகின்றது. கலிங்கதேசமே தெலுங்குதேசமென மருவித்தென்று கூறுவாறுமுண்டு. கலிங்கனால் அரசுபுரிந்தது. கலிங்கன்யயாதி மகாராஜனுடைய குமாரன் அனுவென்பவனின் பதினைந்தாவது தலைமுறையில் தோன்றினவன். சந்திரகுலத்தவன். ஐம்பத்தாறு அரசர்களில் ஒருவன்* இக்கலிங்கனது புத்திரியாகிய சுப்பாதேவியின் குமாரனே விஜயன் என்பவன், இவ்விஜயனுக்குப்பிறகு சிங்களதேயத்தை 173, அரசர்கள் வரிசைக்கிரமமாக ஆண்டுவந்தார்கள், இச்சிங்களம் ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று, இவைகளால் இந்து அரர்களில் விஜயன் வம்ஸத்தவர்களையுஞ் சேர்த்தெண்ணப்படுமெனத் துணியப்பட்டது.

4. "ஈழனும் இலங்கையும்," மேலே ஈழன் என்னும் பெயரையுடைய அரசன் ஒருவன் உண்டெனவும், அவன் மைசூர் பிரதேசத்தின் தென் கீழ்ப்பகுதியை ஆண்டவன் யெனவுந் தெரிவித்தனம், அவன் குமாரன் பிறகு சிலகாலம் பொருத்து இலங்கையின்பேரில் படையெடுத்துச்சென்று, அவ்வூரை கைபற்றியாண்டான். அப்படி யாண்டது, இலங்கையை யரசாண்ட சூரியகுல விஜயனுக்கு 338, வருடத்திற்குப்பிறகு எனப்படும். இவன் இலங்கைக்குப் பதின்மூன்றாவது அரசன் ஆகும். †

A Chera king, it is said, had two sons Cheran and Kongan. A dispute arose between the two brothers and so a division was made, east going to the younger. This story has the same historical value as the story of **Helen** and **his sons**, "Kongu History" P. 3.

"சேரனுக்கு சேரன் கொங்கன் என இரண்டுகுமாரர்கள் உண்டு. அவர்கள் இருவருக்கும் சச்சரவுண்டாகி, பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டது. கீழ்ப்பாகம் சிறுவனுக்கு ஏற்பட்டது, இச்சரித்திரம் ஈழராஜனது குமாரர்களுக்கு ஏற்பட்ட சரித்திரத்தையொக்கும்."

---

* Vide Ancient History of India, Vol. I, Part II. Ch. VII, P. 120.

† Vide The Mahavamsa. Part I, P. 1, Table 1, Under the List of Kings." and Tennent's Ceylon Vol. I, Part, III, Ch.I, P.320

இப்பகுதியால் ஈழன் என்பவன் ஒருவன் அரசாண்டான் எனவும், அவனுக்கு இருகுமாரர்களுண்டெனவும், அவர்களுள் ஈழன் என்னும் பெயருடையவனும் ஒருவன் எனவும் விளங்குகின்றது. இவ்வீழன் என்னும் பெயரையுடையவனே இலங்கையைக் கைப்பற்றியாண்டது, அது வருமாறு:—

"**A Damila named Ela** of the illustrious* Uju Tribe, **invading this land from the Chola Country**, for the purpose of usurping the sovereignty and, putting to death the reigning King Asela, **ruled the kingdom for forty-four years** administering Justice with impartiality to friends and to foes." vide Turnour's Mahavansa. Ch. XXI, P. 128†.

"யுஜ்ஜுவம் ஸத்தைச்சார்ந்த தமிழ் அரசனாகிய ஈழன் சோழ தேசத்திலிருந்து இலங்கைத்தீவை அபகரிக்கும்பொருட்டு படையெடுத்துச்சென்று, அசிலா என்னும் அரசனைக்கொன்று, நாற்பத்திநாலு வருடம் நீதியோடு அரசாண்டான்" எனப்பட்டிருக்கின்றது.

"The easy success of the first usurpers encouraged the ambition of fresh aspirants, and **barely ten years elapsed till the first regular invasion of the island took place, under the illustrious Ela who, with an army from Mysore** (**then called the Chola, or Soli**) **subdued the entire of Ceylon**, north of the Mahawelliganga, and compelled the Chiefs of the rest of the island and the kings of Rohuna and Maya, to acknowledge his supremacy and become his tributaries." Vide Tennent's Ceylon, Vol. I, Part, III, Ch. X, P. 395.

"இலங்கைக்குப் போனவர்கள் எளிதில் ஜெயமடைந்த காரணத்தால் தைரியமடைந்து, மற்றவர்களும் போய் இராஜ்யத்தைக் கைபற்றவேண்டுமென்று அபேட்சித்தனர்கள். பத்துவருடத்திற்குள்ளாக மைசூரிலிருந்து கீர்த்திப்பெற்ற ஈழராஜன் இலங்கைத்

* "A man of upright character."

† Vide Turnour's Epitome, P. 17; Rajavali, P. 188, and Mahawamso, Ch. XXI, XXII, XXIII.

தீவின்மேல் படையெடுத்துச்சென்று, மகாவல்லி கெங்கைக்கு வடக்கி லுள்ள பூமி முழுமையுஞ்செயித்து, மீகுதிபாகமாகிய ரோகணு, மேயா என்னும் பட்டணங்களின் அரசர்களையும், தனக்குக் கீழ்ப்படுத்திக் கப்பங்கட்டும்படி செய்தான்" எனப்பட்டிருக் கின்றது. இதில் ஈழன் ஆண்ட மைசூரை சோழம் என் ளுர். அவர் அதைவிளக்க (Mysore then called Chola) "மை சூர் பிறகு சோழம்" எனப்பட்டது என்ளுர். ஈழன் ஆண்டது மைசூர் என மேலே யெண்பித்தனம். அங்கிருந்தே அவன் படை யெடுத்துச் செல்லவேண்டும். அப்பாகத்தையே "மகாநமோ" அரசனுல் இயற்றிய "மகாவம்சோ" என்னும் பாலிபாஷை புத்தகத் தில் "சோழதேசம்" எனக் கூறியிருப்பதாக, அதன் டிரான்ஸ் லேடராகிய "டர்னர்துரை" கூறுகின்ளுர். இவைகளையொத்தே கம்பரும் "ஈழமண்டலம் முதல் தாழுமண்டலம்" என்பது. இத ஞல் "ஈழமண்டலம்" சோழனுக்குட்பட்ட மண்டலம் என விளங் கும், சோழனுக்குட்பட்ட மண்டலம் சோழமண்டலம் எனப்படும், இக்கருத்தை முன்னிட்டே ஈழதேசமாகிய மைசூரை சோழதேச மென்பது.

"**Ten years, however, had barely elapsed when the attempt to establish a Tamil sovereign was renewed by Ela, of the illustrious Uju tribe, who invaded the island from the Chola country, k**illed the reigning king Asela, and ruled the kingdom for forty years, administering justice impartially to friends and foes." vide. Tennent's Ceylon. Vol. I. Part III. Ch. V. P. 353.

"பத்து வருடத்திற்குள்ளாக இலங்கை அரசாங்கத்தை ஸ்தா பிக்க முயன்ற, கீர்த்திபெற்றிருந்த தமிழ் அரசனுகிய ஈழராஜன் அக் காலத்தில் அரசுபுரிந்திருந்த அசேலா என்னும் அரசனைக்கொன்று, சிநேகிதரென்றும் பகையாளியென்றும் பட்சாபாதமில்லாமல் நாற் பதுவருடம் நீதியோடு அரசாண்டான். இவன் சோழதேசத்தி லிருந்து படையெடுத்துச் சென்றவன்." எனப்பட்டிருக்கின்றது. இதில் ஈழனை யுஜ்ஜா வம்ஸத்தவர் என்றனர். யுஜ்னிவிக்கிரமார்க்க னுண்டவூர். அதனுல் அவன் வம்ஸத்தவர்கள் யுஜ்வம்ஸத்தவர்

களாகுவர்; மைசூர் பிரதேசமே விக்கிரமார்க்கனுண்டதாக பூர்வ நூல் வழக்கு. ஈழனும் அப்பிரதேசத்தை விக்கிரமார்க்கனுக்கு 150 - வருடத்திற்குமுன் அரசாண்டதால், அவனை யுஜ்வம்ஸத்தவன் எனப்பட்டதேயன்றி வேறன்று, ஈழன் மேற்படி நூலாதிகளால் சோழவம்ஸத்தவன் எனப்படும்.

"Although the petty kings of Rohanna and Maya submitted to pay tribute to **Ela**, his personal rule did not extend south of the Mahawelliganga." vide. Tennent's Ceylon. Vol. I. Part III. Ch. V. P. 355.

"ரோகண்ணு மேயாதேசத்து சிற்றரசர்கள் ஈழனுக்கு உட்படிந்து பகுதிகட்டிவந்தாலும், அவ்வீழனுடைய அதிகாரம் மகாவல்லி கங்கைக்கு தெற்குவரைக்கும் பரவவில்லை." எனவும்;

"Previous to this date a king of Rohanna during the usurpation of **Ela**. B. C. 205. had appropriated land near Kalany for the repairs of the dagoba." vide. Rajaratnacari* P. 37.

"ஈழன் என்பவன் இலங்கையை கைபற்றுதற்குமுன் தேதியில் ரோகண்ணுதேசத்தரசன் புத்தகோயிலை ஜீரணோத்தாரணஞ் செய்தற்காக கல்யாணிக்கு அருகாமையிலுள்ள நிலங்களை சுவாதீனமாக்கிக்கொண்டான்". எனவும்,

"**Ela, a Tamil prince from the kingdom of Chola,** having probably heard of the success of Sena and Guttika, determined to contend with their victorious rival. Landing his army at the mouth of the Mahawiliganga, he marched directly upon Anuradhapura defeated Asela, who attempted to oppose his progress, and subdued the whole island except Ruhuna. He erected 32 forts, and probably founded Mantola, near Manner. **This was the first great Tamil invasion. Ela was a follower of the Brahmanical religion** and according to some historians, sought to root out Buddhism by des-

* Vide Mahavansa. Ch. XXXIII. P. 203.

troying temples and dagobas. It is acknowledged, however, that he acted jnstly towards friends and foes. At the head of his bed, there was a bell, with a long rope, that it might be rung by those who had any complaint." vide, The History of Ceylon, Ch. II. P. II.

"ஈழன் என்பவன் சோழதேசத்திலிருந்து படை எடுத்துவந்த தமிழ் அரசனாகும். மகாவல்லி கெங்கையின் முகத்துவாரத்தில், தன் சேனையோடு வந்திறங்கி, நேராக அனுராதபுரம்சென்று, அசேலா என்னும் அரசனைத் தோற்கடித்து, ரோகணுதவிர முழுத்தீவையுங் கைபற்றிக்கொண்டு, முப்பத்திரண்டு கோட்டைகளைக் கட்டியாண்டான். இதுவே இலங்கைக்கு முதல் தமிழ் அரசனது படையெடுப்பு. ஈழன் பிராமணமதத்தைச் சார்ந்தவன். ஆராச்சிமணிகட்டி பட்சாபாதமில்லாமல் அரசாட்சி செய்தான்." எனவுங் கூறப்பட்டிருக்கின்றது. ஆகிய இவ்வாறு அங்கிலேயப் பகுதிகளால் ஈழன் என்பவன் ஒருவன் உண்டெனவும்; தமிழ் அரசன் எனவும், சோழதேசத்தவன் எனவும் விளங்குவதோடு, தமிழ் அரசர்களாகிய சேரசோழபாண்டியர்களோடும் சேர்த்தெண்ணப்பட்டவன் எனவுந் துணியப்படும்.

5. ஈழராஜனது கீர்த்தி:—ஈழராஜன் இலங்கையைக் கைபற்றி "அனுராஜபுரம்" என்னும் நகரை தலைநகரமாக்கிக்கொண்டு அரசாண்டான். இந்நகர் "அரிபோநதியின்" கரையிலுள்ளது. அனுராஜபுரத்தின் தென்கோடியிலுள்ள விஜிடாபுரத்தில் அரண்களையும், அகழியையும், அதற்குரிய வாயல்களையுங்கட்டி ஆளுதலோடு, முப்பத்திரண்டு அரண்கள் அல்லது கொத்தளங்களையும் அநுராஜபுரத்தில்கட்டி கீர்த்தியோடு அரசாண்டான்*. இவனை (B. C. 161) கலி, 2940-ம், வருடத்தில் "துத்தகாமநு" என்பவனால் கொல்லப்பட்டது. அப்படிகொன்ற இடம் விஜிடாபுரமாகும். அவ்விடத்தில் ஓர் உற்சவம் நடத்தப்பட்டது. வருவாறு:—

"Summoning within the town, the inhabitants of the neighbourhood, within the distance of a yojana, **he held a festival in honour of king Ela, consuming the**

* Vide. Tennent's Ceylon. Vol. I. Part I. Ch. III. P. 107, and Part III. Ch. V. P. 354, The History of Ceylon. Ch. II. Part II, P. II.

**corpse in a funeral-pile on the spot where he fell, he built a tomb there; and ordained that it should receive honours. Even unto this day; the monarches who have succeeded to the kingdom of Lanka,** on reaching that quarter of the city, **whatever* the procession may be,** they silence their musical band.† Vide Tournour's Mahavanso. Ch. XXV. P. 99.

"ஈழராஜனைக்கொன்ற துக்தகமனுவரசன் விஜிடபுரத்திற்கு யோஜனை தூரத்திலிருக்கும் அடுத்த ஊரார்களை பட்டணத்துள் அழைப்பித்து, ஈழராஜன்பேரால் ஒரு உற்சவம்நடத்திக் கனம் பண்ணினான். இதோடு ஈழன் விழுந்த இடத்தில் அவனது சவத்தைக்கொளுத்தி, அவ்விடத்தில் ஒரு சமாதிகட்டி, ஒவ்வொருவரும் அந்த சமாதியை கனப்படுத்தவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தான். அவனுக்குப்பிறகு அவ்விலங்கை அரசுக்குத் துடர்ந்துவரும் அரசர்கள் பட்டணத்துள் எவ்வித கோலாகாலத்துடன் பவுனிவரினும் அப்பாகத்தை சந்திக்க யேற்படின், அவ்விடத்தில் அவர்களது வாத்தியகோஷ்டத்தை நிறுத்தி கனம் பண்ணுவார்கள்" எனப் பட்டிருக்கின்றது.

இப்பகுதியில் வரும் (**Even unto this day**) இக்காலத்திலும் என்னும் பிரசனை "இலங்கையை சிங்கள அரசர்கள் ஆளுங்காலபரியந்தம்" எனப் பொருள்கொள்ளும். இதை "டர்னர்" துரையும் அங்கீகரிக்கின்றார். இலங்கையை அங்கிலேயர் கைபற்றும்வரைக்கும் ஈழராஜன் சமாதிக்கு கனம் ஏற்பட்டதாக கூறப்பட்டிருக்கின்றது. இதனால் ஈழராஜனுடைய கீர்த்தியும், பிரதாபமும் (B. C. 205-ம் வருடத்திலிருந்து, A. D. 1798-ம் வருடம் வரைக்கும் அதாவது,) **2000**-வருடம் அவ்விலங்கையில் அடிபட்டுவந்ததாக விளங்குகின்றது.

---

* "In procession, pay the same honour, and."

† **"These honours continued to be paid of the tomb of Ela, up to the period of the British occupation of the kandyan territory."** Vide. (note by Mr. Tournour) and The History of Ceylon Part II. Ch. III. P. 13.

இதோடு அவ்வீழன் இறந்த இடத்தில் ஒரு ஸ்தம்பங் கட்டப்பட்டது*.' இந்த ஸ்தம்பத்தை " ஈழரா "† (Ellora) என்றழைக்கப்படுகின்றது. அது விஜிடபுரத்தில் உருபாலிமா குளத்திற்கு 165-அடிக்கு தெற்கிலுள்ளது. அவ்விடத்திலேயே ஈழராஜன் சமாதியுமென்க. இதற்கு 300-அடிக்கு சற்று தென்கிழக்கில் ஈழன்பெயரால் ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கின்றது. அது சிவனடியார்களுக்கு " அப்பர் சுவாமிகோயில், சுந்தரர் சுவாமி கோயில்" எனக் கட்டியிருத்தலைப்போல், " ஈழராஜன் கோயில் " (**Ela Dagoba**‡) எனக்கட்டி வணங்கப்பட்டுவந்தது. அது சிலமாயிருப்பதாக 50-வருடத்திற்குமுன் " டென்னட் துரை " கூறியிருக்கின்றார்.

ஈழராஜன் பெயரால் ஒரு வெட்டாறு பராக்கிரமபாகுவால் எடுக்கப்பட்டிருக்கின்றது. அதை " ஈழாரா § " என்னும் பெயரால் அழைக்கப்படும். சியலிய சிட்டியாகோவிலுக்கும், அபயகிரிகோவிலுக்கும் மத்தியில் ஓடும் நதிக்கு " அலபாணியீழா|| " என்னும் பெயரளிக்கப்பட்டிருக்கின்றது.

ஈழன்பெயரால் ஒரு வழியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது, அதை " ஈழன்வழி " என நாளதும் அழைக்கப்படுகின்றது.

---

* **"A Pillar to mark the spot where Ela was encountered by Dutugaimunu."** Vide Tennent's Ceylon, Vol, II. Part X. Ch. I. P. 576 ; and Ch. II. P.610 ; and The Pictures of Russia and its Peoples. P. 33, 36.

† குரும்ப அரசன் விழுந்த இடத்தில் தொண்டனால் ஒரு ஸ்தம்பங் கட்டப்பட்டது, இதைப்போல் ஈழனுக்கும் ஏற்பட்டது. Vide, On the Original Inhabitants of Bharatavarsa or India. Ch. XII. P. 223.

‡ **Dagoba = A circular structure built to contain relics of Buddha or some Buddhist saint.** Vide "Collins' Graphic Euglish Dictionary;" and Tennent's Ceylon. Vol. II. Part X. Ch. I. P. 578 ; and Ch. II. P. 610.

§ Vide. Reports of Messrs Adams, Churchill and Bailey "**On the Ellahara canal**" Forbes's Eleven years in Ceylon. Vol. II. P. 95. Tennent's Ceylon. Vol. II. Part X. Ch. I. P. 574.

|| Vide Tennent's Ceylon. Vol. II. Part. X. Ch. II. P. 610.

அவ்வழியை ஆச்சரியமும், அழகும், மகத்துவமும் பொருந்திய வழி என்றார் டென்னட் துரை*.

இலங்கையில் ஆறு ஊர்கள் "ஈழநீ" பெயரால் அழைக்கப்படுவதாக† "போர்ச்சுகல்" தேசத்தார் A. D. 1685-ம் வருடத்தில் எழுதிய இலங்கைதேசபடத்தில் குறிப்பித்திருக்கின்றார் இதை (Ceylon Observer) "சிலோன் அப்சர்வர்" என்னும் பத்திரிகையில் A. D. 1857ஹு ஜூலைமீ 11வுயில் பிரசுரித்திருக்கின்றார்.

ஆகிய இத்தியாதி பிரமாணங்களால் ஈழராஜன் என்பவன் இலங்கை அரசருள் முதன்மையுயீ, மகத்துவமுமுள்ளவனென விளங்குவதால், அவன் பெயரால் சமாதியும், ஸ்தம்பமும், கோயிலும், வெட்டாறும், வழியும், ஊர்களும் ஏற்படுத்தி இரண்டாயிர வருடகாலம் நினைத்தும், கனப்படுத்தியும், வணங்கியும் வந்தார்கள். இவ்வித கவரதை அவ்விரண்டாயிரம் வருடகாலம் இலங்கையை அரசாண்ட 161-அரசர்களுக்கும் ஏற்படவில்லை. அப்படி யேற்படாமையினாலேயே ஈழராஜனை அவர்களுக்கு மேற்பட்டவன் எனவிளக்க (**Illustrious Ela.**) "கீர்த்திப்பெற்ற ஈழன்" என்றார்கள்; "மஹாநமோ, டர்னர், டென்னட், விஜிசினுயும்". இக்கவரதை அச்சிங்கள அரசர்களுள் எவ்வரசருக்கும் கிடைத்தில. இவைகளால் ஈழராஜனது கீர்த்தி இனிதுவிளங்குதும்.

**6.** இத்யாதி கீர்த்தியால் அவ்வீழன்பெயர்‡. அத்தீவுக்காய் ஈழம், ஈழநாடு, ஈழமண்டலம்" எனப்பட்டது.

---

* **"Perhaps there is not a scene in the world which combines sublimity and beauty in a more extraordinary degree than that which is presented at the Pass of Ella.**" Vide Tennent's Ceylon. Vol. II. Part VII. Ch. VII. P. 268. and The Geography of Ceylon. Vol. II. P. 34.

† Tennent's Ceylon. Vol. II. Part VI. ch. I. P. 5. and Part VII. ch. VI. P. 241, 243.

‡ Vide Mysore and Coorg Vol. II. P. 227.

பெரியபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்,
890-வது செய்யுள்.

அங்கரி லமர்ந்தங்க ணினிதுமேவி
யாழிபுடைசூழ்ந்தொலிக்கு மீழந்தன்னின்
மன்னுதிருக்கோணமலைமகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதிபுனை மாடமாதோட்டத்திற்
றிருக்கேதீச் சரத்தண் ணல்செய்யபாத
முன்னிமிகப் பணிந்தேத்தியன்பரோடு
முலவாதகிழி பெற்ற ருவகையுற்றார்.

இதில்வரும் "ஈழம்" என்பது இலங்கையைக் குறிக்கும், அது ஈழராஜனால் அந்நாட்டிற்காகியது. இதை சிங்களர் (Izham) 'இஸ்ஸாம்" என்பர் "போர் ச்சுகீசர்" ( (Ilanare) "இயநர்" என்பர். தமிழர் (Ilam) "ஈழம்" என்பர்*. "ஈழஞ்சுவணமீர ணியமேமம்". (பிங்கலன்) என்பதால் ஈழம் என்பது நாட்டைக் குறித்தலோடு, "பொன்னையுங்" குறித்தலால், அந்நாட்டில் பொன்மலையிருந்ததாகவும், அதனால் அந்நாடு ஈழம் என்னும் பெயரைப்பெற்றதெனவுஞ் சிலர்† கூறுவர், அப்படிக்கூறுதல் பிசகு எனவும்; அவ்விலங்கை பொன்விளையக்கூடிய பூமியல்லவெனவும் "சுண்ணாம்புக்கல், இரும்பு, காரீயம்" இவைகளே விளையக் கூடிய பூமியெனவும்; டென்னட் துரை கூறுகின்றார்‡. இதோடு அவ்விலங்கையில் பொன்கனி யிருந்ததாகவும் யாம்கேட்டிலேம் இதனால் ஈழராஜனாலேயே அந்நாடு ஈழம் எனப்பட்டதென விளங்கின

திருவாதவூரர் புராணம், புத்தரைவாதில்வென்ற சருக்கம்,
1-வது செய்யுள்.

தாழுநீடுவேணியண்ண ருள்விடாவோர்மாதவ
ருழிஞாலவண்மையுண்மை யாயுநேயநெஞ்சினன்

---

* Vide. Tennent's Ceylon. Vol. I. Part. III. ch. X. P. 398

† Casie Chetty's Gazetteer, Vol. I. P, 59.

‡ Vide "The Geography of Ceylon," uuder "Menerals," and also refer. Tennent's Ceylon, Vol. II. Part VII. Ch. I. P. 101.

சோழநாடுகண்டுதில்லை தொழுதுபின்புபழுதிலா
ஈழநாடுதன்னைநாடவெண்ணியங்கு நண்ணினார்.

இதில் இலங்கையை ஈழநாடு எனப்பட்டிருக்கின்றது. அது:—
சோழன்+நாடு=சோழநாடு, (சோழராஜனால் ஆளப்பட்ட நாடு)* என்பதைப்போல்;

ஈழன்+நாடு=ஈழநாடு (ஈழராஜனால் ஆளப்பட்ட நாடு) எனப்படும்.

"ஈழம்" என்னும் பெயரோடு, இலங்கைக்கு "சிங்களம்" என்னும் பெயரும் ஒன்றென "சிங்களமீழமாகச் செப்புவர்" (திவாகரம்.) "ஈழஞ்சிங்களமிரணியமேமம்." (பிங்கலன்) என்னும் பகுதிகளில் வெளியிட்டிருக்கின்றனர். இலங்கை அரசை ஸ்தாபித்த விஜயன் தன் பிதாவழியாய்வந்த "சியாலா†" (Sihala) என்னும் பெயரை இலங்கைக்குச்சூட்டி அரசாண்டான். நாளாவர்த்தியில் "சியாலா" என்பது "சிங்களம்" என மருகியது, இதனால் இலங்கைக்கு ஏற்பட்ட 'சிங்களம்" என்னும் பெயரும், விஜயனது தகப்பன் பெயரென விளங்கின. 'அதாவது சியாலனால் ‡ சிங்களமும், மிதுலனால் மிதுலையும், காந்தாரனால் காந்தாரநாடும், குருவால் குருக்ஷேத்திரமும், கலிங்கனால் கலிங்கநாடும் §, அஸ்தனால் அஸ்தினாபுரமும், மச்சனால் மச்சநாடும், அங்கனால் அங்கநாடும்||, சேரனால் சேரநாடும், பாண்டியனால் பாண்டியநாடும், கொங்கனால் கொங்குநாடும், தண்டகனால் தண்டகாரணியமும், தொண்டனால் தொண்டநாடும், கோதையரால் மகோதையநாடும்$, ஏற்பட்டதைப்போல்; ஈழராஜன் ஆண்டமையால் இலங்கை "ஈழம், ஈழநாடு" எனப்பட்டது.

---

* கலிங்கத்துப்பரணி, இராஜ பாரம்பரியம், 14-வது செய்யுள் காண்க.

† Tennent's Ceylon, Vol I, Part. III. Ch. III. P. 335-336.
‡ " Sihala, Singhala (and Singhalese) Silan, Seylan and Ceylon."

§ Kalinganagara, which took its name from the king Kalinga. the son of Anu." Vide Ancient History of India. Vol. 1. Ch. VII, P. 120.

|| Vide Tod's Rajasthan. Vol. I. Ch. III. P. 42.

$ சேரமான் பெருமாணயனார் புராணம், 4-வது செய்யுள்காண்க.

சிவகாமப்பஃறொடைவெண்பா, 195-வது வெண்பா.

சோழமண்டலந்தூற்றுத் தொண்ணூற்றுக்கப்பானல்
லீழமண்டலத்திலிலங்குபதி—வாழ்வு மிகு
மன்னுதிருக்கோணமாமலையின் மாதுமைசேர்
பொன்னேகோ ணேசப் புராதனு.

இதில் சோழன் ஆண்டமண்டலத்தை சோழமண்டலம் எனவும், ஈழன் ஆண்டமண்டலத்தை ஈழமண்டலம் எனவும் இனிது விளக்கியிருக்கின்றார். ஈழராஜனே தமிழ் அரசனென மேலே எண்பித்திருத்தலால், அவன் நாட்டை தமிழரசர்கள் நாடாகிய சேர சோழ பாண்டிய மண்டலத்தோடு சேர்த்தெண்ணியது. இன்றேல் வடுகு மலையாளநாட்டைப்போல் வரையாதொழிவர். இவைகளால் ஈழராஜனால் இலங்கை "ஈழம், ஈழநாடு, ஈழமண்டலம்" என்னும் பெயரைப்பெற்றதென செவ்வனே துலங்குகின்றது.

**7.** ஈழன் சோழனைப்போல் சூரியகுலத்தவனாகுவன். அதை பல நூற்களால் வற்புறுத்துவாம்.

"**In theory the Singhalese monarchy was elective in the descendants of the Solar race, in practice, primogeniture had a preference**, and **the crown was either hereditary** or **became the prize of those who claimed to be of royal lineage**. On reviewing the succession of Kings from B. C. 307 to A. D. 1815." Vide Forbies' Eleven years in Ceylon * Vol. I. ch. IV. P. 80, 97.

. "சூரியகுலத்திலுதித்த சிங்கள அரசர்கள் பரம்பரையாகவாவது, அல்லது அவ்வஸத்தவர்களாகவாவது தொடர்ந்து சற்றேறக்குறைய 2200-வருடம் "இலங்கையை ஆண்டுவந்தார்கள்". என (Forbies) "போர்பீஸ் துரை" தாமியற்றிய சிலோன் சரித்திரத்தில் செப்பியிருக்கின்றார். இதனால் மேற்கூறிய சிங்கள அரசர்கள் அல்லது இலங்கை அரசர்கள் 200-பேரும் சூரியகுலத்தவர்

* Vide Tables of Mahawanso and Tennent's Ceylon, Vol. I Part III. ch. I. P. 320 to 324.

கள் எனத் துணியப்பட்டது. இவர்களுள் ஈழன் பதின்மூன்றாவது அரசன். அதனால் அவ்வீழனும் சூரியகுலத்தவனே யாகுவன்.

"It was necessary, however, that they should be of the **Soorea or Rajah** wanse, in consequence **the Kings of Kandy** were obliged to procure queens from the continent of **India,*** and Madura was the state that was usually applied to, to furnish princess." Vide Davy's Ceylon, Account of the Interior and its Inhabitants, P. 164.

"கண்டி அரசர்கள் சூரியவம்ஸம் அல்லது இராஜவம்ஸத்தைச் சார்ந்தவர்களாகும். அவர்கள் இந்தியாதேசத்து இராஜகுமரிகளையே பெண்சாதிகளாகத் தெரிந்தெடுத்துக்கொள்ளுதல்,' என "டேவிஸ் துரை" கூறியிருக்கின்றார். கண்டி என்பது இலங்கைக்கு இராஜதானியாயிருந்த ஓர் சிறப்புறுபட்டினம். இது சற்றேறக்குறைய இலங்கையின் மத்தியில் மகாவல்லி கெங்கையின் தீரத்திலுள்ளது. இக்கண்டி அரசர்கள் எல்லோரையுமே சூரியகுலத்தவர்களெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஈழன் என்பவனும் இக்கண்டி அரசர்களுள் ஒருவனாயிருப்பதால், அவனும் சூரியகுலத்தவனெனவே சொல்லப்படும்.

"Of fifty-one sovereigns who formed **the pure Wijayan dynasty**, two were deposed by their subjects, and nineteen put to death by their successors......... **There is hardly** a **sovereign of the Solar race**" Vide Tennent's Ceylon, Vol. I, Part III. ch. VI. P. 360, 361.

"விஜயன் வம்ஸத்தைச்சார்ந்த பரிசுத்தமான ஐம்பத்தோர் அரசர்களில் ஒருவர் குடிகளால் தள்ளப்பட்டார். பத்தொன்பதின்மர் கொல்லப்பட்டார்கள். இவர்கள் யெல்லாம் சூரியகுலத்தவர்கள்" என டென்னட்துரை கூறியிருக்கின்றார். இதில் ஈழராஜன் விஜயன் வம்ஸத்தைச்சார்ந்த ஐம்பத்தோர் அரசர்களில் ஒருவன். இந்த ஐம்பத்தோர் அரசர்களையே உயர்ந்த வம்ஸத்

* Vide Ibid. P. 53, and Turnour's Mahawanso, ch. VII, P. 34.

தவர்கள் எனப்படும். இலங்கை அரசர்கள் (Mahavanso = great Dynasty) உயர்ந்த வம்ஸத்தவர்கள், (Sulu wanse= Lower race) தாழ்ந்த வம்ஸத்தவர்கள் என இருவகுப்பின ராகுவர். அதில் விஜயனிலிருந்து மஹாசன் வரைக்கும் ஏற்பட்ட 54 - அரசர்களின் ஆட்சியை பெரிய அரசாட்சி அல்லது உயர்ந்த வம்ஸத்தவர்கள் எனவும்; மேகவர்ணனிலிருந்து ஸ்ரீ விக் கிரம ராஜசிங்கன் வரைக்கும் ஏற்பட்ட 120 - அரசர்களின் ஆட்சியை சிறிய அரசாட்சி அல்லது தாழ்ந்த வம்ஸத்தவர்கள் எனவுஞ் சொல்லப்படும். இவற்றுள் ஈழன் சூரியகுலத்திலுதித்த பெரிய அரசாட்சியைச்சார்ந்த ஐம்பத்திரண்டு அரசர்களுள் பதின்மூன்றாவது அரசன்*. விஜயனுக்கு 338-வருடத்திற்குப் பிற் பட்டவன். அதாவது, (B C. 205) கலி. 2112-ம் வருடத்த வன். இவன் அநுராஜபுரம் என்னும் நகரை தலைநகராக்கிக் கொண்டு அரசாண்டவன். இந்நகர் "கடம்பாநதி" யின் கரையி லுள்ளது. இவ்வீழனே மைசூரிலிருந்து படையோடு வந்தவன். இவ னும் சூரியகுலத்தவனே! அதை விளக்கவே (**Either hereditary** or **became the prize of those who claimed to be of royal lineage.**) "சந்ததியாக ஆண்டவர்கள் மாத்திரம் அல்ல, அதைப் பிடித்தாண்டவர்களும் சூரியகுலத்தவர்கள்" என வற்புறுத்து கின்றார். இதனால் "ஈழன் சூரியகுலத்தவன்" எனச் சொல்லாம லேயமையும். இதை யனுசரித்தே இவ்வீழன் குலத்திலுதித்த ஸ்ரீமத் ஏனாதிநாத நாயனாரை சூரியகுலத்தவர்யெனப் பொருள்பட "சாக்ஷி குலத்தவர்" என்றது உபமன்னியர். "சாக்ஷி" என்பது சூரியனுக் குரிய பல கிரந்தப்பெயர்களுள் ஒன்று. இதை அமரத்தால் அறி யப்படும். உபமன்னியர் வாக்காகிய பக்தவிலாசத்தை மொழி பெயர்த்த சேக்கிழார் "சாக்ஷி" என்பதை "சான்று" எனத் திரித்து, "ஆன்" விகுதியையேற்றி "ஈழக்குலச் சான்றான்" என் றனர், "சூரியகுலத்தவர்" எனப் பொருள்பட, சான்றோன் என்பது சூரியனது பலபெயர்களுள் ஒன்று. இது நிகண்டின் துணிபு. "சான்றானும் சான்றோனும்" ஒருபொருட் கிளவிகள் என்பது நன்னூலின் முடிபு. ஆகிய இவைகளால் "ஈழன் சூரிய குலத்தவன்" எனவே இனிது முடிக்கப்பட்டது.

* Vide. Tennant's Ceylon. Vol. I Part. III. ch I. P. 320. "In Singhalese chronicles".

8. **ஈழராஜன் காலம்:**—ஈழன் என்னும் பெயரையுடைய அரசர்கள் இருவருண்டு. அவர்களுள் முதல் ஈழன் (205. B. C.) கலி. 2897-ம் வருடத்தவன். கிருஸ்துவுக்கு 205-வருடத்திற்கு முற்பட்டவனும், விக்கிரமார்க்கனுக்கு 150-வருடத்திற்கு முற்பட்டவனும், இலங்கை முதலரசனாகிய விஜயனுக்கு 338-வருடத்திற்கு பிற்பட்டவனும், இலங்கைராச்சியத்திற்கு பதின்மூன்றுவது அரசனுமாகிய இவனே சோழதேசமாகிய மைசூரிலிருந்து இலங்கையின்மேல் படையெடுத்துச்சென்று, அதைக் கைப்பற்றி நீதியோடும், புகழோடும், கீர்த்தியோடும் அரசாண்டவன். இவனது பிரபாவத்தை மேலே கூறியுள்ளோம்.

ஈழன் இரண்டாமவான் (A.D. 38) கலி 3140-ம் வருடத்தவனும்; முதலீழனுக்கு, 243-வருடத்திற்குப் பிற்பட்டவனும்; மாணிக்கவாசகர் காலத்தவனும்; ஞானசம்பந்தர், அப்பர் இவர்களுக்கு முற்பட்டவனுமாகும். இவ்வீழனே மாணிக்கவாசகர்காலத்தில் தில்லைக்கேகியது. இவ்விருவர்காலமு மொன்றெனப் பலநூற்களாலும் விளக்குவாம். ஞானசம்பந்தர்காலம், திருச்செங்காட்டங்குடியிற் பிறந்து, சிவபிரான் திருவடியின்கண் மெய்யன்புபூண்டு, போர்த்தொழில்வல்லுனராய்அரசனிடம் தண்டத்தலைமை மேற்கொண்டொழுகிய சிறுத்தொண்டநாயனர் காலமாகும். அது ஞானசம்பந்தர் திருச்செங்காட்டாங்குடிக்கு எழுந்தருளிய காலத்தில், ஆங்கிருந்த சிறுத்தொண்டநாயனர், அவரை மெய்யன்போடு உபசரிக்கப்பட்டதாக பெரியபுராணத்திற் பார்க்கின்றோம் * இதோடு ஞானசம்பந்தரும் சிறுத்தொண்டநாயனரைச் சிறப்பித்து.

> "செந்தண்பூம்புனல்பரந்த செங்காட்டாங் குடிமேய
> வெந்தநீறணிமார்பன் சிறுத்தொண்டனவன்வேண்ட
> வந்தண்பூங்கலிக்காழி யடிகளையே யடிபரவுஞ்
> சந்தங்கொள்சம்பந்தன் றமிழுரைப்போர்தக்கோரே"

என்னும் பாசுரத்தில் விகசிதப்படுத்தியிருக்கின்றனர். இதனாலும் அவ்விருவர்களுடைய நட்பின்திறமும், அவர்களது கால

* பெரியபுராணம், சிறுத்தொண்டநாயனர் புராணம், 23, 24-வது செய்யுள்களையும்; திருஞான சம்பந்தசுவாமிகள் புராணம் 468. 469-வது செய்யுட்களையுங் காண்க.

மும் ஒன்றெனத் துணியப்படும். சிறுத்தொண்ட நாயனார் தம் காலத்தில் வடநாட்டில் "வாதாவி" என்னும் நகர்மேற் படையெடுத்துச்சென்று, அம்மன்னவனை முறியவடித்து, தம்மரசருக்குப் பெரும்புகழ் எய்துவித்து, தாம்வீர சிம்மமென விளங்கினர். அது:—

பெரியபுராணம், சிறுத்தொண்ட நாயனார் புராணம்,
6-வது செய்யுள்.

மன்னவர்க்குத்தண்டுபோய் வடபுலத்துவாதாவித்
தொன்னகரந்துகளாகத் துளைநெடுங்கைவரையுகைத்துப்
பன்மணியுநிதிக்குவையும் பகட்டினமும்பரித்தொகையு
மின்னனவெண்ணிலகவர்ந்திங் கியலரசன் முன்கொணர்ந்தார்.

என்னுஞ் செய்யுளால் இனிது விளங்கும். வடநாட்டில் தொகுக்கப்பட்ட கல்வெட்டுபட்டயத்தால் நரசிம்மவருமன் என்னும் அரசனே! மேலேயுரைத்த வாதாவி நகரையழித்து தன் வசப்படுத்தினவன் எனவும், அக்காலம் வாதாவி நகருக்கரசனயிருந்தோன் "புலிகேசன் இரண்டாமவான்*" எனவும், பெறப்படுகின்றது. இந்நரசிம்மவருமன் பல்லவவேந்தர் மரபினில் வந்தோன். புலிகேசன்-II மேனாட்டு சளுக்கியவேந்தர் மரபினில் வந்தோன். பல்லவவேந்தர்களுக்கும், சளுக்கியவேந்தர்களுக்கும் பலமுறையாலும் போர்நிகழ்ந்தனவென்பதும் அப்பட்டயங்களானே வெளிப்படை. பெரிய புராணத்தில் இவ்வரசன் பெயர் சொல்லப்பட்டதில்லையாயினும், வாதாவி நகரிற் காணப்படும் பல்லவ அரசன் கல்வெட்டுப் பட்டயமொன்று, அவ்வெற்றிக்குரியோன் அரசனே என்றும், சிறுத்தொண்ட நாயனார் தம்மரசன் நரசிம்மவருமனுக்காக தண்டத்தலைவராய் படையெடுத்துச்சென்றவர் எனவும் விகசிதப்படுத்தியிருக்கின்றது. இனி மேலேகாட்டிய சளுக்கியவேந்தனாகிய புலிகேசன் - II-செங்கோலோச்சிய காலம் A. D. 609-முதல், 642-க்குள் என வடநாட்டு சிலாசாசன பரிசோதகராகிய, "டாக்டர் – ஹால்ஸ்" என்பவரால் குறித்திடப்பட்டிருக்கின்றது. இதனால் புலிகேசவரசனை புறங்கண்ட

*Pulikesi—I. lived in the year. 489. A.D; Chingalput district Manual. ch. IV. P. 136. and. Salem district Manual. P. 8, 9.

நரசிம்மனும், அவனுடைய தண்டத்தலைவராகிய சிறுத்தொண்டநாயனரும் அவ்வேழாம் நூற்றூண்டின் தொடக்க முதலதனிடையளவுக்குள் இருந்திருத்தல் வேண்டும். சிறுத்தொண்டநாயனர் ஞானசம்பந்தர் காலத்தவர் என மேலே எண்பித்திருத்தலால், அவரும் அவ்வேழாம் நூற்றூண்டின் தொடக்கமெனத் துணியப்படும். ஞானசம்பந்தர் காலத்தவரே அப்பர் எனப்படும்*. அப்பரைச்சுட்டி திரிசிரபுரமலையின் குகையில் காணப்படும் கல்வெட்டுகளால் நரசிம்ம வருமனது தந்தையான குணபாரனென்னும் மகேந்திர வருமன்காலத்தில் இருந்தாரென, "டாக்டர்–ஹுல்ஸ்" துரை விகசிதப் படுத்தியிருக்கின்றூர், இதை நோக்குங்கால் அப்பர் சுவாமிகள் மகேந்திர வருமனது காலமாகிய ஆறும் நூற்றூண்டின் கடையிலும், மகேந்திர வருமனது குமாரனுகிய நரசிம்மவருமன் காலமாகிய ஏழும்நூற்றூண்டின் முதலிலும் இருந்தவர்யெனத் துணியப்படும். அதனுனே அப்பர்சுவாமிகள், 80–வயதளவு இருந்தாரென தமிழ்நூற்கள் தாபிக்கின்றது. இனி மாணிக்கவாசர்காலத்தை கவனிப்பாம், இவர் ஞானசம்பந்தர் அப்பர் இவர்கள்காலத்திற்கு முற்பட்டவர் அது:—

அப்பர்சுவாமிகள் தேவாரம்.

நரியைக்குதிரை செய்வானுநாகரைத் தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும் விச்சின்றி நாறுசெய்வானும்
முரசதிர்ந்தானை முன்னேடைமுன்பணித் தன்பர்களேத்த
அரவரைச்சார்த்தி நின்றூனு மாரூரமர்ந்தவம்மானே.

என்னும் அப்பர்சுவாமிகள் பாசுரத்தால் விகசிதப்படும். நரியைக் குதிரையாக்கியது மாணிக்கவாசகரின் பொருட்டே இறைவன்செய்த திருவிளையாடல், மாணிக்கவாசகர் அப்பர்சுவாமிகள் காலத்திற்கு முற்பட்டவரா யிருந்தமையாலேயே அத்திருவிளையாடலை அப்பர்சுவாமிகள் எடுத்தாள நேரிட்டது. இதோடு மாணிக்கவாசகரும் தமக்காக செகதீசன்செய்த திருவிளையாடலை எண்ணி அருட் திருவாக்கால் மகிழ்கின்றனர்.

---

* திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம், 561-வது செய்யுளையும், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், 250-வது செய்யுளையுங் காண்க.

திருவாசகம், கீர்த்தித்திருவகவல்.

"மரியொடுபிரமற் களவறியொண்ணு
னரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
மதுரைப்பெருநன் மாநகரிருந்து
குதிரைச்சேவக னாகியகொள்கையும்,"

என்பதால் இறைவன் செய்தருளிய அத்திருவிளையாடல் மாணிக்கவாசகர் பொருட்டேயாமெனத் துணியப்படும். இத்திரு விளையாடலை யெடுத்தாண்ட அப்பர் காலமாகிய ஆரும் நூற்றாண்டிற்கு முற்பட்டே மாணிக்கவாசகர் காலமிருத்தல்வேண்டும். மாணிக்கவாசகர் கடைச்சங்கத்தார் காலத்தில் இருந்தவராகவும் புலப்படவில்லை. இருந்திருப்பாரேல், அவரைச்சுட்டி நக்கீரர், பாணர், கபிலர் முதலிய சங்கவித்துவான்கள் யேதேனும் மொழிந்திருப்பர். கிடையா? மாணிக்கவாசகர் மதுரையிலாய்ந்த தமிழைப் பற்றிப் பேசவந்தவிடத்து, "உயர்மதிற்கூடலி னாய்ந்த வொண்டீந்தமிழின் றுறை",என்று இறந்த காலத்தானுரைத்துக் கடைச்சங்கம் தம்காலத்திற்கு முன்னதாகலை விளக்குகின்றார். அதனால் கடைச்சங்ககாலம் முற்பட்டதும், தம்காலம் பிற்பட்டதும் என விளங்கின. இவர் கடைச்சங்கக் காலத்தவராயிருப்பின் "உயர் மதிற்கூடலினாயுமொண்டீந் தமிழின் றுறை" என நிகழ்காலத்தாற் கூறிடுவர் அங்கனமின்று. இதனால் மாணிக்கவாசகர் காலம், கடைச்சங்கத்தின் காலத்திற்கும், அப்பர் ஞானசம்பந்தர் காலமாகிய ஆரும் நூற்றாண்டிற்கும் அதாவது ஏறக்குறைய 550-A D. வருடத்திற்கும் மத்தியென விளங்கின. மாணிக்கவாசகர் அரிமர்த்தனபாண்டியன் காலத்தவர். அரிமர்த்தனபாண்டியன் கடைச்சங்கத்தில் ஒருவனாகிய குலேசபாண்டியனது* புத்திரன். இக்குலேசபாண்டியனது கலத்திலேயே சங்கம் அழிவுபட்டது. இதை திருவிளையாடல் புராணத்தால் அறியலாம். இதனால் கடைச்சங்கம் மாணிக்கவாசகருக்கு முற்பட்டதென விளங்கின. "அப்பர், ஞானசம்பந்தர்" கூன்பாண்டியன் காலத்தவர்கள். கூன்பாண்டியன் அரிமர்த்தன பாண்டியனது பனிரெண்டாவது தலைமுறைப்பேரன். இப்பனிரெண்டு தலைமுறைக்கும் ஏற்படும்

*திருவிளையாடற் புராணம், இடைக்காடன்பிணக்குதீர்த்தபடலம்,5-வதுகவி.

காலம் சுமார் சற்றேறக்குறைய ஐந்நூறு வருடமாகும். மேலே கூறிய அப்பர் காலமாகிய (A. D.) ஐந்நூற்றைம்பதில், ஐந்நூறு போக, நின்ற காலமாகிய (A.D.) ஐம்பதே! அரிமர்த்தன பாண்டியன், **மாணிக்கவாசகர் காலமாகும்.** இம்மாணிக்கவாசகர் தம் காலத்தில் சோழராஜதானியிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் தரிசித்து வணங்கி, மிக்கவிருப்பத்தோடு, சமுத்திரத்தால் சூழப்பெற்ற ஈழன் இராஜதானியாகியஇலங்கைக்குச் சென்றென றெனவும்* அக்காலத்தில் **ஈழன் என்னும்** ஒரு அரசனால் இலங்கை ஆளப்பட்டுவந்தன வெனவும் திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய நூற்களில் விளக்கியிருக்கின்றது. அவ்விதம் **ஈழன் என்னும்** அரசன் ஒருவன் இலங்கையை ஆண்டிருப்பானேல் அவன் மாணிக்கவாசகர் காலத்தில் இருந்திருத்தல்வேண்டும். அப்படி இருந்தானென "மகாநமோ" கூறியிருக்கின்றார். வருமாறு:—

By his demise, his younger sister Sivali, the daughter of Amanda, reigned for four months, when a nephew of Amanda named **Ilanaga deposed her** and **raised the Canopy of dominion, in the Capital".** Vide George Turnour's The Mahavanso, ch. XXXV, P. 138.

"குலாபயன் இறந்தபிறகு அவனுடைய சகோதரியும், அமந்தாவின் புத்திரியுமாகிய சிவேலே என்பவளால் நாலுமாதம் ஆளப்பட்டது. அப்பொழுது அமந்தாவின் சகோதரன் புத்திரனாகிய **ஈழநாகன்** என்பவன் அவளை அரசைவிட்டுத்தள்ளி, **இராஜ்யத்தைத் தன் வசப்படுத்திக்கொண்டான்**" எனப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டாமீழன் இலங்கையை தன் வசப்படுத்திக்கொண்டது முதலாம் நூற்றாண்டின் முற்பாதி அதாவது A.D. 38-ம் வருடம் என இலங்கைதேசசரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். இதை முன்கூறிய அரச அட்டவணையில் தெரிந்துக்கொள்க. இவன் சோழதேசத்திலிருந்து படையெடுத்துச்சென்று, இலங்கையைக்

* திருவாதவூரர் புராணம் புத்தரை வாதில்வென்ற சருக்கம் 1. 2-வது செய்யுள்களையும்; திருவிளையாடற்புராணம். மண்சுமந்தபடலத்திலுங்காண்க.

கைபத்தி பிரக்கியாதியாய் அரசாண்ட முதலாம். ஈழராஜன் வம்ஸத்தில்வந்த இருபதாவது அரசன் எனவும், இலங்கை இராஜ்யத்திற்கு முப்பத்து மூன்றாவது அரசன் எனவும் இலங்கை சரித்திரங்கள்* எடுத்துக் கூறுகின்றது. இதனால் இரண்டாம் ஈழராஜனும், மாணிக்கவாசகரும் ஏககாலத்தவரென முடிவு கட்டப்பட்டது.

**9.** ஈழன் ஆத்திமாலையை யுடையவன் :—மாணிக்க வாசகர் காலத்திலுள்ள ஈழராஜன்-II புத்தசமயத்தவன். இவ்வீழராஜன் காலத்தில் புத்தகுருக்கள் மாணிக்கவாசகரால் வெகுண்டு, சிதம்பர ஆலயத்தை புத்த ஆலயமாக நிர்மாணிப்பதாக சபதஞ்செய்துக்கொண்டு புறப்பட்டனர்கள். இவர்களோடு இவர்களுக்கரசனாகிய ஈழராஜனும் புறப்பட்டான்†.

திருவாதவூரர் புராணம், புத்தரைவாதில்வென்ற சருக்கம்,

17-வது செய்யுள்.

மன்னனுந்தனதுசெல்வமகட்குள மூகைநீங்கிப்
பொன்னினம்பலத்திலேகவென்பது பொருந்தவுன்னித்
தன்னெடுந்தானை சூழத்தனிப்பெருஞ் சிவிகையேறிச்
சென்னிநன்னாடுசேர்ந்து தில்லையினெல்லைபுக்கான்.

(இ-ள்.) "புத்தராஜனாகிய ஈழன், தன்னுடைய செல்வம்போன்ற புத்திரிக்கு உண்டாயிருக்கும் ஊமைத்தன்மை நீங்கச் சிதம்பரத்திற்குப் போகவேண்டுமென்பதை நினைத்துத் தன்னுடைய சேனைகள் சூழ, சிவிகையிலேறிக்கொண்டு, சோழநாட்டில் வந்து, தில்லைநகரில் புகுந்தான்" என்பதாம். இப்பாசுரத்தில் ஈழராஜன்மாத்திரமல்ல, அவனுடைய செல்வப்புத்திரியாகிய ஊமைப்பெண்ணும் தில்லைக்கு வந்ததாகக் கூறியுள்ளது. இக்கருத்தை திருவிளையாடற் புராணமும் ஒப்புகின்றது.

திருவிளையாடற்புராணம், மண்சுமந்தப் படலம்,

109-வது, செய்யுள்.

இங்கிவர்தோற்றவண்ணங் கேட்டவ ரிறப்பதின்பந்
தங்குவீடென்றுதேற்றுஞ் சமயத்திலாழ்ந்த வாத்திக்

* Vide Turnour's Mahavanso. Table I. and Tennent's Ceylon Vol. I. Part III. ch. I. P. 320, 321.

† திருவாதவூரர் புராணம், புத்தரை வாதில்வென்ற சருக்கத்தில் பரக்கக் காணலாம்.

கோங்கிவர்தாரான் மூங்கைக் தூயிற்பேடை யேனத்தானீன்ற
மங்கையைக் கோண்டுதில்லை மல்லன்மா நகரில்வந்தான்.

(இ-ள்.) "இப்புத்த குருக்கள் தோற்றதைக்கேட்டு அவர்களது இறப்பதே இன்பம், தங்குஃலே மோட்சம் எனச் சொல்லும் புத்தசமயத்திலாழ்ந்த ஆத்திமாலையைத் தரித்த ஈழராஜன் தானீன்ற ஊமைப்பெண்ணுேடு தில்லைக்குவந்தான்" என்பதாம்.

திருவாதவூரர் புராணத்தில்கூறிய ஈழராஜன் சரித்திரத்தையே திருவிளையாடற் புராணமுங் கூறுகின்றது. அதனுல் இருநூற்களின் பகுதியும் ஒரு அரசனையே அதாவது ஈழராஜனையே குறிக்கின்றதென்பது முடிபு. ஆனுல் இத்திருவிளையாடற் புராணப் பகுதியில் ஒரு விசேஷம். ஈழன் சோழக்குலத்தவன் என்பதே! அது:— "ஆத்திக்கோங்கிவர்தாரான்" என்பதால் விளங்கும்.

கொங்கு=வாசனை
இவர்=எழும்
ஆத்தி = ஆத்திமலரின்
தாரான் = மாலையையுடையவன்.

"ஈழன் ஆத்திமாலையுடையவன்" என்பது பொருள். ஆத்திமாலை சோழனுக்குரியது.

திவாகரம்.

நேரியனூர்த்தார்க்கோ
னேரிறையபயன்.

பிங்கல நிகண்டு.

ஆரின் கண்ணிய னேரியனபயன்
சூரியன் புனனுடன் சோழன்பெயரே.

சூடாமணி நிகண்டு.

ஆரின் மாலையனே கிள்ளி
யபயனே கோழிவேந்தன்.

இப்பிரயோகங்களில் வரும் "ஆர்த்தார்க்கோன், ஆரின்கண்ணியன், ஆரின்மாலையன்" என்பதுகள் "ஆத்திமாலையன்" எனப்

பொருள்படும். "ஆத்திமாலையன்" என்பது சோழனுக்குரிய பல பெயர்களுள் ஒன்று* யெனத் திவாகர நிகண்டுகளால் தெளிகின்றது. "ஆருக்கு வேம்புநிகராகுமோ வம்மானே" என ஆத்திமாலை சோழனுக்குரியதென புகழேந்தியும் புகல்கின்றார்.

சூடாமணி நிகண்டு.

12-வது, தொகுதி, 147-வது செய்யுள்.

மன்னியசேரனுக்கு வரிசிலைக் கொடிபனந்தார்
பொன்னியந்துறைச் சோழற்கே புலிக்கொடி யாத்திமாலை
தென்னவன் றனக்குத்தானே சேற்கொடிவேப்பந்தாராம்
பன்னியகேழல்வேழப் பதாகையும் புலவருக்கே.

The metropolis of the **Chola country is warriore.** Its principal mountains are colly and nery. Its chief river is the Cauvery. The name of the king's horse is Coram. **His distinctive garland is the flower of the Autte tree.** The device on his Banner is a tiger. **He is of the Solar Pedigree".** Vide The Administration of the Madras Presidency Vol. I, P 125. Footnote No. 8.

"சோழனுக்கு இராஜதானி உறையூரும், மலை கொல்லிநேரியும், நதிகாவேரியும், குதிரை கோரமும், மாலை ஆத்தியும், கொடிபுலிக் கொடியும், குலம் சூரியகுலமுமாகும்." இவைகளால் "ஆத்திமாலை சோழனுக்குரியதென" விளங்குகின்றது. இச்சோழனுக்குரிய "ஆத்திமாலையை" மாணிக்கவாசகர் காலத்திலுள்ள ஈழராஜனுக்கும் உரியதென "ஆத்திக்கோங்கிவர்தாரான்" என்றனர் பரஞ்சோதி முனிவர். ஆகிய இவற்றை நோக்க ஈழன் சூரியகுலத்தவனும், சோழதேசத்தின் ஓர் பகுதியை அரசாட்சிசெய்தவனு மாத்திரமல்ல, சோழனுக்குரிய ஆத்திமாலையையும் உடையவன் எனத் துணியப்பட்டமையால், ஈழன் சோழகுலத்தவன் என்பது முடிபு.

---

* திருவிளையாடற் புராணம், இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம், 33-வது செய்யுளையும்; பழனித்தல புராணம், சேரர்கோன் சருக்கம். 6, 10-வது செய்யுள்களையும். and Madura District Gazetter, Ch. II. P. 28. 29.

**10.** மாணிக்கவாசகர் காலத்திலுள்ள ஈழராஜன் சோழனது குலப்பெயராகிய வளவன் என்னும் பெயரையும் பெறுவன்.

திருவாதவூரர் புராணம்.

புத்தரை வாதில்வென்ற சருக்கம், 84-வது, கவி.

சொல்லவல்லவர் மூகையாயினர் சொல்லிலா வொருமூகையாம்
வல்லியேன் புதல்விக்கு மூகைமறைந்து நல்லுரைகூடினு
நல்லதொண்டனுமக்கு நானெனை நாயனாரவடன்னைநீ
யொல்லையிங்கழை யென்னவந்தவளுண்மைசேரவைநண்ணினாள்.

(இ-ள்.) "பேசத்தக்கவர்கள் ஊமையாயினர் பேச்சில்லாத ஊமையாகிய என் புத்திரிக்கு ஊமைநீங்கி நல்லவார்த்தை பேசவந்தால் நானுனக்கு நல்ல அடியவனாவேனென்று ஈழராஜன்சொல்ல, மாணிக்கவாசகர் சீக்கிரத்தில் அழைத்துக்கொண்டு வாவென, அவ் வீழராஜன் புத்திரியும் உண்மைப்பொருந்திய சபைக்குவந்தாள்" என்பதாம்.

85-வது, செய்யுள்.

நண்ணியங்குமு னின்றகன்னியை நன்மை யாளருநாடியே
கண்ணிநின்றருள்செய்து பின்னர்கரைத்து முன்னரிருத்தியே
யுண்ணடுங்கியிருந்த புத்தனுரைத்த தர்க்கமவைக்கெலாந்
தண்ணருங்குழல்வல்லி நல்லுரைசாற்று கென்றுவிளம்பினார்.

(இ-ள்.) சபையிலே வந்துநின்ற ஈழன் கன்னிகையை மாணிக்கவாசகர் பார்த்து, கிருபாநோக்கஞ்செய்து, பின்பு அழைத்து எதிரிலிருக்கவைத்து புத்தன் சொல்லிய தர்க்கங்களுக்கெல்லாம் வாசனைபொருந்திய கூந்தலையுடைய பெண்ணே! நீ யுத்தரஞ் சொல்லென்றார்" என்பதாம், இவ்விருகவிகளின் கருத்தையும் ஒத்துவருகின்றார் பரஞ்சோதி முனிவர்.

திருவிளையாடற் புராணம், மண்சுமந்தப் படலம்,
111-வது செய்யுள்.

அந்தணர்பெருமான்முன்போ யரசன்தன்மகளைப்போகட்
டிந்தநோய்தீரேதீர்க்கவேண்டு மென்றிரந்தானையன்

சுந்தரநாதன்மன்றுளாடியதுணைத்தா டன்னைச்
சிந்தைசெய்தருட்கணேக்காற்றிருந்திழை யவளைநோக்கா.

(இ-ள்.) ஈழராஜன் மாணிக்கவாசகர் முன்பு தன்னுடைய பெண்ணை அனுப்பி, என் மகளுக்குண்டாகிய நோயை தேவரீரே! தீர்க்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அவர் நடேசபிரானது இருபாதத்தையுஞ் சிந்தித்து, அருட்கணால் அவளை நோக்கி."

திருவாசகம், திருச்சாழல், 1-வது பாசுரம்.

பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான் மறைப்போலுங்காணேடி

எனக்கேட்டனர் மாணிக்கவாசகர்.

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானன் சாழலோ,

என்று ஈழராஜன்மகள் அதற்கு விடை கூறினள், அப்படி கூறியது:—

திருவாதவூரர் புராணம்,

புத்தரை வாதில்வென்ற சருக்கம், 86-வது கவி.

பற்றுநன்குணராத புத்தர்பகர்ந்ததர்க்க மவைக்கெலாங்
கற்றறிந்தவர்போல மன்னிய கன்னிமாறுரைகூறினள்
மற்றுமங்கையர் சாழலாம்விளையாடலாக மகிழ்ச்சியா
லுற்றதம்பொருடன்னை வாசகமாக வுண்மையரோதினர்.

(இ-ள்.) "பக்திநெறியறியாத புத்தரானவர்கள் சொல்லிய தர்க்க வார்த்தைகளுக்கெல்லாம், படித்தறிந்தவர்களைப்போல் இவ்வீழராஜன் பெண்ணானவள் உத்தரஞ்சொன்னள், அதை மங்கையர்செய்யும் திருச்சாழல் விளையாட்டாக மகிழ்ச்சியினல் அப்பொருளை மாணிக்கவாசகர் பாடலாகச் சொன்னர்" என்பதாம்,

87-வது செய்யுள்.

ஈழமன்னனு மஞ்செழுத்து மியம்பி நீறுபுனைந்தபின்
றழநின்றடிமைத்திறந்தவருததொண்டின னயினன்

சோழனும்புலியூரின்மன்னிய தொன்மையாளருமம்பலம்
வாழ்கவென்றுதுதித்துநின்றெழில் வாதவூரரையேத்தினர்.

(இ-ள்.) "ஈழராஜன் பஞ்சாக்கிரத்தையோதி விபூதியைத்தரித்து, சிறந்த பக்தியையுடைய அடியவனாகினான், சோழனும் தில்லை மூவாயிரவரும் அம்பலம் வாழ்கவென்றுதுதித்து, மாணிக்கவாசகரை வணங்கினார்கள்" என்பதாம். இத்திருவாதவூரர் புராணப் பகுதியில் கூறிய "ஈழராஜனையே" திருவிளையாடற் புராணத்தில் "வளவன்" எனக் கூறியுள்ளது.

திருவிளையாடற் புராணம், மண்சுமந்தப்படலம்.

112-வது செய்யுள்.

வேறுவேறிறைவன்கீர்த்திவினாவுரையாகப் பாடி
யீறிலானன்பர்கேட்க விறைமொழிகொடுத்துமூங்கை
மாறினாள்வளவன்கன்னி மடவரல் வளவன்கண்டு
தேறினான்சிவனேயெல்லாத் தேவர்க்குந்தேவனென்று

(இ-ள்.) "நடேச பிரானது கீர்த்தியை வெவ்வேறுவிதமாக அன்பர்கள்கேட்க வினாவுரையாகப்பாட, ஊமைத்தன்மையைநீக்கி, அருட்கண்ணோக்க, இளம்பெண்ணாகிய வளவனது புத்திரி அதற்குப் பதிலுத்தரங்கூறினாள் அதைக்கேட்ட வளவன் எல்லாத்தேவருக்கும் மேலானவர் சிவபிரானே எனத்தேறினான்." என்பதாம், இக்கவியில் "ஈழராஜனை வளவன்" எனவும், "ஈழராஜன் புத்திரியை வளவன்கன்னி" எனவும் வரையப்பட்டிருக்கின்றது.

| | |
|---|---|
| வளவன்=சோழன்* | சதுரகராதி |
| கன்னி=பெண். | பேரகராதி. |

"ஈழன் சோழக்குலத்தவன்" என்பது பொருள். அதைவிளக்கவே "ஈழனை வளவன்" யென்றார் பரஞ்சோதி முனிவர். வளவன் என்பது சோழனது பல பெயர்களில் ஒன்று, அது:—

திவாகரம்.

"சென்னி வளவன் கிள்ளிசெம்பியன்
பொன்னித்துறைவன் புலிக்கொடிப் புரவலன்"

* வளவன் :—An epithet of the Cholakings. சோழன் (Rottler.)

என்னுந் திவாகரநிகண்டாதிகளால் நிலைநாட்டப்படும். இத்திறத்தானே சோழக்குலத்திலுதித்த மங்கையர்க்கரசியாரை ஸ்ரீமத் சம்பந்தசுவாமிகள் "மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை வரிவளைக் கைம்மடமானி, பங்கையச் செல்வி பாண்டி மாதேவி பணிசெய்துநாடொறும்பரவ" என்னும் பகுதியில் "வளவர் கோன் பாவை" என பயிரங்கப்படுத்தினர். இதனால் ஈழனும் சோழனும் ஓர் குலக்கிளவிகள் என்பதுஜெகப்பிரசித்தி. அதனாலேயே "ஈழனே வளவன்" என்றார் பரஞ்சோதிமுனிவர். அது குருகுலத்திலுதித்த அர்ச்சுனனும், எதுகுலத்திலுதித்த கிருஷ்ணனும், சந்திரகுலக்கிளவினராயிருப்பினும்; அன்னோரைஏககுலத்தினரெனக்கூறாது, குடிப்பெயரால் "யான் விதுகுலத்தில் யாதவனிவரோ குருகுலத்தலைவனுக் கிளையோர்"* என்னும் பாரதப்பகுதியில் வேறு பிரித்துக் கூறி யிருத்தலைப்போல் ஈழராஜனும் சோழராஜனும் ஏககுலத்தவராயிருப்பினும் அதாவது சூரியகுலத்தவராயிருப்பினும், குடிப்பெயரால் வேறு படுத்தியே கூறப்படுவர். என்றாலும் "ஈழன் சோழக்குலத்தவனே!" இதை (Tennant) டென்னட்துரை (**Ela otherwise called Chola**) "ஈழனே சோழன்" என்று அழைக்கப்படுமென்றார். இதுவே சாஸ்திரசம்மதி. இவைகளால் ஈழன் சோழவம்ஸத்தில் தோன்றிய சூரியகுல அரசனெனத் துணியப்பட்டது. அது சோழகுலத்தில் தோன்றிய தொண்டனைப்போலென்க. இத்யாதி பிரமாணங்களால் :—

**ஈழன்.** க. தமிழ் அரசன்.

உ. மைசூர் பிரதேசத்தை யாண்டவன். பிறகு இலங்கையைக் கைபத்தி யாண்டது இவனால் மைசூர் பிரதேசமும், இலங்கையும் "ஈழம் ஈழநாடு, ஈழமண்டலம்" எனப்பட்டது, இவன் குலத்தவர் ஈழக்குலத்தவர் எனப்பட்டனர்கள்.

ங. சோழதேசத்தவன்.

ச. வளவன் என்னும் பெயரையுடையவன்.

ரு. சூரியகுலத்தவன்.

சா. ஆத்திமாலையையுடையவன்.

* பாரதம், சபா பருவம், இராஜசூயாகச் சருக்கம், 36-வது செய்யுள் காண்க.

எ. சைவசமயத்தவன். முதல் ஈழன் சைவ சமயத்தவன் இரண்டா மீழன் புத்தசமயத்தவன், இவன் மாணிக்க வாசகரால் சைவனானான்.

இதில் ஈழனுக்குரிய தெனக் கூறிய இவ்வேழ அம்ஸங்களும் சோழனுக்கும் உரியது. அதனால் சோழ அம்ஸத்தைப்பெற்ற ஈழனும், அவன் குலத்தவராகிய ஸ்ரீமத் ஏனாதிநாதநாயனாரும், அவர் வம்ஸத்தவர்களாகிய கிராமணிகளும், சோழவம்ஸத்தவர்கள் என பசுமரத்தாணியைப்போல் அறையப்படும். இத்திறம் கல்விநெறி யுணர்ந்தார்க்கே பெறப்படும்.

## ரு. ஏனாதிநாத நாயனார்*.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பதிகம்.

“ ஏனாதிநாதன்றனடியார்க்கு மடியேன் ”

பெரிய புராணம், ஏனாதிநாத நாயனார் புராணம்,
2-வது செய்யுள்.

வேழக் கரும்பினொடு மென்கரும்பு தண்வயலிற்
றாழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியவப் பொற்பதியில்
ஈழக் குலச்சான்றா ரேனாதி நாதனார்.

(இ-ள்) வேழக்கரும்புகளோடு மெல்லிய கரும்புகளும் குளிர்ச்சிபொருந்திய வயல்களில் தம்வளர்ச்சியில் தாழும்படி கதிர்களையுடைய செந்நெற்பயிர்கள் ஓங்கிவளருகின்ற தன்மையையுடையதாய் வாழ்கின்ற அங்குள்ள குடிகள் தழைத்து நிலைபெற்றிருக்கின்ற அந்த அழகிய எயினனூரில் ஈழராஜன் குலத்தில் அவதரித்த சூரியன் மரபினையுடையவர். (அவர் யாரெனில்) ஏனாதிநாத நாயனார் என்று சொல்லப்பட்டவர்.” இப்பிரயோகத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஏனாதிநாதநாயனார் என்பவர் சிவத்தொண்டுபுரிந்து, சிவபதவியடைந்த சிவனடியார்களுள் ஒருவர். இவர் ஆயுதவித்தையால்வரும்

* பெரியபுராணத்திற் குட்பட்ட பதினொரு வாசகுல நாயன்மார்களைக் குறித்து பேசாது ஏனாதிநாத நாயனாரை மாத்திரம் அரசரென விளக்க யேற்பட்டது. அந்நாயனாரை உமாபதி வேளாளருக்குக்கீழ் அமைத்திருப்பதாலென்க.

ஊதியத்தை அன்பருக்கு வினியோகித்து வந்தவர், இவர் குலத்த வனாகிய அதிசூரனால் தொழிற்பொருமைக்கொண்டு வஞ்சித்துக் கொல்லப்பட்டார், இத்திறம் "உபமன்னிய பக்தவிலாசம், அகஸ்திய பக்தவிலாசம், நம்பியாண்டார் நம்பியந்தாதி, சேக்கிழார் பெரியபுராணம்" முதலியவைகளால் இனிது உணர்த்தப்படும், மேற்பகுதியில் ஏனாதிநாத நாயனாரை "ஈழக்குலத்தவர்" என்றார், இவர்மாத்திரமன்று நம்பியாண்டார் நம்பியுங் கூறியிருக்கின்றார்.

நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி,

11-வது செய்யுள்.

பத்தனையேனாதிநாதனைப் பார்நீ டேயினிதன்னு
ளத்தனைத் தன்னோ டமர்மலைந் தானெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வீ டொழிந்தவன் கண்டிப்ப நின்றருளும்
நித்தனை யீழக்குலதீப ரென்பரிந் நீணிலத்தே.

(இ-ள்.) "நிலவுலகத்தின்கண் உயர்ந்த எயினனூரில் வாழ்ந்த முதல்வரும், மெய்ப்பத்தியிற் சிறந்தவருமாகிய ஏனாதிநாத நாயனார் தன்னுடன் போர்செய்த அதிசூரனது, நெற்றியில் திருவெண்ணீற்றைக்கண்டு, தன் கையிலிருக்கும் ஒப்பற்ற வாட்படையை விடாமல், அவ்வதிசூரன் தன்னை வெட்டும்படி நின்றருளிய நித்தியரை இந்த அகன்ற நிலவுலகத்து, ஈழக்குலத்திற்குத் தீபம்போன்றவரென்று சொல்லுவார்கள்" என்பதாம். இவ்விருபாக்களிலும் வரும் ஈழக்குலம்" என்பதற்கு "ஈழராஜன் வம்ஸத்திலுதித்தவர்" எனப் பொருள் விரியும். "ஈழன்+குலம்=ஈழக்குலம்" என்பது "பொதுப்பெயருயர்திணைப்பெயர்களிற்றுமெய், வலிவரினியல்பா மாவியாமுன், வன்மைமிகா சில விகாரமாமுயர்திணை*" என்னு நன்னூற் சூத்திரத்தால் நிலைமொழியீற்றுமெய் உயர்திணையில்கெட்டு, விகுதியீறாய் நின்ற உயிர்முன் "இயல்பினும் விதியினு நின்ற உயிர்முன்— கசதபமிகும்*" என்னுஞ் சூத்திரத்தால் வருமொழி முதல் வல்லெழுத்து மிகுத்து "ஈழக்குலம்" என்றாகியது.

அருணாசலபுராணம், தீர்த்தச்சருக்கம், 21-வது, செய்யுள்.

புண்ணியவாறுதெய்வ மலைக்குமேற்றிசையிற் பொங்கும்
நண்ணியபுண்ணியாற்றா ரென்றுபேர் நகரந்தானும்

* "குமரன் + கோட்டம் = குமரக்கோட்டம்" நன்னூல். புணரியல் 159, 165-வது சூத்திரங்கள் காண்க.

எண்ணியநதியின்மூழ்கி யீழனென் றரசன் றீங்காம்
பெண்ணியல்வடிவந்தீர்ந்தான் வடிவமும் பேறும்பெற்றான்.

(இ-ள்,) "தெய்வீகம்பொருந்திய அருணாசலமலையின்மேல் பாரிசத்தில் புண்ணியநதி என்று ஒன்று உண்டு, அதனருகே புண்ணியாற்றூர் என்னும் ஒருநகரம் உண்டு, அதையாண்ட ஈழன் என்கிற ஒருவரசன் தனக்குத் தீங்காகவந்தடைந்த பெண்ணுருவத்தை அந்நதியில் மூழ்கித் தீர்ந்து நல்ல உருவமும் வேண்டியபேறும் பெற்றான்" என்பதாம். இப்பாசுரத்தில் வரும் புண்ணியநகரம் சேலத்தின் வடபகுதியிலுள்ளது, அதனாலேயே சேலத்தின் வடமேற்பகுதியையும், மைசூரின் தென் கீழ்ப்பகுதியையும் ஈழநாடு என்பது. அப்பாகத்தை "ஈழராஜன் ஆண்டமையினாலேயே "ஈழநாடு" எனப்பட்டது. இவ் வீழநாட்டிற்கு புண்ணிய நகரம் இராஜதானியாயிருந்த சிறப்புறுபட்டினம். இப்பகுதியை ஈழநாடெனவே புகழேந்தியும் கம்பரும் புகல்கின்றனர்கள்.

புகழேந்தி.

கடல்கிழக்குத்தெற்கு கரைபுரளும் வெள்ளாறு
குடதிசைக்குக்கோட்டைக் கரையாம்—வடதிசைக்கு
ஈழமுதலா யிருபத்து நாற்காதம்
சோழநாட்டெல்லையெனச் சொல்*.

இதில் சோழநாட்டிற்கு வடவெல்லை "ஈழம்" எனப்பட்டிருக்கின்றது. சோழநாட்டிற்கு வடக்கிலேயே "ஈழநாடு" எனப்படும் "சேலமும், மைசூரும்" இருப்பது. அதனாலேயே புகழேந்தி சோழநாட்டிற்கு வடவெல்லை "ஈழம்" என்பது.

கம்பர்.

கடல்கிழக்குத்தெற்குக் கரைபொருவெள்ளாறு
குடதிசைக்குக் கோட்டைக்கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப்†பெண்ணையிருபத்து நாற்காதம்
சோணாட்டுக்கெல்லை யெனச்சொல்*.

*Vide Manual of The Administration of The Madras Presidency. Vol. I. Ch. I. P. 125. Footnote. No. 8.

† "ஏணாடு" என்பது "ஈணாடு, அல்லது ஈழநாடு" எனப்படும்

இப்பகுதியில்வரும் தென்பெண்ணையாறுனது ஈழநாடாகிய மைசூரிலுதித்து சேலத்தினூடே செல்லுதலால் ஈழநாட்டுப்பெண்ணையெனப் பட்டது, இவைகளால் ஈழராஜன் ஆண்டது மைசூர் எனவும், அதுவே ஈழநாடு எனப்படுமெனவுந் துணியப்படும். பூர்வம் இத்தமிழ்நாடு "சேரன், சோழன், பாண்டியன், தொண்டன், ஈழன், மகதன், கொங்கன்" என்னும் ஏழு தமிழ் அரசர்களால் ஆளப்பட்டு, "சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டநாடு, ஈழநாடு, மகதநாடு, கொங்குநாடு" என ஏழுநாடாகப் பிரிக்கப்பட்டது. இதோடு இவ்வேழு அரசர்கள் வம்சத்திலுதித்தவர்களையும் "சேரக்குலம், சோழக்குலம், பாண்டியக்குலம், தொண்டவம்ஸம், ஈழக்குலம், மகதவம்ஸம், கொங்கர்குலம்*" என்னுங் குலப்பெயரையும் ஏற்றிக் கூறப்பட்டது, இவைகளுள் ஏனாதிநாதநாயனூர் ஈழராஜன் குலத்தி லுதித்தவரே. அதனாலேயே "சேக்கிழாரும், நம்பியும்" அவரை "ஈழக்குலத்தவர்" என்பது. இதைப்போல் மற்ற தமிழ் அரசர்கள் வம்ஸத்திலுதித்தவர்களையும், அவர்களது மூலபுருடன் பெயர்களையே குலப்பெயர்களாகச் சூட்டி சேக்கிழார் அழைத்திருக்கின்றூர், வருமாறு:—

பெரியபுராணம், சேரமான் பெருமாணாயனூர் புராணம்,
5-வது செய்யுள்.

முருகுவிரியுமலர்ச்சோலை மூதூரதன்கண்முறைமரபி
னுருகியழியுங்கலிநீக்கியறங்கொள் சைவத்திறந்தழைப்பத்
திருகுசினவெங்களியானைச் சேரர்குலமுழுலகுஞ்செய்
பெருகுதவத்தாலரனருளாற்பிறந்தார்பெருமாக்கோதையார்.

சேரன் = சேரராஜன் } நிகண்டு.
குலம் = வம்ஸம் }

சேரமான் பெருமாணாயனூர் "சேரராஜன் குலத்தவர்" என்பது பொருள்.

பெரிய புராணம், கோச்செங்கட்சோழநாயனூர்
புராணம், 6-வது பிரயோகம்.

தறையிற்புடைப்பக்கைபுக்கசிலம்பி தானுமுயிர்நீங்க
மறையிற்பொருளுந்தருமாற்றுன் மதயானைக்கும் வரங்கொடுத்து

* பிரமோத்திரகாண்டம், பஞ்சாட்சரமகிமை 17-வது செய்யுள்.

முறையிற்சிலம்பிதனைச் சோழர்குலத்துவந்துமுன்னுதித்து
நிறையிற்புவனங்காத்தளிக்கவருள் செய்தருளநிலத்தின்கண்*.

சோழன் =சோழராஜன் } பிங்கலன்
குலத்து =வம்ஸத்தில்
வந்துதித்தவர் = உற்பவித்தவர்

கோச்செங்கட் சோழநாயனுர் "சோழராஜன் மாபில் உற்பவித்தவர்" என்பது சப்தார்த்தம்.

பெரிய புராணம், மங்கையர்க்கரசியார் புராணம், 1-வது பாசுரம்.

மங்கையர்க்குத்தனியரசி யெங்கடெய்வம்
வளவர்திருக்குலக்கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத்திருமடந்தைகன்னிநாடாடேன்னர்குலப்
பழிதீர்த்ததெய்வப் பாவை
யெங்கள்பிரான்சண்பையர்கோ னருளினுலே
யிருந்தமிழ்நா டுற்றவிடர்நீக்கித்தங்கள்
பொங்கொளிவெண்டிருநீறுபரப்பி னுரைப்
போற்றுவார்கழலெம்மாற் போற்றலாமே.

இச்செய்யுளில் மங்கையர்க்கரசியாரை "வளவர் குலக்கொழுந்து" எனவும், கூற்பாண்டியனை "தென்னர்குலத்தவன்" எனவுந் தெளிவித்திருக்கின்றது.

வளவன்=சோழராஜன் } திவாகரம்.
குலம் = வம்ஸம்
கொழுந்து = பெண்.

"சோழராஜன் குலத்துப்பெண்" என்பது முடிபு. வளவர்குலம் எனினும், சோழக்குலம் எனினும் பொருள் ஒன்றே.

தென்னன்=பாண்டியன் } நிகண்டு.
குலம்=வம்ஸம்.

"பாண்டியன் குலத்தவன்" என்பது சித்தாந்தம், தென்னவன் எனினும், பாண்டியன் எனினும் பொருள் ஒன்றே! இதுகள் நிகண்டால் நிலைநாட்டப்படும்.

* ஷை நாயனுர் புராணம், 7-வது, செய்யுளையுங்; கலிங்கத்துப்பரணி, இராஜபாரம்பரியம், 32-வது செய்யுளையுங்காண்க.

பெரியபுராணம், கழற்சிங்கநாயனார் புராணம் 1-வது பிரயோகம்.

படிமிசைநிகழ்ந்ததொல்லைப் பல்லவர் குலத்துவந்தார்
கடிமதின்மூன்றுஞ்செற்றகங்கைவார் சடையார்செய்ய
வடிமலரன்றிவேறென்றறிவினுங் குறியாநீர்மைக்
கொடிநெடுங்தானைமன்னர் கோக்கழற் சிங்கரென்பார்*.

பல்லவன் = பல்லவராஜன்
குலத்துவந்தார் = குலத்துதித்தவர்.

கழற்சிங்கநாயனார் "பல்லவராஜன் குலத்துதித்தவர்" என்பது தேர்ந்தபொருள், இப்பல்லவன் குறுநிலமன்னவனும், குறும்பவம்ஸத்தவனும், தொண்டமானுக்குப்பிறகு, காஞ்சிபுரத்தையாண்டவனுமாகும் இவன்வம்ஸத்திலுதித்தவர்களையே பல்லவக்குலத்தவர் என்பது. இவனை சோழவம்ஸத்தவன் என சிலர்கூறுவர். ஆகானென பல நூற்களால் விளக்கப்பட்டிருக்கின்றது.

பெரியபுராணம், புகழ்ச்சோழ நாயனார் புராணம்
8-வது, செய்யுள்.

அங்கதிற்பாரளிக்கு மடலரசராகின்றார்
மன்னுதிருத்தில்லைநகர் மணிவீதியணிவிளக்குஞ்
சென்னிநீ டநபாயன் றிருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழ ரெனப்பொலிவார்.

அநபாயன் = அநபாயராஜன்
குலம் = வம்ஸம்.

புகழ்ச்சோழநாயனார் "அநபாயராஜன் வம்ஸத்தவர்" என்பது தெளிவு. இவன் சோழவம்ஸத்துள் ப்ரக்யாதியாக ஆண்டவன். இவன் வம்ஸத்திலுதித்தவர்களை அநபாயன் குலத்தவர் எனப்பட்டது†.

வில்லிபாரதம், பாயிரம், 18-வது, கவி.

எங்குமிவனிசை பரப்பிவருநாளில் யாமுரைத்த விந்நாட்டில்
கோங்கர்குல வரபதியாட் கொண்டா னென்றேரு வண்மைக்குரிசிறோன்றி

* ஐயடிகள்காடவர் கோனயனார் புராணம், 1-வது செய்யுளைக் காண்க.
† கம்பராமாயணம், சுந்தரகாண்டம், காட்சிப்படலம், 69-வது, செய்யுள்

வெங்கலியின்மூழ்காமற் கருநடப்பேர் வெள்ளத்துவீழம ஞன்காஞ்
சங்மெகனமூச் சங்கத்தண்டமிழ்நூல் கலங்காமற் றலைகண்டானே.

இதில் ஆட்கொண்டான் என்னுஞ் சேரனை "கொங்கர் குலத்த வன்" எனப்பட்டிருக்கின்றது. கொங்கர்=கொங்கு ராஜாக்கள் குலம்=வம்ஸம். "கொங்குராஜாக்களது வம்ஸம்" எனப்படும். கொங்கன் சேரனது குமாரர்களில் ஒருவன்*. இவன் வம்ஸத்திலுதித்தவர்களை கொங்கர்குலத்தவர் எனப்படும். இவனால் கொங்குநாடேற்பட்டது. இப்பகுதிகளால் "சேரன் குலத்திலுதித்தவர்களை சேரக்குலத்தவர்" என்றும், "சோழன் குலத்திலுதித்தவர்களை சோழக்குலத்தவர்" என்றும், "பாண்டியன்குலந்திலுதித்தவர்களை பாண்டியக்குலத்தவர்" என்றும், "பல்லவன் குலத்திலுதித்தவர்களை பல்லவக்குலத்தவர்கள்" என்றும், "அநாபயன் குலத்திலுதித்தவர்களை அநபாயக்குலத்தவர்" என்றும் பெரியபுராணத்துள் கூறிய சேக்கிழார்; "ஈழன்குலத்தி லுதித்தவர்களையும் ஈழக்குலத்தவர்" எனக் கூறப்பிந்துவரோ? ஆகிய இப்பிரமாணங்களால் ஈழக்குலம் என்றால் ஈழராஜன் வம்ஸத்தைத் தெரிவிக்குமெனத் துணியப்பட்டது, இவ்வியல்பு நோக்கியே சேக்கிழார் "ஏனாதிநாத நாயனாரையும் ஈழக்குலத்தவர்" என வகுத்தோதியது. இத்தென் தேசத்தரசர்களைப்போல்,வடநாட்டரச வம்ஸத்தவர்களையும் அவர்களது மூலபுருடர்பெயர்களையே குலப்பெயராகச் சூட்டி அழைக்கப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:—

வால்மீகிராமாயணம்.

இட்சுவாகுகுலமா நாரதீ சிந்தயா மாஸஸாகர:
ஸகாயம் வாநரேந்ரஸ்ய யதிநாஹம்ஹநூமத

இரகுவம்ஸ காவியம்.

குணவத்ஸுதரோபிதஸ்ரீய: பரிணமேஹிதிலீபவம்ஸஜா:
ரகுவம்ஸப்ரதீபேநதே'நாப்ரதிமதே ஜஸா:

கம்பராமாயணம், தனியன்.

வடகலைதென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடையாதொன்றி ஞயினும்

* Vide. Kongu History. P. 1.

திடமுள ரகுகுலத்திராமன் றன்கதை
அடைவுடன் கேட்பவரமர ராமரே.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம்,
காட்சிப்படலம், 69-வது கவி.

புனைகழலிராகவன் புயத்தையோ புகழ்
வனிதையர்திலகத்தின் மனத்தின் மாண்மையோ
வனைகழ லரசரின்வண்மை வீக்கிடும்
சனகர்தங்குலத்தையோ யாதைச் சாற்றுகேன்.

இப்பிரயோகங்களில் "இட்சுவாகு, திலீபன், இரகு, சனகன்" இவர்கள் வம்ஸத்திலுதித்தவர்களே, இவர்கள்பெயர்களையே குலப்பெயராகச் சூட்டி அழைத்தல் நியாயமென முன்னூலாரும் சாட்சி பகர்கின்றனர்கள், "குருவவன் பெயரன்னேறாற் குருகுல மாயிற்றன்றே" என்னும் பாரதப்பகுதியும், குருமகாராஜன் வம்ஸத்திலுதித்தவர்களை "குருகுலத்தவர்" எனக் கூப்பிடல்வேண்டுமென வற்புறுத்துகின்றது, இத்யாதிப் பிரமாணங்களை யனுசரித்தே சேக்கீழாரும் ஈழராஜன் வம்ஸத்திலுதித்த ஏனாதிநாதநாயனாரை "ஈழக்குலத்தவர்" என்பது. இவைகளால் ஏனாதிநாதநாயனார் ஈழராஜன் வம்ஸத்தவர் எனத் துணியப்பட்டது இதுவே சேக்கீழாரின் முடிவு.

சேரன்பெயர், சோழன்பெயர், பாண்டியன்பெயர்களைக் கூறிய திவாகரநிகண்டார், பல்லவன்பெயரைத் தேடித் தீட்டாது விட்டதென்ன ? அதுபோல் ஈழன்பெயரைச் சேர்த்தெண்ணாது விட்டதென்க, அப்படி சேர்த்தெண்ணாவிடினும், பல்லவன் என்னும் அரசன் ஒருவன் உண்டெனவும் அவன் வம்ஸத்திலுதித்தவர்களேயே "பல்லவக்குலத்தவர்" எனப்படுமெனவும், பெரிய புராண முதலிய நூலாதிகள் சாக்ஷி பகர்தலைப்போல், ஈழன் என்னும் அரசனும் ஒருவன் உண்டெனவும், அவன் வம்ஸத்திலுதித்தவர்களேயே "ஈழக்குலத்தவர்" எனப்படுமெனவும் மேற்படி நூலாதிகளே சாக்ஷிபகரமூந்தும், இப் "பல்லவன், ஈழன், கொங்கன், தொண்டன்" என்னு மரசர்கள் சுயேச்சையாய் ஆளுதற்குரியவர்களல்ல. இவர்கள் ஒரு அரசனுக்கு

உட்பட்டு, பகுதிகட்டக் கூடியவர்களும், சிற்றரசர்களுமா யிருத்தலால், திவாகரநிகண்டார் இவர்கள் பெயர்களை வேறு பிரித்தெண்ணாது விட்டனர், குருகுலப்பெயர்களைக் கூறிய திவாகர நிகண்டார் மிக்க மாட்சிமைப்பெற்ற இரகுகுலப் பெயர்களைக் கூறாதுவிட்டதென்ன ? இதைப்போல் ஈழன் பெயர்களையும் கூறாதுவிட்டனர். இதனால் ஈழராஜன் இல்லையெனக் கூறுதற்கியலா ? உண்டென்பதே மேற்படி நூலாதிகளின் துணிபு அவ்வீழராஜன் வம்ஸத்திலுதித்தவரே ஏனாதிநாதநாயனார் என்பது முடிந்த கருத்து. அதனால் அவரை "ஈழக்குலத்தவர்" என்பது.

**2.** ஈழக்குலதீபராகிய ஏனாதிநாதநாயனார் பெரிய புராணத்திற்குட்பட்ட பன்னிருவரசர்களுள் ஒருவர். அப்பன்னிருவரசர்கள் :—"சேரமான் பெருமாணாயனார், புகழ்ச்சோழ நாயனார், நின்ற சீர்நெடுமாற நாயனார், ஏனாதிநாத நாயனார், மங்கையர்க்கரசியார், கோச்செங்கட்சோழ நாயனார், இடங்கழி நாயனார், மெய்ப்பொரு ளாயனார், கூற்றுவ நாயனார், கழற்சிங்க நாயனார், நரசிங்கமுனையறைய நாயனார், ஐயடிகள் காடவர்கோ நாயனார்" என்பவர்களே ! இவர்களுள் சூரியகுலத்தவர் ஐவர், சந்திரகுலத்தவர் இருவர், குறும்பரசர் ஐவர் எனப்படும் ; அதில் சோழவம்ஸத்தவர் நால்வர், ஈழவம்ஸத்தவர் ஒருவர், சேரவம்ஸத்தவர் ஒருவர், பாண்டியவம்ஸத்தவர் ஒருவர், குறுநிலமன்னவர் ஐவராகும். ஈண்டு விசாரிக்கத் துடங்கியது ஏனாதிநாத நாயனாரைரே ! இவர் இலங்கையையும், மைசூர் பிரதேசத்தையும் ஆண்ட ஈழராஜன் வம்ஸத்தவர். மேலே ஈழனை சூரியகுலத்தவனெனச் செப்பினம். அவ்வீழன்பரம்பரையிலுதித்த ஏனாதிநாத நாயனாரும் சூரியகுலத்தவரே யாதவர். இதை நியாயமுகத்தான் விளக்குவான் துடங்கியே அமரத்தில் "கர்மசாக்ஷி* சேகச்சட்சு ரம்ஸுமாலீத்திரயீதநு" எனச் சூரியனுக்குரிய அநேகம் பெயர்களில் ஓர் பெயராகிய "சாக்ஷி" என்னும் பெயரால் உபமன்னியர் "சூரியகுலத்தவர்" எனப் பரிமளிக்கச் செய்தனர். வருமாறு :—

* "கர்மசாக்ஷி குலத்தவன்" எனக்கூறாது. "சாக்ஷி குலத்தவன்" எனக் கூறியது. "ஒருமொழி மூவழிக் குறைதலுமனைத்தே தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம், மூன்றுமொழிமூவிடத்துமாகும்" ; என்னும் இலக்கண விதியைத்தழுவி, சுலோகத்திற்கு சந்த பங்கம் வராதிருத்தற்பொருட்டு "சாக்ஷிகுலத்தவர்" எனக் கூறினர்.

உபமன்னியுபக்தவிலாசம், 29-வது அத்தியாயம்,

ஏனாதிநாதர் சரித்திரம், 3-வது சுலோகம்.

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌨𑌾𑌦𑌿𑌨𑌾𑌥𑌾𑌖𑍍𑌯 𑌆𑌸𑍀𑌤𑍍 𑌶𑌾𑌕𑍍𑌷𑌿𑌕𑍁𑌲𑍋𑌦𑍍𑌭𑌵𑌃 ।
𑌨𑍃𑌪𑌶𑍍𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌲𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌶𑌿𑌵𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌸𑌕𑍍𑌤𑌧𑍀𑌃 ॥

அஸ்மின்னேனாதிநாதாக்ய ஆசீத் சாக்ஷிகுலோத்பவ :
நிருபஸ்ஸஸ்த்ரகலாச்சார்ய: சிவபக்தாங் க்ரீஸக்ததி :

அஸ்மின் = அந்த
ஏனாதிநாதா = ஏனாதிநாதநாயனார்
சாக்ஷி = சூரிய
குல: = வம்ஸத்தில்
உத்பவ: = உதித்தவராகவும், .
நிருப = அரசராகவும்,
ஸஸ்திர = ஆயுதவித்தைக்கு
கலாசாரியா: = ஆசாரியராகவும்,
சிவபக்தா = சிவனடியார்களது
அங்கிரி = பாதத்தை
ஸக்ததி = சேவிப்பவராகவும்
ஆசீத் = இருந்தார்.

இப்பகுதியில் ஏனாதிநாத நாயனாரை " சாக்ஷிகுலத்தவர் " என உபமன்னியர் உரைத்திருக்கின்றார். இவ் வுபமன்னியர் சிவபிரானுக்குச் சிரேஷ்டதொண்டர் எனச் செப்புவர். இவரே கிருஷ்ணனுக்குத் திருவடி தீட்சைசெய்த பெருந்தகை. இவரால் கருணைகூர்ந்தருளியதே "பக்தவிலாசம்" எனப்படும். அப்பக்தவிலாசத்தில் நாயன்மார்களது சரித்திரம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது, அதுவே பெரியபுராணத்திற்கு முதனூலாகும், இதை பெரியபுராணம் திருமலைச்சிறப்பின்கண் கண்டறியலாம். சுந்தரர்கைலைக்கேகுங்கால் அவரைக்கண்ட முனிக்குழாங்கள் உபமன்னியரைவணங்கி, இவ் வடியவர் யாவர்? இவர் தொண்டின் திறமென்னை? என வினவ, உபமன்னியர் அச்சுந்தரர் சரித்திரத்தையும், அவரால் கூறப்பட்ட சிவனடியார்களது திறத்தினையும், " உள்ளவண்ண முனிவனுரை செய்வான் " எனக் கூறியதாக நூல் வரலாறுகாண்க.

பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, 21-வது செய்யுள்.

உள்ளவண்ண முனிவனுரை செய்வான்
வெள்ளநீர்ச் சடைமெய்ப் பொருளாகிய
வள்ளல்சாத்து மதுமலர் மாலையும்
அள்ளுநீறு மெடுத்தணை வானுளன்.

என்னும் பிரயோகத்தால் "குலம், தொழில், ஊர், சிவத்தொண்டின் திறம்" ஆகிய இவைகள் மாறுதலின்றி "உள்ள வண்ணமே" உபமன்னியரால் கூறியதாக மணக்கின்றது. அதில் உபமன்னியரே ஏனாதிநாத நாயனாரை "க்ஷத்திரியர்" எனப் பொருள்பட "சாக்ஷிகுலத்தவர்" என ஊர்ச்சிதப்படுத்த, சேக்கிழார் "க்ஷத்திரியர்" எனச் செப்புதற்குப் பின்னிடைவரோ? நாயன்மார் சரித்திரமானது முனிக்கணத்தின் நடுவில் கூறியதால் எல்லாருஷிகளாலும் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றுள் "ஏனாதிநாத நாயனாரையும் க்ஷத்திரியர்" என ஒப்புக்கொள்ளப்பட்டது. சேக்கிழார் உபமன்னியர் வாக்கையுட்கொள்ளாதிருப்பின், சுந்தரர் திருத்தொண்டத்தொகையால் அடியவர்கள் பெயர்களையன்றி சாதியும், சிவத்தொண்டின்திறனும், விளங்காததால் அவ்வளவு சிறந்த முதனூலன்று. அந்தாதியால் சுந்தரர் கைலையை விட்டு தென்திசையில் ஜனனமானதும், இயற்பகைநாயனார் முதல் முப்பத்திரண்டு நாயன்மார் ஜாதியும் விளங்காததால் அதுவும் அவ்வளவுவிசேஷ முதனூலெனல் இழுக்குடைத்து. அதனாலேயே சேக்கிழார் உபமன்னிய பக்தவிலாசத்தைத்தழுவ நேரிட்டது. அப்படித் தாம் தழுவியதாக அவர் இயற்றிய பெரியபுராணம், திருமலைச் சிறப்பின்கண் இனிது விளக்கியிருக்கின்றார். திருக்கைலை மலையில் யெழுந்தருளியிருந்த உபமன்னியரை அவ்விடமிருந்த முனிவர்கள் வணங்கி சுவாமின்! சுந்தரமூர்த்திநாயனார் சரித்தை:—

"நன்றுகேட்க விரும்பு நசையினேம்,
இன்றெ*மக்குரை செய்தரு ளென்றலும்."†

---

* இன்று=என்பது சேக்கிழார் பெரியபுராணத்தை யியற்றியகாலத்தைக் குறிக்கும், This day, To-day, இப்பொழுது, now at this time; at present இந்நாள் (Rottler, Winslow) "இன்றின்னே யிப்பொழுதென்ப" (உரிச்சொல்நிகண்டு)

† பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, 20-வது, செய்யுள்.

உபமன்னியர் அம்முனிவர்களுக்கு அந்நாயனார் சரித்திரமும், அவரால் கூறப்பட்ட சிவனடியார்கள் சரித்திரமும், இவ்வாறு:—

என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
அன்று* சொன்ன படியா லடியவர்
நன்றுசீர்த் திருத்தொண்டத் தொகைவிரி
யின்றெனுதர வாலிங் கியம்புகேன்.†

என்றார் சேக்கிழார், இதில் "என்று மாமுனிவன் தொண்டர் செய்கையை, அன்று சொன்னபடியால்—இன்று இயம்புகேன்" எனக் கூறிய அவர்வாக்காலேயே பெரியபுராணத்திற்கு பக்தவிலாசமு முதநூலென்றேற்பட்டது, இதோடு நம்பியாரூரர் தென்திசையில் அவதரித்ததும், சிவபிரான் அவரைத் தடுத்தாட்கொண்டதும், தேவாரத்திருப்பதிகம் அருளிச்செய்ததும், பல அற்புதங்கள் செய்ததும், ஆகிய சரிதங்களையெல்லாம் திருக்கைலையின்கண் எழுந்தருளிய அரபக்தர் முதலிய முனிவர்கள்பொருட்டு உபமன்னியர் ஆங்கருளிச் செய்தாரென்னுங் கருத்தால் "அன்று சொன்னபடியால்" என்றார் சேக்கிழார். அப்படி அவர் சொன்னது "தொகை‡" எனவும், இப்பொழுது அதைக்கொண்டு தான் தன் விருப்பின்காரணமாக செய்யப்போகின்றது "விரிவு§" எனவும், விளக்க "தொகைக்கு விரி இன்று—இயம்புகேன்" என்றார். இதனாலும் பக்தவிலாசம் பெரிய புராணத்திற்கு முதநூலெனத் துணியப்பட்டது.

இப்பக்தவிலாச மாத்திரமல்ல "இன்னும்" என்னும் பொருளைக்கொண்ட "மற்றிதற்குப் பதிகம்வன்றொண்டர்" என்றார். அடுத்த பாசுரத்தில்¶. "மற்று‖=இன்னும், பின்னும் இப்பெரிய

* அன்று=என்பது உபமன்னியர் அரபக்தர்களுக்கு அடியவர்கள் சரித்திரங்களைக் கூறியகாலமாகும். "Then, that day, அந்நாள் (Rottler, Winslow.)

† பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, 37-வது. செய்யுள்.

‡ "தொகை" என்பது "தொகுத்துரைத்தல்"

§ "விரி" வென்பது "தொகுத்துரைத்தவற்றை விரித்துக்கூறுதல்".

¶ பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, 38-வது செய்யுள்.

‖ "மற்று" என்பது "பிறிதென்னும் பொருளில்வந்த இடைச்சொல்." "இனிமற்றுமேல்" (உரிச்சொல் நிகண்டு); "இனி=மற்றென்று" (சதுராகராதி); another, other, பிறவும் (Rottler.)

புராணத்திற்கு; பதிகம்—சுந்தரர் பதிகமுமாகும்" என்றார். சுந்தரர் அருளிய திருத்தொண்டத்தொகையும் பெரியபுராணத்தின் முதநூற்களில் ஒன்றே! அத்தொகை பத்து பதிகத்தால் அடங்கியது. அதினாலேயே சேக்கிழார் "பதிகம்" என்றது. அதில் அடியார்களது பெயர்கள்மாத்திரமன்றி ஊரும், குலமும் சிவத்தொண்டின் திறனும் விளங்கில. இப்பதிகத்தோடு "அந்த மெய்ப் பதிகத்தடியார்களை, நந்தநாதனுநம்பி யாண்டார்நம்பி, புந்தியாரப் புகன்றனர்"* என்பதற்கு அப்பதிகத்தடியார்களை நம்பியாண்டார் நம்பி அந்தாதியாகப்பாடினர் எனப்பட்டிருக்கின்றது. ஆகிய இவ்வேதுக்களால் சேக்கிழார் பெரிய புராணத்திற்கு உபமன்னிய பக்தவிலாசமும், சுந்தரர் பதிகமும், நம்பியந்தாதியும் முதநூலென்றேறப்பட்டது. உபமன்னியர் பக்தவிலாசத்தில் ஏனாதிநாத நாயனாரைச்சுட்டிக் கூறியருளிய "சாக்ஷிகுலம்" என்பது "சூரிய குலம்" என்னும் பொருளிலேயே நிற்கும்†. இது வடநூற்துணிபு, சூரியகுலம் க்ஷத்திரியர்களுக்குரிய தென்பது சொல்லாமலேயமையும், ஏனாதிநாதநாயனார் சூரியகுலத்தவரல்லாது வேறுகுலத்தவராயிருப்பின் உபமன்னியருக்கு "சாக்ஷி குலத்தவர், சஸ்த்ரகுலோத்பவர்" எனக்கூற நாவெழுமா? இவ்வாக்கை முதநூலாகக்கொண்ட சேக்கிழாருக்கு "படைத்தொழிலே குலத்தொழில்" எனக் கூற முந்துவரா? சூரியகுலத்தவராயிருந்தமையாலன்றோ ஏனாதிநாதநாயனாரை உபமன்னியர் "சாக்ஷிகுலத்தவர்" எனச் சாதித்தனர். இச் "சாக்ஷி" என்பது தமிழில் "சான்று" எனத்திரியும், இதற்கு "அன் ஆன் ஓன்" என்னும் ஆண்பால் விகுதிகளைக் கொடுக்க "சான்றன், சான்றான், சான்றோன்" என மூன்றுபெயர்களாய் விரியும், இம்மூன்றுபெயர்களும் விகுதிகளால் விகாரரூபம் பெற்றபோதிலும் பொருள் ஒன்றேயாம்.

தொல்காப்பியம்.

"பாலறிமரபி னம்மூவீற்று
மாவோவாகுஞ் செய்யுளுள்ளே."
"ஆவோவாகும் பெயருமாருளவே
யாயிடனறிதல் செய்யுளுள்ளே."

---

*. "புகன்றார்" என்ற மாத்திரத்தில் அந்தாதியைத் தெரிவித்தலைப்போல், "கூறினர்" என்றதும் பக்தவிலா சத்தைக்குறிக்கும்.

† அமரம், பிரதமகாண்டம், வ்யோமவர்க்கம், 103-வது. சுலோகம்

நன்னூல்.

"பெயர்வினையிடத்து னளரயவீற்றயல்
ஆஓவாகலுஞ் செய்யுளுளுரித்தே."

என்னும் பிரயோகங்களின் விதிப்படி "ஆண்பால், பெண்பால், பலர்பால்" என்னு முப்பாற்பெயர்களின் ஈற்றிலுள்ள ஆகாரம் ஓகாரமாய்த்திரியும். இவ்விதியால் "சான்ருன்" எனப்படுகிறவன் எவனோ அவனே "சான்றவனும், சான்ேறனும்" ஆகுவன் என வலியுறுத்தப்படும்.

"அறிவு" என்னும் பெயருக்கு "அர் ஆர் ஓர்" என்னும் பலர்பால் விகுதிகளைக்கொடுக்க, "அறிவுடையர், அறிவுடையார், அறிவுடையோர்" என மூன்று பெயர்களாய் விரியும். இம்மூன்று பெயர்களும் விகுதிகளால் விகாரரூபம் பெற்றபோதிலும் பொருள் ஒன்றேயாம். "அறிவுடையார்" எனப்படுகிறவர்கள் யாரோ அவர்களே "அறிவுடையோரு" மாகுவர். இதைப்போல் "சான்ருன்" என்பது "சான்ேறன்" என்னும் பொருளிலேயே நிற்கும். அது "கற்ருர்" என்பது "கற்ேற" ரின்பொருளில் நிற்றலைப்போலென்க. "மிக்கான்" என்பது "மிக்கோனின்" பொருளை விளக்காதெனக்கூறுதற் கிடந்தராததைப்போல், "சான்ருன்" என்பது "சான்ேறனின்" பொருளில் நிற்காதெனக் கூறுதற்கிடந்தரா? இடந்தருமேல் "நல்லார்" என்பது "நல்லோரின்" பொருளை விளக்காதிருத்தல்வேண்டும்; விளக்குமேல் "சான்ருனும், சான்ேறனும்" ஓர் பொருளில் நிற்குமெனவே துணிந்து கூறப்படும்.

**3.** "சாக்ஷி" என்பதின் பிரதிபதமாகிய "**சான்ருன், சான்ேறன்**" என்பது சூரியனுக்குரிய பலபெயர்களுள் ஒன்றென.—

"தரணிசெங்கதிரோன் சண்டன்
தபநனேயொளியே **சான்ேறன்**"

என்னும் நிகண்டால் நிலைக்கப்படும். சேக்கிழார் பெரியபுராணத்துள் "**சான்ருன் ஏனாதிநாதனுர்**" என வகுத்தோதியதூஉ மிவ்வியல்பு நோக்கியே யென்க. அதனை ஈண்டுரைக்கின்ரும்.

பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம்,

2-வது, பாசுரம்.

வேழக்கரும்பினொடு மென்கரும்புத் தண்வயலிற்
றாழக்கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக்குடிதழைத்து மன்னியவப் பொற்பதியில்
ஈழக்குலச் சான்றார் ஏனாதிநாதனார்.

இப்பிரயோகத்தில் "ஏனாதிநாத நாயனாரை ஈழக்குலச் சான்றார் * எனப்பட்டிருக்கின்றது.

ஈழக்குலம் = ஈழராஜன்வம்ஸம்
சான்றார் = சூரியகுலத்தார்.

"சூரியகுல ஈழராஜன் வம்ஸத்திலுதித்தவர்" என்பது திரண்டபொருள். திவாகரநிகண்டுகள் "அந்தணன் ஞாக னயன்வரன் றிசைமுகன்" என்னுஞ் சூத்திரத்தால் "அந்தணன்" என்னும் பெயரை பிர்மனுக்குச்சூட்டி, அவன் குலத்திலுதித்த பிராமணரை "அந்தணர் நூலோ ரறுதொழிலாளர்" என்பதால் "அந்தணர்" எனக் கூறவேண்டுமென வற்புறுத்துகின்றது.

அந்தணன் = பிர்மன்
அந்தணர் = பிராமணர்
மறையோன் = பிர்மன்
மறையோர் = பிராமணர்.

என்பதைப்போல் மேற்படி நிகண்டாசிரியர்கள் "சான்றோன்" என்னும் பெயரையும் சூரியனுக்குரியதெனக் கூறினர். அப்படிக் கூறிய நூலாசிரியர்கள் அச்சூரியகுலத்தாருக்கும் "சான்றோர்" என்னும் பெயர் வழங்கிவரல்வேண்டுமெனக் கூறினாரில்லை. கூறாது

* "சாரைப்பாம்பு" என்பதில் "பாம்பு" என்பது குலப்பொதுப் பெயரையும், "சாரை" என்பது அதில் ஓர் வகுப்பையுந் தெரிவித்தலைப் போல்; "ஈழக்குலச்சான்றார்" என்பதிலும் "சான்றார்" என்பது சூரிய குலப் பொதுப்பெயரையும், "ஈழக்குலம்" என்பது அச்சூரிய குலத்தில் ஓர் வகுப்பினையுந் தெரிவிக்கும்.

விடினும் "ஒப்பின்முடித்தல்"* என்னு முத்தியால் கொள்ளப் படும். "உரைத்தாம் என்றல்" என்னு முத்தியாலெனினும் "எஞ்சிய சொல்லின் எய்தக்கூறல்" என்னு முத்தியாலெனினும் பொருந்தும்.

சான்றேன்=சூரியன்
சான்றோர்=சூரியகுலத்தார்.

இவற்றால் அந்தணன் பெயர் அந்தணருக்குரியதைப்போல், சான்றோன் பெயரும் சான்றோருக்கு முரியது. சூரியன் பெயர் கள் சூரியகுலவரசர்களை விளக்குமென நிகண்டாதிகள் விளக்கா திருப்பினும் "இதற்கிது முடிபென்றெஞ்சாதியாவும், விதிப்பளவின் மையின் விதித்தவற்றியலால், வகுத்துரையாதவும் வகுத்தனர் கொளலே." என்னு நன்னூல் விதியால் "சான்றன் அல்லது சான் றேன்" என்னுஞ் சூரியன் பெயர் சூரியகுலவரசர்களை விளக்குமெனத் துணியப்படும். சொல்லப்படாத பெயர்களை உபலக்கண விதியால் கொள்ளப்படும். உபலக்கணமென்றால் ஒன்றற்குக்கூறிய விதி யைக்கொண்டு, அதனோடு இயைபு உடைத்தாய்க்கூறாது ஒழிந் துள்ள பிறவற்றினையுமெடுத்தாளுதல். இவ்விதியைக்கொண்டே நூலாசிரியர்கள் சூரியன் பெயர்கள் சூரியகுலவரசர்களைக் குறிக்கு மென நூற்களில் எடுத்தாண்டது.

சான்றேன்=சான்றன் (நன்னூல்)
=சூரியன் (நிகண்டு)

4. உபமன்னிய பக்தவிலாசத்தை முதநூலாகக்கொண்ட சேக் கிழார், பக்தவிலாசத்தில் ஏனாதிநாத நாயனாரைக் குறித்துக்கூறிய "சூரக்ஷி" என்பதை "சான்றார்" எனத்திரித்து "சூரியகுலத்தார்"எனவு

* "ஒப்பின்முடித்தல்" என்றால் "ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக் கண இலக்கியம் வேறொன்றற்கும் ஒத்துவருமாயின் அதற்கும் அதுவே இலக் கண இலக்கியமாகக் கொள்ளல்" எனப்படும், "உரைத்தாம் என்றல்" என் றால் "முன்னே ஒரு நிமித்தத்தினால் சொல்லப்பட்டதைப் பின்னே சொல்ல வேண்டியவிடத்து இதனை முன்னேதானே சொல்லினேமென்பது தோன் றச்சொல்லாதுவிடுதல்" எனப்படும், "எஞ்சியசொல்லின் எய்தக்கூறல்" என்றால் "சொல்லப்பட்டதனால் இலக்கண இலக்கியம் பொருந்தச்சொல்லு தல்" எனப்படும், நன்னூல், பொதுப்பாயிரம், 14-வது, சூத்திரங் காண்க.

ம்; "அஸ்திரகலாசாரியர்" என்பதற்கு "வாட்படைப்பயிற்றுந் தன்மைத்தொழிலர்" எனவும்; "குலக்கர்ம சமுத்பன்ன" என்பதற்கு "தங்கள் குலத்தாயத்தின் ஆணைசெய்தொழில்" எனவும்; "சஸ்த்ரதலோத்பவர்" என்பதற்கு "மறப்படைவாட்சுற்றத்தார்" எனவும் மொழிபெயர்த்து விளக்கினர். இவைகளால் நாயனார் "க்ஷத்திரியர்" என் அவரது குலவுண்மைப் பெறப்பட்டது. இச்சேக்கிழார் தாமியற்றிய நூலுக்கு உபமன்னியர் வாக்கோடு நம்பி வாக்கையும் நாடியவராதலால், நம்பிகூறிய "ஈழக்குலம்" என்பதோடு, உபமன்னியர் கூறிய "சாக்ஷிகுலத்தையும்," மேற்கொண்டு, தமிழில் "சான்றன்" எனத்திரித்து, இருவர்வாக்கையும் ஒன்றுசேர்த்து, "ஈழக்குலச்சான்றார்*ஏனாதிநாதநாயனார்" என முடித்தனர், இதில் வரும் "ஈழக்குலம்" என்பது; சோழன்=சோழராஜன், குலம்=வம்ஸம், சோழக்குலம். சேரன்=சேரராஜன், குலம்=வம்ஸம்; சேரக்குலம் என்பதைப்போல், ஈழன்=ஈழராஜன், குலம்=வம்ஸம் ஈழக்குலம் எனப்படும். இப்பிரமாணத்தால் ஏனாதிநாதநாயனார் ஈழராஜன் வம்ஸத்திலுதித்தவர் என்பது முடிந்தகருத்து.

5. நம்பிகூறாத "சான்றார்" என்னுஞ் சாதிப்பெயரை சேக்கிழார் பிரயோகித்திருத்தலால், சாதிப்பெயர் ஆகாதென சில குட்டிப்புலவர் கொட்டியழுகுவர், அறியாமை! நம்பிகூறாத 34, நாயன்மார் சாதிப்பெயரை சேக்கிழார் கூறியிருக்கின்றார், அதற்கென்னவழி தேடுவர்? நம்பி இடங்கழிநாயனாரை "ஆதித்தன் குலத்தவர்" என்றார். சேக்கிழார் அதோடு "வெளிர்குலத்தவர்" எனவும் விளக்கியிருக்கின்றார். அப்படி நம்பிகூறாததை அவர் விளக்கியது பக்தவிலாசத் துணிபென்க.

6. இனி "சான்றார்†":—சூரியனது பலகிரந்தப் பெயர்களுள் ஒன்றாகிய "சாக்ஷி" என்பதின் பிரதிபதமாகிய "சான்று"

* "ரட்லர்" (Rottler) எழுதிய அகராதியில் ஏனாதிநாத நாயனாரை "ஈழக்குலச்சான்றோர்" எனப்பட்டிருக்கின்றது.

† பெரியார்:—"பெருமை" என்னும் பண்படியாகப் பிறந்த பல்லோர் படர்க்கைப் பெயர் "ஈறுபோதல்" என்றதான் "மை" கெட்டு, "இடையுகரமிய்யாதல்" என்றதால் உகரம் இகரமாகிப் "பெரி" எனநின்று, "ஆர்" விகுதி பெற யகரவுடன் படுமெய்பெற்றுப் "பெரியார்" ஆகி, "பெயர்வினையிடத்து" என்னுஞ் சூத்திரத்தால் ஆகாரம் ஓகாரமாகி "பெரியோர்" என நின்றது, இதைப்போல் "சான்றானு" மென்க.

என்பது "அன் ஆன் அள் ஆள் அர் ஆர்" என்னு நன்னூற் சூத்திர விதியையேற்று, "சான்று + ஆன்" என நின்று, "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடன்மேலுயிர்வந் தொன்றுவதியல்பே" என்னு நன்னூற் சூத்திரங்களால் நிலைமொழியிற்றின் உகரங் கெட்டு, வருமொழியின் ஆகார உயிரேறி "சான்றான்" என நிலைப்படும். இ "சான்றன்" என்பது "பெயர்வினையிடத்து" என்னு நன்னூற் சூத்திரத்தால் "சான்றோன்" எனவாகும். அப்படியாகிய "சான்றோன்" என்பது சூரியனது பலபெயர்களில் ஒன்றென "தரணிசெங்கதிரோன் சண்டன் தபநனே யொளியே சான்றோன்" என நிகண்டார் நிலைநாட்டினர். இவ்வேதுவை யனுசரித்தே சேக்கிழார் பெரியபுராணத்துள் ஏனாதிநாதநாயனரை "சூரியகுலத்தவர்" எனப்பொருள்பட "சான்றார் * ஏனாதிநாதனர்" என்றது.

7. "சான்றான்குலம்" என்பது "சூரியகுலத்தை" விளக்குவதைப்போல், "சான்றவன்குலம், சான்றோன்குலம்" என்பதும் சூரியகுலத்தையே சாதிக்கும், வருமாறு :—

வால்மீகிராமாயணம், யுத்தகாண்டம்,

21-வது, சருக்கம்.

చాపమానయ సౌమిత్రే శరాంశ్చాశీవిషోపమాన్,
సాగరంశోషయిష్యామి పద్భ్యాంయాంతు ప్లవంగమాః.

(இ-ள்.) "வில்லையெடுத்துவா ? ஸௌமித்ரரே !† நஞ்சுள்ள நாகங்கள்போன்ற அம்புகளையுமெடு ? இக்கடலை வறட்டிவிடுகின்றேன் ! வாநரர்கள் பாதங்களாலே நடந்துசெல்லுக" என ஸ்ரீராமர் கூறி பாணங்களைத்தொடுத்தனர். அப்படிதொடுத்தபாணங்கள் ஜீவராசிகளையலைத்தன.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், 27-வது, சூத்திரம். "ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியும், ஒன்றனைக்கூறும் பன்மைக்கிளவியும், வழக்கினுகிய வுயர்சொற்கிளவியும், இலக்கணமருங்கிற்சொல்லாறல்ல" என்பதால் உயர்வினுல் ஒருமைப்பெயர் பன்மையாதல் உலகவழக்கு.
†இலட்சுமணர் சுமித்திரை புத்திரனுதலால் "ஸௌமித்ரர்" எனப்பட்டது.

கம்பராமாயணம், யுத்தகாண்டம், வருணனை வேண்டுகோட் படலம், 25-வது செய்யுள்.

மொய்த்தமீன்குலமுதலற முருக்கின மொழியில்
பொய்த்தசான்றவன் குலமெனப்பொருகணையெறிய
வுய்த்தகூம்புடை நெடுங்கலமோடுவ கடுப்பத்
தைத்தவம்பொடுந் திரிந்தனசாலமீன் சாலம்.

(இ-ள்.) மொய்த்த=மொய்க்கப்பெற்ற, மீன்குலம்=மீன் கூட்டங்கள், முதலற=முற்றும் ஒழிந்து, முருக்கின=கெட்டன, மொழியில்=வாக்கில், பொய்த்த=கெட்ட, தப்பிய, சான்றவன்குலம் என=சூரியகுலத்தரசர்களைப்போல, ஒருகணை=ஒருபாணம், யெறிய=விட, கூம்புடை=பாய்மரத்தை, உய்த்த=உடைய, நெடுங் கலம்=நீட்சியாகிய கப்பல், ஓடு=உடன், உவகடுப்ப=ஒத்திருக்க, மீன்சாலம்=மீன்கூட்டங்கள், தைத்த=தைத்திருக்கும், அம் பொடு=அம்புகளுடன், திரிந்தன=ஓடின" என்பதாம்.

(பொழிப்பு) "விஸ்தீரணமாகிய இந்துதேசமெங்கும் பெரு கித் தழைத்திருந்த சூரியகுலவாசர்களைப்போல், விசாலம்பொருந் திய சமுத்திரத்தில் மிகுதிரளாய் தழைத்தோங்கியிருந்த மீன்கூட் டங்கள்; பரசுராமனால் சூரியகுல க்ஷத்திரியர்கள் சொல்வாக்குமாறி நிலைகுலைந்ததைப்போல், இராமபாணத்தால் மீன்கூட்டங்கள் நிலைகுலைந்தழிந்தன" என்பதாம்.

"ஏகோஹிகுருதேபாபம் காலபாசவசங்கத:
நீசேநாத்மாபசாரேண குலந்தஸ்யவிநச்யதி:*

(இ-ள்.) "காலங்குறுகிய அயோக்கியனை ஒருவன் பாவத் தொழில்புரிய, அது காரணமாக அவனதுகுலம் முழுவதுமே அழி ந்துபோகின்றது"† என்பதையொத்து இராவணன் ஒருவனால் இராட்சதர் ஒழிந்ததைப்போல், கார்த்த வீரியார்ச்சுனனால் சூரிய குலமும், வருணனால் மச்சம் முதலிய ஜீவராசிகளும் அழிய நேரிட் டது. மேற்பிரயோகத்தில் வரும் "சான்றவன்" என்னும்பெயர், "சாக்ஷி" என்பதின் பிரதிபதமாகிய "சான்று" என்பது, "அன்

* வால்மீகிராமாயணம், யுத்தகாண்டம், 38-வது சர்க்கம்.

† "ஏக: பாபாநீகுருதே பலம்புங்கதேமஹாஜன:" நீதிசாஸ்த்ரம்.

ஆன், அள், ஆள்" என்னு நன்னூற்சூத்திரவிதியை யேற்று, "சான்று + அன்" என நின்று, "இ ஈ ஐவழியவ்வும், ஏனவுயிர்வழி வவ்வும்" என்னுஞ் சூத்திரத்தால் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வகரவுடன் படுமெய்தோன்றி, "சான்று + வ் + அன்" எனவாகி, "உடன்மே லுயிர்வந்தொன்றுவ தியல்பே; தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்" என்னுஞ் சூத்திரங்களால் "சான்றவன்"* என நிலைக்கும், இச் சான்றவன் யென்பது சூரியனது பலபெயர்களில் ஒன்றே! அதனாலேயே கம்பர் சூரியகுலம் எனப் பொருள்பட "சான்றவன்குலம்" என வகுத்தோதியது. பரசுராமன் அழித்தது சூரியகுலத்தையே யாதலால், இதில்வரும் "சான்றவன்குலம்" என்பதும் "சூரியகுலத்தை"யே தெரிவிக்கும்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம்,
மந்திரப்படலம், 76-வது கவி.

மூவெழுமுறைமையெங் குலங்கண்முற்றறப்
பூவெழுமழுவினன் டொருதுபோக்கிய
சேவகன்சேவகஞ் செகுத்தசேவகற்
காவவிவ்வுலகமீதறனென்றுரரோ.†

இதில் அயோத்திக்கரசராகிய‡ தசரதச்சக்கிரவர்த்தி மந்திரிக் கிழவரைநோக்கி, எங்குலம் முழுதும் அழிய இருபத்தொரு

* ஆன்றவன்:—உரிச்சொல்லடியாகப்பிறந்த இறந்தகால வினைமுற்றுப்பெயர். ஆல் பகுதி றகரமெய் இடைநிலை, அ சாரியை, லகரத்திரிபும், வகரத்தோற்றமும் சந்தி, அன் ஆண்பால்விகுதி.

† கம்பராமாயணம், பாலகாண்டம், பரசுராமப்படலம், 33-வது செய்யுளும், கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்தரைசூழ்ச்சிப்படலம், 4, 64, கவியும்; நகர்நீங்கு காண்டம் 4-வது, கவியும்; மந்திரப்படலம் 4-வது, செய்யுளும்; கூர்மபுராணம், இராமனவதரித்த வத்தியாயம், 110, 111-வது, செய்யுட்களையுங்காண்க, இதுமாத்திரமன்று இராமமூர்த்தியைச் சொல்லுமிடங்கள் தோறும் பரசுராமனைவென்றது கூறப்பட்டிருக்கின்றது. அப்படி கூறியிருத்தல் அவர் மரபிலுள்ளோருக்கு வழி வழிப்பகைமையா யிருத்தல் பற்றியென்க.

‡ சூரியகுலம்=The Solar line of Kings, or Race of the Sun, Originally reigning in Ayodhya, or Oude (Rottler).

முறை சண்டைசெய்த பரசுராமனது சேவகத்தைவென்ற இராம னுக்கே இக்கிரீடம் பொருந்தும்" என்றார். பரசுராமன் அழித்தது சூரியகுலத்தையே! அதை விளக்கவே தசரதர் "எங் குலங்கள் முற்றும்" என முடித்தது. தசரதர் சூரியகுலத்தவராகுவர். இது பன்னூற்துணிபு, "பொய்த்த சான்றவன்குலம்" என்பதில் விலேப்பதும் இக்கருத்தே! "பொய்த்த=(பரசுராமனால்) அழிந்த, சான்றவன்குலம்=சூரியன்குலம், பரசுராமனால் அழிந்த சூரியகுலம்" என்பது தேர்ந்தபொருள்.

"Pauranic legends carry up the notice of this country to the time of Parasu-Rama; and even ascribe the existence of the whole western continent to him. This asserted incarnation of Vishnu made great slaughter among **the Kshatriya princes of the Solar-race in the north**. and then gave their countries to the Brahmins; who, in return for his liberality, banished him as a murderer" vide, Oriental Historical **m**anuscripts. Vol. II, P. 56.

இவ்வங்கிலேயப்பகுதியிலும் பரசுராமனால் அழிந்தது சூரியகுலமெனவே சொல்லப்பட்டிருக்கின்றது.

மகாபாரதம், ஆதிபருவம், சம்பவச்சருக்கம்,

23-வது செய்யுள்.

மழுவெனும் படையிராமனென் மனுக்குலமடிந்தழியவர் தத்தம்
பழுதின்மங்கையர் முனிவரரருளினூற்பயந்தனர் மகவென்ப
ரெழுதுநன்னெறி முறைமையின் விளைப்பதேயியற்கை யென்றிருகையாற்
றொழுதுசென்றபின் மனந்தெளிந் தன்னையுந்தோன்றலுக் குரைசெய்வான்.

இதில் மனுக்குலம் பரசுராமனால் அழிந்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. இம்மநுவை வைவஸ்வதமநு வெனப்படும். வைவஸ்வத மநுவின் குலத்தையே சூரியகுலம் * என்று சொல்லப்படும் சந்திரகுலத்தவர் மநுக்குலத்தவர் ஆகார். இதைக் கம்பரும் விளக்கியிருக்கின்றார்.

---

* Vide The Oriental Historical manuscripts Vol. I. P. 234."

கம்பராமாயணம், பாலகாண்டம், குலமுறைகிளத்துபடலம்,

முதற்செய்யுள்.

ஆதித்தன்குலமுதல்வன் மனுவினையாரறியாதார்
பேதித்தவுயிரனைத்தும் பெரும்பசியால் வருத்தாமன்
சோதித்தன் வரிசிலையானிலமடந்தைமுலை சுரப்பச்
சாதித்தபெருந்தகையு மிவர்குலத்துத்தராபதிகாண்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், கடல்தாவுபடலம்,
30-வது செய்யுள்,

புறத்துறலஞ்சி வேறோராரணம் புக்குறைதல்போக்கி
மறத்தொழிலரக்கர் வாழுமாநகர் மநுவின்வந்த
திறத்தகை யிராமனென்னுஞ்சேவகன் பற்றிச்சொல்லு
மறத்தகையரசன் திண்போராழியு மனையனுனென்.

இவ்விருசெய்யுட்களிலும் சூரியக்குலமே மநுக்குலம் எனவும், அம்மநுவம்ஸத்திலுதித்தவரே ஸ்ரீராமர் எனவும் விளக்கியிருக்கின்றது, சூரியகுலத்திற்கு வைவஸ்வத மநுவே மூலபுருடன், அதனாலேயே சூரியகுலத்தை மநுக்குலம் என்பது, பரசுராமனால் அழிக்கப்பெற்ற மநுக்குலமாகிய அச்சூரியகுலத்தை விளக்குவான் துடங்கியே கம்பர் சந்திரகுலத்தைநீக்கி "போய்த்த சான்றவன் குலம்" என "சூரியகுலத்தை" வகுத்தோதியது, இதை யனுசரித்தே பரசுராமனால் சூரியகுலமும், சாரங்கதாரனோடு சந்திரகுலமும் அழிந்ததென்பது உலகவழக்கு, அல்லது கர்ணபரம்பரை யெனினும் ஒக்கும்.* இத்யாதிப் பிரமாணங்களால் "சான்றவன்குலம்" என்பது "சூரியகுலத்தைத்" தெரிவிக்குமெனத் திடப்பட்டது

கம்பராமாயணம், யுத்தகாண்டம், பிரமாஸ்திரப்படலம்,
213-வது செய்யுள்.

சான்றோர்மாதைத் தக்கவரக்கன் சிறைதட்ட
வான்றோர்சொல்லு நல்லறமன்னன் வசமானல்

* கர்ணம் = செவி, பரம்பரை = ஒன்றிவிருந்து ஒன்று பிறந்துவருவது : Tradition; Descent, from one generation to another (Rottler.) கர்ணபரம்பரை = ஒருவர்சொல்ல ஒருவர்கேட்க இங்ஙனம் வாக்குமூலமாய் வழங்குவது.

மூன்றாய் நின்றபெருல கொன்றாய் முடியாவேல்
தோன்றாவோ வென்வில்வலின் வீரத்தொழிலம்மா,

(பொழி) "சூரியகுலப்பெண்ணை இராவணனால் காவல்வைத்து தடுக்கும்படியாக தருமதேவதையும் அவன் வசப்படுமானால் மூன்று பிரிவாய் நிலைபெற்றிருக்கும் இப்பெரிய உலகம் ஒருமிக்க முடியவேண்டும், அப்படி முடியாவிட்டால் என் வல்லமைபொருந்திய கோதண்டத்தின் வீரச்செய்கையால் பயனென்ன" என்பதாம். இலட்சுமணர் இந்திரசித்து வால்விடப்பட்ட பிரமாஸ்திரத்தால் கட்டுப்பட்டபோது ஸ்ரீராமர் துக்கித்தது.*

சான்றோர்மாது=சூரிய்குலப்பெண்
=சான்றர்குலப்பெண் } நிகண்டு.

இப்பாசுரத்தில்வரும் "சான்றோர்மாது" என்னும் பகுதி இராவணனால் சிறைவைக்கப்பட்ட சீதையைத் தெரிவிக்கும். மேலே சீதையை சூரியகுல சீரத்துவசன் பெண்ணெனத் தெரிவித்திருத்தலால் "சூரியகுலத்தவள்" என்பது ஜெகப்பிரசித்தி. சீரத்துவசன் சூரியகுல இட்சுவாகுவின் இருபத்திமூன்றாவது தலைமுறைப்பேரன், இதோடு திவாகர நிகண்டார் "சான்றேன்" என்னும் பெயரை சூரியனது பல பெயர்களில் ஒன்றெனை உணர்த்துவதால், சீதையைச் சுட்டிக்கூறிய "சான்றோர் † மாது" என்பதற்கு "சூரியகுலப்பெண்" யென்பதே திரண்ட கருத்து.

பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்,

708-வது செய்யுள்.

இரவு பாதகர் செய்ததீங் கிரவிதன் மரபிற்
குரவ வோதியர் குலச்சிறையாருடன் கேட்டுச்
சிரபுரப் பிள்ளையாரை யித்தீயவர்நாட்டு
வரவழைத்தநா மாய்வதே யென மனமயங்கி

இப்பாவில் சோழக்குலத்திலுதித்த மங்கையர்க் கரசியாரை "இரவிதன்மரபிற் குறவவோதியர்" எனப்பட்டிருக்கின்றது. இரவி=

* இரகுவம்ஸகாவியம், 12-வது, சருக்கம், 76-வது சுலோகங் காண்க.

† சான்றோன்=the same as சூரியன். the sun, (Rottler.)

சூரியன். மரபிற்=குலத்தில் (உதித்த) ஓதியர்=பெண் அல்லது கூந் தலையுடையவள். அதாவது "சூரியகுலப்பெண்" என்பது தேர்ந்த முடிபு. இப்பிரயோகத்தில் வரும் "இரவிகுலப்பெண்" ணுகிய மங் கையர்க்கரசியாரும் மேற் பாசுரத்தில் வரும் "சான்ருேர்மாது" ஆகிய சீதையும் ஏககுலத்தவர்களே! இவ்வாக்கியங்களில் வரும் "இரவி சான்ருேன்" என்னும் பெயர்கள் சூரியனைத் தெரிவித்தலால், "சூரியகுலத்தவர்கள்" எனப்படும், இதுவே கம்பர் சேக்கிழாரின் முடிபு. இதனுல் "சான்ருேர்மாது" என்னும் வாக்கியம் "சூரியகுலப் பெண்" என்னும் பொருளை சொல்லாமலே யமைத்தன.

சோழக்குல மங்கையர்க்கரசியாரை சேக்கிழார் "வளவர்பா வை*.வளவர்மகள்†" எனக் குடிப்பெயரால் கூறியதைப்போல், சூரிய குல சீதையையும், கம்பர் "சான்ருேர்மாது" எனக் குலப்பெயரால் கூறினர், "வளவர்" என்பது சோழனது பலபெயர்களில் ஒன்று, இதைப்போல் சான்ருேன் என்பதும் சூரியனது பல பெயர்களில் ஒன்று. "வளவர்பாவை" எனின் "சோழக்குலப்பெண்" எனப் பொருள் படுதலைப்போல், "சான்ருேர்மாது" எனினும் "சூரியகுலப் பெண்" எனப் பொருள்படும். இதுவே இவ்விரு வாக்கியங்களின் முடிந்த கருத்து. இதில் வரும் சான்ருேர் ‡ என்னும் பெயர், "சாக்ஷி" என்பதின் பிரதிபதமாகிய "சான்ருன்" என்பது "பெயர் வினையிட த்து" என்னு நன்னூர்ச் சூத்திரவிதியை யேற்று, "சான்ருேன்" என வாகும். "சான்றேன்" என்னும் பெயர் "சூரியன்" பெயரெனத் திவா கர நிகண்டார் தெரிவித்தலால் "சான்றவன்குலம்" எனினும், "சான் ருன்குலம்" எனினும், "சான்றேன்குலம்" எனினும், சூரியகுலத்தையே சுட்டுமெனப் பசுமரத்தாணி யறைந்தாற்போல் நாட்டப்படும்.

8. கோம்பி விருத்தம், 71-வது, செய்யுள்.

ஒருபொருள் பலபக்க முடையதன்றியு
மருவுகாலம் மிடமாதிமாறலான்

---

* பெரியபுராணம், மங்கையர்க்கரசியார் புராணம், 1-வது, கவி.

† திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், 610-வது, கவி.

‡ மிக்கோர் :—மிகு, பகுதி, மிக்கு எனவிகாரப்பட்டிறந்த காலங்காட்டி யது, ஆர்-பல்லோர்படர்க்கைப் பெயர் விகுதி, உகரக்கேடுசந்தி, மிக்கார் என் ருய்ப் "பெயர் வினையிடத்து" என்னுஞ் சூத்திரத்தான் "மிக்கோர்" என்ருகின்றன.

திரிவுருமெனுமுண்மை தேர்ந்திடார்கடாஞ்
சரியெனக்கண்டதே சாதிப்பாரரோ.

(இ-ள்.) "ஒருபொருளுக்குப் பலபக்கங்கள் உண்டு. அன்றியும், அது காலபேதம், இடபேதம், தேசபேதம் முதலிய பேதங்களினால் மாறுதல் அடையும். இந்த உண்மையை அறியாதவர்களே தாங்கள் கண்டதே சரியென்று சாதிப்பார்கள்" என்பதையொக்கும். "சக்கிரிகுயவன் செக்கான் தராபதிநெடுமால்பாம்பு" என்று நிகண்டு கூறுகின்றது. இதில்வரும் "சக்கிரி" யென்பது "குயவனுக்கும், செக்கானுக்கும், அரசனுக்கும்" பெயரென்றேற்படுகின்றது. "சக்கிரி" என்னும் சாதிப்பெயரையுடையவனை இம்முக்குலத்துள் இன்னவம்ஸத்தவனெனத் தெளிவதற்கு அவனது குலத்தொழிலை யோர்ந்தே ஸ்தாபிக்கவேண்டும். இதுவே மநுவாதிகள் சம்மதம். "சக்கிரி" என்னுஞ் சாதிப்பெயரையுடையவன் ஆயுதத்தொழிலைப் பெற்றிருப்பின் அரசனெனவும், மட்பாண்டம் வனையுந்தொழிலைப் பெற்றிருப்பின் "குயவன்" எனவும், தைலமாட்டுந்தொழிலைப் பெற்றிருப்பின் "செக்கான்" எனவும் யூகித்துக்கொள்ளவேண்டும். இதைப்போல், "சான்றவன், சான்றான், சான்றோன்" என்னும் பெயர்கள் ஆயுதத்தொழிலையுடைய சூரியகுல அரசரையும், பெருந்தகையுடைய பெரியோரையும், கல்விக்கேள்விகளையுடைய கற்றோரையுங் குறிக்கும். அது தரணி யென்பது சூரியனையும், பூமியையும், மலையையுங் குறித்தலைப்போலென்க, ஆகிய இப்பிரமாணத்தை யனுசரித்து சான்றார் என்னுங் தலைப்பெயரையுடைய ஞாதிநாதநாயனாரையும் அவரது குலத்தொழிலைக் கொண்டாராய்வாம், எவ்வகுப்பைச் சார்ந்தவரென? அது இப்புத்தகம் ஆறுவது இலக்கத்தின்கீழ் வாட்டொழிலே அவருக்கும், அவர்குலத்தவருக்கும் குலத்தொழில் என விளக்கியிருத்தலால் அரசரெனத் துணியப்பட்டது.

திருக்குறள்.

சான்றவர் சான்றாண்மை குன்றினிருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

நான்மணிக்கடிகை.

வடுச்சொ னயமிலார் வாய்த்தோன்றுங் கற்றார்வாய்
சாயினுந்தோன்றா கரப்புச்சொல்—தீய

பரப்புச்சொல் சான்றூர்வாய்த் தோன்றுகரப்புச்சொல்
கீழ்கள் வாய்த்தோன்றிவிடும்.

திருக்குறள்.

ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்.

என்னு முப்பகுதியால் சான்றான் என்பது சூரியனை மாத்திர மன்று அறிவுடையோனையும் அறிவித்தமை காண்க. "மிருகசீரிடமும் மிக்கோன்பெயரும், பெருகிய கதிரின்பெயருஞ் சான்றோன் என்பது பிங்கலர் துணிவு. அது சூரியகுலத்தாருக்கு இடுகுறியுங் காரணமுமாம். அறிவுடையோருக்குக் காரணமுமாத்திரமுமாம், அறிவுடையோருக்குக் கூறுங்காரணம்சூரியகுலத்தாருக்குக் கூறுங் காரணத்தால் விபசரித்திடும். சூரியகுலத்தாருக்கு இடுகுறியே முக்கியமாதலால் விபசரித்திடாது சிறந்திடும். அது அந்தணர் என்பது காரணத்தால் அழகிய தன்மையுடையோரையும், இடுகுறியால் பிராமணரையுந் தெரிவித்தலைப்போலென்க. ஆகிய இவற்றால் "சான்றவன், சான்றான், சான்றோன்" என்னும் பெயர்கள் சூரியனுக்கும், அவன் குலத்தவர்களுக்குஞ் சொந்தமெனவும், ஏனையோருக்கு உபசாரமெனவுமேற்பட்டது.

அம்=அழகை } அந்தணர்=அழகிய தன்மையர்
தணர்=உடையவர் } (காரணப்பெயர்.)

அந்தம்=வேதமுடிவை } அந்தணர்=வேத அறிவினர்,
அணர்=பொருந்தினவர் } வேதியர் (இடுகுறிப் பெயர்.)

என்பதைப்போல்;

சால்=நிறைவை } சான்றூர் = நிறைந்தோர்
ஆர்=பொருந்தினவர் } (காரணப்பெயர்.)

சான்று=சாக்ஷி=சூரியன் } சான்றர்=சூரியகுலத்தர்
ஆர்=பொருந்தினவர் } (இடுகுறிப்பெயர்.)

இதனால் "அந்தணர்" என்பது குணத்திற் பெரியாரையும், குலத்திற் பெரியாரையும் விளக்கலைப்போல், "சான்றான்" என்பதும் குணத்திற் பெரியாரையும், குலத்திற் பெரியாரையும் விளக்கு

மென இலக்கண முகத்தானும் இலக்கிய முகத்தானும் தெளிவித்தனம்.

**9.** சேக்கிழார் ஏனாதிநாதநாயனார் குலத்தைச்சுட்டி "தரணி செங்கதிரோன் சண்டன் தபநனேயொளியே சான்றோன்" என்னு நிகண்டிற்கூறிய சூரியன் பெயரால் "சூரியகுலத்தவர்" எனப் பொருள்பட **"சான்றார் குலத்தவர்"** என விளக்கியிருத்தலைப்போல், இடங்கழி நாயனாரையும் "பருதிபாற்கரனாதித்தன் பனிப்பகை சுடர்ப்பதங்கன்" என்னு நிகண்டிற்கூறிய சூரியன் பெயரால் "சூரியகுலத்தவர்" எனவும் விளக்கியிருக்கின்றார்.

பெரியபுராணம், இடங்கழி நாயனார் புராணம், 3-வது செய்யுள்.

அந்நகரத்தினிலிருக்கும் வேளிர்குலத் தரசளித்து
மன்னியபொன்னம் பலத்துமணிமுகட்டிற் பாக்கோங்கிற்
பன்னுதலைப் பசும்பொன்னாற்பயில்பிழம்பா மிசையணிந்த
பொன்னெடுந்தோளாதித்தன் புகழ்மரபிற் குடிமுதலோன்.

இதில் இடங்கழி நாயனாரை "ஆதித்தன்மரபார்" எனப்பட்டிருக்கின்றது.

ஆதித்தன் மரபு=சான்றன் மரபு<br>
=சூரியன் மரபு } நிகண்டு

"சூரியன் மரபார்" என்பது முடிபு.

பெரியபுராணம், திருவாரூர்ச்சிறப்பு, 13-வது பாசுரம்.

அன்ன தொன்னக ருக்கரசாயினான்
றன்னு செங்கதிரோன் வழித் தோன்றினான்
மன்னுசீ ரநபாயன் வழிமுதற்
மின்னுமா மணிப் பூண்மனு வேந்தனே.

இதில் மநுச்சோழனை "செங்கதிரோன் வழித்தோன்றினவன்" எனப்பார்க்கின்றோம்.

செங்கதிரோன்வழி=சூரியன்வம்ஸம்<br>
=சான்றான்வம்ஸம் } திவாகரம்.

"சூரியவம்ஸத்திலுதித்தவன்" என்பது பொருள்.

பெரியபுராணம், அதிபத்தநாயனார் புராணம். 1-வது, செய்யுள்.

மன்னிநீடிய செங்கதிரவன் வழிமரபின்
றொன்மையாமுதற் சோழர்தந் திருக்குலத்துரிமைப்
பொன்னிநாடெனுங் கற்பகப் பூங்கொடி மலர்போ
னன்மைசான்றது நாகபட்டணத் திருநகரம்.

செங்கதிரவன்மரபு=சான்றவன்மரபு
=சூரியன்மரபு } நிகண்டு.

"சூரியகுலத்தவன்" என்பது முடிபு.

இவைகளால் "செங்கதிரோன்குலம்" எனினும், "செங்கதிரான் குலம்" எனினும், "செங்கதிரவன்குலம்" எனினும், "சான்றோன்குலம்" எனினும், "சான்றான்குலம்" எனினும், "சான்றவன்குலம்" எனினும், "ஆதித்தன்குலம்" எனினும் பொருள் ஒன்றேயாம், இவைகள் சூரியனது பரியாயநாமங்கள்* இப்பெயரால் அக்குலத்தவரை அழைத்தல் நூற்றுணிபு, அதனாலேயே சேக்கிழார் மனுச்சோழனை "செங்கதிரான்குலத்தவன்" எனவும், ஏனாதிநாத நாயனாரை "சான்றான்குலத்தவன்" எனவும், இடங்கழி நாயனாரை "ஆதித்தன்குலத்தவன்" எனவுங் கூறிமுடித்தது. ஏனாதிநாதநாயனார், இடங்கழிநாயனார் இவர்கள் தவிர மற்ற அரசகுல நாயன்மார்களையும் குலப்பெயராலும் குடிப்பெயராலும் க்ஷத்திரியர்களென விளக்கியிருக்கின்றார். அது வருமாறு:—

## சூரியகுலம்.

1. இடங்கழிநாயனார்
2. ஏனாதிநாதநாயனார். } சூரியகுலம் (குலப்பெயர்).

3. புகழ்ச்சோழநாயனார்
4. மங்கையர்க்கரசியார்
5. கோச்செங்கட்சோழர் } சோழக்குலம் (குடிப்பெயர்).

## சந்திரகுலம்.

6. சேரமான் பெருமாணாயனார், சேரக்குலம் (குடிப்பெயர்)
7. நின்றசீர் நெடுமாறர், பாண்டியக்குலம் (குடிப்பெயர்)

* பரியாயம்=ஒருபொருளைக் குறிக்கும் பலமொழி.

## குறும்பரசர்.

| | |
|---|---|
| 8. மெய்பொருணாயனார்<br>9. நரசிங்கமுனையரையர்<br>10. கூற்றுவநாயனார்<br>11. ஐயடிகள் காடவர்கோன்<br>12. கழர்சிங்க நாயனார் | குறுநிலமன்னர் அல்லது பல்லவ வம்ஸத்தவர்கள் எனப்படும்.* |

ஆகிய இப்பன்னிருவரசர்களும் சேக்கிழாரால் குலப்பெயராலும், குடிப்பெயராலும் சாதிப்பெயராலும், க்ஷத்திரியர் என விளக்கப்பட்டார்கள்.

**10.** ஏனாதிநாத நாயனாரையும், இடங்கழி நாயனாரையும், "**சான்றோர், ஆதித்தன்**" என்னுஞ் சூரியன் பெயரையே குலப்பெயராகச்சூட்டி சூரியகுலத்தவரெனச் சேக்கிழார் விளக்கியிருத்தலையொத்து, இன்னுந் திவாகரநிகண்டுகளிற்கூறிய மற்ற சூரியன் பெயர்களையும், அச்சூரிய குலவரசர்களுக்குக் குலப்பெயராகச் சூட்டி "**சூரியகுலத்தவர்கள்**" எனத் தெரிவித்தல் நூல்வழக்கு.

கூர்மபுராணம், இராவணன் வதையத்தியாயம்,

105-வது செய்யுள்.

பரதனைத் தாயோடிகழ்ந்திடு முனிவுதீர்ந்துநம் **பருதியங்குலத்தி**
னுரிமைபூண்பதற்கோர் வரமளித்திடுகென்றிராகவன் றொழுதுரைத்திடலும்
வரையுறழ்தடந்தோள்மார்பகத்தொடுங்க மைந்தனைத் தழுவிவாள்வேந்த†
னரசிளங்குமரவளிப் பரிதாகுமவ்வரமளித்தன னென்றான்.

---

* இக்குறும்பரசர்கள் சூரிய சந்திரகுலத்தில் சேராதவர்களும், அரசச் செல்வத்தைப் பெற்றவர்களுமாகும், சூதசங்கிதை—சாதிவரலாறுரைத்தவத்தியாயம், 27-வது, சுலோகம்; சைவபுராணம், 70-வது அத்தியாயம 9, 10. சுலோகங்கள். Vide. Madras Journal. Vol. XV. No. 34 P. 62, 63. Vol. XVI. No. 38. P. 199. Mysore and coorg. Vol. 1. P. 203; Vol. II. P. 93. On the Original In habitants of India. P. 87. Salum Manual. Vol. I. Ch. I. P. 2, 6, 7, 8, 138.

† "வாள்" அரசர்களுக்கு இன்றிமையா ஆயுதமாதலால் "வாள்வேந்தர்" எனப்பட்டது. இக்கருத்தை யொத்தே நாயனார் குலத்தவர்களாகிய கிராமணிகளையும் சேக்கிழார் "வாட் சுற்றத்தார்" என்பது.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், காட்சிப் படலம், 9-வது கவி.

அரிதுபோகவோவிதிவலி கடத்தலென்றஞ்சிப்
பரிதிவானவன்குலத்தையும்* பழியையும் பாராச்
சுருதிநாயகன் வரும்வருமென்பதோர் துணிவால்
கருதிமாதிரமனைத்தையு மளக்கின்ற கண்ணாள்,

பருதி=சூரியன்
குலம்=வம்ஸம் } நிகண்டு.

ஸ்ரீராமர் குலத்தை "பருதிகுலம்" எனப்பட்டிருக்கின்றது. இதில் வரும் "பருதி" என்பது சூரியனது பல பெயர்களில் ஒன்று. அது "பருதிபாற் கரனுதித்தன் பணிப்பகை,சுடர்பதங்கன்" என்று நிகண்டால் விளங்கும். ஸ்ரீராமன் முதலினோர் சூரியகுலத்தவராதலால் அக்குலத்தை விளக்க "பருதிகுலம்" என்றார்கள் அதிவீரராம பாண்டியரும், கம்பரும். "பருதி" என்பது சூரியனது பெயர்களில் ஒன்றாயிருத்தலைப்போல், "சான்றோன்" என்பதும் சூரியனது பெயர்களில் ஒன்றே! "சான்றோனரியே தபனனென்றினையவுமான்ற வருக்கர்க்கநந்தம் பெயரே". என்பதால் விளங்கும்.

நம்பித்திருவந்தாதி, 50-வது செய்யுள்.

புலமன்னியமன்னைச் சிங்களநாடு பொடிபடுத்த
குலமன்னியபுகழ்க் கோகனநாதன் குலமுதலோன்
னலமன்னியபுகழச் சோழனதென்பர் நகுசுடர்வாள்
வலமன்னிய வெறிபத்தனுக்கீந்ததொர் வண்புகழே,

"இதில் புகழச் சோழநாயனாரை கோகனநாதன் குலத்தவர்" எனப்பட்டிருக்கின்றது. "கோகனம்=தாமரைக்கு, நாதன்=தலைவனாகிய சூரியனது, குலமுதலோன்=குலத்திற்கு முதலாயுள்ளவன்" என்பது பொருள்.

பாரதம், ஆரணியபருவம், இராமனுற்பவச்சருக்கம்,

10-வது செய்யுள்,

அந்தமாநதிதீர நற்கோசலையவனி
யுந்துமன்னவர்நகரியே யயோத்தியென்றுரைப்பார்.

* பிரமோத்திரகாண்டம், சிவதானமகிமை, 15-வது கவி பருதிகுலம்.

முந்துபாற்கரன்வழிவருமரபினோர் முதன்மை
சிந்தைகொண்டுளாய் மேலினிச்செப்புமாறெவனோ.

பாற்கரன் மரபு=சான்றவன் மரபு
=சூரியன் மரபு } திவாகரம்.

பாற்கரன் என்பதும் சூரியனது பெயரே! சான்றோனோ டொரு பொருட்கொண்டது. சான்றோனது திரிபே "சான்றவன், சான்றான்" எனப்படும். அதனால் சான்றவன் குலம் எனினும் சான்றான் குலம் எனினும் சூரியகுலம் எனவே பொருள்படும். இதை நோக்கியே சீதையை "சான்றோர்மாது" எனவும் ஏனாதிநாதநாயனாரை "சான்றார்குலம்" எனவும், ஸ்ரீராமர் குலத்தை "சான்றவன்குலம்" எனவுங் கம்பர் சேக்கிழார் கழரியது.

நம்பியாண்டார் நம்பியந்தாதி,

இடங்கழிநாயனார் சரிதம், 65-வது பிரயோகம்.

சிங்கத்துருவனைச்செற்றவன் சிற்றம்பல முகடு
கொங்கிற் கனகமணிந்த வாதித்தன்குலமுதலோன்
றிங்கட்சடையர் தமரதென் செல்வமெனப் பறைபோக்
கெங்கட்கிறைவனிருக்குவேளூர் மன்னிடங்கழியே.

ஆதித்தன்=சான்றான்
=சான்றோன் } சதுரகராதி.

சூரியகுலத்தவன் என்பது பொருள். சூரியன் அதிதிபுத்திரனாதலால் ஆதித்தன் எனப்பட்டான்.

இலிங்கபுராணம், சூரியன் வங்கிசமுரைத்தவத்தியாயம்,
1-வது செய்யுள்.

என்றுமுனிவனேசூதனு மயோன்புராண மெவற்றினையு
நன்றுமொழிந்தானெனலோடு னளினக்காடு முகமலரத்
துன்றுகதிர்கான்றிலகுசெழுஞ் சுடரோன்மரபில் வேந்தர்தமை
மன்றமொழிவாயெனமுனிவர் சூதனறிவால் வகுத்துரைத்தான்.

சுடரான் + ஓன் = சுடரோன்
சான்றான் + ஓன் = சான்றோன் } = சூரியன் (நன்னூல்)

சூரியனை திவாகரத்தார் "சுடரவன்" என்றனர். அது "சுடரவன்றரணியுதயனுதவன்" என்பதால் விளங்கும். இதனால் "சுடரோன்" என்பதற்கு மாத்திரமல்ல "சுடரவன்" என்பதற்கும் சூரியனைத் தெரிவிக்கும் பாத்தியதை யுண்டென்றேற்பட்டது. இவ்விதியால் "சான்றோன்" என்பதற்கு மாத்திரமல்ல "சான்றன்" என்பதற்கும் சூரியனைத் தெரிவிக்கும் பாத்தியதை யுண்டென்றேற்படும்.

சூடாமணி நிகண்டு சிறப்பாயிரம், 3-வது, பிரயோகம்.

அங்கதுபோயபின்றை யலகினால்பிறந்த மற்றுஞ்
செங்கதிர் வரத்திற் றோன்றுந்திவாகரர் சிறப்பின்மிக்க
பிங்கலருரைநூற் பாவிற் பேணினர் 'செய்தார்சேர
இங்கிவையிரண்டுங் கற்கவெளிதல வென்று சூழ்ந்து.

செங்கதிர்=சூரியன் (நிகண்டு).

இப்பிரசனையில் திவாகர நூலாசிரியரும், அம்ப நாட்டிற் கரசருமாகிய சேந்தனை சூரியனது பெயராகிய "செங்கதிர்" என்பதால் "சூரியகுலத்தவர்" என விளக்கி யிருக்கின்றார் நிகண்டார். அது "பருதி செங்கதி ரலரிபானு" என்னுந் திவாகரத்தார் வாக்கையொட்டி. இத்திவாகரத்திற்கு வழிநூலாகிய நிகண்டில், அச் "செங்கதிர்" என்பதோடு, "ஆன் ஆர்" விகுதியையேற்றி, "செங்கதிரான்" என நிறுத்தி "பெயர்வினையிடத்து" என்னுஞ் சூத்திரவிதியையும் யேற்றி, "செங்கதிரோன்" என்றார் நிகண்டார். அது "தரணிசெங்கதிரோன்சாண்டன் தபநனேயொளியே சான்றோன்" என்பதால் பிரகாசிக்கும், "செங்கதிர்" என்பதை "செங்கதிரோன்" ஆக்க இதக்கணஞ்சொல்லப்புகின் செங்கதிரை செங்கதிரான் ஆக்கியே செங்கதிரோன் ஆக்கவேண்டும், இதுவே இலக்கணமுறை, இம்முறையால் செங்கதிர் எனினும் செங்கதிரான் எனினும் செங்கதிரோன் எனினும் சூரியனைத் தெரிவிக்கும் ஒருபொருட் கிளவிகள் எனப்படும், இதைபோல் சான்றவன் எனினும் சான்றன் எனினும் சான்றோன் எனினும் ஒருபொருட் கிளவிகளென ஊர்ச்சிதம் படும்,

திருக்கழுக்குன்றப் புராணம், நாட்டுப்படலம், 2-வது பாசுரம்.

முக்கணன் கணனுதர்க்குண் முதன்மைத்துண்டீர்ஞண்டு
மிக்கதுண்டீரனுடாய்த்தண்டக வேந்தன்றாங்கித்

தக்கதண்டகாரன்னுடாய்த்தபநன்மாகுலத்துச்சோழன்
ஜெக்கதார்த்தொண்டமான்காத்தாயது தொண்டநாடே.

தபநன்குலம்=சான்றன்குலம் } திவாகரம்.
= சூரியன்குலம் }

சூரியன்பெயர் "தபனனேயொளியே சான்றேன் (நிகண்டு)

அரிச்சந்திரபுராணம், சூழ்வினைகாண்டம், 97-வது பிரயோகம்.

சொன்னதுமாறூர் பானுகுலத்திற் றேல்வேந்தர்
அன்னது காணேநின்னிடை யென்றுனதுகேளா
மன்னவனுள்ள நொந்தறநாணி மதிவல்லோய்
இன்னமு மொன்றுண்டென்னவிரந்தே யிவைகூறும்.

பாநுகுலம்=சூரியன்குலம் } நிகண்டு.
= சான்றேன்குலம் }

சூரியன்பெயர். "சான்றேன் மான்றலைநாள் பாநு" (திவாகரம்.)

இலிங்கபுராணம், சந்திரவங்கிசமுறைத்த
வத்தியாயம், 1-வது பகுதி.

உரைத்தனைகதிரோன் மரபினில்வந்தவேந்தர் யாரையுமுலகுண்ட
விறுட்குறும்பெறிந்துநிலாக் கதிர்பரப்பியாவருந் தொழுதிடக்குணபால்
திரைக்கடன்முகட்டி லெழுதருதிங்கள் மரபினில் வேந்தரை யெமக்கு
விரித்துரையென்ன முனிவரர்சூதன் விரித்தனனுரைக்கலுற்றனனால்.

கதிரோன் = சான்றேன் } சதுரகராதி.
= சூரியன் }

கம்பராமாயணம் அயோத்தியா காண்டம், மந்திரப்படலம்,

14-வது செய்யுள்.

வேய்யவன்குலமுதல் வேந்தர்மேலவர்
செய்கையினொருமுறை திறம்பலின்றியே
வையம்யாளுண்டவாண்டுங்கண் மாட்சியால்
ஐயமி லறுபதி னயிர மாவரோ.

இப்பகுதியில் வரும் "வெய்யவன்" என்பது சூரியன் பெயர்களில் ஒன்றென திவாகர நிகண்டால் தெளியப்படவில்லை. படா விடினும் அதன் உட்கிளவியாகிய "வெய்யோனது" பாத்தியதை

யைக்கொண்டு சூரியனைக் குறிக்குமென்பது கம்பர் முடிபு. இதைப்போல் "சான்றூன்" என்பதும் சூரியன் பெயரென நிகண்டு திவாகரத்தால் நிலைப்படாவிடினும் அதன் உட்கிளவியாகிய "சான்றோனது" பாத்தியதையைக் கொண்டும் சூரியனைத் தெரிவிக்கும் என்பது துணிபு.

வெய்யவன்=வெய்யோன்
சான்றான்=சான்றோன்* } =சூரியன் (நிகண்டு, நன்னூல்.)

கம்பராமாயணம், ஆரணியகாண்டம், அகத்தியப்படலம்,
17-வது பாசுரம்.

புகல்புகுந்திலரேற் புறத்தண்டத்தின்
அகல்வரேனுமெனம்பொடும்வீழ்வரால்
தகவில்துன்பம்தவிருதிர் நீரெனு
பகலவன்குலமைந்தன் பணிக்கின்றான்

பகலவன்குலம்=சான்றவன்குலம்
=சூரியன்குலம்

பாரதம், ஆரணியபருவம், இராமர் பட்டாபிஷேகச்சருக்கம்.
30-வது செய்யுள்.

அப்புனிதனுளங்களித்தா னனுமானுமாங்கவன் விடைந்தருளவானிற்
செப்பமொடு தனிச்சென்றான்றிவாகரன்றன்குலக்குரிசில் சேனையோடு
மொப்புரைத்தற்கரிதான தேவியொடுமிளஞொடுமுள்ளமிக்கோன்
றப்பறுசூழலிற்புகுந்துதானையொடும் விருந்தருந்தித் தரித்திருந்தான்.

திவாகரன்குலம்=சான்றோன்குலம்
=சான்றான்குலம் } சூரியன்குலன்.

அரிச்சந்திர புராணம், நகர்நீங்கு காண்டம்,
12-வது பிரயோகம்.

உரைபெறுசீ ரிரவிகுலத் தரசற்கு † வழிவழியே யுரிமையாய
சரையுவெனுந்தாதி யரிச்சந்திரற்கு வந்தவினை தானேதென்று

* செய்யுள் வழக்கில் "சான்றோன்" எனக்கூறி, உலகவழக்கில் "சான்றான்" எனக்கூறவேண்டுமென விதியிருத்தலால், அதைநோக்கியே நாளதும் "சான்றார்" என்றனர் கிராமணிகள்.

† கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், பள்ளியடைப்படலம், 134-கவி

விரைமலர்த்தாள்பூண்டு கிடந்தரற்றிடவுமிழிந் தேகி விரைந்துபொய்மேல்
கரையணுகி விரிமணலில் விரிமலர்கள் சொறியுநறுங் காவிற்புக்கான்.

இரவிகுலத்தரசர் = சூரியகுலத்தரசர்
= சான்றோன்குலத்தரசர் } பிங்கலன்.

மேற்போந்த நூற்களால் சூரியனது பெயர்களே அச்சூரியகுலத்திலுதித்த அரசர்களுக்குக் குலப்பெயராய் நின்று விளக்குமென, யேண்பித்தனம் "சான்றோன் அல்லது சான்றான்" என்பது சூரியனது பலபெயர்களில் ஒன்றேன்பது நூற்சம்மதி. அது "தரணிசெங்கதிரோன் சண்டன் தபநநேயொளியே சான்றோன்" என்னும் நிகண்டால் நிலைப்படும், இவ்வேதுவை யனுசரித்தே "சூரியகுலத்தவர்" என விளக்க சீதையை "சான்றோர்மாது" எனக் கம்பரும், ஏனாதிநாத நாயனாரை "சான்றார்குலத்தவர்" எனச் சேக்கிழாரும், ஸ்ரீராமன் குலத்தவரை "சான்றவன் குலத்தவர்" எனக் கம்பரும் பசுமரத் தாணியறைந்தாற்போல் அறைந்தனர்கள். இத்திறம் கல்விநெறியுணர்ந்தார்க்கே பெறப்படும். இதை யனுசரித்தே நாளதும் அச்சூரியகுலத்திலுதித்தே கிராமணிகளை "சான்றவன் குலத்தவர், சான்றான் குலத்தவர், சான்றோன் குலத்தவர்"* என உலகம் கூறுப. அப்படிக் கூறப்படும் "கிராமணிகள் "சூரியகுலத்தவர்கள்" என்பது நூன் முடிபு.

11. பிரமன் குலத்திலுதித்தவரை பிரமனது பெயராகிய "அந்தணன்" என்பதைக் குலப்பெயராகச்சூட்டி "அந்தணர் கலையர் என்பர்" எனச் சேச்கிழார் குங்கிலியகலைய நாயனாரைக் கூறியதைப்போல்; ஏனாதிநாதநாயனாரையும் "சூரியகுலத்தவர்" எனப் பொருள்பட பெரிய புராணத்துள். "சான்றார் ஏனாதிநாதர்" என்றனர்.

கம்பராமாயணம், தனியன்.

தராதலத்தினுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவுமரமாயிற்றன்றே யிராவணன் மேல்
அம்புநாட்டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி.

ஆதித்தன் = சூரியன்
= சான்றன் } திவாகரம்.

---

* வடதேசத்தரசர்கள் நாளதும் இரவிகுலத்தவர் என வழங்குவர்.

இதில் கம்பரை "ஆதித்தன் கம்பநாட்டாழ்வான்" எனப்பட்டிருக்கின்றது, அது "சூரியகுலக் கம்பர்" எனப் பொருள்படும், "சான்றார்குல ஏனாதிநாதர்" எனக் கூறாது, குலத்தைநீக்கி, பெரியபுராணத்துள் "சான்றார் ஏனாதிநாதர்" எனக் கூறியதைப்போல், "ஆதித்தன் கம்பர்" எனக் கூறியிருக்கின்றது "ஆதித்தன்" என்பது சூரியனைத் தெரிவித்து அவன் குலத்திலுதித்த கம்பரை விளக்குவதைப் போல், "சான்றான்" என்பதும் சூரியனைத் தெரிவித்து அவன்குலத்திலுதித்த ஏனாதிநாத நாயனாரையும் விளக்குமென்பது ஜெகப்பிரசித்தி "ஆதித்தன்" என்பதைப்போல், "சான்றான்" என்பதும் சூரியன் பெயரே! (நிகண்டு) இதனால் கம்பர் ஒச்சரல்ல. சூரியகுலத்தவரே!

கம்பராமாயணம், தனியன்.

இம்பருமும்பர்தாமு மேற்றிடுமிராமன் காதைத்
தம்பமாய் முத்திசேர்க்குஞ் சத்தியஞ் சத்தியமே
அம்பரமதனின்மேவு மாதித்தன் புதல்வன்ஞானக்
கம்பன்சொல் கமலபாதங் கருத்துறவிருத்துவாமே.

இதில்வரும் "ஆதித்தன் புதல்வன்" என்பதற்கு, ஆதித்தன்= சூரியன், புதல்வன்=புத்திரன், குலத்தவன். (சதுரகராதி.)

கம்பன் "சூரியகுலத்தவன்" என்பது பொருள்.

கம்பராமாயணம், தனியன்.

வாழ்வார்திருவெண்ணெய் நல்லூர்சடையப்பன் வாழ்த்துபெற
தாழ்வாருயரப் புலவோரகவிருள் தானகலப்
போழ்வார் கதிரினுதித்த தெம்வப்புலமைக் கம்பநாட்
டாழ்வார்பதத்தைச் சிந்திப்பவர்க்கியாது மரியதன்றே.

"கதிரின் உதித்த" என்பதற்கு கதிரன்=சூரியகுலத்தில் உதித்த=உற்பவித்தவர். கம்பர் "சூரியகுலத்திலுதித்தவர்" எனப்படும். இதையொத்தே அங்கிலேயரும் அறைந்திருக்கின்றனர்.

"The imitation, not translation, of the Ramayana, was composd about the eleventh century, A. D. by **Kamban, the son of a king, and not of the priestly tribe** His production, consisting of 12016 stanzas, in six books, is considered by learned Tamilians as

superior to the original. Vide "the preface of the Winslow's Dictionary".

"தமிழ்ராமாயணம் எழுதினவர் கம்பர், இவர் அரசகுமாரன், ஓச்சகுலத்தவர் அல்ல, பதினோராம் நூற்றாண்டிலிருந்தவர். வால்மீகி ராமாயணத்தை தமிழில் மொழிபெயர்க்காமல், அதன்பொருளைத் தம்மனோரதப்படி விரித்தெழுதியிருக்கின்றார். அது ஆறுகாண்டமாகப் பிரிக்கப்பட்டு, 12016, பாக்கள் அடங்கியது" என்பதாம். இவ்வங்கிலேயப் பகுதியாலும், மேற்பாசுரத்தாலும் கம்பர் அரசரெனவும் விளங்கலால்; மேலே "தராதலத்தினுள்ள" என்னு முதலையுடைய செய்யுளில்வரும் "ஆதித்தன் கம்பன்" என்பதும் "சூரியகுலக்கம்பர்" எனவே விரியும் இதைப்போல் "சான்றார் ஏனாதிநாதர்" என்பதும் "சூரியகுல ஏனாதிநாதர்" எனவே விரியும். "ஆதித்தன்" என்பதும் "சான்றான்" என்பதும் ஒரு பொருட்கொண்ட சூரியனது பெயர்கள். இதனால் ஆதித்தனுக்கு சூரியனைத்தெரிவிக்க எவ்வளவு பாத்தியதையுண்டோ அவ்வளவு பாத்தியதை சான்றோனுக்கும் உண்டென வெளிப்பட்டது.

பெரியபுராணம், அப்பூதியடிகளனார் புராணம்,
45 - வது, செய்யுள்.

மான்மறிக்கையர் பொற்றாள் வாகீசரடைவாற்பெற்ற
மேன்மையப்பூதியாராம் வேதியர் பாதம் போற்றிக்
கான்மலர்க்கமல வாவிக் கழனிசூழ் சாத்தமங்கை
நான்மறை நீலநக்கர் திருத்தொழி னவிலலுற்றேன்.

என்னும் பிரசனையில் நீலநக்கநாயனாரை சேக்கிழார் மறைநீலநக்கர்' எனத் தொகுத்துக் கூறியது, "மறைகுலத்திலுதித்த நீலநக்கநாயனார்" எனவே விரியும், இதைப்போல் "சான்றார் ஏனாதிநாதர்" என்னுந் தொகுப்பும், "சான்றார்குல ஏனாதிநாதநாயனார்" அதாவது "சூரியகுல ஏனாதிநாதநாயனார்" எனவே விரியும். இதனாலும் ஏனாதிநாதநாயனார் சூரியகுலத்தவர் என்பது நூற்றுணிபு.

**12.** ஆகிய இத்யாதி பிரமாணங்களைநோக்க சாதித்தொகுப்பைவகுத்த உமாபதி சிவாச்சாரியார் வாக்குயாண்டு மணம்பெறும். இவ்வுமாபதிமுதநூலுக்கும், முன்னூலுக்கும் எவ்வளவு தூரம் ஒத்துவருகின்றனரோ அவ்வளவுதூரம் நாம் அவரை அங்கீகரிப்போம்,

அதற்குத்தவரின் இவர்என்னவியாசரோ? நாமவரை யொப்புக்கொள்ள. "அயுக்தமபிநக்ராய்யம் சாக்ஷாதபி ப்ருஹஸ்பதே" என்பதற்கு "அயுக்தமான சொல்லாயிருந்தால் ஸாக்ஷாத் பிரகஸ்பதி பகவான் சொன்னாலும் கேழ்க்கலாகாது" என்னும் நீதிசாஸ்திரத்தை யோர்ந்திலரோ? "ஆகமஸ்ய விரோதேந ஊஅநம் தர்க்க உச்யதே" என்பதற்கு "ஆகமத்திற்கு விரோதமான பகுதியை அப்பா லெடுக்கவேண்டும்" என்னும் அமிர்த நாதோபநிஷத்தை யாவது, கவனித்திலரோ? நெற்றிக்கண்ணைக் காட்டினுங் குற்றங் குற்றமேயென்ற முதுமொழி*யையுங் கேட்டிலரோ? முதநூலின் கருத்தைக்கொண்டே வழிநூலும் சார்புநூலும் நிற்கும். இதுவே நூன்மரபு. நாயன்மார் சரித்திரத்திற்கு முதனூலாய் நிற்பது பக்த விலாசமும், திருத்தொண்டத்தொகையும், அந்தாதியுமாகும். இம் மூன்றும் ஒன்றுக் கொன்றிணக்கம். இவ்வழியேநிற்கின்றது வழி நூலாகிய பெரியபுராணம். சார்புநூலாகிய சேக்கிழார் புராணம் நிற்றில, இச் சேக்கிழார் புராணத்தை இயற்றியவர் கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் ஆகும். இவர் சேக்கிழார் புராணத் துள் ஏனாதிநாதநாயனாரை க்ஷத்திரியரோடு சேர்க்காது பரதவருக் குங் கீழ் அமைத்திருக்கின்றனர். அவ்வமைப்புக்கு முதநூல் யாது? இவ்வமைப்பு திவாகர நிகண்டிற்காவது ஒத்திருக்கின்றதா? அன்றி திவாகர நிகண்டாதிகளில் "சான்றவர், சான்றார், சான்றோர்" என்னும் பெயர்களை சூரியனுக்கும், அறிவுடையோனுக்கு முரியதெனக் கூறியிருக்கின்றதேயன்றி, வேளாளருக்குக் கீழ்பட்ட சாதியாருக்கு முரியதெனக் கூறினாரில்லை, அப்படி அவர் கூறியதற்கு அவர்கொண்ட முதனூல்யாது? அச் "சான்றார்" என்பது "சூரியனையும், அறிவுடையோனையும்" குறித்தலால், நாயனார் அவ்விருவகுப்பிலேயே சாருவர். "மரபினிற் சான்றார்" எனக் கூறியிருத்தலால், அச்சான்றார் என்பது இடுகுறி சாதிப்பெயரெனத் தேர்ந்து, சூரியகுலத்தவர் என விளங்குவர். திவாகரநிகண்டாராவது "சான்றார்" என்னும் பெயர் தாழ்குலத்தவருக்குரிய குலப்பெயரென வகுத்தோதினரா?" இவர் வாக்கு மணம்பெற. அதுவுமில்லை. "சான்றார் என்பதின் சப்தார்த்தம் என்னை? அதன் மூலமொழியாது? அம்மொழியினால் விளங்கும் தொழில் யாது? இதுகளையாவது தெரிந்துக்கொண்டனரா? உமாபதிமுத

* நக்கீரர்வாக்கு.

நூற்களாகக்கொண்ட பதிகத்தில் சுந்தரராவது, அந்தாதியில் நம்பியாண்டாராவது, பெரியபுராணத்தில் சேக்கிழாராவது சாதித்தொகுப்பை வகுத்தோதியிருக்கின்றனரா? அல்லது "சான்றார்" என்னும் பெயரை தாழ்குலப்பெயரென்றாவது கூறியிருக்கின்றனர்களா? இச்சார்புநூலார்வாக்கு கனம்பெற? அதுவுமில்லை. இவர்கொண்ட கொளறுபடை சாதிவகுப்பு வருமாறு :—

உமாபதி சிவாச்சாரியரியற்றிய
சேக்கிழார் நாயனார் புராணம்,

| 26-வது செய்யுள். | 28, 29, 30,31-வது செய்யுள்கள். |
|---|---|
| தொகை. | வகை. |
| 1. அந்தணர் | 1. அந்தணர் |
| 2. சிவத்துவஜர் | 2. சிவவேதியர் |
| 3. ஆமாத்தியர் | 3. ஆமாத்தியர் |
| 4. க்ஷத்திரியர் | 4. க்ஷத்திரியர் |
| 5. குரும்பர் | 5. குருநிலமன்னர் |
| 6. வணிகர் | 6. வணிகர் |
| 7. வேளாளர் | 7. வேளாளர் |
| 8. இடையர் | 8. இடையர் |
| 9. சாலியர் | 9. குயவர் |
| 10. குயவர் | 10. பாணர் |
| 11. செக்கார் | 11. பரதவர் |
| 12. பரதவர் | 12. மறவர் |
| 13. சான்றார் | 13. சான்றார் |
| 14. வண்ணார் | 14. சாலியர் |
| 15. மறவர் | 15. நீசர் |
| 16. நீசர் | 16. ஏகாலியர் |
| 17. பாணர் | 17. செக்கார். |

இத்தொகைக்கும் வகைக்கும் முரண்படுகின்றது. இதனால் சிவாச்சாரியார் சாதிகளின் உயர்வு தாழ்வுகளை யுணராமல் மயங்கிக் கூறினாரெனப்படும். அந்தோ! இவர் சாதிவரிசையின் தலையில் இடிவிழ, யாவர்கூறினும் மூலப்பிரமாணத்தை யனுசரிப்பதொழிய விரோதித்தல்கூடாது. இதோடு திவாகர நிகண்டு சாட்சிகளும் வேண்டும். அதுகளையும் பின்பற்றிலர், அவ்

வகுப்பு திவாகர நிகண்டிற்கும் உலகவழக்கிற்கும் நேர்விரோதமாக வகுத்திருத்தலால், அப்புன்மொழியை யாம் ஒருபொருட்படுத்திலம். ஒருக்கால் இச்சாதிவரிசை வெள்ளிப்பண்டாரம் என்னொருவன் சிலபாக்களை பெரியபுராணத்தில் பாடிச்சேர்த்தெழுதியதைப்போலும், நிகண்டில் தனவைசியர் பூவைசியர் கோவைசியர்* எனக் கல்பித்து சேர்த்தெழுதியதைப்போலும், சில சாதிப்பிரஷ்டர்களால் சேர்த்திருப்பினும் இருக்கும். இதைப் போல் ஒவ்வொரு நூலிலும் சேர்த்தெழுதியிருப்பதாக வங்காள தேச சிவிலியனாகிய "ரோமஷ்சந்தரடற்று" என்பவர் கூறுகின்றார்.

"For it has been ascertained that the Puranas which exist now were composd in the Pauranik period and **have since been altered** and considerably enlarged during many centuries after the **mahomedan** conquest of India", Vide Ancient India" by Romesh Chunder Dutt. B. IV. ch. III.

"புராணங்கள் மகமதியர் அரசு ஸ்தாபிக்கப்பட்டபின்பு புதுப்பிக்கப்பட்டு, இஷ்டப்பிரகாரம் மாற்றப்பட்டது."

"The Brahmans have not only modified the Vadic religion, but have also garbled and interpolated Vedic literature for the purpose of bringing old Vadic traditions and usages into conpormity with later Brahminical ideas." * Vide The "History of India" by Talboy's Wheeler ch I. P. 5.

"வேதங்களில் கூறிய ஐதீகங்கள் வழக்கங்கள் எல்லாம் பிராமணருடைய நோக்கத்திற்கு இசையும்படியாக திருத்தியெழுதி

---

* வணிகர்=வாணிகத் தொழிலுடையவர். "வைசியன் பெறுமே வாணிகவாழ்க்கை" என்பது தொல்காப்பியவிதி. வைசியர், இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என மூவகைப்படுவர் என்று சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றிற் கூறப்பட்டது. இக்காலத்துள்ள சில வைசியர், பூவைசியர், கோவைசியர், தனவைசியர் என மூவகைப்படுவர் என்றும், அவருட் பூவைசியர் வேளாளர் என்றும் கோவைசியர் இடையர் என்றுங் கூறியிடர்ப்படுவா. பிங்கலந்தையிலும் சூடாமணியிலும் அவ்வாறே புதுச்சூத்திரம் செய்து சேர்த்தும் உள்ளார் அவையெல்லாம் "வாதராச்சியநியாய சாரேய மகாபரசு" என்னு நூலாற் கட்டிக்கப்பட்டொழிக்கப்பட்டன.

நூதனமான விஷயங்களை அவற்றில் நுழைத்துயிருக்கின்றார்கள்" என்றார் "டாலபாய் உவீலர்" துரை.

Every incident whether it originated in Vadic, Brahmanic, or Buddhist times, has been reproduced in Brahmanical forms by compiters who apparently flourished in the age of Brahmanical revival. In other words, every legend and tradition has been systematically Brahmanized for the purpose of bringing all the religions, laws and usages of the different races of India into conformity with Brahmanical ideas". Vide, The History of India by Talboy's Wheeler. Ch. I. P. 6.

"இதிகாசங்களைப்பற்றி சொல்லிய இடத்தில், இதிகாசங்களிலுள்ள ஒவ்வொரு சரித்திரமும் ஐதீகமும் பிராமணத்தன்மையுள்ளதாய் வேணுமென்று மாற்றி எழுதியிருக்கின்றது" என்று பார்க்கின்றோம்.

"It is thus that our ancient works have been altered, recast, and tampered with to the delight of the supporters of every new creed and every modern custom but to the despair of the historian".

"இவ்வாறு பூர்வநூற்களெல்லாம் திருத்துப்பாடாகி மாற்றப்பட்டு நூலாசிரியர்களால் பாழாக்கப்பட்டிருக்கின்றது." எனக் கூறுகின்றார் ரோமஷ்சந்தரடற்று.

"With regard to the Epics themselves it will probably ever remain a hopeless task to separate the portions which are genuine aud ancient, from those which are later additions". Vide Preface of "The Ancient India" by Romesh chunder Dutt P. XVIII.

"நூற்களில் பூர்வசம்பவங்கள் இவைகள்தான் என்று பிரித்தெடுக்கக் கூடாதவிதமாய் அநேகவிஷயங்கள் இடைக்கிடையே நுழைக்கப்பட்டு இருப்பதால், உண்மையானவை எவை என்று கண்டுபிடிப்பது அசாத்தியமாயிருக்கின்றது" என்றார், இதைப்

போல் சில ஈனர்கள் உமாபதிவாக்கென சேக்கிழார் புராணத்துள் சாதித்தொகும்பை சேர்த்தெழுதியதாக யிருப்பினும் இருக்கும்.

**13.** ஏனாதிநாதநாயனார் க்ஷத்திரியர் அல்லாது வேறு குலத்தவராயிருப்பின் திவாகரநிகண்டில், அக்குலத்திற்குரிய தெனக் கூறிய சாதிப்பெயரை சேக்கிழார் சூட்டியே யிருப்பர். இச்சேக்கிழார் திவாகரநிகண்டார் கூறிய சாதிப்பெயர்களையே தாமெடுத்தோதிய நாயன்மார்களுக்குக் குலப்பெயராகச் சூட்டிய பெருந்தகை, அஃதிது:—

13. குங்கிலியகலய நாயனாரை ஷையார் புராணம், 5-ஞ், செய்யுளில் " அந்தணர் " எனவும்,

14. நமிநந்தியடிகளுயனாரை ஷையார் புராணம், 4-ஞ், செய்யுளில் " அந்தணர் " எனவும்;

15. திருஞான சம்பந்தசுவாமிகளை ஷையார்புராணம், 15ஞ் செய்யுளில் " அந்தணர் " எனவும்,

16. சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஷையார் புராணம், 3-ம், பாசுரத்தில் " வேதியர் " எனவும்,

17. தில்லைவாழந்தணர்களை மேற்படியார் புராணம், 8-ஞ், செய்யுளில் "வேதியர்" எனவும்,

18. உருத்திர பசுபதிநாயனாரை மேற்படியார் புராணம், 3-ஞ் செய்யுளில் "வேதியர்" எனவும்,

19. முருகநாயனாரை மேற்படியார் புராணம், 5-ஞ் செய்யுளில் " மறையோர் " எனவும்,

20. சண்டேஸ்வரநாயனாரை மேற்படியார் புராணம், 10-ஞ் செய்யுளில் "மறையோர்" எனவும்,

21. அப்பூதியடிகளுயனாரை மேற்படியார்புராணம், 9-வது பாசுரத்தில் "மறைத்தலைவர்" எனவும்,

22. திருநீலநக்கநாயனாரை மேற்படியார் புராணம், 4-வது, செய்யுளில் "மறையோர்" எனவும்,

23. சோமாசிமாற நாயனாரை மேற்படியார் புராணம், 1-வது செய்யுளில் "மறையாளர்" எனவும்,

24. சிறப்புலிநாயனாரை மேற்படியார் புராணம், 3-ஞ், செய்யுளில் "மறைக்குலம்" எனவும்,

25. கணநாத நாயனாரை மேற்படியார் புராணம், 1-ம், கவியில் "மறையவர்" எனவும்,

26. புகழ்த்துணைநாயனாரை மேற்படியார் புராணம், 1-ஞ், செய்யுளில் "மறையோர்" எனவும்,

27. பூசலார்நாயனாரை மேற்படியார் புராணம், 3-ம், பாசுரத்தில் "மறைமரபு" எனவுங் கூறியிருக்கின்றது.

மேற்கூறிய பதினைந்து நாயன்மார்களையும் சேக்கிழார் "அந்தணர், மறையோர், வேதியர்" என்னுஞ் சாதிப்பெயரால் வகுத்திருக்கின்றனர். இப்பெயர்கள் திவாகரநிகண்டார் தேடித்தீட்டிய பிராமணருக்குரிய சாதிப்பெயரே! அது :—

"ஐயர்வேதியரிருபிறப் பாளர்
மெய்யர்மிக்கவர் மறையோர்பூசுர
ரந்தணர்நூலோரறு தொழிலாளர்."

என்பதால் விளங்கும். இவ்விதம் திவாகர நிகண்டை பின்பற்றிய சேக்கிழார், ஏனாதிநாதநாயனார் க்ஷத்திரியர் அல்லாது வேறு குலத்தவராயிருப்பின் அக்குலத்திற்குரிய தெனக்கூறிய திவாகரநிகண்டார் வாக்கை பின்பற்றாதொழியார். அவர் க்ஷத்திரியராயிருந்தமையாலேயே ஷையார்கள் வாக்கை பின்பற்றி "படைச்சுற்றத்தார் *" எனவும், "சான்றார் குலத்தவர்" எனவுஞ் சேக்கிழார் சாற்றியது.

பனிரெண்டு அரசகுல நாயன்மார்களுக்குந் திவாகர நிகண்டார்கூறிய சாதிப்பெயரையே சேக்கிழார் சூட்டியழைத்திருக்கின்றார். அதை இந்நூல் 119-வது பக்கத்தில் காண்க. இதனாலும் சேக்கிழார் திவாகரநிகண்டார் வாக்கைவிட்டொதுங்கவில்லையென்றேற்பட்டது.

---

* அரசமறு தொழிலோதல் வேட்டல்
புரைதீரப் பெரும்பார்ப்புரத்தலீதல்
கரையறுபடைக்கலங் கற்றல் விசயம்." —(திவாகரம்.)

28. இயற்பகை நாயனரை மேற்படியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவும்,

29. அமர்நீதிநாயனரை மேற்படியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவும்,

30. மூர்த்திநாயனரை மேற்படியார் புராணம், 8-ம் பாசுரத்தில் "வணிகர்" எனவும்,

31. காரைக்காலம்மையை மேற்படியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவும்,

32. கலிக்கம்பநாயனரை மேற்படியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவுங் கூறினர்.

இப்பகுதிகளில் வரும் "வணிகர்" என்பது வைசியருக்குரிய திவாகரநிகண்டிற் குட்பட்ட சாதிப்பெயரே! அது:—"வளம்பெறு **வணிகர்** நல்லான் காவலருழவர் மற்றும்" (நிகண்டு) என்பதால் விளங்கும்,

33. இளையான் குடிமாற நாயனரை மேற்படியார் புராணம், 1-ற் பகுதியில் "சூத்திரர்" எனவும்,

34. வாயிலார் நாயனரை மேற்படியார் புராணம், 6-ஞ் செய்யுளில், "சூத்திரர்" எனவும்,

35. விறன்மிண்ட நாயனரை மேற்படியார் புராணம் 4-ஞ் செய்யுளில் "வேளாண்குலம்" எனவும்,

36. மானக்கஞ்சாறநாயனரை மேற்படியார் புராணம், 7-ங் கவியில், "வேளாண்குடி" எனவும்,

37. அறிவாட்டநாயனரை மேற்படியார் புராணம், 4-ம் பாசுரத்தில் "வேளாண்டலைவர்" எனவும்,

38. மூர்க்கநாயனரை ஷையார் புராணம், 2-ம் பாடலில் "வேளாண்குலம்" எனவும்,

39. சாக்கியநாயனரை மேற்படியார் புராணம், 2-ம் பிரயோகத்தில் "வேளாளர் குலம்" எனவும்,

40. சத்தியநாயனரை மேற்படியார் புராணம், 2-ம் பாடலில் "வேளாண்குலம்" எனவும்,

41. முனையாடுவார் நாயனாரை மேற்படியார் புராணம், 2-ங் கவியில் "வேளாளர்" எனவும்,

42. செறுத்துணை நாயனாரை மேற்படியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வேளாண்குடி" எனவும்,

43. கோட்புலிநாயனாரை மேற்படியார் புராணம், 1-ங் கவியில் "வேளாண்குலம்" எனவும்,

44. திருநாவுக்கரசு சுவாமிகளை மேற்படியார் புராணம், 15-ங் கவியில் "வேளாண்குலம்" எனவும்,

45. ஏயர்கோன் கலிக்கம்பநாயனாரை மேற்படியார் புராணம், 5-ம், பாடலில் "வேளாளர்" எனவுங்கூறினர்.

வினைஞர் சூத்திரர் பின்னவர் சதுர்த்தர்
வளமையர் வேளாளர் மண்மகள் புதல்வர்." (திவாகரம்.)

46. திருநீலகண்ட நாயனாரை மேற்படியார் புராணம், முதற் செய்யுளில் "வேட்கோவர்" என்றனர்.

"கும்பகாரர் குலாலர் வேட்கோவரென்
றிங்கிவை குயவர் மட்பகைஞரென்ப" (திவாகரம்.)

47. திருக்குறிப்புத்தொண்ட நாயனாரை மேற்படியார் புராணம் 111-ங், கவியில் "ஏகாலியர்" என்றனர்.

"ஏகாலியர் தூசரீரங்கோலியர்." (திவாகரம்.)

48. கலியநாயனாரை மேற்படியார் புராணம் 5-வது கவியில் "தயிலவினைத் தொழின்மரபார்" என்றனர்.

"சக்கிரி நந்திகள் செக்காராகும்." (திவாகரம்.)

செக்கையுடையவர் செக்கார், இவர்கள் செக்கில் எள்ளையிட்டு தைலம் பிழியுந்தொழிலை யுடையவர். இதைவிளக்கவே "தயிலவினைத்தொழின் மரபார்" என்றது சேக்கிழார். இது அத்தொழிலையுடைய செக்காரைக்குறிக்கும். இதைப்போல் ஏனாதிநாத நாயனாரையும் "படைச்சுற்றத்தார்" என்றனர், படைத்தொழிலையுடையவர் அரசர். இப்படைத்தொழிலையுடைய ஏனாதிநாதநாயனாரும் அரசரே! இது பன்னூற்றுணிபு.

**49.** ஆனாயநாயனாரை மேற்படியார் புராணம், 8-வது செய்யுளில் "ஆயர்" எனவும்,

**50.** திருமூலநாயனாரை மேற்படியார் புராணம், 11-வது கவியில் "ஆமேய்ப்பார்குடி" என்றனர்.

"அண்டர்கோபாலர் ஆயர் அமுதர்." (திவாகரம்).

ஆ=பசு, அதையுடையவர் ஆயர் எனப்படும். "ஆ=பசுவை, மேய்ப்பார்=மேய்க்கப்பட்டவரது, குடி=வம்ஸம்" (சதுரகராதி) பசுவை மேய்க்கப்பட்டவர் இடையர் என்பதைப்போல், ஆயுதம் பயில்பவர் க்ஷத்திரியர் எனப்படும். அதனாலேயே ஏனாதிநாத நாயனாரை க்ஷத்திரியர் எனவிளக்க "படைச்சுற்றத்தார்" என்பது சேக்கிழார்.

**51.** அதிபத்தநாயனாரை மேற்படியார் புராணம், 9-வது கவியில் "நுளையர்" என்றனர்.

"பரதவர் நுளையர் கடலர்வலையர்". (திவாகரம்)

**52.** கண்ணப்பநாயனாரை மேற்படியார் புராணம், 7-ஞ் செய்யுளில் "மறவர்" என்றனர்.

"மறவரெயினர் பாலைநில மாக்கள்". (திவாகரம்.)

**53.** திருநாளைப்போவார் நாயனாரை மேற்படியார் புராணம் 11-வது கவியில் "புலையர்" என்றனர்.

"இழிஞர்கொலைஞர் புலைஞரென்றுங்,
கிசையும்பெயர் சண்டாளர்க்கெய்தும்". (திவாகரம்.)

**54.** திருநீலகண்டத்துப் பாணநாயனாரை மேற்படியார் புராணம், 3-வது கவியில் "பாணர்" என்றனர்.

"சென்னியர் வைரியர் சூதர்மாகத
ரின்னிசைகாரர் மதங்கர் பாணர்". (திவாகரம்.)

ஆகிய இப்பிரயோகங்களை நோக்க சேக்கிழார் முற்றிலும் நாயன்மார்களுக்குத் திவாகரநிகண்டிற் கூறிய சாதிப்பெயர்களையே சூட்டியிருக்கின்றார் எனத் தெளிவாகின்றது, ஏனாதிநாதநாயனார் க்ஷத்திரியர் அல்லது வேறுகுலத்தவராயிருப்பின் அத் திவாகரநிகண்டை பின்பற்றி சாதிப்பெய ரளிக்கப் பின்னிடார், சேக்கிழார் ஏனாதிநாதநாயனாரை "சான்றார்" என்றார், இப்பெயர் எச்

சாதிக்கடுக்கும், இதை அவர் எடுத்தாண்ட திவாகரநிகண்டைக் கொண்டு சோதிப்பாம்,

அது:—"சான்றோனரியே தபநனென் றினையவு
மான்றவருக்கற் கரந்தம் பெயரே"
(திவாகரம்).

"பகவன் சான்றோன் வேந்தன் றபநன்,
சுடரோன்மாலி சூரியன் பெயரே"
(பிங்கலன்).

"தரணிசெங்கதிரோன் சண்டன்
தபநனே யொளியே சான்றோன்."
(நிகண்டு).

என்னு மிப்பிரயோகங்களால் அச் "சான்றோன்" என்னும் பெயர் சூரியனுக்குரிய தெனப்பிரகாசிக்கின்றது, சூரியன்பெயர்கள் சூரியகுல வரசருக்குக் குலப்பெயராய் நிற்குமென்பது நூற் சம்மதி, இவ்விதியால் சூரியன் பெயரைப்பெற்ற ஏனாதிநாதநாயனாரும் "சூரியகுல க்ஷத்திரியர்" என்பதே முடிபு. இச்சேக்கிழார் ஆவல் இதோடு நிற்கவில்லை. இன்னும் அவரை க்ஷத்திரியர் என வற்புறுத்தவே "படைத்தொழிலையும் அந்நாயனாருக்குக் குலத்தொழில்" என விளக்கியிருக்கின்றார். படைத்தொழில் அரசரது அறு தொழில்களில் ஒன்றே! இதை பின்னால் பிரகாசப்படுத்துவாம். இதனாலும் ஏனாதிநாதநாயனார் க்ஷத்திரியர் எனத் துணியப்படும்.

14. ஏனாதிநாதநாயனாரை சூரியகுலத்தவர் எனப்பொருள்பட "சான்றார்"* என விளக்கியிருத்தலோடு, அச்சூரியகுலத்துள் பல வம்ஸங்களாகிய "இரகுவம்ஸம், நிமிவம்ஸம் சோழவம்ஸம், ஈழவம்ஸம், "† முதலிய வம்ஸங்கள் உட்பட்டிருத்தலால், எவ்வம்ஸத்தவர் என்னுஞ் சந்தேகம் நிவர்த்தியாதற்பொருட்டு "ஈழக்குலத்தவர்" என்றார் சேக்கிழார். இவ்விதம் இடங்கழி நாயனாரையுங் கூறியுளர். அவரை ஆதித்தன் குலத்தவர் எனக் கூறியதோடு நிறுத்தாது, "வெளிர் குலத்தவர்‡" எனவும் விளக்கி

* சூரியகுலத்தவர்.

† Mr. Sherring, in his work, On Hindu Tribes and Castes, "Enumerates nearly 2000. subdivision of Brahmen and 590. separate tribes of kshatriyas.

‡ வெளிர்குலம் = குறுநிலமன்னர்வம்சம்.

யிருக்கின்றார். நின்ற சீர்நெடுமாறநாயனாரை "மதி* மரபினர் எனக் கூறியதோடு நிறுத்தாது, "வழுதியர்"† வம்ஸத்தவர் எனவும் வலி யுறுத்துகின்றார், அது ஸ்ரீராமரை சூரியகுலத்தவரெனக் கூறிய தோடு, இரகுகுலத்தவர்எனவுங் கூறியதைப்போலென்க, இதனால் சூரியன்பெயரை குலப்பெயராகச் சூட்டிய அரசருக்குக் குடிப்பெ யரையும் விளக்கவேண்டுமென்றேற்பட்டது, ஏனெனில் சூரியகுல த்தில் பல கிளைக்குடிகள் உட்பட்டிருத்தலாலென்க, சந்திரகுலத்தி லுதித்த பாண்டவரை குருகுலத்தவர் எனவும், கிருஷ்ணனை எது குலத்தவர்‡ எனவும் விளக்கியதைப்போல், ஏனாதிநாத நாயனாரையும் குலத்தால் சூரியகுலத்தவர் எனப் பொருள்பட "சான்றார்" எனவும், வம்ஸத்தால் ஈழராஜன் வம்ஸத்தவர் எனப் பொருள்பட "ஈழக்குலத் தவர் எனவும் இனிது விளக்கினர் சேக்கிழார், இத்யாதிபிரமாணங் களால் ஏனாதிநாதநாயனார் "சூரியகுல ஈழராஜன் வம்ஸத்திலுதித்தவர்" எனவே இனிது முடிக்கப்பட்டது.

## ௬. குலத்தொழில்.

1. இனி ஸ்ரீமத் ஏனாதிநாதநாயனார் தொழிலாலும் க்ஷத்திரி யர் எனப் பிரகாசிப்பர்.

### வேதம், புருஷசூக்தம்.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 । 𑌬𑌾𑌹𑍂𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑌃
𑌊𑌰𑍂𑌤𑌦𑌸𑍍𑌯𑌯𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 । 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌅𑌜𑌾𑌯𑌤 ॥

ப்ராஹ்மணோஸ்யமுகமாசீத் | பாகுராஜந்ய:க்ருத: |
ஊரூததஸ்யயத்வைஸ்ய: | பத்ப்யாம்சூத்ரோ அஜாயத :

இவ்வேதவாக்கியத்திற்கூறியதற் கிணங்க இவ்விந்து தேசத் தில் வசியாநின்ற ஆரியர்கள் " பிர்ம க்ஷத்திரிய§ வைசிய சூத்திரர்

---

* மதி = சந்திரன்,

† வழுதியர் = பாண்டியர்.

‡ "யான் விதுகுலத்தில் யாதவனிவரோ குருகுலத் தாலவனுக்கிளை யோர்" (பாரதம்.)

§ மன வன்மங்கொண்டுபகையை சாதித்தல் க்ஷத்திரியருக்குரிய தர்மம். அதாவது க்ஷாத்திரம்வைத்து விவகரிப்பவர்களாதலின் அவர்களை க்ஷத்திரி யர் எனப்பட்டது.

கள்" என நான்கு பெரும்பிரிவினை யுடைத்தாகுவர். இவர்களை "சுத்தசாதிகள்" எனவும், "ஸஜாதீயர்" எனவும் "மநுவும், யாக்கியவல்கியரும்" சொல்லுகின்றார்கள். இந்நான்கு சாதிகளும் மாறிமாறிச் சேர்ந்ததால் உற்பவித்தவர்களே "அநுலோம பிரதிலோம அந்தராள விராத்திய" முதலிய சாதியார்களெனவும் சைவ புராணம், சூதசம்மிதை முதலிய நூற்களில்* படிக்கப்பட்டிருப்பன. மேற்கூறிய சுத்தசாதியாகிய நான்கிற்கும் அவ்வாறு தொழில்கள் குலத்தொழில்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அவை யாவன :—

## I. பார்ப்பார் அறுதொழில்.

ப்ராஹஸ்பதிஸ்மிருதி.

స్వాధ్యాయోఽధ్యాపనంచాపియజనం యాజనంతథా ।
దానంప్రతిగ్రహశ్చేతి షట్కర్మాణ్యగ్రజన్మనః ॥

மநுஸ்மிருதி.

அத்யாபநமத்யயநம் யஜநம்யாஜநந்ததா² ।
தா³நம்ப்ரதிக்³ரஹஞ்சைவ ப்³ராஹ்மணாநாமகல்பயத் ॥

ஞானப்பிரகாசசுவாமிகள் சாதிநூல்.

ஓதலேபிறர்க்குத்தாமே யோதிவித்திடுதன்மிக்க
வேதவேள்விகளியற்றல் வேட்பித்தல் வேட்டமெற்றே
யீதலீந்திடுவோர் தம்பாலேற்றிட லேற்பதாக
வாதிநான்மறையோர் செய்யு மறுதொழிலாகுமென்றே.

திவாகரம்.

ஓதலோதுவித்தல்வேட்டல் வேட்பித்த
லீதலேற்றலென்றிரு மூவகை
யாதிக்காலத்தந்தணரறு தொழில்.

நிகண்டு.

ஓதலேயோதுவித்தலுடன் வேட்டல்வேட்பித்தீட்டல்
ஈதலேயேற்றலாறு மேற்குமந்தணர் தொழிற்பேர்†.

---

* சைவபுராணம், 69, 70-வது அத்தியாயங்களிலும், ஞானப்பிரகாச சுவாமிகள் சாதிநூலிலுங் காண்க.

† மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 75-வது சுலோகம்; ப்ராசரஸ்மிருதி, ஆசாரகாண்டம், முதலத்தியாயம் 38-வது சுலோகம்; ஆபஸ்தம்ப ஸ்மிருதி, முதலத்தியாயம், 17-வது சுலோகம்; காளத்திபுராணம், வருணாசிரமமுறைத்தவத்தியாயம், 2-வது செய்யுள் காண்க.

க. வேதம் ஓதல்
உ. யாகஞ்செய்தல்*
ங. தானங்கொடுத்தல்
ச. வேதம் ஓதுவித்தல்
ரு. யாகஞ்செய்வித்தல்
சா. தானம்வாங்குதல்.

இவ்வாறு தொழில்களும் அந்தணருக்குரிய தொழில்களாம்.† இவற்றுள் அந்தணருக்கே உரிய ஜீவனோபாயங்களான குலத் தொழில்கள் மூன்று என மநு‡ கூறுகின்றார்.

க. வேதம் ஓதுவித்தல்
உ. யாகஞ்செய்வித்தல்
ங. தானம்வாங்குதல்.

ஆகிய இம்முத்தொழில்களுள் வேதம் ஓதலே பிராமணனுக்கு உயர்ந்த தருமம் எனவும்§. அப்படியோதிய வேதத்தின் அருத்தத்தை யறியும்படியான ஞானமே தவமென|| மநுவும், வேதாப்பியாசம் முதலியவைகளைச் செய்யவேண்டுமென்று தக்ஷரும், பிராமணன் சகல பிரயத்தினத்தாலும் வேதத்தை ஆசிரயிக்கக் கடவனென்று வியாசரும், வேதமே பிராமணனுக்கு மோக்ஷத்தைத் தரவல்லதென்று யாக்கியவல்கியரும், வேள்விகட்கும், தவத்திற்கும், ஏனைய நல்ல கருமங்கட்கும், சுவர்க்க வீடுபேற்றிற்கும், வேதமொன்றே யிருபிறப்பாளற்குச் சிறந்த கருவியாமென பராசரும்; வேதமுணராதவனுடைய எல்லாத்தொழிலும் பயனற்றதாகின்றனவென மநுவும் சொன்னார்கள். இவைகளால் **"வேதியரது முக்கிய குலத்தொழில் வேதசாஸ்திரங்களை யோதல்"** என வெளிப்பட்டது.

## II. அரசர் அறுதொழில்.

### ப்ரஹஸ்பதி ஸ்மிருதி.

ఇజ్యాధ్యయనదానేచ ప్రజానాం పరిపాలనం ।
శస్త్రాస్త్రధారణంసేవా కర్మాణిక్షత్రియస్యతు॥

---

* "அழல் புறந்தரூஉ மந்தணாதவே" (புறநானூறு.)
† Vide Orm's History of the Hindustan, Vol. 1, Chap. 1, p. 3.
‡ மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 76-வது சுலோகம்; புதஸ்மிருதி, 20-வது சுலோகங்காண்க.
§ மநுஸ்மிருதி, 4-வது அத்தியாயம், 147-வது சுலோகம்.
|| மநுஸ்மிருதி, 11-வது அத்தியாயம், 235-வது சுலோகம்; டீகைத் கீதை 4-வது அத்தியாயம், 28-வது சுலோகம்.

மநுஸ்மிருதி.

ஶஸ்த்ராஸ்த்ரப்ருத்த்வம் க்ஷத்ரஸ்ய வணிக்பஶுக்ருஷிர்விஶ꞉।
ஆஜீவனார்த்தம் தர்மஸ்து தானமத்யயனம் யஜி꞉॥

பராசர ஸ்மிருதி.

క్షత్రియోహి ప్రజారంజనశ్శస్త్రపాణిః ప్రదండవాన్।
నిర్జిత్యపరసైన్యాని క్షితింధర్మేణపాలయేత్॥

பாரதம், சாந்திபருவம்,
வீடுமனைக்கண்ட சருக்கம், 39-வது, கவி.

சுருதிமாமகம் பயிலுதன் சிலைமறைதொடர்தல்
விருதினேடுநாற் படைகளுமளிக்குதன் மேவார்ப்
பொருதழித்த னல்லுயிர்களைப் பொதுமையிற் புரத்த
லிருநிதிக் குழாமீதன் மன்னவர்குல வியல்பே.

ஞானப்பிரகாச சுவாமிகள்,
சாதிநூல்.

உரைசெய்மா மறைகளோத லுத்தமம் வேள்விகாத்தல்
வரையறக் கொடுத்தல் தங்கள் மரபியல் வழாதுசெய்தல்
தரைதனை முறையிற்காத்தல் தநுர்வேதந் தனையியற்றல்
அரசர்தங் குலத்துக்கேற்ற வறுதொழி லாகுமன்றே.

திவாகரம்,

அரசரறு தொழி லோதல் வேட்டல்.
புரைதீரப் பெரும்பார்ப் புரத்தலீதல்
கரையறு படைக்கலங் கற்றல்விசயம்.

பிங்கலன்.

ஓதல் பொருதல் உலகு புரத்தல்
ஈதல் வேட்டல் படைபயிற்ற லறுதொழில்.

சூடாமணி நிகண்டு.

ஓதலேவேட்ட லீத லுலகோம்பல் படைபயிற்றல்
மேதகு போர்செய் தீட்டல் வேந்தர்செய் தொழிற்களாறும்.

*அரசராறுதொழில்* :—" The Occupation of Kings are six :—Viz, 1. *ஓதல்*=Reading and learning the vadam; 2. வேட்டல்=Offering Sacrifices; 3. *ஈதல்*=Distributing alms ; 4. உலகோம்பல்=Preserving the World ; 5. படைக் கலம் பயிற்றல்=**Practising the use of arms** ; 6. பொருதல்= Making war, (Rottler, winslow).

| | | | |
|---|---|---|---|
| க. | வேதம் ஓதல் | ச. | உலகோம்பல் |
| உ. | யாகஞ்செய்தல் | ரு. | போர்செய்தல் |
| ௩. | தானங்கொடுத்தல் | சா. | படைக்கலம்பயிற்றல் * |

**அரசர்கள்** " ஓதலால் ருஷிகளின் கடனையும், யாகஞ்செய்த லால் தேவர்கள் கடனையும், தானங்கொடுத்தலால் வேதியர்கள் கடனையும், உலகோம்பலால் உயிர்களின் கடனையும், போர்செய்த லால் பகைவர்களை யடக்குங்கடனையும், படைபயிற்றலால் குலதர் மத்தின் கடனையும்" செய்பவராகுவர். இவ்வாறு தொழில்களும் " பொதுத்தொழில், சிறப்புத்தொழில் " என இருவகைப்படும், அவற்றுள் " ஓதல், வேட்டல், ஈதல் " பொதுத்தொழிலும் ; "உலகோம்பல், படைபயிற்றல், போர்செய்தல்" சிறப்புத்தொழிலு மாகும். இச்சிறப்புத்தொழிலையே அரசருக்குரிய குலத்தொழில் கள் எனமநு† கூறுகின்றார்.

க. உலகோம்பல்
உ. படைக்கலம்பயிற்றல்
௩. போர்செய்தல்.

ஆகிய இம்மூன்று தொழில்களுள் **கத்திபாணம் முதலிய ஆயு தந்தரித்து உலகாள்வது** அரசருக்குச் சீவனோபாயமெனவும்‡, அப் படித்தரித்த ஆயுதத்தைக்கொண்டு சத்துருவை ஜெயிப்பது சாதித்

* மநுஸ்மிருதி, 1-வது, அத்தியாயம், 89-வது சுலோகம் ; ஆரீத ஸ்மி ருதி, இரண்டாமத்தியாயம், 2-வது, சுலோகம், காளத்திபுராணம், வருண சிரம தருமமுறைத்த வத்தியாயம், 8-வது, செய்யுள் ; விஷ்ணுபுராணம், மூன்றுமம்ஸம், எட்டாமத்தியாயங் காண்க.

† மநுஸ்மிருதி, 10-வது, அத்தியாயம், 77-வது, சுலோகம்.

‡ மநுஸ்மிருதி, 10-வது, அத்தியாயம், 79-வது, சுலோகம்.

தருமம் எனவும் * மநு கூறியிருக்கின்றார். இதனால் இம்முத்தொழில்களுள் படைபயிற்றலே முந்திநிற்கும். படைப்பயிற்றலின்றி போர்செய்தற்கும், ஊரைபிடித்தாளுதற்கும் இடங்கொடா. இவைகளால் அரசர்களது முக்கிய குலத்தொழில் படைபயிற்றலெனப் பசுமரத்தாணியைப்போல் அறையப்பட்டது.

## III. வணிகர் அறுதொழில்.

ப்ரஹஸ்பதிஸ்மிருதி.

స్వాధ్యాయో యజనం దానం పశూనాం పాలనం తథా।
కుసీదసా కృషివాణిజ్యం వైశ్యకర్మాణిస ప్తవై॥

பராசரஸ்மிருதி.

లాభకర్మతథారత్నం గవాంచ పరిపాలనమ్।
కృషికర్మచవాణిజ్యం వైశ్యవృత్తి రుదాహృతా॥

திவாகரம்.

"வணிக ரறுதொழி லோதல் வேட்ட
லீத லுழவுபசுக்காவல் வாணிகம்."

| | | | |
|---|---|---|---|
| க. | வேதம் ஓதல் | ச. | ஏருழுதல் |
| உ. | யாகஞ்செய்தல் | ரு. | பசுக்காத்தல் |
| ௩. | தானங்கொடுத்தல் | சு. | வர்த்தகஞ்செய்தல். † |

என்னும் அறுதொழிலும் வைசியருக்கு விதிக்கப்பட்ட குலத்தொழில்கள். இதில் "ஏருழல், பசுக்காற்றல், வர்த்தகஞ்செய்தல்" என்னு முத்தொழிலே முதன்மைபெருமென புதஸ்மிருதி‡ கூறுகின்றது. இவற்றுள் வர்த்தகஞ்செய்தலே முந்திநிற்கும். இதை "வைசியர்க்கழகு வளர்பொருளீட்டல்" என வற்புறுத்து

* மநு ஸ்மிருதி, 10-வது, அத்தியாயம், 119-வது, சுலோகம், புதஸ்மிருதி, 25-வது, சுலோகம்.

† மநுஸ்மிருதி 1-வது அத்தியாயம், 90-வது சுலோகம்; ஆரீதஸ்மிருதி, இரண்டாமத்தியாயம், 6-வது சுலோகம்; ஞானப்பிரகாச சுவாமிகள் சாதிநூல் 4 - வது செய்யுள்; Bhagwat Gita, ch. XVIII, P. 85.

‡ புதஸ்மிருதி, 26-வது சுலோகம்.

கின்றார் அதிவீரராம பாண்டியர். வணிகர் முதலிய பெயர்களைப் பெற்றதும் இக்கருத்தை நோக்கியேயென்க. தொல்காப்பியரும் "வைசிகன் பெறுமே வாணிகவாழ்க்கை" என்றார். இதனால் "**வணிகரது முக்கிய குலத்தொழில் வர்த்தகம்**" என்றேற்பட்டது.

## IV. வேளாளர் அறுதொழில்.

*ப்ரஹஸ்பதிஸ்மிருதி.*

శౌచం బ్రాహ్మణ శుశ్రూషా సత్యమక్రోధ ఏవ చ।
శూద్రకర్మ తథా మంత్రో నమస్కారోప్య చోదితః॥

*திவாகரம்.*

*வேளாள ரறுதொழி லுழவு பசுக்காவ*
*றெள்ளிதின் வாணிபங் குயிலுவங்காருகவினை*
*யொள்ளிய விருபிறப் பாளர்க்கேவல்செயல்.*

| | |
|---|---|
| க. ஏருழுதல் | ச. குயிலுவத் தொழில் செய்தல் |
| உ. பசுக்காத்தல் | ரு. காருக வினைகளாக்கல் |
| ௩. பொருளீட்டல் | சு. அடிமைபூண் டொழுகல் * |

என்னு மறுதொழில்களும் சூத்திரருக்கு விதிக்கப்பட்ட குலத் தொழில்கள். இவற்றுள் "வேளாண்மாந்தர்க் குழுதூணல்ல, தில் லெனமொழிப பிறவகை நிகழ்ச்சி," என்னுந் தோல்காப்பியர்வாக் கால் ஏருழுதலே சிரேஷ்டமெனப்படும், இதை "உழவர்க்கழகிங் குழுதூண் விரும்பல்" என வற்புறுத்துகின்றார் அதிவீரராமபாண்டி யர், இதனால் "**வேளாளருக் கேருழுதலே**" சிரேஷ்டமெனப்படும்.

மேற்கூறிய "**பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்**" என்னு நான்கு சாதிக்குங் கூறிய அவ்வாறு சாதித்தொழில்களுள் ஒவ்வொன்று சிறந்தது. அது :—

க. பிராமணருக்கு வேதம் ஓதலும்,
உ. க்ஷத்திரியருக்கு படைக்கலம்பயிற்றலும்,

* மநுஸ்மிருதி, 1-வது அத்தியாயம், 91-வது சுலோகம்; பராசரஸ் மிருதி, ஆசாரகாண்டம், 1-வது அத்தியாயம், 64-வது சுலோகம்; புதஸ் மிருதி, 27-வது சுலோகம்; ஞானப்பிரகாசசுவாமிகள் சாதிநூல், 5-வது செய்யுள்; Wilkins' Bhagwat Gita ch. XVIII, P. 85.

ங. வைசியருக்கு வர்த்தகஞ்செய்தலும்,
ச. சூத்திரருக்கு ஏருழுதலுஞ் சிறந்தவை.*

**2.** இவற்றுள் அரசருக்குரிய "படை" என்பது ஆயுதப் பொதுப்பெயர். அது "வாளையும், வேலையும், வில்லையும்" உள்ளடக்கும்.

பெரியபுராணம், திருவாரூர்ச்சிறப்பு, 18-வது செய்யுள்.

தவமுயன்றரிதிற்பெற்ற தனியிளங் குமரனுஞ்
சிவமுயன் றடையுந்தெய்வக் கலைபலதிருந்தவோதிக்
கவனவாம்புரவியானை தேர்ப்படைத்தொழில்கள்கற்றுப்
பவமுயன்றதுவும் பேரேயெனவரும் பண்பின்மிக்கான்.

இதில்வரும் படையென்பது "வாள், வேல், வில்" என்னு மூன்றையுமுள்ளடக்கும். அது "ஒத்த வில் வேல் வாள் யானையுயர் பரித்தேரோடாரே." என்னு நிகண்டிற்கூறிய வறுவகையில் "புரவி யானை தேர்" என்னும் மூன்றையும் விளக்கி மற்ற "வாள் வேல் வில்" ஆகிய மூன்றையும் விளக்காது படையெனத் தொகுத்துக் கூறியதாலென்க. படுத்தற்கருவியாதலால் படை எனப்பட்டது. "படுத்தல்=அழித்தல்" (சதுரகராதி) க்ஷத்திரியருக்கு சாதித்தர்மத்தோடுகூடின ஆயுதத்தொழிலைப் பார்க்கிலும் சிறந்த தொழில் வேறு கிடையாது என மநு கூறுகின்றார்.

மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 119-வது சுலோகம்.

ஸ்ரயஜெ-ாவிஜயஸ்ரஸ்ரா-நாஷவெஸ்ரா ஜ்நாஜ-வஃ।
ஶஷ்ஹரெணவெஶ்ாநா க்ஷீக்ஷாயஶ்ரா-ரோஷாயெஸ்ஷ்॥

க்ஷத்திரியனுக்கு ஆயுதமெடுத்து சத்துருவை ஜெயிப்பது ஜாதித்தருமம்" எனப்பட்டிருக்கின்றது. இவ்வரசத்தொழிலாகிய படைபயிற்றலையே கிராமணிகுல ஏனாதிநாதநாயனார் பயின்றனர் என உபமன்னியர் விளக்கியிருக்கின்றார். அதனுண்மை யாவருக்

---

* "அந்தணர் வேள்வியோட்டுமறைமுற்றுக
வேந்தன்வேள்வியோ டியாண்டுபெலவாழ்க
வணிகரிருநெறிநீணிதி தழைக்க
பதினெண்கூலமுமுழவர்க்கு மிகுக" (கூத்துவநூல்.

கும் இனிது விளங்குமாறு, அதனை ஈண்டு விளக்கி, அதுபற்றிய ஏனையபிரமாணங்களைப் பின்னர் வரைவாம்.

உபமன்னியு பக்தவிலாசம், 29-வது அத்தியாயம்,

ஏனாதிநாதர்சரிதம், 3-வது சுலோகம்.

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌨𑌾𑌦𑌿𑌨𑌾𑌥𑌾𑌖𑍍𑌯 𑌆𑌸𑍀𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌕𑍁𑌲𑍋𑌤𑍍𑌭𑌵𑌃 ।
𑌨𑍃𑌪𑌶𑍍𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌲𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌶𑌿𑌵𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 ॥

அஸ்மின்னேனாதிநாதாக்ய ஆஸீத்ஸாக்ஷிகுலோத்பவ: |
ந்ருபஸ்ஸஸ்த்ரகலாசார்ய: சிவபக்தாங்க்ரிஸ்துதி: ||

| | |
|---|---|
| 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 | அந்த (க்கிராமத்தில்*) |
| 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿 | சூரியனது |
| 𑌕𑍁𑌲𑍇 | வம்ஸத்தில் |
| 𑌉𑌤𑍍𑌭𑌵𑌃 | பிறந்தவரும், |
| 𑌨𑍃𑌪𑌃 | அரசரும், |
| 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰 | ஆயுதம் |
| 𑌕𑌲𑌾 | வித்தைக்கு |
| 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 | குருஸ்தானமும், |
| 𑌶𑌿𑌵𑌭𑌕𑍍𑌤 | சிவனடியார்களது |
| 𑌅𑌙𑍍𑌘𑍍𑌰𑌿 | பாதத்தை |
| 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 | துதிப்பவரும், (ஆகிய) |
| 𑌏𑌨𑌾𑌦𑌿𑌨𑌾𑌥𑌾𑌖𑍍𑌯𑌃 | ஏனாதிநாத நாயனார் என்பவர் |
| 𑌆𑌸𑍀𑌤𑍍 | (ஒருவர்) இருந்தார். |

(பொ-ரை.) "அந்தக்கிராமத்தில் சூரியனது குலத்தில் பிறந்தவரும், அரசரும், ஆயுதவித்தைக்கு குருஸ்தானமும், சிவனடியார்களது பாதத்தை துதிப்பவருமாகிய ஏனாதிநாதநாயனார் என்ப

---

* இச்சுலோகத்திற்கு முன்சுலோகத்தில், அதாவது இரண்டாவது சுலோகத்தில் ஏனாதிநாதநாயனார் வசித்த ஊரை (𑌶𑌾𑌪𑌰𑌗𑍍𑌰𑌾𑌮𑍋) "சாபரக்கிராமம்" எனப்பட்டிருக்கின்றது.

வர் ஒருவர் இருந்தார்" என்பதாம், இச்சுலோகத்தில் ஏனாதிநாத நாயனரை "ஸஸ்த்ரகலாச்சாரியர்" என்றனர் உபமன்னியு மகருஷி.

ஸஸ்த்ரம்=ஆயுதம், படை
கலை=வித்தைக்கு
ஆச்சாரியா=குருஸ்தானம்.

"வாள், வேல், வில் முதலிய ஆயுத* வித்தைக்கு நாயனர் ஆசாரியர்" என்பது திரண்டபொருள். சஸ்த்ரம் என்பதற்குத் தமிழ்ப்பிரதிபதம் படை எனப்படும், இதில்வரும் "ஸஸ்த்ரம்" அதாவது "ஆயுதம் பயிற்றல்" அரசருக்குரிய அறுகுலத்தொழில் களுள் ஒன்று.

ப்ரஹஸ்பதி ஸ்மிருதி.

ఇజ్యాధ్యయనదానేచప్రజానాం పరిపాలనం ।
శస్త్రాస్త్రధారణం సేవాకర్మాణి క్షత్రియస్యతు ॥

(பொ-ரை). க்ஷத்திரியர்கள் வேதம் ஓதல், யாகஞ் செய்தல், தானங்கொடுத்தல், உலகோம்பல், போர் செய்தல், வாள், வேல், வில் வித்தையைப் பயிற்றல்† முதலிய அறு தொழில்களைப் பெறுவர்.

மநுஸ்மிருதி, 10-வது, அத்தியாயம்,
79-வது, சுலோகம்.

𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌣𑌿𑌕𑍍𑌪𑌶𑍁𑌕𑍃𑌷𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑌃।
𑌆𑌜𑍀𑌵𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌤𑍁 𑌦𑌾𑌨𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 𑌯𑌜𑌿𑌃॥

(இ-ள்). க்ஷத்திரியனுக்கு வாள் பாணம் முதலிய ஆயுதத்தைத் தரித்து உலகாள்வதும், வைசியனுக்கு வர்த்தகம், பசுக்காவல், பயிர் இவைகளும் ஜீவனோபாயமாம். யாகஞ் செய்தல், தானங்கொடுத்தல் வேதம் ஓதல் இவைகள் தர்மோபாயமாம்.

---

* "ஆயுதந்து ப்ரஹரணம் ஸஸ்த்ராஸ்த்ரம்." (அமரம்.)

† நீதிசாஸ்த்ரம், 186-வது, சுலோகம், அமரம், நாநார்த்ததீபிகை, 235-வது, சுலோகம்,

### பராசர ஸ்மிருதி.

### ஆசாரகாண்டம், 1-வது, அத்தியாயம், 61-வது, சுலோகம்.

క్షత్రియోహి ప్రజారక్షన్ శస్త్రపాణిః* ప్రదండవాన్ ।
నిర్జిత్య పరసైన్యాని క్షితింధర్మేణ పాలయేత్ ॥

(இ-ள்.) "**க்ஷத்திரியன் ஆயுதங்களைக் கையில் ஏந்தித் துஷ்டர்களைச் சிக்ஷித்துச் சத்துருக்களை ஜெயித்துப், பிரஜைகளை தன்னிடத்தில் அன்புள்ளவராகச் செய்து பூமியை தர்மத்தால் பரிபாலனஞ் செய்யக்கடவன்**" என்பதாம், இவைகளே அரசர்களது குலத்தொழில்கள் எனப்படும். †

இச்சுலோகங்களில் வரும் "சஸ்த்திராஸ்திரம்" என்பதில் "சஸ்த்ரம்‡" என்றால் "இரணமுண்டாக்கும்படியான ஆயுதங்களையும்; "அஸ்த்ரம்§" என்றால் அதிர்ச்சியுண்டாக்கும்படியான

---

* "சஸ்த்ரபாணி" என்றால், "சஸ்த்ரம் = ஆயுதம், பாணி = கை" (அமரம்) "கையில் ஆயுதம் பொருந்தப் பெற்றவன்" என்பதாம். "மறப்படை வாட் சுற்றத்தார்" என்பதும் இக்கருத்தையே நோக்கும்.

† கூர்மபுராணம், சந்திரவங்கிச முறைத்தவத்தியாயம், 97 வது, செய்யுள்; அரிச்சந்திரபுராணம், உத்தரகாண்டம், 6-வது, செய்யுள்; கம்பராமாயணம், பாலகாண்டம், திருவவதாரப்படலம், 128-வது, செய்யுள்; பாரதம் துஷ்டியந்தச் சருக்கம், 61-வது, செய்யுள், சீவகசிந்தாமணி, சீவகன் உற்பத்தி, 370-வது, செய்யுள்; பிரமோத்தரகாண்டம், பத்திராயுவுக்கரசளித்தவத்தியாயம், 5-வது, செய்யுள், இரகுவம்ஸகாவியம், 3-வது, சருக்கம், 31-வது, சுலோகம்.

‡ "சஸ்த்ரம் = 1. கைவிடாப்படை (திவாகர நிகண்டகாதி).
2. A Sword, A Scimitar (Wilson).
3. A general a Weapon (Rottler).
4. A Weapon used in close combat as a sword speare (Winslow).

§ அஸ்த்ரம் = 1. கைவிடுமாயுதப்பொது, முன்விடுமம்பு (சதுரகராதி).
2. A Dart அம்பு (Wilson).
3. In general a missile weapon thrown by the hand (Rottler).
4. A Dart thrown forward (winslow).

ஆயுதங்களையுங் குறிக்குமென்றார் பகவத்கீதையில் "சிவராவ், B.A. இக்கருத்தை கீதார்த்த தீபிகையாரும், கீதார்த்த சந்திரிகையாரும் அங்கீகரிக்கின்றனர்கள். இவைகளால் "ஸஸ்த்ரம்" என்பது ஆயுதப் பொதுப்பெயரென விளங்கலால் "வாளையும், வில்லையும், வேலையும்" உள்ளடக்கும். "அஸ்த்ரம்" என்பது பாணங்களைக் குறிக்குமென்றேற்பட்டது. இச் "ஸஸ்த்ராஸ்திரம்" என்பது அரசரது அறுதொழில்களில் ஒன்றென "ப்ரகஸ்பதி ஸ்மிருதி" யாதிநூற்களான் பிரகாசப்படுத்தி யிருக்கின்றது. இவற்றுள் ஏனாதிநாத நாயனார் பயிற்றியதாகக் கூறியது "ஸஸ்த்ரமே" அதை விளக்கவே "ஸஸ்த்ர கலாசாரியர், ஸஸ்த்ரதுலோத்பவர்" என்பது உபமன்னியர். அதனால் ஏனாதிநாத நாயனார் எல்லா ஆயுதத்திலுஞ் சிறந்தவர் எனத் துணியப்பட்டது. "சஸ்திரம்" என்பது "வாள், வேல், வில்" முதலிய ஆயுதத்திற்குப் பொதுப்பெயராயிருக்க, சேக்கிழார் "வாள்" என்னும் பொருளைத் தந்து "வடிவாட்படைபயிற்றுந் தன்மைத்தொழிலர், வாட் கூற்றத்தார்" என வலியுறுத்தி யிருக்கின்றனர். அப்படி சேக்கிழார் கூறியது :—

உபமன்னியு பக்தவிலாசம் ஏனாதிநாதர் சரிதம்.
34-வது சுலோகம்.

வஜெநஸஸெ௵ ஊ-ஃவவாஸவ௰ா
உ-ஹ-ந-ஹவ௰தஜொக்ஷ வஷுஜ-தஜெஷ

"கட்கேநசத்ரோ ர்பவபாஸபந்தா
துந்முச்யதத்மோக்ஷ பதஞ்சதஸ்மை"

"பாசபந்தத்தை சத்துருவின் கட்கத்தினால் அறுத்து மோட்சத்தை யடைந்ததாலும் ;

சேக்கிழார், பெரியபுராணம்,
ஏனாதிநாத நாயனார் புராணம், 31-வது, செய்யுள்.

சேட்டாருங்கங்குல் புலர்காலைத் தீயோனும்
நாட்டாரைக் கொல்லாதே நாமிருவேம் வேறிடத்து
வாட்டாயங்கொள்போர் மலைக்க வருகவெனத்
தோட்டார்பூந் தாரார்க்குச் சொல்லிச் செலவிட்டான்.

32-வது, செய்யுள்.

இவ்வாறு கேட்டலுமே யேனாதிநாதனார்
அவ்வாறுசெய்த லழகிதெனவமைந்து
கைவாளமர்விளைக்கத் தான்கருது மக்களத்தில்
வெவ்வாளுரவோன் வருகவென மேற்கொள்வார்,

33-வது, செய்யுள்.

சுற்றத்தார்யாரு மறியாவகை சுடர்வாள்
பொற்பலகையுந்தாமே கொண்டு புறம்போந்து
மற்றவன்முன் சொல்லி வரக்குறித்த வக்களத்தே
பற்றலனைமுன்வரவு பார்த்துத் தனிநின்றார்.

35-வது, செய்யுள்.

வெண்ணீறுநெற்றி விரவப் புறம்பூசி
யுண்ணெஞ்சில் வஞ்சக்கறுப்பு முடன்கொண்டு
வண்ணச் சுடர்வாண் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப்போர் வீரர்க்குச் சொன்னவிடம்புகுந்தான்.

இப்பாக்களில் சுற்றத்தோடும், சேனையோடும் சண்டைசெய்து தோற்றோடிய அதிசூரன், பிறகு சுற்றமின்றி ஏனாதிநாதநாயனாரை வஞ்சிக்க நினைத்து "நாட்டாரைக் கொல்லாதே நாமிருவேம் வேறிடத்து வாட்டாயங்கொள்போர் மலைக்கவருக" வெனச் சொல்லித் தூதுவிடுத்தனன். அதை நாயனார் அங்கீகரித்து, அடுத்ததினம் "கைவாளமர் விளைக்கத்தான் கருதுமக்களத்தில், சுடர்வாள் பலகையுந்தாம் கொண்டுவரக்குறித்த வக்களத்தில் முன் வரவுபார்த்து நின்றார்." அப்படிப்பார்த்துநின்றவரை வஞ்சனையே ஒருருவமாகக்கொண்ட அதிசூரன் "சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு சொன்னவிடம்புகுந்து" வாளால் சமர்செய்து, வாளால் நாயனாரை வெட்டினதினாலும்; சேக்கிழார் வாளையே தலைமையாகக்கொண்டு அவ்விருவர் சுற்றத்தார்களையும் "வாட் * டொழிலர், வாட் சுற்றத்தார்" என்றது, இது கவிமரபு, வாள் மற்ற

* "வாள்" எல்லா ஆயுதத்தைப்பார்க்கிலும் அரசனது கையிலேயே சதா பொருந்தப்பெரும் ஆயுதமாயிருத்தலால், அது மற்ற ஆயுதத்தைப்பார்க்கிலுஞ் சிறந்தது.

ஆயுதங்களுக்கு உபலட்சணமெனக் கூறினும் பொருந்தும், உபலட்சணமாவது:—"ஒருமொழியொழிதன் னினங் கொளற்குரித்தே" * என்பதாம், அதாவது "சொல்லப்பட்டதனுற் சொல்லப்படாத அதன் இனங்களையுங் கூட்டிக்கொள்ளுதல்" † எனப்படும், இவ்விதியால் ஏனாதிநாதநாயனாரும், அவர் சுற்றத்தார்களாகிய கிராமணிகளும் வாளோடு வில்லிலும் வேலிலுஞ் சிறந்தவர் எனத் துணியப்பட்டது, அப்படி சிறந்தவர்கள் எனவே அகஸ்தியரும், சேக்கிழாரும் கூறியிருக்கின்றார்கள், வருமாறு :—

அகஸ்திய பக்தவிலாசம் ஏனாதிநாதர் சரிதம்,

16-வது சுலோகம்.

நிரங்குஶம்விஶிஷ்யாஸி ஶஸ்த்ரே ஶாஸ்த்ரே ச வௌஜஸ꞉
ஸர்வாயுதவிஶேஷாணாம் ப்ரயோகபரிமோக்ஷயோ꞉

நிரம்குஸம்விசிஷ்யாஸிச் சஸ்த்ரேஸாஸ்த்ரே மவௌஜஸ :
சர்வாயுதாவிஸேஷாணும் ப்ரயோகபரிமோக்ஷயோ :

ஏனாதிநாத நாயனார் பலவித ஆயுதங்களிலும் விசேஷப்பட்டவர் என்றனர் அகஸ்தியர்,

பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம்,

16-வது, செய்யுள்.

கால்கழல்கட்டிய மள்ளர்கள்கைகளின் மெய்களடக்கிய
வாளொளிவட்டமுனைத் திட வந்திருகைகளின் முந்தினர்
வேலொடுவேலெதிர் நீள்வன மேவிய பாதலம் விட்டுயர்
ஞாலமுறும் பணிவீரர்க ணாகிமிர்கின்றன வொத்தன.

17-வது, செய்யுள்.

வெங்கண்விறற்சிலை வீரர்கள் வேறிருகையினு நேர்பவர்
தங்கள்சிலைக்குல முந்தினதாவில் சரங்கணெருங்குவ
பொங்குசினத்தெரியிற் புகைபோகுகொடிக்கள்வளைத்தெதிர்
செங்கண்விழிக்கனல் சிந்திய சீறுபொறிச் செலவொத்தன.

---

* நன்னூல், பொதுவியல், 7-வது, சூத்திரம்

† "எடுத்தமொழியினஞ் செப்பலு முரித்தே" என்னுந் தொல்காப்பிய விதிப்படி இனமாகிய மற்றவையையுங் குறிப்பானுணரப்படும்.

22-வது, செய்யுள்.

பொற்சிலைவளைய வேதிர்ந்தவர் புற்றரவனைய சரம்பட
விற்படைதுணியவு நின்றிலர்வெற்றிகொள் சுரிகைவழங்கினர்
முற்றியபெருவள னின்றியுமுற்படு கொடைநிலைநின்றிட
உற்றனவுதவிய பண்பினரொத்தன ருளர் சிலகண்டகர்.

என்பதாதியால் நாயனார் வம்ஸத்தவர்கள் வாளோடு வில்லி லும், வேலினுஞ் சிறந்தவர் எனத்துணியப்படும். (நாநாஸ்த்ர யொமத:) "நாநாஸ்த்ர பிரயோகத:*" என அகஸ்தியரும் பலவகைப்பட்ட ஆயுதங்களில் நாயனார் குலத்தவர்கள் சிறந்தவர் கள் என விளக்குகின்றார். அப்படி சிறந்தவர்களை "படைச் சுற்றத்தார்" எனப் பொதுப்படக்கூறாது, "வாட்சுற்றத்தார்" என வகுத்தோதியது, மேற்கூறிய காரணமேயென்க.

3. பெரிய புராணம், ஏனாதிநாதநாயனார் புராணம்,
3-வது, செய்யுள்.

தொன்மைத்திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டி
னன்மைக்கணின்ற நலமென்றுங் குன்றாதார்
மன்னர்க்கு வென்றிவடி வாட்படை பயிற்றுந்
தன்மைத்தொழில் விஞ்சையிற்றலைமை சார்ந்துள்ளார்.

| | |
|---|---|
| தொன்மை | பழமையாகிய |
| திருநீற்று | திருவெண்ணீற்றிற்கு |
| தொண்டின் | அடிமைத்திறத்தார் (செய்யும்) |
| வழிபாட்டின் | வணக்கத்தினால் (உண்டாகும்) |
| நன்மைக்கணின்ற | நன்னெறியின்கண் நிற்கின்ற |
| நலம் | தகுதிப்பாடு |
| என்றும் | எந்நாளும் |
| குன்றாதார் | குறையாதவர், |
| மன்னர்க்கு | அரசர்களுக்கு |
| வென்றி | வெற்றியைத் (தரத்தகுந்த) |
| வடி | கூர்மை (பொருந்திய) |
| வாட்படை | வாள் ஆயுதத்தை |
| பயிற்றும் | பயிற்சிசெய்விக்கின்ற |

* அகஸ்திய பக்தவிலாசம், ஏனாதிநாதர் சரிதம், 31-வது, சுலோகம்.

| | |
|---|---|
| தன்மை | சுவபாவத்தினு லுண்டான |
| தொழில் | (குலத்) தொழிலாகிய |
| விஞ்சையில் | வித்தையில் |
| தலைமை | முதன்மையை |
| சார்ந்துள்ளார் | அடைந்தவர். |

(இ-ள்). "அவர் பழமையாகிய திருவெண்ணீற்றின்மேல் அன்புவைத்தொழுகும் அடிமைத்திறத்தாற் செய்யும் வழிப்பாட்டினு லுண்டாகும் நன்னெறிக்கண் நிற்கின்ற தகுதிப்பாட்டில் எந்நாளுங் குறையாதவர் அதுவன்றி அரசர்களுக்கு வெற்றியினைத் தரத்தகுந்த கூறிய வாளாயுதத்தைப் பயிற்சிசெய்விக்கின்ற சுவபாவத்தினுலுண்டான தொழிலாகிய வித்தையில் முதன்மையடைந்தவர்" என்பதாம், அவர் குலத்தொழிலாகிய ஆயுதவித்தையை "மன்னர்க்குப் பயிற்றுந்தலைமையர்" எனக் கூறியது அவ்வாயுதப் பயிற்சியின் சிறப்புத்தோன்றவேயாகும். இதோடு வாட்டொழில் அன்றி வேறு தொழில் ஏனுதிராத நாயனுருக்குக் கிடையாதெனவும், அத்தொழிலேயே நாயனர் குலத்தொழிலாகப் பெற்றவர் எனவும் வற்புறுத்தி விளக்க சேக்கிழார் "தன்மைத்தொழில்" என்றூர்.

தன்மை=சுவபாவம் (பேரகராதி); குணம் (சதுரகராதி); "தன்மையியல்புந் தன்மையுடைப் பொருளும்" (திவாகரம்) தன்மையேரியல்பினேடு தன்மையினிடமுஞ்சாற்றும்" (சூடாமணி நிகண்டு); தன்மையென்பதோரிடமுமழகு, மியல்புமெனவே யியம்பலாகும்" (ரேவணசூத்திரம்); "மரபுமுறையுமுவல் மாலைபெற்றி தன்மை, பரிசில் கிழமை விதிபால்" (உரிச்சொல்நிகண்டு); **Nature, Inheritance** * சுவபாவம்" (Winslow); **Primary quality** (Rottler); என்னும் பலபொருள் குறித்த ஒரு பெயர்த்திரிச்சொல். அது "சோந்தம், குலத்துக்கடுத்த, உடன்பிறந்த, சென்மவியற்கையான" என்னும் பொருள்களைப் பயக்கும்.

---

* Inheritance=(n) An estate that a man has by descent, (V. t) to receive by descent from a ancestor, to receive by birth (Collins' graphic English Dictionary.)

இவைகளால் "**தன்மைத்தொழில்**" என்னும் வாக்கியம் நாயனருக்குக் **குலத்தொழில்** எனவிளக்கும், "**குலத்தொழில்**" எனப் பொருள்பட "**தன்மைத்தொழில்**" எனச் சேக்கிழார் கூறியது அவர் இச்சையாலன்று அவர் முதனூலாகக் கொண்ட பக்தவிலாசத்துணிபென்க, அதில் (குலகர்மணி) "**குலக்கர்மம்**" எனப்பட்டிருக்கின்றது.

**4.** உபமன்னியு பக்தவிலாசம்,

29-வது, அத்தியாயம், ஏனாதிநாதர் சரித்திரம், 6-வது, சுலோகம்.

குலகர்ம ஸமுத்பந்ந வ்ருத்தி ஶாஸ்த்ராயுதாஶ்ரமே।
ஏநாதிநாதமாசார்யம் நஸேஹே பௌருஷேண ஸ:॥

குலக்கர்ம சமுத்பந்ந* வ்ருத்தி ஶாஸ்த்ராயுதஶ்ரமே |
ஏனாதிநாதமா சார்யங் நஸேஹே பௌருஷேணஸ : ||

| | |
|---|---|
| ஸமுத் | (ஏனாதிநாதநாயனார் குலத்தவர்கள்) எல்லோருக்கும் |
| குலகர்மணி | வம்ஸத்தொழிலாக |
| உத்பந்ந | பிறந்திருக்கும், ஏற்பட்டிருக்கும் |
| வ்ருத்தி | தொழிலில் (உள்ளவனுகிய) |
| ஸ: | அந்த அதிசூரனென்பவன் |
| ஶாஸ்த்ர | மற்றவர்களுக்கு |
| ஆயுதம் | ஆயுதவித்தை |
| ஶ்ரமே | (கற்பிக்குந்) தொழிலில் |
| ஆசார்யம் | குருஸ்தானமாகிய |
| ஏநாதிநாதம் | ஏனாதிநாதநாயனாரை |
| நஸேஹே | எப்பொழுதும் |
| பௌருஷே | பவுருஷத்தினால் |
| ண ஸ: | சகிக்காது (விரோதித்துவந்தான்) |

(பொ-ரை). ஏனாதிநாதநாயனார் குலத்தவர்கள் எல்லோருக்கும் வம்ஸத்தொழிலாக ஏற்பட்டிருக்கும், தொழிற்துறையில் உள்

* (ஸமுத்பூத) "சமுத்பூத" என்பது சுப்பராய சாஸ்திரிகளிடம் இருக்கும் பிரதியில். மேற்சுலோகம் நடராஜ சாஸ்திரிகளிடமிருக்கும் பிரதியிலுள்ளது.

ளவனுகிய அதிசூரனென்பவன், மற்றவர்களுக்கு ஆயுதவித்தை கற்பிக்குந் தொழிலில் குருஸ்தானமாகிய ஏனாதிநாத நாயனுரை எப்பொழுதும் பொருமைக்கொண்டு விரோதித்துவந்தான்" என்பதாம். இச்சுலோகத்தில் ஏனாதிநாதநாயனுருக்கு ஆயுதத்தொழில் குலத்தொழில் என விளக்க (𑌕𑍁𑌲𑌕𑌰𑍍𑌮𑌣𑌿) "குலக்கர்மணி" என்றார் உபமன்னியர் "𑌕𑍁𑌲𑌃=குலத்திற்கு, 𑌕𑌰𑍍𑌮=தொழில்; குலக்கர்மம் =குலத்திற்குத் தொழில் அல்லது குலத்தொழில்" எனப்படும். இவைகளால் சேக்கிழார் உபமன்னியர் ஆகிய இருவர்கள் கருத்தும் ஒன்றெனத் துணியப்படும். இன்னும் இவ்வுபமன்னியர் வாக்கை சேக்கிழாரும் பின்பற்றுகின்றார்.

பெரியபுராணம், ஏனாதிநாதநாயனுர் புராணம்.

5-வது செய்யுள்.

நள்ளார்களும்போற்று நன்மைத்துறையின்கண்
எள்ளாதசெய்கை யியல்பினெழுகு நாட்
டள்ளாததங்க டொழிலுரிமைத் தாயத்தின்
உள்ளானதிசூரனென்பா னுளனுனான்.

| | |
|---|---|
| நள்ளார்களும் | பகைவர்களும் |
| போற்றும் | புகழத்தகுந்த |
| நன்மை | நன்மையாகிய |
| துறையின்கண் | சிவபக்தி மார்க்கத்தில் |
| எள்ளாத | குறைவில்லாத |
| செய்கை | செய்கையோடுகூடிய |
| இயல்பின் | முறைமையில் |
| ஒழுகும் | நடக்கும் |
| நாள் | அந்நாளில் |
| தள்ளாத | தள்ளக்கூடாத |
| தங்கள் | தங்களுடைய |
| தொழில் | (படைத்) தொழிலுக்கு |
| உரிமை | பாத்தியதையுடைய |
| தாயத்தின் | சுற்றத்தார்களில் |
| உள்ளான் | உள்ளவனுகிய |
| அதிசூரன் | அதிசூரன் |

என்பான் என்று சொல்லப்பட்ட ஒருவன்
உள்ளானான் இருந்தான்.

(பொ-ரை.) " தமக்குப் பகைவர்களாயுள்ளவர்களும் தம்மை வழிபடுவதற்குரிய நன்மையாகிய சிவபக்தி மார்க்கத்தில் குறைவிலாது நற்செய்கையோடுகூடிய முறைமையில் வாழ்கின்ற காலத்தில், தள்ளக்கூடாத தங்கள் குலத்தொழிலின் உரிமைக்குரிய சுற்றத்தார்களில் உள்ளவனாகிய அதிசூரன் என்றொருவனிருந்தான்." என்பதாம். இப்பிரயோகத்தில் " அதிசூரனை படைத்தொழிலுக்குப் பாத்தியதையுடைய ஏனாதிநாதநாயனார் சுற்றத்தார்களில் ஒருவன்" எனப்பட்டிருக்கின்றது. ஏனாதிநாதநாயனாருக்கும் அவர் சுற்றத்தாருக்கும் படைப்பயிற்றுந் தொழில் குலத்தொழிலாதலால்,, தள்ளக்கூடாத குலத்தொழிலெனத் தோன்ற " தள்ளாததங்கள் தொழில் " என்றார். "தள்ளாத" என்பதற்கு " தள்ளக்கூடாத ' எனினும், "தங்கள் குலத்தவரைவிட்டு நீங்காத" எனினும் பொருந்தும். அது குலத்தொழிலாதலால் தள்ளக்கூடாததே!

பகவத்கீதை 18—வது, அத்தியாயம், 43-வது, சுலோகம்.

ஶௌர்யம் தேஜோ த்ருதிர்தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயநம் ।
தாநமீஶ்வரபாவஶ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்॥

சௌர்யந்தே ஜோத்ருதிர்தாக்ஷ்யம் யுத்தேசாப்யபலாயநം ।
தாநமீஸ் வரபாவஸ்ச க்ஷாத்ரம் கர்மஸ்வ பாவஜம்॥

(இ-ள்). பராக்கிரமம் கீர்த்தி தைர்யம் சாமார்த்தியம் யுத்தத்தில் பின்வாங்காமை தானங்கொடுப்பது செங்கோல்செலுத்துவது இவைகள் க்ஷத்திரியருக்கு சுவபாவமாயுள்ள கருமங்களாயிருக்கிறது" என்பதாம். இதில் க்ஷத்திரியருக்கு யுத்தஞ்செய்தலும், செங்கோல் செலுத்தலும் சுவபாவத்தொழிலென்றார். (க்ஷாத்ரம் கர்மஸ்வபாவஜம்) " க்ஷாத்ரம் கர்மஸ்வபாவஜம் " என்பதற்கு க்ஷாத்ரம் = க்ஷத்திரியர்களுக்கு, சுவபாவம் = இயற்கை அல்லது குலத்திற்கு இயற்கையாயுள்ள, கர்மம்=தொழில்" அதாவது, " ஆயுதத்தொழில் க்ஷத்திரியருக்குக் குலத்தொழில்" என்பது தேர்ந்தபொருள். அதனாலேயே சேக்கிழார் படைத்தொழிலை நாயனாருக்குத் "தள்ளக்கூடாத தொழில் " என்றது.

பகவத்கீதை, 2-வது அத்தியாயம், 31-வது சுலோகம்.

𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨𑌵𑌿𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ।
𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

ஸ்வதர்ம மபிசாவேக்ஷ்ய நவிகம்பிது மர்ஹஸி |
தர்ம்யாத்தியுத்தாச்ச்ரெயொ௺ந்யத் க்ஷத்ரியஸ்யநவித்யதே.

(இ-ள்.) "மேலும் உன்வருணத்தாருக்கு விதிக்கப்பட்டிருக்கிற (அதாவது க்ஷத்திரியனுக்கு யுத்தஞ்செய்வது ஸ்வதருமமானதாலந்த) தருமத்தைத்தெரிந்து யுத்தஞ்செய்யத் தயங்குவது உனக்குச் சரியல்ல, (ஏனென்றால்) க்ஷத்திரியனுக்குத் தருமத்தோடுகூடின யுத்தத்தைக்காட்டிலும் மேலானது வேறேயில்லை", என்பதாம். 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯=க்ஷத்திரியனுக்கு, 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌤𑍍=தர்மத்தையடுத்த, 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍=யுத்தத்தைக்காட்டிலும், 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍=வேறு, 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃=நற்செய்கையானது, 𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇=இல்லை; அதாவது க்ஷத்திரியனுக்கு தருமத்தை யடுத்த யுத்தத்தைக்காட்டிலும் வேறு நற்செய்கை கிடையாது," எனப்பட்டிருக்கின்றது, இதோடு "உன்வருணத்தாருக்கு விதிக்கப்பட்டிருக்கிற தொழில்" எனப் பொருள்பட (𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂) "ஸ்வதர்மம்" என்றார். "ஸ்வதர்மம்" எனினும், ஏனைதி நாதநாயனாரைச்சுட்டி உபமன்னியர்கூறிய (𑌕𑍁𑌲𑌕𑌰𑍍𑌮𑌂) "குலக்கர்மம்"* எனினும் பொருள் ஒன்றே! ஆயுதத்தொழில் அரசர்களுக்குக் குலத்தொழிலாதலால் நீதயங்கப்படாது, அதற்கு மேலான தருமம் உன் க்ஷத்திரியகுலத்திற்குக் கிடையாது. செய்தே தீரவேண்டும் எனவும்; அப்படிசெய்தால் உனக்கு மோட்சங்கிடைக்குமென அடுத்தப் பிரயோகத்தில் அர்ச்சுனனுக்கு வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. வால்மீகரும் "க்ஷத்திரியனாகிய ஒருவன் நன்மைத்தருவதென்று ப்ரத்யக்ஷமாகக் காணப்பட்ட க்ஷத்திரிய தருமத்தைத்துறந்து இம்மையிற் துன்பந்தருவதும், மறுமையில் இன்பந்தருமோவென ஐயுறத்தக்கதும், குறியற்றதும், காலாந்தரத்தில் பலனைத்தருவதும், அரசன்செய்யத் தகுமெனவொரு விதியினாலும் நிச்சயஞ்செய்யப்பட்டிலதுமாகிய

---

* குலக்கர்மம்=குலத்திற்குரிய தொழில், குலத்தொழில்.

ருஷிதருமத்தைச் செய்வானோ?" என்றார்*. வியாசரும் "க்ஷத்திரியன் எப்போது சஸ்திரத்தினால் மரணத்தையடைகிறானோ? அப்போது கௌரவிக்கப்படுகிறான். ஆதலால் நாம் யுத்தத்தில் ஜராசந்தனை யெதிர்ப்போம்"† என்றார் கிருஷ்ணபகவான். வேமனனரும் "இராஜவருலகெபுடு ரணரங்கமூலசிந்த" என்றனர். கம்பரும், குல ஒழுக்கமேதவமென, "சீலமன்றியுஞ்செய்தவம் வேறுமொன்றுளதோ"‡ என்றார். இத்யாதி நூற்களின் கருத்தையுட்கொண்டே சேக்கிழார் ஏனாதிநாதநாயனாரும் அவர் வம்ஸத்தவர்களாகிய கிராமணிகளும் க்ஷத்திரியர்களாதலால், அவர்களுக்கும் அவ்வாயுதத்தொழில் "தள்ளக்கூடாததொழில்" என்றது.

" Cast but thy eyes towards the duties of thy particular tribe, and it will ill become thee to tremble **A soldier of the Kshatriya tribe hath no duty superior to fighting**". Vide Wilkins' Bhagwat gita ch. II., P. 10,§

இவ்வாங்கிலேயப் பகுதி மேற்சுலோகத்தின் கருத்தே. இதிலும் க்ஷத்திரியர்களுக்கு ஆயுதத்தொழிலைக்காட்டிலும் மேற்பட்ட தொழில் கிடையாதென்றார். விஷ்ணுபுராணத்தில் "க்ஷத்திரியன் தன்னிஷ்டப்படி பிராமணனுக்குத் தானங்கொடுக்கவும், யாகங்கள்செய்யவும், வேதசாஸ்திரங்களை யோதவும் அதிகாரமுள்ளவனாயிருக்கிறான். அவனுக்கு ஆயுதமெடுத்துச் சேவிப்பதும், பூமியைச்காற்பதும் ஜீவனம் $" எனப்பட்டிருக்கின்றது, அதனாலேயே சேக்கிழாரும் ஆயுதத்தொழிலை ஏனாதிநாதநாயனார் சுற்றத்தார்களுக்கும் "தள்ளக்கூடாத தொழில்" என்றது. குலத்தொழிலைதள்ளி நடந்தவரைக்குறித்து.

மநுதருமசாஸ்த்ரம், 9-வது அத்தியாயம், 225-வது சுலோகம்.

கிதவாநுகுசீலவாந் க்ரூராந் பாஷண்டஸ்தாம்ச மாநவாந் ।
விகர்மஸ்தாந் ஶௌண்டிகாம்ஶ்ச க்ஷிப்ரம் நிர்வாஸயேத்புராத் ॥

* வால்மீகிராமாயணம், அயோத்தியாகாண்டம், மூன்றுவது சருக்கங்காண்க.

† வியாசபாரதம், ஸபாபர்வம், பதினைந்தாவது அத்தியாயங்காண்க.

‡ கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், வனம்புகுப்படலம்,44-வது கவி.

§ Vide Bhagwat Gita ch. XVIII. P. 85.

$ விஷ்ணுபுராணம், மூன்றுமம்ஸம், எட்டாமத்தியாயங் காண்க.

(இ-ள்.) "சூதாடுகிறவன், கூத்தாடி, கொடியநடையுள்ளவன், வேதஸ்மிருதிகளை நிந்திப்பவன், விரதாநுஷ்டான மில்லாதவன், ஆபத்தில்லாதபோது தன்சாதித்தொழிலைவிட்டு மற்றொரு சாதித்தொழிலை செய்பவன்*, இவர்களை அரசன் பட்டணத்தைவிட்டு ஓட்டவேண்டியது" என்பதாம். இதை யனுசரித்து:—

சிதம்பரபுராணம், துன்மதச்சருக்கம், 32-வது செய்யுள்.

மறைவழக்கமு மனுநெறிவழக்கமுஞ் சைவத்
துறைவழக்கமும் வழங்குநந்தொல்லைநாட் டகத்தோர்
குறைவழக்கமுண்டாவதே யெனமனங் கொதியா
விறைவழக்கினில்லானை நாட்டெல்லை நீத்தொழித்தான்.

என்பதால் "தள்ளக்கூடாத சாதித்தொழிலை தள்ளி நடந்தவனை அரசன் மனுவாக்கினையை மேற்கொண்டு ஊரைவிட்டோட்டினதாகத் தெரிவிக்கின்றது" இவ்வேதுவை முன்னிட்டே வனுதிநாதநாயனார் க்ஷத்திரியகுலத்தவ ராதலால் அப்படைத்தொழில் அவர்குலத்தையே யொட்டிவருதல் மநுநீதியெனத் தேர்ந்து "தள்ளக்கூடாததொழில்" † என்றார் சேக்கிழார்.

மநுஸ்மிருதி, 8-வது, அத்தியாயம், 414-வது, சுலோகம்.

𑌨 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌾 𑌨𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌪𑌿 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌨𑌿𑌸𑌰𑍍𑌗𑌜𑌂 𑌹𑌿 𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌦𑌪𑍋𑌹𑌤𑌿 ॥

(இ-ள்). "சூத்திரன் எஜமானனால் வேலையினின்று, நீக்கப்பட்டிருந்தாலும், அந்தவேலையானது அவனைவிட்டு நீங்காது, இம்மைக்கும் மறுமைக்கும் உபயோகமாக அவனுடன்பிறந்த அந்த வேலையை எவன்தான் நீக்குவான்,"

பராசர ஸ்மிருதி,

ஆசாரகாண்டம், 1-வது, அத்தியாயம், 64-வது, சுலோகம்.

శూద్రస్యద్విజశుశ్రూషా పరమోధర్మ ఉచ్యతే ।
అన్యథాకురుతే కించ త్తద్భవే త్తస్యనిష్ఫలం ॥

---

* சங்கலிங்க ஸ்மிருதி, 15-வது, சுலோகம்; திருமூலர் திருமந்திரம், இராசதோடம், 10-வது செய்யுள்; and Vide, Mysore and Coorg Vol. I. P. 317.

†. "By rights, each caste should also Keep to its own occupation", Vide Hunter's Brief History of the Indian people ch. VIII. P. 86.

(இ-ள்.) "பிராமணனுக்குப் பணிவிடைசெய்தல் சூத்திரனுக்குச் சிறந்த தருமம், அதைச்செய்யாமல் வேறு எதைச்செய்தாலும் அது அவனுக்குப் பலனைக்கொடாது" என்பதாதியால் சாதித்தொழில் தள்ளக்கூடாதெனப் படுகின்றது. அடிமைத்தொழில் சூத்திரனுக்கு உடன்பிறந்ததெனவும், இருபிறப்பாளரைச் சேவிப்பதே தக்ககருமம் எனவும், அதைவிட்டு அவன் நீங்குதல் அறிதெனவும் உசனசு, யாஞ்ஞவற்கியர், ஹாரீதர் முதலியவர்கள் கூறுகின்றார்கள். இவ்விதியையொத்து க்ஷத்திரியனுக்கும் ஆயுதத்தொழில் உடன்பிறந்ததே! அது :—

பகவத்கீதை, 18-வது அத்தியாயம், 47-வது சுலோகம்.

𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌿𑌗𑍁𑌣𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌤𑍍 ।
𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌨𑌿𑌯𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 ॥

ஸ்ரேயாந்ஸ்வதர்மேவிகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத் |
ஸ்வபாவநியதம்கர்ம குர்வந்நாப்நொதிகில்பிஷம்||

(இ-ள்.) "தன்வருணத்திற் குரியதென்று விதிக்கப்பட்டிருக்கிற தருமம (கருமம)ானது குணமற்றதென்று காணப்பட்டபோதிலும், கிரமமாய் அனுஷ்டிக்கப்படும் அந்நியவருணத்தாருடைய தருமத்தைக்காட்டிலும் சிரேஷ்டமானது, சுவபாவத்தினாலுண்டான கருமத்தைச்செய்கிறவன் (அதாவது குலக்கருமத்தைச் செய்கிறவன்) பாபத்தையடையமாட்டான்" இதனால் பிறருடைய தருமத்தை அனுஷ்டித்தவன், சுவதருமத்தைவிட்டதினாலும், பிறர்தருமத்தை யனுஷ்டித்ததினாலும் பாபத்தையடைகிறானென்றாகிறது. க்ஷத்திரியனை உனக்கு யுத்தஞ்செய்துகொல்லுவது சுவதருமமாயும், பிச்சையெடுத்துண்பது பரதருமமாயுமிருக்கிறது" * என்றார் ஸ்ரீதர ஸ்வாமிகள். இத்யாதிகளால் ஆயுதம் அரசர்களுக்கு உடன்பிறப்பென விளங்குகின்றது.

* "ஏற்பதிகழ்ச்சி" என்னும் வாக்கியத்தின்படி பிச்சையெடுப்பது இழிவான காரியமாயிருப்பினும், பிராமணருக்கு சிறந்த குலத்தொழிலாதலால், அவர்கள் பால் இழிவிலாது உயர்வையேதரும். அதைப்போல் கொலைசெய்தல் பாவச்செய்கையாயிருப்பினும். க்ஷத்திரியர்களுக்கு சிறந்த குலத்தொழிலாதலால், அவர்களுக்குப் பாவத்தைப்பயலாது புண்ணியத்தையேதந்து நிலைத்தது. அதனாலேயே கிருஷ்ணபகவான் அர்சுனனை சண்டைசெய்யத் தூண்டியது.

பகவத்கீதை 18-வது. அத்தியாயம், 48-வது, சுலோகம்.

𑌸𑌹𑌜𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌸𑌦𑍋𑌷𑌮𑌪𑌿 𑌨 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌾 𑌹𑌿 𑌦𑍋𑌷𑍇𑌣 𑌧𑍂𑌮𑍇𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌵𑌾𑌵𑍃𑌤𑌾𑌃 ॥

ஸகஜம் கர்மகௌந்தேய ஸதோஷமபிநத்யஜேத்
ஸர்வாரம்பா ஹிதோஷேண தூமேநாக்நிரிவாவ்ருதா:||

𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯=ஓ! குந்திபுத்திரா!!
𑌸𑌹𑌜𑌂*=சுவபாவத்தினுலுண்டான அல்லது உடன்பிறந்த
𑌕𑌰𑍍𑌮=கருமத்தை அல்லது தொழிலை
𑌸𑌦𑍋𑌷𑌮𑌪𑌿=தோஷத்தோடுகூடியதானுலும்
𑌨 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍=விட்டுவிடக்கூடாது.

(இ-ள்.) "ஓ! குந்திபுத்திரா? சுவபாவத்தினுலுண்டான தொழில், தோஷத்தோடு கூடியதானுலும் விட்டுவிடக்கூடாது. ஏனென்ருல், அக்கினி எப்படி புகையினுல் மூடப்பட்டிருக்குமோ அப்படிப்போல, சகல கருமங்களும் தோஷத்தினுல் சூழப்பட்டிருக்கின்றது". இதில் "ஆயுதத்தொழில்" க்ஷத்திரியர்களுக்குச் "சுவபாவத்தொழில்" எனவும், "உடன்பிறந்ததொழில்" எனவும்; அதினுல் அத்தொழிலை அவன் "விட்டுவிடக்கூடாது" யெனவும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் விளக்குகின்ருர். ஆரீதரும், ஒவ்வொரு குலத்தவருக்கும் ஏற்படுத்தப்பட்ட தொழில்கள் (ధర్మ్యాణ్యేతాని శాశ్వతాని†) "சாஸ்வதமானதொழில்கள்" எனவும், (స్వధర్మం)‡ சுவாபீகமான தொழில்" எனவுங் கூறுகின்ருர். மேலே ஏனுதிநாத நாயனுரை க்ஷத்திரியர்யென எண்பித்திருத்தலால், அவரும் அவ்வாயுதத்தொழிலைவிட்டு நீங்குதல் அறிதே! இக்கருத்தை யுட்கொண்டே சேக்கிழார் ஏனுதிநாதநாயனுர் சுற்றத்தார்களுக்கு படைத்தொழிலை "தள்ளக்கூடாததொழில்" என்றது, அவர் இதோடு நிறுத்தாது 'அப்படைத்தொழில் ஏனுதிநாதநாயனுர் குலத்தவருக்கே பாத்தியதையுடைய தெனத்தோன்ற "தள்

* "𑌸𑌹𑌜𑌂" என்னும் பதத்திற்கு "தன்னுடன் கூடவே ஜனித்தது" என்னும்பொருளைத் தந்தெழுதியிருக்கின்ருர். சங்கராசாரியசுவாமிகள்.
† ஆரீத ஸ்மிருதி, முதலத்தியாயம், 7-வது, சுலோகம்.
‡ ஆரீத ஸ்மிருதி, இரண்டாமத்தியாயம், 10-வது, சுலோகம்.

ளாத **தங்கள்தொழில்** எனவுங்கூறி முடித்தார், தன்னோடு தன்குலத்தினரையும் உளப்படுத்திப் பன்மைத்தோன்ற "**தங்கள்தொழில்**" என்றமையால் **அது** மரபுத்தொழில் என்றேற்பட்டது.

கம்பராமாயணம், கிஷ்கிந்தைகாண்டம், வாலிவதைப் படலம், 72-வது, செய்யுள்

இல்லறந் துறந்த நம்பி யெங்களுக்காகத் **தங்கள்**
வில்லறந் துறந்த வீரன் றோன்றலால் வேதநூலின்
சொல்லறந் துறந்திலாத சூரியன்மரபுந்தொல்லை
நல்லறந்துறந்த தென்ன நகைவரநாணுட் கொண்டான்.

இப்பிரசனையில் ஸ்ரீராமருக்கு வில்தொழிலானது குலத்தொழிலாதலால் அதைவிளக்க "**தங்கள்வில்லறம்**" என்றார் கம்பர். சூரியகுல ஸ்ரீராமருக்கு படைத்தொழிலில் எவ்வளவு பாத்தியதையுடையதோ! அவ்வளவு பாத்தியதை **சாக்ஷிகுல ஏனாதிநாதநாயனருக்கும் உண்டு.** அதனாலேயே சேக்கிழார் " தங்கள் (படைத்) தொழில்" என்னும் பிரயோகத்தை நாயனருக் குபயோகித்தது. இப் "**படைத்தொழில்**" ஏனாதிநாதநாயனருக்கு மாத்திரமல்ல, அவர் குலத்தவருக்கும் பாத்தியதையுடையதெனத்தோன்ற "**தொழிலுரிமைத் தாயத்தார்**" எனவுங் கூறியிருக்கின்றார்.

**தொழில்**=(படைத்) **தொழிலுக்கு.**

**உரிமை***=**பாத்தியதை** (கடமை) அல்லது அவரவருக்குரிய சுதந்தரம் (சதுரகராதி) "உரிமைகிழமை யாட்சியுமாகும்" (பிங்கலன்) "கிழமையுரிமை தலைமை" (**உரிச்சொல்நிகண்டு**) "தாயமு முரிமையுந் தங்குடித்தருமம்" (திவாகரம்) Exclusive property ஒவ்வொன்றிற்குத்தகுவது. (Rottler) Inheritance, Hereditary சுதந்தரம் (Winslow).

**தாயத்தார்**=**சுற்றத்தார்**, உற்றார், உறவினர், குலத்தார் கிளைஞர், ஞாதிகள், மரபினர், பந்துக்கள் (சதுரகராதி) "தாயத்தார் ஞாதியர் தங்குடித்தமரே" (பிங்கலன்) "ஞாதியர்தாயத்தாரே நாட்டுந்தங்குடியிற் சுற்றம்" (நிகண்டு) " சகோத்ரபாந்தவஜ்ஞாதி, பந்

* அமரம், மாநுஷ்யவர்க்கம், 298–வது சுலோகம்.

துஸ்வஸ்வஜநாஸ்ஸமாঃ"* "தாயாதெளசுதபாந்தவௌ "† (அமரம்.)

என்பதாதியால் "தொழிலுரிமைத்தாயத்தார்" என்னும் பிரயோகம் "படைத்தொழிலுக்கு பாத்தியதையுடைய குலத்தார்" என விளக்கும், அதாவது க்ஷத்திரியர்கள் என்பது தேர்ந்த பொருள். படைத்தொழிலுக்குரியோர் அரசரே! இது ஸ்மிருதி சம்மதம், இவரைப்போல் மற்ற அரசகுல நாயன்மார்களுக்கும் படை முதற்தொழில்களை "உரியதொழில்" என்றார் சேக்கிழார்.

சேக்கிழார் பெரியபுராணம், சேரமான் பெருமாணாயனார்;
புராணம், 7-வது செய்யுள்,

மண்மேற்சைவ நெறிவாழவளர்ந்து முன்னைவழியன்பால்
கண்மேல்விளங்கு நெற்றியினார் கழலே பேணுங்கருத்தினரா
யுண்மேவியவன் பினராகி யுரிமையரசர்தொழில் புரியார் [வார்,
தெண்ணீர்முடியார் திருவஞ்சைக்களத்திற்றிருத் தொண்டேபுரி

இச்செய்யுளில் சேரமான் பெருமாணாயனாரைச் சுட்டி :—
"உரிமையரசர்தொழில் புரியார்" எனப்பட்டிருக்கின்றது, "அரசர்=அரசர்களுக்கு, உரிமை=பாத்தியதையுடைய அல்லது சாதிக்குரிய, தொழில்=படைமுதலறுதொழில்களை, புரியார்=செய்யார்" அதாவது அரசர்களுக்குரிய குலத்தொழிலாகிய படைமுதல் அறுதொழில் புரியார் என்பதுபொருள் அரசர்களது உரிமைத்தொழில்கள் "ஓதலேவேட்டலீத லுலகோம்பல் படைபயிற்றல், மேதகு போர்செய்தீட்டல்வேந்தர்செய் தொழிற்களாறும்" என்பவைகளே! சேரமான் பெருமாணாயனார் குலத்தொழில்களைவிட்டு சிவத்தொண்டைமேற்கொண்டு ஒழுகியதால் "உரிமையரசர் தொழில் புரியார்" என்றனர்.

பெரியபுராணம், சேரமாணாயனார் புராணம் 12-வது பாசுரம்.

எய்தியவர்த மெதிரிறைஞ்சியிருந்தண் சாரன்மலைநாட்டுச்
செய்திமுறைமையாலுரிமைச் செங்கோலரசு புரிவதற்கு
மைதீர்நெறியின் முடிசூட்டி யருளுமரபால் வந்ததெனப்
பொய்தீர்வாய்மை மந்திரிகள்போற்றிப் புகன்றபொழுதின்கண்.

---

* அமரம், நாநார்த்தவர்க்கம், 245—வது சுலோகம்.

† அமரம், பிரமவர்க்கம், 403-வது சுலோகம்.

இப்பிரயோகத்தில் சேரமான் பெருமாணுயனாருக்கு அரசு புரிதல் உரிமைத்தொழிலென விளக்க "உரிமைச் செங்கோலரசு" என்றார். அவரே ஏனாதிநாதநாயனாருக்கும் "உரிமைப்படைத் தொழில்" என்றார். "அரசுபுரிதலும், படைபயிற்றலும்" அரசர்களது அறு தொழில்களுள்ளடங்கும். அதனாலேயே "முடிசூட்டியருளுதல் மரபால்வந்ததெனப்" பட்டிருக்கின்றது. அத்தொழில்கள் மரபால் வந்தமையாலேயே ஏனாதிநாதநாயனாருக்குத் "தள்ளக்கூடாததொழில்" என்றது, இதனாலும் ஏனாதிநாதநாயனார் "க்ஷத்திரியர்" எனவே துணியப்படும்.

சேரமான் பெருமாணுயனார் புராணம்,

14-வது, செய்யுள்.

வேவுமுரிமை யரசளித்தே விரும்புகாதல் வழிபாடும்
யாவும்யாருங் கழறினவு மறியுமுணர்வு மீறில்லாத்
தாவில்விறலுந் தண்டாதகொடையும்படைவா கனமுதலாங்
காவன்மன்னர்க்குரியனவு மெல்லாங்கைவந் துறப்பெற்றார்.

இப்பகுதியில் சேரமான் பெருமாணுயனாரைச்சுட்டி "உரிமையரசளித்தல்" எனப்பட்டிருக்கின்றது, "உரிமை=பாத்தியதையுடைய, அரசு=இராஜ்யத்தை, அளித்தல்=காற்றல்" எனவிரியும், சேரமான் பெருமாணுயனார் "பாத்தியதையுடைய அரசைக் காற்பவர்" எனப்படும்.

சேரமான் பெருமாணுயனார் புராணம்,

23-வது, செய்யுள்.

நீடுமுரிமைப்பேரரசா ளிகழும்பயனு நிறைதவமுந்
தேடும்பொருளும் பெருந்துணையுந் தில்லைத்திருச் சிற்றம்பலத்து
ளாடுங்கழலே யெனத்தெளிந்த வறிவாலெடுத்த திருப்பாதங்
கூடுமன்பி லர்ச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமாள்.

இதில் சேரமான் பெருமாணுயனாருக்கு "உரிமையரசு". என்றார். இதைப்போல் ஏனாதிநாதநாயனாருக்கும் "உரிமைப்படைதொழில்" என்றார். இதனால் இருவரும் ஏககுலத்தவர்கள் எனப்படும். அதாவது க்ஷத்திரியர் எனப்படும்.

பெரியபுராணம், நின்றசீர்நெடுமாறநாயனார் புராணம்,

9-வது செய்யுள்.

திரைசெய் கடலுலகின்கட் டிருநீற்றி னெறிவிளங்க
வுரைசெய்பெரும் புகழ்விளக்கி யோங்குநெடுமாறனா
ரரசுரிமைநெடுங் காலமளித்திறைவ ரருளாலே
பரசுபெருஞ்சிவலோகத் தின்புற்றுப் பணிந்திருந்தார்.

இதில் அரசுசெய்யும் உரிமைபாண்டியனுக்குண்டு எனப்பட்டிருக்கின்றது. இவரைப்போல் ஏனாதிநாதநாயனாரும் அரச ராதலால் படைபயிற்றும் உரிமை அவருக்கேற்பட்டது. படைபயிற்றலும் அரசுபுரிதலும் அரசரது அறுதொழில்களுள் அடக்கம்

பெரியபுராணம், கோச்செங்கட்சோழநாயனார் புராணம்,

11-வது பிரயோகம்.

தேவிபுதல்வற்பெற்றிறக்கச் செங்கோற்சோழன் சுபதேவ
னாவியனையவரும் புதல்வன்றன்னை வளர்த்தங்கணிமகுட
மேவுமுரிமை முடிகவித்துத்தானும் விரும்புபெருந்தவத்தின்
றாவினெறியைச் சென்றடைந்து தலைவர் சிவலோகஞ்சார்ந்தான்.

இப்பகுதியில் "ஏனாதிநாதநாயனாருக்கு உரிமைப்படை" என்றதைப்போல், கோச்செங்கட் சோழநாயனாருக்கு "உரிமைமுடி" என்றார் சேக்கிழார் "முடியும்படையும்" அரசருக்கு இன்றியமையாக் கருவியே! இதனாலேயே "வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே" என்றார் "புறநானூறாரும்," குலத்தொழிலாதலால் அரிதல்லவென்பது கருத்து. இத்யாதி பிரமாணங்களில் சேக்கிழார் சேரமான் பெருமாணயனாருக்கு "உரிமை அரசர்தொழில், உரிமைச் செங்கோல், உரிமை அரசளித்தல், உரிமை அரசு" எனவும்; நின்ற சீர்நெடுமாறநாயனாருக்கு "உரிமைமுடி" எனவுங் கூறியிருத்தலைப்போல், ஏனாதிநாதநாயனாருக்கும் "உரிமை படைத்தொழி" எனவுங் கூறியிருக்கின்றார். இவைகளால் "சேரமான் பெருமாணயனார், நின்றசீர்நெடுமாறநாயனார், கோச்செங்கட் சோழநாயனார், ஏனாதிநாதநாயனார்" ஆகிய இவர்கள் ஏகுலத்தவர்கள் எனத் துணியப்படும்.

பெருந்தேவனார், பாரதவெண்பா, உத்தியோகப்பருவம்,
4-வது செய்யுள்.

வண்மையாற்கல்வியான் மாபலத்தாலாள் வினையால்
உண்மையாற் பாரா ளுரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர்வானேறத் தெள்ளாற்றில் வென்றானே.
பேர்வேந்தரேற்பா ரெதிற்.

இக்கவியில் அரசலட்சணங்கள் ஏழு எனவும், அவற்றுள் பாராளுரிமையும் ஒன்று எனவும் விளக்கப்பட்டிருக்கின்றது.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்தரைசூழ்ச்சிப்
படலம், 62-வது கவி.

கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
வில்வினை யுரிமையு மழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதர்க்கேயது
புல்லிடை யுகுத்தமுதேயும் போலென்றாள்.

இதில்வரும் "வில்வினையுரிமை" என்பதற்கு, வில்வினை= விற்தொழிலுக்கு, உரிமை=பாத்தியதை" அதாவது "பரதன் விற்தொழிலுக்குப்பாத்தியதையுடையவன்" என்பது பொருள். ஸ்ரீராமர் சகோதரனாகிய பரதனுக்கு வில்தொழில் குலத்தொழிலாதலால் "வில்வினையுரிமை" என்றார் கம்பர். இதைப்போல் ஏனாதிநாதநாயனாரும், அவ்விராமர் வம்ஸத்தவராதலால் அவருக்கும் "வாட்டொழில் உரிமை" என்றார் சேக்கிழார். "வாளும் வில்லும்" படையுளடக்கம். "தொழிலெனினும், வினையெனினும்" ஒருபொருட்கிளவிகள். இதனால் நாயனாரும், அவர் குலத்தவர்களாகிய கிராமணிகளும் படைக்குரிய அரசரென்றேற்பட்டது. இதோடு மேல்வரும் "தாயத்தார்" என்பது அவரது சுற்றத்தாரை விளக்கி, படைத்தொழிலை குலத்தொழிலென முடித்தது. "தாயத்தின் உள்ளான் அதிசூரன்" என்பது படைத்தொழிலில் முதன்மைபெற்ற அதிசூரனும் ஏனாதிநாதநாயனார் சுற்றத்தார்களில் ஒருவன் எனவும் மணக்கச்செய்கின்றது. இவ்வதிசூரனைக் குறித்து:—பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணத்தில் "தீங்கு" என்னும் முதலையுடைய 34-ஞ் செய்யுளில் "திருநீறுபண்டு பயிலாதான்" எனவும்; "கண்டபொழுதே" என்னும் முதலையுடைய, 38-ஞ், செய்யுளில் "முன்பிவர்மேற்காணாதவெண்டிரு நீறு" எனவுங் கூறியிருத்தலால் புத்தசமயத்தவன் ஆகுவன்

இவ் வதிசூரன் குலத் தலைவனாகிய ஈழராஜனும் புத்த சமயத்த வனே! பிறகே சைவனானது, இதன்உண்மை வாதவூரர் புராணத் தில் * வலியுறுத்தப்படும், மேற்பாசுரங்களில் அரசருக்குக் குலத் தொழில் "படைத்தொழில்" எனவும், அதுவும் "உரிமைத்தொ ழில்" எனவும், அப்படைத்தொழிலேயே அரசர்கள் பயின்றதாகவும் கூறிய சேக்கிழாரே! ஏனாதிநாதநாயனார் அரசரல்லாதிருந்தால், அவ் வரசகுலத்தொழிலாகிய படைத்தொழிலை அந்நாயனார் குலத்த வருக்குக் குலத்தொழிலெனக்கூற முற்படுவரா? ஏனாதிநாதநாயனா ரும், அவர்சுற்றத்தார்களாகிய கிராமணிகளும் அரசவம்ஸத்தவர் களாயிருந்தமையினாலேயே அப்படைத்தொழிலை அவருக்கும் அவர்குலத்தவருக்கும் "உரிமைக்குலத்தொழில்" எனக் கூறிமுடி த்தது. சேக்கிழாருக்கு அருட்பிரகாச வள்ளலாகிய "சிவம்" உலகுய்ய "உலகெலாம்" என்னுமடியெடுத்துக்கொடுக்க அருளி யதே "பெரியபுராணம்" எனப்படும். அத்தகைய பெரியபுரா ணமே "படைத்தொழிலை" ஏனாதிநாதநாயனாருக்குக் குலத்தொழில் என ஒப்ப, அவரை க்ஷத்திரியர் எனச் செப்பவும்வேண்டுமோ? இத்யாதிநூற்களுக்குமுன் உமாபதி உளறல் எங்ஙனே நிலைக்கும்.

**5.** பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம்,

13-வது செய்யுள்.

வந்தழைத்த மாற்றான் வயப்புலிப்போத் தன்னார்மு
னந்தமது வாட்பயிற்று நற்றாயங் கொள்ளுங் கால்
இந்தவெளி மேற்கை வகுத்திருவேம் பொருபடையுஞ்
சந்தித்தமர்விளைத்தாற் சாயாதார் கொள்வதென.

| | |
|---|---|
| வந்து | (போர்செய்யும் பொருட்டு) வந்து |
| அழைத்த | கூப்பிட்ட |
| மாற்றான் | பகைவனாகிய அதிசூரன் |
| வயம் | வெற்றிபொருந்திய |
| புலிபோல் | புலியைப்போன்ற |
| தன்னார்முன் | ஏனாதிநாதநாயனாருக்கு முன்னே |
| நந்தமது† | நமது ஜாதிக்குரிய, நம்முடைய |
| வாள் | வாளாயுதத்தை |

* திருவிளையாடற்புராணம், மண்சுமந்த படலத்திலுங்காண்க.
† நந்தமது = நம்முடைய, our (Rottler, Winslow).

| | |
|---|---|
| பயிற்றும் | கற்பிக்கும், பயிற்சிசெய்யும் |
| நற்றயம் | நல்ல உரிமையை |
| கொள்ளுங்கால் | கொள்ளுமிடத்து |
| இந்த வெளிமேல் | இவ்விடத்திலுள்ள வெளியில் |
| இருவேம் | இருவருடைய |
| பொரும் | யுத்தத்திற்குரிய |
| படையும் | படைகளையும் |
| கைவகுத்து | அணிவகுத்து. |
| சந்தித்து | எதிர்த்து |
| அமர் | யுத்தத்தை |
| விளைத்தால் | செய்தால் |
| சாயாதார் | தோல்வியடையாதவர்கள் |
| கொள்வதென | கொள்ளப்படும் |

(இ-ள்.) போர்செய்யும்பொருட்டுவந்து அறைகூவிய பகைவனாகிய அதிசூரன் வலியினையுடைய ஆண்புலிபோன்ற ஏனாதிநாத நாயனாருக்கு முன்னே நம்சாதிக்குரிய வாள் வித்தையைக்கற்பிக்கும் நல்ல உரிமையை நாமிருவரும் ஒருவருக்கொருவர் தனக்கெனச் சிறப்பாகக்கொள்ளுமிடத்து, இவ்விடத்திருக்கின்ற வெளியிடத்தில் இருவருடைய போர்த்தொழிற்குரிய படைகளை அணிவகுத்து எதிர்த்து யுத்தஞ்செய்தால் தொல்வியடையாதவர்கள் கொள்வதே நலமென்றான்" என்பதாம், (க்ஷத்ரியஸ்ய விஜிதா:) "க்ஷத்ரியஸ்ய விஜிதா:!" என்பதற்கு "க்ஷத்திரியன் எதிர்த்தவரசர்களைஜெயித்து ஜீவிக்கவேண்டும்" எனப் புதஸ்மிருதி கூறுகின்றது. வால்மீகரும், "க்ஷத்திரியர் எதிர்த்தவரசர்களைப் பொருதல் இயல்பாயுள்ள குலதருமம்"* என்றார். "க்ஷத்திரியன் யுத்தத்தில் தர்மமா ஜயிப்பதுதான் சிலாக்கியம்" என அஸிதரும், தேவலரும் கூறுகின்றார்கள். இக்கட்டளை மேற்கொண்டே அரசகுல ஏனாதிநாதநாயனார் அறைகூவிய அதிசூரனைப் பொருதது, மேற்செய்யுளில்வரும் "நந்தமதுவாட்பயிற்றும் நற்றாயம்", என்பதற்கு "நம்குலத்திற்குரிய வாள்வித்தையை பயிற்சிசெய்யும் நல்ல உரிமையை நாமிருவரும் பெற்றிருக்கின்றோம்" என்பது பொருள். இதில்வரும் "நந்தமது" என்பது "நமது" என்னும் பொருளைக்கொள்ளும், அது "எந்தமது, எமது" என்பதைப்போலென்க. அவர் தன் குலத்தாரையுஞ்சேர்த்து, குலத்தொழிலெனத்

* வால்மீகிராமாயணம், கிஷ்கிந்தைகாண்டம், 17-வது சருக்கங்காண்க,

தோன்ற "நந்தமது" எனப் பன்மையாகக் கூறினர். அப்படைத் தொழிலை சாதித்தொழில் எனவிளக்க. ஏனாதிநாதநாயனார் அரசரா யிருந்தமையினாலேயே அவ்வரசகுலத்தொழிலாகியபடைத்தொழிலை அவர் நந்தலத்தொழிலென நாட்டியதாக சேக்கிழார் தீட்டியிருக் கின்றார், அவர் அரசரல்லாதிருப்பின் படைக்கலத்திற் தேர்ந்த சேனபதிகளாகிய ஏயர்கோன் கலிக்காமநாயனாரையும், மானக்கஞ் சார நாயனாரையும் "வேளாண்மையிலுயர்ந்தவர், உழவுதொழிலர்" என அவர்கள் குலத்தொழிலைவிளக்கி கரத்தொழிலாகப் பெற்ற "படைத்தொழிலை" அவர்களுக்குக் குலத்தொழில் அல்ல வெனக் கூறி யொதுக்கியதைப்போல், கூறி யொதுக்குவர். சேனபதியா கிய கோட்புலி நாயனாரும் ஏனாதிநாதரைப்போல் படைக்கலத்திற் தேர்ந்தவரே! அவருக்கு ஏனாதிநாதநாயனாருக்குக் கூறியதைப் போல், அப்படைத்தொழிலை குலத்தொழிலெனக் கூறினாரில்லை. "நாட்டியத்தான் குடிவேளாண் குலம்பொருக வந்துதித்தார் கோட்புலியார்" என்னும் பகுதியில் வரும் "வேளாண்மை=பயிர் செய்யும், குலம்=வம்ஸம்". பயிர்செய்யுங் குலம் அதாவது சூத் திரரென விளக்கினர். படைத்தொழில் சூத்திரருக்குரியதன்று. உழவுத்தொழிலே யுரியது. அப்படி அவர் செய்ததாகக்கூறிய போர்த்தொழிலையும் அவருக்குக் குலத்தொழிலெனக் கூறியெழ வில்லை. "கோட்புலியாரெனும் பெயரார்..............வளவர் தந் திரியராய்...............போர்விளைத்துப் புகழ்விளைத்தார்" என்ப தால் ஜீவனார்த்தத்தின்பொருட்டு போர்பயந்ததாகத் தெரிகின் றது. இச்சேக்கிழாரே! திருக்குறிப்புத் தொண்டநாயனார் புரா ணம், 102-வது செய்யுளில் உழவுத்தொழிலே சூத்திரருக்குரிய தெனத் தெரிந்துக்கொண்டனர். அப்படித் தெரிந்துக்கொண்ட வர் அரசகுலத்தொழிலாகிய படைத்தொழிலை கோட்புலி நாய னார், மூனையாடுவார் நாயனார் முதலிய சூத்திரர்கள் போர்த்தொழி லைப் புரியினும் அவர்கட்கு குலத்தொழிலெனக் கூறமுற்படுவரா? முற்படார்.

பெரியபுராணம், இயற்பகைநாயனார் புராணம்,

13-வது செய்யுள்.

மனைவியார்சுற்றத்தாரும் வள்ளலார் சுற்றத்தாரும்
இனையதொன் றியாரேசெய்தா ரியற்பகை பித்தனாற்

புனையிழைதன்னைக் கொண்டுபோவதா மொருவனென்று
துனைபெரும் பழியைமீட்பான் றொடர்வதற் கெழுந்துசூழ்வார்.

இதில் இயற்பகைநாயனார் தம்மனைவியை சிவபிரானாகிய வேதியரோடு வழிவிட்டனுப்புதல் குலத்திற்கு பெரும்பழியென அவர் சுற்றத்தார்கள் தேர்ந்து அதைமீட்கும் பொருட்டு துடர்ந்தார்கள் என்பதுதோன்ற "மனைவியர் சுற்றதாரும் வள்ளலார்சுற்றத்தாரும், பெரும்பழியை மீட்பான் றொடர்வதற்கெழுந்து சூழ்வார்" எனவும்; அப்படிதுடர்ந்த சுற்றத்தார்கள் பல ஆயுதங்களைக்கொண்டு வேதியரை வளைத்துக்கொண்டார்கள் என்பது தோன்ற "வேலொடு வில்லும் வாளுஞ் சுரிகையுமெடுத்து......... வந்தெதிர் வளைத்துக்கொண்டார்" எனவும் விளக்கியிருக்கின்றார். அன்றியும் "வணிகரளவில் செல்வத்தர்" என்னும் பகுதியால் இயற்பகைநாயனார் வணிகரெனவிளங்குவதால் அப்படைத்தொழிலே அவர்குலத்தவருக்குக் குலத்தொழிலெனக் கூறாது, ஆயுதங்கொண்டது பழியைமீட்பதற்காக வெனக் கூறிப்போந்தனர், இவரைப்போல் ஏனாதிநாதநாயனாரும் க்ஷத்திரியரல்லாதிருப்பின் அப்படைத்தொழிலே அவருக்குங் குலத்தொழிலெனக் கூறத்துணியார்.

பெரியபுராணம், திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்,

100-வது, செய்யுள்.

அரசர்குலப் பெருந்தெருவுந் தெற்றிமுற்றத்
தாயுதங்கள் பயிலும்வியலிடமுமங்கண்
புரிசைமதக் கரிகளொடு புரவியேறும்
பொற்புடைய வீதிகளும் பொலியவெங்கும்
விரைசெய்நறுந் தொடையலங்கற் குமரர்செய்யும்
வியப்புறுசெய் தொழில்கண்டு விஞ்சைவிண்ணோர்
நிரைசெறியும் விமானவூர்திகளின் மேலு
நிலமிசையும் பலமுறையுநிரந்து நீங்கார்,

இதுவுஞ் சேக்கிழார் வாக்கே! இதில் அரசரது குலத்தொழில்களில் படைத்தொழிலும் ஒன்றென விளக்கியிருக்கின்றனர். அப்படி விளக்கினவர், ஏனாதிநாதநாயனார் அரசரல்லாதிருப்பின், அரசகுலத்தொழிலாகிய படைத்தொழிலே அவருக்குக் குலத்தொழிலெனக் கோஷிப்பரா? க்ஷத்திரியராயிருந்தமையினாலேயே

அரசகுலத்தொழிலாகிய படைத்தொழிலே அவருக்கும் அவர் குலத்தவர்களாகிய, கிராமணிகளுக்கும் குலத்தொழிலெனக் கூறி முடித்தது. அன்றியும் சேக்கிழார் சூரியகுல அநபாயச்சோழன் காலத்தவரே! அக்காலத்திலேயே பெரியபுராணம் பாடப்பட்டு, அச்சோழன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. ஏனாதிநாத நாயனார் அரசகுலத்தவராயில்லாமல் வேறுகுலத்தவராயிருப்பின், அரசகுலத்தொழிலாகிய படைத்தொழிலை ஏனாதிநாதநாயனாருக்குக் குலத்தொழிலென வினியோகித்த சேக்கிழார் வாக்கை அப்படைக்குரிய சோழன் ஒப்புவனா! ஏனாதிநாதநாயனார் அரசகுலத்தவராயிருந்தமையால்தான் சேக்கிழார் அவரை க்ஷத்திரியர் எனச் செப்பவும் சோழன் ஒப்பவும் நேரிட்டது. இதோடு சேக்கிழார் "வாட்பயிற்றும் நற்றாயம்" எனவுங் கூறுயிருக்கின்றார். "தாயமுமுரிமையுந் தங்குடித்தருமம்" (திவாகரம்) தாயம்=தன்முன்னேயோர் தொட்டுவந்தபொருள்*, உரிமை=பாத்தியதை, தங்குடித்தருமம்=தங்குலாச்சாரம்† என்னும் பொருள்களைக்கொள்ளும்; இவைகளால் "படையும், அரசும்" நாயனார் முன்னேயோர் தொன்று தொட்டு வந்தபொருள் எனப்படும், இதனால் நாயனார் க்ஷத்திரியர் எனச் சாதிக்கப்படும்.

6. பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம்,
7-வது, செய்யுள்.

தானாள் விருத்திகெடத் தங்கள்குலத் தாயத்தின்‡
ஆனாத செய்தொழிலா மாசிரியத் தன்மைவள
மேனாளுந் தான்குறைந்து மற்றவர்க்கே மெம்படலால்
ஏனாதிநாதர் திறத்தேலா விகல்புரிந்தான் §

* தாயம் = An Inheritance (Wilson. S. D) Hereditary property (Winslow).

† குலாச்சாரம் = The rites of Castes and Ranks ; வருணாசாரம் = The custom, Decorum or usage, of each Tribe, குலதருமம் = Customs or Rules, of a Tribe (Rottler).

‡ பிரமோத்திரகாண்டம், பத்திராயுவின் கதையுரைத்தவத்தியாயம் 19-வது செய்யுள்.

§ நரசிங்கமுனையரைய நாயனார் புராணம், 1-வது செய்யுளையும், கம்பராமாயணம், பாலகாண்டம், நகரப்படலம், 11-வது செய்யுளையும், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம், 64-வது செய்யுளையுங்காண்க.

| | |
|---|---|
| தூன் | தான் (அதிசூரன்) |
| ஆள் | ஆண்டுவரும், அனுபவித்துவரும் |
| விருத்தி | ஜீவனோபாயம் |
| கெட | கெடும்படி |
| தங்கள் | தங்களுடைய |
| துலத்து * | வம்ஸத்திலுதித்த |
| தாயத்தின் | சுற்றத்தார்களுக்கு |
| ஆனாத | நீங்காத † |
| செய் | செய்துவரப்பட்ட, செய்யத்தகுந்த |
| தொழிலாம் | (சாதித்) தொழிலாம். |
| ஆசிரியத்தன்மை | (அத்தொழிலில்) ஆசிரியத்தன்மை[யால் (வரும்) |
| வளம் | வருவாயானது |
| மேனாளும் | நாளுக்கு நாள் |
| தான்குறைந்து | குறைவடைந்து |
| மற்றவர்க்கே | ஏனாதிநாதநாயனாருக்கே |
| மேம்படலால் | அதிகப்படுதலால் |
| ஏலா | நீதியில்லாது, கண்டு சகிக்காது |
| ஏனாதிநாதர்திறத்து | ஏனாதிநாதநாயனாரிடத்து |
| இகல் | பகையை |
| புரிந்தான் | செய்தான் |

(பொ-ரை.) "தான் அனுபவித்துவருகின்ற ஜீவனோபாயம் கெடும்படி தங்கள் சாதியிலுள்ள சுற்றத்தார்களுக்கு நீங்காது செய்யத்தகுந்த சாதித்தொழிலாகிய (படைத்தொழிலில்) ஆசிரியத்தன்மையால் வரும் வருவாயானது நாளுக்குநாள் குறைந்து ஏனாதிநாதநாயனாருக்கே அதிகப்பட்டு வருவதினால் அந்நாயனாரிடத்து அதிசூரன் நீதியில்லாதபகையைச் செய்தான்" ‡ என்பதாம், இதில் வரும் "தங்கள் துலத்தாயத்தின் ஆனாத செய்தொழிலாம்" என்பதில் விளங்கும், "தங்கள்துலம்" என்பது "அவரோடு அவர் சாதியாரையும் (அதாவது சூரியகுலக்ஷத்திரியரையும்) பொதுப்பட உளப்படுத்தும்"

---

* குலம் = சாதி, Tribe, Descent, race, caste, class of men (Rottler, Winslow.)

† "ஆனாதசெங்கோலன் = நீங்காத செங்கோலன்" பிரமோத்திரகாண்டம், பத்திராயுவின் கதையுரைத்தவத்தியாயம், 18-வது செய்யுள்.

‡ இது ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் இயற்றிய உரை.

"தாயத்தின்" என்பது "சூரியகுலத்தில் அவர் சுற்றத்தாரை* மாத்திரம் வகுத்து விளக்கும்." ஆறாத என்பது "நீங்காத" என்னும் பொருளைப் பயக்கும். ஆறாமை=நீங்காமை, (சதுரகராதி, பேரகராதி) "ஆறாமை தண்டாமை ஆயிரண்டும் நீங்காமை" (திவாகரம்) **That which is inseparable, not leaving, Unceasing,** (Winslow); **Stead fastness, Continuance,** நீங்காமை (Rottler) என்பதுகளால் அத்தொழில் நீங்காத தொழிலென்றேற்படும். "செய்தொழிலாம்" என்னும் வாக்கியம் "அவர் குலத்தவரே செய்யத்தகுந்த தொழில்" என வற்புறுத்தும். இவைகளால் "படைத்தொழில் ஏனாதிநாதநாயனார் சுற்றத்தார்களுக்கு நீங்காத செய்யத்தகுந்த சாதித்தொழில்" என்பது தேர்ந்தபொருள். அதாவது, "அவர் சாதியைவிட்டு நீங்காதுசெய்யத்தகுந்த தொழில்" எனப்படும். அவ்வாயுதத்தொழில் அரசகுலத்தொழிலாதலால் க்ஷத்திரியகுலத்தைவிட்டு நீங்காதே! இப்பிரயோகத்தில் ஏனாதிநாத நாயனாருக்குப் படைத்தொழில் "நீங்காததொழில்" என்றார், முன் பாசுரத்தில் தள்ளாததொழில் என்றார், "தள்ளாத" எனினும் "நீங்காத" எனினும் பொருள் ஒன்றே! சூத்திரனைச்சுட்டி மநுவானவர் "அடிமைத்தொழில் அவன் சாதியைவிட்டு நீங்காததொழில்" என்றார், அதைப்போல் ஏனாதிநாதநாயனாரைச் சுட்டி சேக்கிழாரும் படைத்தொழில் அவர் குலத்தவரைவிட்டு நீங்காததொழில் என்றார், குலத்தொழில் நீக்கக்கூடாததே! இது மநு வாதிகள் சம்மதம். வேதம் ஓதலும், அதன்பொருளை விசாரித்தலுமின்றியிருக்கை பாபம் என்று கூர்மபுராணத்திலும்; "அப்படி ஓதல் குருமுகமாக ஓதவேண்டுமேயன்றிப் புஸ்தகபாடம் தகாது" என்று நாரதரும்; "ஓதாமலிருப்பின் தன் சந்ததியோடு சூத்திரனாகிறான்" என்று மநுவும்; "யாகத்தின்பொருட்டே பிராமணர், பசுக்கள், பொன், வெள்ளி, ஔஷதி முதலியவைகள் சிருஷ்டிக்கப்பட்டனவாகையால் அந்த யாகத்தைச் செய்யாவிட்டால் பாபம் சம்பவிக்கும்" என்று பாரதம், அஸ்வமேத பருவத்திலும்; "வருணாச்சிரமங்களுக்கேற்ற ஒழுக்கமுடையவனாலேயே அந்த பரமபுருஷன் ஆராதிக்கப்படுவான். இந்த வழியேயல்லது வேறுவழி அவ்வெம்பெருமானுடைய திருவுள்ளத்திற்குஉகப்பன்று, ஆதலால்

* சுற்றமாவது=தாய்மரபு, தந்தைமரபு, மனைவிமரபு, மகன் மனைவி மரபு, மகளைவேட்டோன் மரபு என்னு மைம்மரபையுங் குறிக்கும்.

எவனும் தனக்குள்ள வருணாசிரமங்களுக்குரிய நல்லொழுக்க முடையவனாயிருந்தே அந்த ஸ்வாமியை ஆராதிக்கவேண்டும். பிராமணனாலும், க்ஷத்திரியனாலும், வைசியனாலும், சூத்திரனாலும், தனக்குரிய தருமத்தோடு எம்பெருமானை யாராதிக்கவேண்டுமேயல்லது வேறுவிதமாய் ஆராதிக்கக்கூடாது"*என்றார் பராசர பிர்மருஷியும். இவைகளை யொத்தே! (உத்தமம் குலவித்யா) "உத்தமம் குலவித்யாயா"† என்னும் நீதிசாஸ்திரத்திற்கிணங்க உத்தமத் தொழிலாகிய சாதித்தொழிலையே அவரும் அவர் குலத்தவரும் புரிந்து வந்தார்களெனவும் விளக்குகின்றார். இப்படைத்தொழிலின்பேரில் "ஆனதசெய்தொழிலாம்" என்னும் வாக்கியத்தையேற்றுகின்றார். ஏனாதிநாதநாயனார் சுற்றத்தார்கள் "படைத்தொழிலையே நீங்காது செய்யத்தகுந்த குலத்தவர்கள்" என வற்புறுத்த. படைத்தொழிலைச் செய்யத்தகுந்த குலத்தவர்கள் க்ஷத்திரியர்களே! ஆகிய இவைகளால் ஏனாதிநாதநாயனாரும் அவர் குலத்தவர்களாகிய கிராமணிகளும் க்ஷத்திரியர்கள் எனத் துணியப்படும். இப்பிரசுனைகளை ஆழ்ந்து யோசிப்பவர்கள் எங்ஙனே அவரை க்ஷத்திரியர் அன்றெனக் கூறத்துணிவர். ஆயின் இவைகள் உமாபதி மண்டைக்கேறாததற்காக யான் துக்கிக்கின்றேன்.

### 7. பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம், 12-வது, செய்யுள்.

புறப்பட்ட போதின்கட் போர்த் தொழில்கள்கற்கும்
விறற்பெருஞ்சீர்க் காளையர்கள் வேறிடத்துநின்றார்
மறப்படைவாட் சுற்றத்தார் கேட்டோடிவந்து
செறற்கரும்போர் வீரர்க்கிருமருங்குஞ் சேர்ந்தார்கள்.

| | |
|---|---|
| புறப்பட்ட போதின்கட் | (ஏனாதிநாதநாயனார் போர்க் கோலங்கொண்டு) புறப்பட்ட பொழுது |
| போர்த்தொழில்கள் | யுத்தத்தொழில்களை |
| கற்கும் | (தம்மிடம்) கற்றுக்கொள்ளும் |
| விறல் | வலியால் |
| பெரும் | மிக்க |

* விஷ்ணுபுராணம், மூன்றாமம்ஸம், எட்டாமத்தியாயம், பழனித்தல புராணம், வசுமந்தச்சருக்கம், 24-வது, செய்யுள்.

† நீதிசாஸ்திரம், 27-வது, சுலோகம்.

| | |
|---|---|
| சீர் | சிறப்பினைவாய்ந்த |
| காளையர்கள் | எவ்வனப்புருடர்களும் |
| வேறிடத்து | வேறிடங்களில் |
| நின்றார் | வசிப்பவர்களாகிய |
| மறம் | வீரம்பொருந்திய |
| வாட்படை | வாளாயுதத்தையுடைய |
| சுற்றத்தார் | குலத்தார்களும், சாதியார்களும் |
| கேட்டு | அதைக்கேட்டு |
| ஓடிவந்து | விரைந்துவந்து |
| செறற்கு | செயித்தற்கு |
| அரும் | அறியதாகிய |
| போர்வீரர்க்கு | யுத்தவீரராகிய (ஏனாதிநாதநாய னாருக்கு) |
| இருமருங்கும் | இரண்டுபக்கமும் |
| சேர்ந்தார்கள் | சூழ்ந்துக்கொண்டார்கள். |

(இ-ள்) "ஏனாதிநாதநாயனார் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டப்பொழுது அவரிடத்தில் போர்த்தொழிலைக் கற்றுக்கொள்ளும் வலியால் மிக்கவீரர்களும் வேறிடங்களில் வசிப்பவர்களாகிய வீரம்பொருந்திய வாட்டொழிலை குலத்தொழிலாகப் பெற்ற அவர் சுற்றத்தார்களுங் கேட்டு விரைந்துவந்து ஒருவராலும் செயித்தற்கரிய போர்த்தொழிலில் வல்லவராகிய ஏனாதிநாதநாயனாருக்கு இரண்டு பக்கமுஞ் சேர்ந்தார்கள்" என்பதாம். இப்பிரயோகத்தில் வரும் "போர்த்தொழில்கள் கற்குங் காளையர்கள்" என்பதற்கு, "போர்த் தொழில்=யுத்தத்தொழிலை, கற்கும்=பழக்கும், காளையர்கள்=சிறுவர்கள்" அதாவது "போர்த்தொழிலை கரத்தொழிலாகப் பழக்கும் சிறுவர்கள்" எனினும், "போர்த்தொழிலுக்குரியவர்களல்லாத சிறுவர்கள்" எனினும், அல்லது "குலத்தொழிலல்லாது ஜீவனார்த்தமாகப் பழக்கும் சிறுவர்கள்" எனினும் பொருந்தும். அதேனென்றால் போர்த்தொழிலுக்குரியவர்களை இப்பாசுரத்திலேயே "மறப்படைவாட் சுற்றத்தார்" என வகுத்தோதியதாலெனக. "மறம்=வீரம்பொருந்திய, வாள்=வாள், படை*=ஆயுதத்

* படை என்பது தொடுக்கப்பட்டது தொடை, விடுக்கப்பட்டது விடை என்பதைப்போல்; படுக்கப்பட்டது படைஎனப்படும், படுத்தற்குக் கருவியாயுள்ளது எனினும் பொருந்தும், படுத்தல்=அழித்தல், கொலைசெய்தல், படை ஆயுதப் பொதுப்பெயர் (சதுரகராதி) "படைசேனை யாயுதமாகும்" (உரிச்சொல்நிகண்டு) Weapons, Arms of any kind ஆயுதம் (Winslow)

தை(யுடைய), சுற்றத்தார்*=குலத்தார் அல்லது ஜாதியார்" எனப் பொருள்படும். "ஆயுதம் பழக்குங் குலத்தார்" அதாவது "வாளை சதாகையில்போருந்தப்பெறுங் குலத்தார்† என்பது தேர்ந்த முடிபு. வாளையுடையோர் அரசரே!

அரிச்சந்திரபுராணம், சூழ்வினைகாண்டம்,
87-வது, செய்யுள்.

துணியுந்தணி செஞ்சுடையானினது தோண்மாலை
மணியும்வளையும் வலயங்களுநின் வடிவாளும்
அணியும்முடியுஞ், சேயுந்தாயு மணியும்பொன்
பணியுங்கழலுந் தந்தேகென்று பலசொன்னான்.

88-வது செய்யுள்.

ஏதுக்கிவையென்றணிமாமுடியும் வடிவாளும்
புத்திப்புதல்வன் பூணும்பணியும் புனைமாதின்
பத்திக்கிரணப் பணியுங்கனகப் பணியும்வென்
முத்தின்பணியுங் கழியாமுனிவன் முனமுய்த்தான்.

இப்பாசுரங்களில்வரும் "வாட்படை" அரசரது ஆயுதத்துள் முதன்மைப்பெற்றதும், அதை ஒரு ஆபரணத்தைப்போல் அரசர்கள் சதா அணியக்கூடியதுமாயிருத்தலால், விஸ்வாமித்திரர் அரிச்சந்திரனை நோக்கி ஆபரணத்தோடு வாளையுங்கழட்டிவை யென்றது. இதை நோக்கியே வாளை உடைவாள் என்பது, உடுக்கப்பட்டது உடை‡ எனப்படும்.

கூர்மபுராணம் யுகதன்மமுரைத்த வத்தியாயம்,
2-வது, செய்யுள்.

விற்றேழில் விசயன்கேட்ப வியாதமா முனிவன்முன்னஞ்
சொற்றவா றுரைப்பக்கேண்மின்றாய்ச் சிறைமெகினப்பாகன்
கற்பத்தினணித்தா முன்னையுகமுதல் கலியீராக
வற்புறும்யுகத்தின் செய்தி வழுவுறு தனைத்துமாதோ.

---

* சுற்றத்தார், தன்னைச் சூழ்ந்துள்ளாராதலின் இப்பெயர் பெற்றார்.

† பிரமோத்திரகாண்டம், சிவயோகமகிமை 63-வது, செய்யுள்.

‡ உடை=Belonging to; உடைவாள்=A sword or (scimitor Rottler Winslow.)

இப்பிரயோகத்தில் வரும் "விற்றொழில்விசயன்" என்னும் பிரசனை, அவ்விஜயராஜனின் குலத்தை க்ஷத்திரியரென விளக்கலைப்போல், ஏனாதிநாதநாயனார் குலத்தவரைச் சுட்டி உபமன்னியர் கூறிய "ஸஸ்த்ரகலாச்சாரியர்" என்னும் பிரசனையும், சேக்கிழார் கூறிய "வாட்சுற்றத்தார்" என்னும் பிரசனையும் அவரது குலவுண்மையை க்ஷத்திரியர் எனக் கோஷிக்கும், விஜயன் பயிற்றியவிற்றொழிலும், ஏனாதிநாதர் பயிற்றிய வாட்டொழிலும், அரசரது அறுதொழில்களுள் ஒன்று. * .

மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 79-வது, சுலோகம்.

ஶஸ்த்ராஸ்த்ரப்ருத்வம் க்ஷத்ரஸ்ய வணிக்பஶுக்ருஷிர்விஶ: ।
ஆஜீவநார்த்தம் தர்மஸ்து தாநமத்யயநம் யஜி: ॥

(இ-ள்). "க்ஷத்திரியனுக்கு கத்தி பாணம் முதலிய ஆயுதத்தைத்தரித்து உலகாள்வதும்; வைசியனுக்கு வர்த்தகஞ்செய்வதும், பசுவைக்காற்பதும், பயிரிடுவதும், ஜீவனோபாயமாம். யாகஞ்செய்தல், தானங்கொடுத்தல், ஓதல் இவைகள் தர்மோபாயமாம்". என்பதாதி பிரமாணங்களால் வாள் க்ஷத்திரியகுலத்தையே யோட்டி வருமெனத் துணியப்பட்டது. இக்கருத்தை முன்னிட்டே சேக்கிழாரும் "வாட்சுற்றத்தார்" என்றது நாயனார் வம்ஸத்தவர்களை. வாட்சுற்றத்தார் எனினும், யுத்தரங்கத்தவர் எனினும் ஒக்கும்.

பாரதம், வீடுமப்பருவம், பகவத்கீதையுரைத்த சருக்கம்
17-வது செய்யுள்.

பொருதுதலத்†துரியவரைப் போக்கியிந்தநிலம்புரக்கும் புகழிற்கானிற்
சருகுநுகர்ந் துயிர்வாழ்த லறமாகுமிக்சதிது தானேயென்னிற்
கருதுடலமிளமைசெல்வ நிலையாவென்பவை படிரோகண்டுபேய்த்தேர்
பருகுபுனலெனவிழையும் பரிசேயிங் யாமுயன்ற பான்மையெல்லாம்

* கூர்மபுராணம், சந்திரவங்கிஷமுறைத்த வத்தியாயம், 97-வது, செய்யுள், அரிச்சந்திரபுராணம் உத்தரகாண்டம், 6-வது, செய்யுள்.

† **"The Rajaputs are Soldiers by Birth."** Vide, Orme's History of the Hindustan, Vol. I. Book, I. P. 40. பிரமோத்தரகாண்டம், பத்திராயுவுக்கரசிய லளித்தது, 5 - வது, செய்யுள்; உருத்திராக்ஷமகிமை யுரைத்தவத்தியாயம் 16-வது, செய்யுள், இரகு வம்ஸகாவியம், 3-வது, சருக்கம், 31-வது, சுலோகங் காண்க.

இப்பாவில் "யுத்தவம்ஸத்தவரைக்கோன்று இவ்வுலகத்தை யாளுங் கீர்த்தியைப் பார்க்கிலும், காட்டில் உலர்ந்த இலைகளைப் புசித்துஉயிர்வாழ்தல் தருமமாகும்." எனப்பட்டிருக்கின்றது. அர்ச்சுனன் வம்ஸத்தவரை "போருது குலத்துரியவர்" என்றார். "போருது குலம்=யுத்தஞ்செய்யுங் குலத்திற்கு, உரியவர்=உடையவர்" அதாவது "யுத்தவம்ஸத்தவர்" எனப்படும். இதைப்போல் ஏனாதிநாத நாயனார் வம்ஸத்தவர்களையும் "வாட்சுற்றத்தார்" என்றார் சேக்கிழார். "வாள்" அரசரது அறுகுலத்தொழில்களுள் ஒன்றாகிய படையுளடக்கம்.

கம்பராமாயணம், பாலகாண்டம், வேள்விப்படலம், 43 - வது செய்யுள்.

வார்த்தை மாறுரைத்திலன் முனிவன் மௌனியாய்ப்
போர்த்தோழிற்குமரனுந் தொழுது போந்தபின்
பார்த்தனன்விசும்பினைப் பருவ மேகம்போல்
ஆர்த்தனரிடித்தன ரசனி யஞ்சவே.

இதில் ஸ்ரீராமரை "போர்த்தோழிற்குமரன்" என்றார், போரை குலத்தொழிலாகப் பெற்ற குமரன் எனப்பொருள்பட, போரை குலத்தொழிலாகப் பெற்றவர்கள் அரசரே! இதைப்போல் வாளை குலத்தொழிலாகப்பெற்றவர்களும் அரசரே.

கம்பராமாயணம், உயுத்தியகாண்டம், கும்பகருணன் வதைப்படலம், 355-வது, செய்யுள்.

புக்கடைந்தபுறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடங்கார்மதயானை வாள்வேந்தன் வழிவந்தீர்
இக்கடன்களுடையீர்நீ ரெம்வினைதீர்த் தும்முடைய
கைக்கடன்றா னுயிர்காக்கக் கடவீ ரென்கடைக் கூட்டல்.†

"வாள்வேந்தன்வழிவந்தீர்" என்பதற்கு "வாளை குலக்கருவியாகவுடைய அரசனது வம்ஸத்தில் வந்தவர்" என்பது தெளிவு,

* Vide, Ancient History of India, Vol. I. Part II. ch. XIII, P. 216.

† கம்பராமாயணம், பாலகாண்டம், நகரப்படலம், 11-வது, கவி; சுந்தரகாண்டம், சூடாமணிப்படலம், 15-வது, செய்யுள் ; பாரதவெண்பா, உத்தியோகப்பருவம், 5—வது, செய்யுள். கூர்மபுராணம், சந்திர வங்கிஷ முறைத்த வத்தியாயம், 97-வது, செய்யுள்; அரிச்சந்திரபுராணம், உத்தரகாண்டம், 6-வது செய்யுள் காண்க.

இவ்வழக்கை யனுசரித்தே ஏனாதிநாதநாயனார் வம்ஸத்தவர்களை "வாள் சுற்றத்தார்" என்றது. இதனால் வாள் அரசருக்கு இன்றியமையாக் கருவியெனத் துணியப்பட்டது.

கம்பராமாயணம், ஆரண்யகாண்டம், சரபங்கர் பிறப்பு நீங்குபடலம், 38-வது செய்யுள்.

வரிசிலை யுழவனு* மறையுழவனைநீ
புரிதொழிலெனையது புகலுதி யெனலும்
திருமக டலைவசெய் திருவினை யுறபான்
எரிபுக நினைகுவெ னருள்கென விறைவன்.

வரிசிலை† யுழவன்=ஸ்ரீராமர்
மறையுழவன்=சரபங்கர்.

வாளும் வில்லும் அரசரது குலக்கருவிகளுள் அடக்கம். இதனால் விற்றொழிலையுடைய ஸ்ரீராமரும், வாட்டொழிலையுடைய ஏனாதிநாதநாயனாரும் ஏககுலத்தவர்கள் என்பது ஜெகப்பிரசித்தி. அதாவது அரசர்கள் என அமையும். அதை விளக்கவே அத்தொழில்களை நிகண்டாரும் அரசர்களது குலத்தொழிலென்பது. "க்ஷத்திரியர்களுக்கு வில்லும், வாளும், அக்கினிக்கு விறகும் அருகிலிருக்கையில் தேஜஸையும், பலத்தையும் வளரச்செய்யும்"‡ என வால்மீகியுங் கூறுகின்றார். இதனாலும் வாள் அரசருக்கு இன்றியமையாக் கருவியெனத் துணியப்பட்டது. இவைகளை முன்னிட்டே நாயனார் சுற்றத்தார்களை "மறப்படைவாட்சுற்றத்தார்" என்பது சேக்கிழார்.

பெரியபுராணம், மெய்ப்பொருணாயனார் புராணம், 2-வது செய்யுள்.

அரசியனெறியின்வந்த வறநெறி வழாமற்காத்து
வரைநெடுந் தோளால்வென்று மாற்றலர்முனைகண்மாற்றி
உரைதிறம்பாதநீதி யோங்குநீர்மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச்சடையா னன்பர்வேடமே சிந்தைசெய்வார்.

---

* பிரமோத்தரகாண்டம், சிவதானமகிமை ; 9-வது, செய்யுள்.

† குசேலோபாக்கியானம், 1-வது, அத்தியாயம், 64-வது, செய்யுள்.

‡ வான்மீகிராமாயணம், ஆரண்யகாண்டம், 9-வது சருக்கம்.

இதில் மெய்ப்பொருணாயனாரை "அரசியனெறியில்வந்தவர்" எனப்பட்டிருக்கின்றது "அரசியல்=அரசியற்றும், நெறியில்=வழியில், குலத்தில்; வந்தவர்=உதித்தவர்" அதாவது "அரசாட்சி செய்யுங்குலத்தில் உதித்தவர்" என்பதுபொருள், ஏனாதிநாதநாயனாரையும் "படைபயிற்றுங்குலத்தவர்" என்றார், படைபயிற்றலும் அரசியற்றலும் அரசரது குலத்தொழில்களே!

பெரியபுராணம், சேரமான் பெருமாணாயனார் புராணம், 11 - வது, செய்யுள்.

வந்தமரபினரசளிப்பான் வனஞ்சார்தவத்தின் மருவியபின்
சிந்தைமதிநூனேரமைச்சர் சிலநாளாய்ந்து தெளிந்தநெறி
முந்தைமரபின் முதல்வர் திருத்தொண்டுமுயல்வார் முதற்றகை
விந்துமுடியார் திருவஞ்சைக்களத்தி லவர்பாலெய்தினார்.

அரசளிப்பான்=அரசுசெய்யும், மரபில்=குலத்தில், வந்தவர்=பிறந்தவர், சேரமான் பெருமாணாயனார் அரசுசெய்யுங்குலத்திற்பிறந்தவர். ஏனாதிநாதநாயனார் படைபயிற்றுங் குலத்தில்பிறந்தவர். இதனால் இவர்கள் இருவரும் அரசரே!

பெரியபுராணம், மெய்ப்பொருணாயனார் புராணம், 22-வது செய்யுள்.

அரசிய லாயத்தார்க்கு மழிவுறுங் காதலார்க்கும்
விரவியசெய்கைதன்னை விளம்புவார் விதியினாலே
பரவியதிருநீற்றன்பு பாதுகாத்துய்ப்பீ ரென்று
புரவலன் மன்றுளாடும் பூங்கழல் சிந்தைசெய்தான்.

இதில் மெய்ப்பொருணாயனார் சுற்றத்தார்களை "அரசிய லாயத்தார்" எனப்பட்டிருக்கின்றது. "அரசுசெய்யுங் குலத்தவர்" எனப் பொருள்பட. ஏனாதிநாதநாயனார் "படைபயிற்றுங்குலத்தவர்" ஆகுவர். அதை விளக்கவே "மறப்படைவாட் சுற்றத்தார்" என்றார் அரசுசெய்யுங் குலத்தவர்கள் யாரோ அவர்களே படைபயிற்றுங் குலத்தவருமாகுவர். இக்கருத்தை மேற்கொண்டே நாயனார் வம்ஸத்தவர்களாகிய "கிராமணிகளை க்ஷத்திரியர்" என விளக்க சேக்கிழார் "மறைப்படைவாட் சுற்றத்தார்" என்பது. இவைகளை யோாாது உமாபதி மாறியது, அவர் தவவலியின் இழுக்கேயாம்.

மநுஸ்மிருதி, 5-வது, அத்தியாயம்,
98-வது, சுலோகம்.

உத்யதைராஹவே ஶஸ்த்ரை: க்ஷத்ரதர்மஹதஸ்ய ச ।
ஸத்ய: ஸந்திஷ்டதே யஜ்ஞஸ்ததாஶௌசமிதி ஸ்திதி: ॥

(இ-ள்.) "க்ஷத்திரிய தருமப்படி யுத்தத்தில் கத்தி முதலிய ஆயுதத்தாலடிப்பட்டு இறந்தவனுக்கு யாகஞ்செய்தவனுக்குண்டாகும் புண்ணியலோகமுண்டாகும்" என்றார். வியாசரும் வேதமோதுவதும், தவமும் பிராமணர்களுக்குத்தான் தர்மமாகும்; அரசர்களுக்கு இவைகள் தர்மமாகா? அரசர்களுக்கு துஷ்டர்களை தண்டிப்பதும், ஸாதுக்களைக் காப்பதும், யுத்தத்தில் ஓடாமலிருப்பதுமே தர்மமாகுமெனவும்; அரசர்கள் யுத்தத்தில் முடிவடைவது சிறந்ததாகுமெனவும்; க்ஷத்திரியர்களுக்கு செங்கோல் செலுத்துவதும், யுத்தஞ்செய்வதும் தர்மமெனவும் பாரதம், சாந்திபர்வத்தில் கூறுகின்றார். பிரஹஸ்பதியும், யுத்தஞ்செய்யாத க்ஷத்திரியனையும், தேசசஞ்சாரஞ்செய்யாத பிராமணனையும் பாம்பு எலிகளை விழுங்குவதைப்போல், பூமியானது விழுங்கிவிடுமென்கிறார், இவைகளால் அரசர்களுக்கு யுத்தம் அவர்கள் சாதியின் உடன்பிறப்பென விளங்கின. இவைகளானே நாயனார் வம்ஸத்தவர்களை "மறப்படைவாட் குற்றத்தார்" என்பது,

மநுஸ்மிருதி, 5-வது, அத்தியாயம், 99-வது சுலோகம்

விப்ர: ஶுத்த்யத்யப: ஸ்ப்ருஷ்ட்வா க்ஷத்ரியோ வாஹநாயுதம் ।
வைஶ்ய: ப்ரதோதம் ரஶ்மீந்வா யஷ்டிம் ஶூத்ர: க்ருதக்ரிய: ॥

(இ-ள்.) தீட்டுப்போகும் நாளில் நாலுவருணத்தாருக்குள் பிராமணனுக்கு ஸ்நானத்தாலும், க்ஷத்திரியனுக்கு வாகனம் வில்லுவாள் இவைகளைத் தொடுவதினாலும், வைசியனுக்கு உழவுக்கோல் தராசு கயறு இவைகளைத் தொடுவதினாலும், சூத்திரனுக்கு மூங்கிற்தடியைத் தொடுவதினாலுஞ் சுத்தியுண்டாகின்றது. *

மநுஸ்மிருதி, 8-வது, அத்தியாயம், 113-வது சுலோகம்,

ஸத்யேந ஶாபயேத்விப்ரம் க்ஷத்ரியம் வாஹநாயுதை: ।
கோபீஜகாஞ்சநைர்வைஶ்யம் ஶூத்ரம் ஸர்வைஸ்து பாதகை: ॥

* புத ஸ்மிருதி, 25-வது, சுலோகம்

(இ-ள்). "வாதிப் பிரதிவாதிகளை பிரமாணங் கேட்கும் போது பிராமணனைச் சத்தியமாய்ச் சொல்லென்றும்; க்ஷத்திரியனை உன்வாகனம் ஆயுதம் இவைகளின்மேல் ஆணையிட்டுச் சொல்லென்றும்; வைசியனை உன்பசு தானியம், தநம் இவைகளின்மேல் ஆணையிட்டுச் சொல்லென்றும் ; சூத்திரனை பொய்சொன்னால் பஞ்சமா பாதகங்களை யடையக்கடவேனென்றுச் சொல்லச்சொல்லி பிரமாணங்கேட்கவேண்டியது." இதன் அங்கிலேய மொழிபெயர்ப்பு.

" He (the Judge) shall abjure a Brahman by saying, if you speak falsely, your truth will be destroyed. **A Kshatriya by saying your horse elephant and weapons will become useless**. A Vaisya your cattle, seeds and gold will be unproductive. A Sudra, he shall abjure by saying, if you speak falsely all sins will be on your head". Vide Macnaughten's " Hindu Law". Vol. I, P. 248.

இவைகளால் க்ஷத்திரியர் சதா ஆயுதத்தைக் கையில் ஏந்த வேண்டுமெனவும், தருமப்படி கத்தியாலடிப்பட்டு இறந்தவனுக்கே மோட்சமுண்டெனவும், தீட்டு நீங்கவேண்டின் வாள் வில்லைத் தொடவேண்டுமெனவும், சத்தியஞ்செய்யின் ஆயுதத்தின்மேல் ஆணையிடவேண்டுமெனவும், விவாகத்தில் க்ஷத்திரியமாது பாணத்தைப்பிடித்து மணஞ்செய்துக் கொள்ளவேண்டுமெனவும், மநு பைடீநஸி சங்கலிகித பாரச புத* ஸ்மிருதி யாதிகள் கோஷிப்பதால் ஆயுதம் அவனோடு உடன்பிறப்பாக எண்ணப்படும். இக்கருத்தை யுட்கொண்டே உபமன்னிய மகருஷி ஏனாதிநாதநாயனார் வம்ஸத்தவர்களை "சஸ்த்திரதுலோத்பவா" எனவும், சேக்கிழார் "வாட்குற்றத்தார்" எனவுங் குலத்தின்பேரி லேற்றிக்கூறியது. இதனாலும் நாயனார் க்ஷத்திரியர் எனத் துணியப்பட்டது,

| | |
|---|---|
| **Kshatriya = The Second Tribe,**<br>**= The military Tribe,**<br>**= A man of the Military Tribe**<br>**= The Royal Tribe,** | Rottler<br>Winslow<br>Wilson |

* பெரியபுராணம், சோமாசிமாறநாயனார் புராணம், 1-வது செய்யுள். திருஞானசம்பந்தசுவாமிகள், புராணம் 55, 769, 958, 1168, 1227 - வது செய்யுட்கள், திருநீலநக்கநாயனார் புராணம், 4-வது செய்யுள்.

"**The Kshatriyas** belong to the Second or **military Class. They are kings and Soldiers** " Vide, The Rev. H. Bower's Essay on Hindu Caste P. 5.

" க்ஷத்திரியர் இரண்டாவது அல்லது படைபயிற்றுங் குலத்தைச்சாருவர், அவர்கள் உலகாள்பவரும், யுத்தரங்கத்தவருமாகுவர் " என்பதாம், பிர்மம் என்பது வேதம், அதை ஓதி, அதில்சொல்லிய அர்த்தங்களை அறிந்து அதின் தர்மங்களை அநுஷ்டிப்பவன் முக்கியபிராமணன் என்று அங்கிராவு கூறுகின்றார், இதைப்போல் க்ஷத்திரியன் என்றால் யுத்தத்தொழிலன் என்பது விளக்கம், அவ்யுத்தத்திற்குரிய நூற்களையும், ஆயுதங்களையும், ஓதியும், பழகியும் அதன் தர்மங்களை அனுஷ்டிப்பவன் க்ஷத்திரியன் எனப்படும். இதை உபலக்கணவிதியெனப்படும். பரிமேலழகரும், "கல்வி*:— அதாவது அரசன் தான் கற்றற்குரிய நூற்களைக் கற்றல், அவையாவன அறநூலும், நீதி நூலும், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்றிவற்றினூல்களும் முதலாயின " என்றார். இவற்றால் வேதம் பார்ப்பாருக்கும், படை அரசருக்குமுரியதென் றேற்பட்டது.

" **The Rajaputs** were a **race of Warriors**,† who formed the ruling class, wherever they settled ". Vide. J. Talboys Wheeler's History of India. Ch. VII.

" இராஜபுத்திரர்கள் யுத்தவம்ஸத்தவர்கள். அவர்களே அரசாட்சி செய்யும் வகுப்பினருமாகுவர் "

" The name Rajapootana is due to the fact that in this region most of **the pure Rajapoot clans or members of the Great warrior caste**, of old Aryans". Vide, Longman's School Geography, P. 139.

" இராஜபுட்டானாவிலுள்ள யுத்தவம்ஸத்தவர்கள் அல்லது இராஜபுத்திரர்கள் பூர்வ ஆரியவம்ஸத்தவர்கள்."

" First, the Priests‡ or Brahmans ; **Second the Warriors or Fighting companions of the king, called**

---

* திருக்குறள் 40-ம் அதிகாரம்.

† Vide Salem District Manual. Vol. I. P. 130.

‡ Vide, The Land of the Fire worshippers, Vol.I. Chap.IV, P.70.

**Rajaputs or Kshatriyas, literally, of the royal Stock."*** Vide. A Brief History of The Indian People, Ch. IV. P. 50.

"முதலாவது ஆசாரியர் அல்லது பிராமணரும், இரண்டாவது யுத்தாங்கத்தவர் அல்லது அரசருமாகும்."

"The Brahmans or Priests claimed the highest rank. But they seem to have had a long struggle with the **Kshatriya or Warrior caste**, before they won their proud position at the head of the Indian people.† Vide. W. W. Hunter's A brief History of the Indian people, Ch. IV, P. 51.

"பிராமணர் அல்லது ஆசாரியர் உயர்ந்த அந்தஸ்த்துடைய வர்கள். ஆனால் அவர்கள் இந்து ஜனங்களினது தலைமையை வகித்தற்கு க்ஷத்திரியர் அல்லது யுத்தவம்ஸத்தவர்களோடு பெரிய சண்டை நடத்தியிருப்பார்களெனக் காணப்படுகின்றது".

"As, the duty of the Sudra was to serve, of the Vaisya to till the ground and follow middle-class traders, **so the business of the Kshatriya was to fight the public enemy**, and of the Brahman to propitiate the national Gods". Vide, A Brief History of the Indian People, Ch. IV, P. 51.

"சூத்திரருக் கடமையும், வைசியருக்கு வர்த்தகமும், க்ஷத்திரியருக்கு யுத்தமும், பிராமணருக்கு வணக்கமுமாகும்.

"The sacred class or Brahmins, are considered the chief of all created beings. **The Military or Kshatriyas are treated** with respect. The third class or Vaisyas do not rank high: they are to perform all commercial and agricultural duties. The chief duty of

* "Royal Stock:—Royal=இராஜரீகமான, Stock=சந்ததி அல்லது வம்ஸம்; அதாவது இராஜவம்ஸம்" Vide. Percival's English and Tamil Dictionary.

† Brief History of Indian people, Ch. IV. P. 52. Ch, VIII. P. 85.

the fourth class or Sudras, is to serve the Brahmans." Vide, Rev. J. Garrett's History of India, Ch. II, P, 19.

"பிராமணர்கள் சிருஷ்டிகளுக்கெல்லாம் தலைமையாக மதிக்கப்படுகிறார்கள். **யுத்தத்திற்குரியவர்** அல்லது **க்ஷத்திரியர்கள்** கனப்படுத்தப்படுகிறார்கள், மூன்றாவது அல்லது வைசியர் வர்த்தகமும், சூத்திரர் பிராமணருக்கு வேலையுஞ் செய்யவேண்டும்."

"The division into the four castes of Brahmans, **Kshatriyas**, Vaisyas, and Sudras; **or** the sacerdotal, **the military**, the industrial and the servile **classes**." Vide, Pope's History of India, Ch. I, P. 34.

"பிராமணர், **க்ஷத்திரியர்**, வைசியர், சூத்திரர் அல்லது ஆச்சாரியர், **யுத்தரங்கத்தவர்** வர்த்தகர், ஏவலாளர் என நான்கு சாதியாகப் பிரிக்கப்படும்,"

"The first or highest caste is the Brahman or Priestly class; **The second the Kshatriya or military class**; the third is the Vaisya class composed of husbandmen and merchants; and the fourth is that of the sudras are labourers and agriculturists" Vide Mysore and Coorg, Vol. I, P. 317.

"பிராமணர் அல்லது ஆச்சாரியவகுப்பார் முதல் அல்லது உயர்ந்தசாதியைச் சாருவர், **க்ஷத்திரியர் அல்லது யுத்தவகுப்பினர்** இரண்டாவதெனப்படும்.

"The chief feature in the code in its division of the people into four classes or castes. namely the Brahmans or Sacerdotal; **the Kshatriyas or Military** the Vaisyas or Industrial and the Sudras or Servile." Vide. Montgomery Martin's Indian Empire, Vol. I, Ch. I, P. 14.

"நான்குசாதியுள் பிராமணருக்குக் குருத்துவமும், **க்ஷத்திரியருக்கு ஆயுதத்துவமும்**, வைசியருக்கு உழைப்பும், சூத்திரருக்கு ஏவலும் பொருந்தும்."

"These people (the Hindus) from the oldest time, have been distributed into various orders, all hereditary, which are called castes, of which four are the most remarkable; the Brahmans, **the Kshatriyas**, the Vaisyas, and the Sudras; the first the priests, **the second, the military orders**; the third husbandmen and merchants; the last the menial or servile class or caste." Vide The Modern Orator Edmund Burke P. 806,

"இந்துக்கள் தொண்டுதொட்டு பரம்பரையாய் வரப்பட்ட அநேக சாதியார்களாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள், அவற்றுள் பிர்ம **க்ஷத்திரிய** வைசிய சூத்திரராகிய நாலும் உத்கிருஷ்டம், அதில் முதல்வகுப்பினர், ஆசாரியர்கள், **இரண்டாவதார் யுத்த ரங்கத்தார்**, மூன்றாவதார் உழவினர், ஈற்றினர் ஏவலாளர் எனப் படும்."

"This is confirmed by the Ramayana, which details the destruction of **the military class** and assumption of political power by the Brahmans, under their Chief Parasurama, marking the period when **the military class**, lost the umbrella of Royalty." Vide Tod's Rajasthan, Vol. I, Ch. III, P, 42.

"பரசுராமனால் **யுத்தவம்ஸத்தவர்** அழிக்கப்பட்டதாக இராமாயணத்தில் ஊர்ச்சிதம் செய்யப்பட்டது."

"The first is the sacerdotal calss, **the second military or appointed to defend the people;** the business of the third, commerce, lending at interest. agriculture, and keeping herds of cattle; and of the fourth, to serve the higher classes'. Rickard's India. Vol. I. P. 6.

"முதல் வகுப்பினர்கள் ஆசாரியர்கள், **இரண்டாவது வகுப்பினர்கள் யுத்தவீரர்கள் அல்லது மனிதர்களை பாதுகாப்பவர்கள்**, மூன்றாவதார் வர்த்தகர்கள், நான்காவதார் ஊழியஞ் செய்பவர்கள்".

" Miller in his historical view of the English-Gevernment, observes that this distribution of the people into clergy, **military** husbandmen, and artificers, is to be found everywhere". Vide. Rickard's India, Vol. I, P. 9.

"மில்லர் துரை தனது சரித்திரத்தில் இங்கிலீஷ் துரைத்தனத்தைப்பற்றி கூறவந்தவிடத்தில் ஆசாரியர்கள், யுத்தரங்கத்தார், பயிரிடுங் குடிகள், கம்மியர் என்னும் நான்குவகையான மனிதர்களின் பாகுபாடானது எல்லாவிடங்களிலுங் காணலாம்."

" In Hindoostan, a name given by the Portuguese to the several classes into which society is divided, with fixed occupations, which have come down from the earliest ages. The original castes are four:—The Brahmans or sacred order, **the Kshatriyas or Soldiers and Rulers**; the vaisyas or husbandmen and merchantsand, and the sudras or labourers". Vide. Caste in Webster's Dictionary.

"இந்துஸ்தானத்தில் பூர்வந்தொடங்கி பரம்பரைப்பற்றிவந்த தொழிற்களின் பிரிந்தகூட்டமாகிய ஜாதிகள் நான்காம்:—அவற்றுள் பிராமணர்கள் அல்லது பரமார்த்தமானவர்கள்; க்ஷத்திரியர்கள் அல்லது யுத்தவீரர்கள், ஆள்பவர்கள்; வைசியர்கள் அல்லது, வர்த்தகர்கள்; சூத்திரர்கள் அல்லது ஏவலாளர்கள் என்பதாம்."

" Hitherto there bad only been four grand divisions among the people:—the Brahmans or Sacerdotal class; The **Kshatriyas or Warriors;** the vaisyas or cultivators; and the Sudras or servants. These castes could not intermarry with each other". Vide. A Statistical Account of Bengal. Vol., I. P, 52

"**Kshatriya**, **the second or Warrior caste** in the ancient Hindu social organization". Vol. III.P. 52.285.

"**The Kshatriyas** originally formed the second or **Warrior caste** of the Hindus". Vol.IV.P.46.222.

" **Kshatriyas** belong to the second or **Warrior caste** of the old Hindu system in Sanskrit times" Vide. Vol· IV· P. 329.

" **Kshatriya, the Soldier caste**". Vol. VI.P. 380.

" **Kshatriya** the second or **Warrior caste** in the ancient Hindu social organization" Vide. Vol. VII. P. 215, 377.

" **Kshatriyas** formed the second or **Warrior Caste** in the ancient sanskrit classification" Vide. Vol, VIII. P. 43. 171.

" **Kshatriyas**, are formed the second or **Warrior caste** in the old sanskrit system" Vol. IX, P. 48.

" **Kshatriya**, the second or **Warrior caste** in the ancient Hindu social system" Vide. Vol. X. P. 81. 256.

இவைகளில் "க்ஷத்திரியர்களே இரண்டாவது வதப்பார் அல்லது யுத்தரங்கத்தவர்கள்" எனப்பட்டிருக்கின்றது.

" Divided the people into four orders, the religious, **the military**, the commercial, and the servile", Vide. Oriental Historical manuscripts. Vol. I. P. 209.

"ஆச்சாரியர், யுத்தரங்கத்தவர், வர்த்தகர், ஏவலாளர் என நான்கு வகுப்பினராகுவர்."

" It has already been related that a man of high birth and **military bearing** called a Nair. The Nairs constituted a distinct rank and caste at calicut. They engaged in no occupation except that of a soldier. The Zamorin could not make a Nair of a peasant, The Nairs being such by descent. **At seven years old a little nair began to learn the art of war.** and **then he was taught the use of the various weapons. The Nairs never ceased taking military lessons**". Vide. The Voyages and Adventures of Vasco-Da Gama. Ch.XIV· P. 154, 155.

"மலையாளத்தில் நாயர்களை* உயர்வானபிறவி அதாவது ஆயுதந்தாங்குபவர்கள் எனப்படும், அவர்கள் ஆயுதம் தாங்குவதல்லாமல் வேறுதொழில்கள் செய்யார்கள், சாமரினும் அவர்களை பயிரிடுபவராக்கார், நாயர்வம்ஸத்துப் பையன் ஏழுவயதில் சண்டைசெய்யுங் கருவியைப் பழக்க ஆரம்பிப்பான், நாயர்கள் ஆயுதம் பழகுதலைவிட்டு நீங்கார்கள்."

"In Japan, **The first were the military class.** They were addressed by the common people as Sama, Lord, and were called Samurai. **They had the right of wearing two swords**". Vide. Japan. P. 31.

"ஜபானில் முதல்வகுப்பார் யுத்தாங்கத்தவர், அவர்களை சாமா அல்லது அரசர் எனப்படும், அவர்களுக்கு இரண்டு வாளை யணியும் உரிமையுண்டு."

"**Samurai never went out without his sword, even a school boy going to school had one buckled on**". Vide Japan. P. 32,

"சாமுராய் வம்ஸத்தவர்கள் கத்தியில்லாமல் வெளியில் புறப்படார்கள். ஸ்கூல் பிள்ளைகள்கூட ஸ்கூலுக்குப்போகும்போது ஒருகேடகம் வைத்திருப்பார்கள்."

(In Japan,) "It was formerly the custom for the **military class to wear two swords**. which were thrust through the girdle". Vide. The Pictures of women in many Lands. P. 45,

"ஜபானில் பூர்வம் யுத்தரங்கத்தவர்கள் இரண்டு கத்தியை யணிந்திருத்தல் வழக்கம்".

"Corresponding with this origin, to the first was assigned the office of teaching and guiding men; **to the second of ruling and bearing arms;** to the third the pursuits of commerce, and agriculture; and to the last the service of the other three". Vide. Revd Trevor's India. Its Natives and Missions P. 113.

"இந்தப் பூர்வோற்பத்திக்கு வொற்றுமையாகவே மனிதர்களுக்குப் போதித்தலும், வழிக்காட்டலுமாகிய தொழில்களை

* மலையாளத்தில் நாயர்களையே க்ஷத்திரியர்களாகக் கவனிக்கப்படும்.

முதல் வகுப்பினர்களுக்கும்; ஆளுதலையும், ஆயுதந்தாங்குதலையும் இரண்டாவது வகுப்பினர்களுக்கும்; வர்த்தகமும் விவசாயமும் மூன்றாவது வகுப்பினர்களுக்கும்; மேலே மூவருக்குப் பணிவிடை செய்தலை ஈற்று வகுப்பினர்களுக்கும் நியமிக்கப்பட்டது.

மேற்கூறிய இந்துதேச சரித்திரங்களை யெழுதிவந்த அங்கிலேய வித்துவான்கள் இந்து சாஸ்திரங்களை யனுசரித்து க்ஷத்திரியர்களை ' யுத்தவீரர்கள் " எனவும், "யுத்தவம்ஸத்தவர்கள்" எனவும், " யுத்தத்திற்சூரியவர்கள் " எனவும், " யுத்தரங்கத்தவர்கள் " எனவும், யுத்தவீரர்கள் எனப்படுபவரும், யுத்தத்திற்சூரியவர்களும் அரசர்களே எனவும், அவர்களுக்கு ஆயுதந்தாங்குதலே தொழிலெனவும், அவ்வர் யுதத்தொழிலையே செய்யவேண்டுமெனவும், வேறு தொழில்கள் செய்யப்படாதெனவும், ஜபானிலும் வாளேயணியும் உரிமை அரசர்களுக்கே உண்டு எனவும், வாளில்லாமல் வெளியே புறப்படார்கள் எனவும்; தேசநோக்கங்களையறிந்து எழுதியிருக்கின்றார்கள், இந்நோக்கங்களை யொத்தே ஸ்ரீமத் உபமன்னியரும், சேக்கிழாரும் ஏனாதிநாத நாயனாரை தொழிலாலும் க்ஷத்திரியர் என விளக்கியிருக்கின்றார்கள். அதில் ஆயுதந்தாங்குதலே அந்நாயனாருக்கும், அவர் வம்ஸத்தவர்களுக்கும் தொழிலென விளக்க " தன்மைத்தொழில் " எனவும், அதையே அவரும், அவர் குலத்தவருஞ் செய்யவேண்டியதென விளக்க "செய்தொழிலாம்" எனவும், அப்படி செய்யத்தகுந்த தொழிலை விட்டு வேறு தொழில் செய்யப்படாதென விளக்க " தள்ளாத தொழில், ஆளுததொழில் " எனவும், ஆயுதந்தாங்குதல் அவர் குலத்திற்கே பாத்தியதையுடையதெனத் தோன்ற " குலக்கர்மம், உரிமைத்தொழில், நந்தமது வாட்பயிற்று நற்றயம், மறப்படைவாட் சுற்றத்தார், தங்கள் தொழில் " எனவும் பலப்பிரயோகங்களால் விளக்கி, நாயனாரை க்ஷத்திரியர் என வற்புறுத்துகின்றார்கள். இவைகளை உமாசிவாச்சாரியார் கவனித்தார் இல்லை.

சேக்கிழார் பெரியபுராணம், சிறப்புலி நாயனார் புராணம்,
3 - வது, செய்யுள்.

ஆலைசூழ்பூகவேலி யத்திருவாக்கூர் தன்னின்
ஞாலமார்புகழின் மிக்கார் நான்மறைக்குலத்தினுள்ளார்
நீலமார்கண்டத்தெண்டோ ணிருத்தர் தந்திருத்தொண்டேற்ற
சீலராய்ச் சாலுமீகைத் திறத்தினிற் சிறந்தநீரார்.

இதில் சிறப்புலி நாயனாரை "மறைக்குலத்தவ" ரென்றார். மறை=வேதம், குலம்=சுற்றம்". சிறப்புலி நாயனார் வேதாத்தியானஞ் செய்யுஞ் சுற்றம். ஏனாதிநாத நாயனார் "படைபயிற்றுஞ் சுற்றம்".

பெரியபுராணம், பூசலார் நாயனார் புராணம்,
3 – வது, செய்யுள்.

அருமறைமரபுவாழ வப்பதிவந்து சிந்தை
தருமுணர் வானவெல்லாந் தம்பிரான் கழன்மேற்சார
வருநெறிமாறுவன்பு வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
பொருள்பெறு வேதநீதிக் கலையுணர் பொலிவின்மீக்கார்

இதில் "மறைமரபு" என வருகின்றது.

மறை=வேதம்.
மரபு=சுற்றம்.
வேதசுற்றம்=பிராமணாள்.
வாள்=பட்டயம்
சுற்றம்=மரபு.
வாட்சுற்றம்=க்ஷத்திரியர்.

பெரியபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்,
1224-வது, செய்யுள்.

மாமறை மைந்தரெல்லா மணத்தெதிர்சென்று மன்னுந்
தூமலர்ச்செம்பொற் சுண்ணந்தொகுநவ மணியும்வீசத்
தாமரை மலரோன்போல்வா ரரசிலைதருப்பை தோய்ந்த
காமர்பொற்கலசநன்னீ ரிருக்குடன் கலந்துவீச

இதில் "மறைமைந்தர் *" எனப் பார்க்கின்றோம். மறை=வேதம், மைந்தர்=சிறுவர். மறைமைந்தர்=வேதத்தை யுடையவர், படைச்சுற்றத்தார்=ஆயுதத்தையுடையவர்.

நம்பியாண்டார் நம்பி அந்தாதி, துதி - கவி.

பொன்னி வடகரைசேர்நாரையூரிற் புழக்கைமுக
மன்னனறுபத்துமூவர் பதிதே மரபு செயல்

* பெரியபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம். 11, 103, 966-வது, செய்யுட்கள். தஞ்சைவாணன் கோவை, களவியில், பாங்கியிற் கூட்டம். 94-வது, செய்யுள்.

பன்னவத் தொண்டத்தொகைவகை பல்குமந்தாதிதனைச்
சொன்னம்மறைக்குலநம்பி பொற்பாதத் துணைதுணையே.

மறைக்குலநம்பி
வாட்குல ஏனாதிநாதர்

வேதத்திற்கு சுற்றமாய் நிற்பவர் வேதியர். ஆயுதத்திற்கு சுற்றமாய் நிற்பவர் அரசர். இது மநுவாதி நூற்களின் சம்மதம். இதை நேர்க்க படைச்சுற்றத்தாராகிய ஏனாதிநாத நாயனாரும் அரசரே!

பெரியபுராணம், சண்டேசுர நாயனார் புராணம்
14-வது, செய்யுள்.

நிகழுமுறைமையாண்டேழுநிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும்பெருமை யுபநயநப் பொருவில்சடங்கு முடித்தறிவின்
இகழுநெறியவல்லாத வெல்லாமியைந்த வெனினுந்தந்
திகழுமரபினோதுவிக்குஞ் செய்கைபயந்தார் செய்வித்தார்.

இதில் சண்டேசுர நாயனார் பிராமணராதலால் "ஓதுவிக்குந் தொழில்". அவர் மரபிற்கேயுரியதெனத் தோன்ற "திகழுமரபினோதுவிக்குஞ் செய்கை" என்றார். "ஓதுவிக்குந் தொழில்" பிராமணரது அறுதொழிலில் ஒன்று. இதைப்போல் படைபயிற்றல் அரசரது அறுதொழில் ஒன்று அதனாலேயே சேக்கிழார் க்ஷத்திரியகுல ஏனாதிநாதநாயனார் வம்ஸத்தவர்களாகிய கிராமணிகளுக்கு படைத்தொழில் அவர் குலத்தையே யொட்டிவருமெனத் தேர்ந்து "படைச்சுற்றத்தார்" என்பது. இதனாலும் நாயனாரை க்ஷத்திரியர் எனத்துணியப்படும். ஆயின இவைகள் உமாபதியின் மண்டைக்கு ஏறாதது அவர்குண அழுக்கின் துணிபென்க.

பெரியபுராணம், மூர்த்திநாயனார் புராணம்,
8-வது செய்யுள்.

அப்பொற்பதிவாழ் வணிகக்குலத்தான்ற தொன்மைச்
செப்பத் தகுசீர்க்குடிசெய்தவஞ் செய்யவந்தார்
எப்பற்றினையு மறுத்தேறுங் கைத்தேறுவார்தாண்
மெய்ப்பற்றெனப் பற்றிவிடாத விருப்பின்மிக்கார்.

வணிகம்=வர்த்தகம்
குலம்=சுற்றம்
வர்த்தகச்சுற்றம்.

பெரியபுராணம், மூர்க்க நாயனார் புராணம்,
2-வது, செய்யுள்.

செம்பொற்புரிசைத் திருவேற்காடமர்ந்த செய்யசடைக்கற்றை
நம்பர்க்கும்பர்க் கமுதளித்து நஞ்சையமுது செய்தவருக்
கிம்பர்த்தலத்தில் வழியடிமையென்றுங் குன்றுவியல்பில்வருந்
தம்பற்றுடைய நிலைவேளாண்குலத்திற் றலைமை சார்ந்துள்ளார்.

வேளாண்மை=பயிர்*
குலம்=சுற்றம்.

மூர்க்க நாயனார் பயிர்செய்யுங் குலத்தவர்†
ஏனாதிநாத நாயனார் படைபயிற்றுங் குலத்தவர்.

பெரியபுராணம், திருநீலகண்டநாயனார் புராணம், 3-வது கவி.

அளவிலாமரபின்வாழ்க்கை மட்கலமழதுக் காக்கி
வளரிளந்திங்கட்கண்ணி மன்றுளா ரடியார்க்கென்றும்
உளமகிழ்சிறப்பின் மல்க வோடளித் தொழுகுநாளில்
இளமைமீதூரவின்பத் துறையினி லெளியரானார்.

இதில் திருநீலகண்டநாயனாரை "மட்கலமாக்கும் மரபு" என்றனர். மட்கலம்=மட்பாண்டத்தை, ஆக்கும்=வனையும், மரபு =குலம் எனப்பொருள்படும். மட்பாண்டத்தை வனையுங்குலம் என்ற மாத்திரத்தானே "குயவர்" எனத் தெரிவித்தலைப்போல் "மறப்படைவாட் சுற்றத்தார்" என்ற மாத்திறத்தானே கிராமணிகளை க்ஷத்திரியர் என விளக்கும். இது பன்னூற்றுணிபு.

பெரியபுராணம், கலியநாயனார் புராணம் 5-வது செய்யுள்

எயிலனையுமுகின்முழக்கு மெறிதிரைவேலையின் முழக்கும்
பயிறருபல்லியமுழக்கு முறைதெரியாப் பதியதனுள்
வெயிலணிபன் மணிமுதலவிழுப் பொருளாவன விளக்குந்
தயிலவினைத் தொழின்மரபிற் சக்கரப்பாடித்தெருவு

தயிலவினைத்தொழிலையுடையவர் செக்கார்.
படைத்தொழிலையுடையவர் அரசர்.

* பெரியபுராணம், மானக்கஞ்சார நாயனார் புராணம். 7-வது கவியும், செறுத்துணை நாயனார் புராணம், 2-வது, கவியையுங் காண்க.

† Vide, P. 134. Ch. VI. on the Original Inhabitants of India, 1887.

பெரியபுராணம், திருமூல நாயனர் புராணம்,
11-வது, செய்யுள்,

அந்தணர்தஞ் சாத்தனூ ராமேய்ப்பார் குடித்தோன்றி
முந்தைமுறை நிரைமேய்ப்பான்மூலனெனும்பெயருடையான்
வந்துதனிமேய்க்கின்ருன் வினைமாள வாழ்நாளை
வெந்தொழில்வன் கூற்றுண்ண வீடிநிலத் திடைவீழ்ந்தான்.

இதில் "ஆமேய்ப்பார்குடி" எனப்பட்டிருக்கின்றது. ஆ=பசுவை, மேய்ப்பவர்=மேய்க்கப்பட்டவர், குடி=குலம், சுற்றம். "பசுவை மேய்க்கப்பட்டவர் குலம்." பசுவைமேய்க்கப்பட்டவர் இடையர். அது "சொல்லிய வமுதராயர் தொறுவரே இடையரென்ப" என்னு நிகண்டால் விளங்குவதால்; திருமூலநாயனர் 'இடையர்" எனப்பட்டது. இதைப்போல் ஏனதிநாதநாயனரை "படைச் சுற்றத்தார்" எனப்பட்டிருக்கின்றது. படை=ஆயுதம், சுற்றம்=குலம். "ஆயுதம்பயிற்றுங்குலம்". ஆயுதம் பயிற்றப்பட்டவர் க்ஷத்திரியர். அது "ஓதலே வேட்டலீத லுலகோம்பல் படைபயிற் றல் மேதகுபோர்செய்திட்டல் வேந்தர்செய் தொழிற்களாரும்" என்பதால் தெளிவதால் ஏனதிநாதநாயனர் க்ஷத்திரியர் என பசுமரத்தாணியைப்போல் அறையப்பட்டது.

ஏனதிநாதநாயனர் அரசரல்லாதிருப்பின் சேக்கிழார் "அவர் சுற்றத்தார்" என்ருவது, "போர்த்தொழிலைக் கற்றிருக்குஞ் சுற்றத்தார்" என்ருவது கூறியேமுடிப்பர். குலத்தொழிலெனப் பொருள்படும்படியாக "மறப்படைவாட் சுற்றத்தார்" எனக் கூறத்துணியார். வாட்படைக்குரியவரல்லாத பிரமகுல துரோணச்சாரியார்* வாட்படைக்கற்று துரியோதனதியருக்கு ஆசிரியராயிருந்தார். இருந்தும் ஏனதிநாதநாயனருக்குப் படைத்தொழிலை குலத்தொழிலெனக் கூறியதைப்போல், துரோணச்சாரியாருக்கும் அப்படைத்தொழிலைக் குலத்தொழிலென நூற்கள் கூறியெழவில்லை. துரோணச்சாரியார் படைக்குரியவராகார், வேதியராதலால் வேதத்திற்குரியவரே!† அது "நூலேகரக முக்கோன்

* பாரதம், சாந்திபருவம், வீடுமனைக்காண்டசருக்கம், 37-வது செய்யுளும், புதஸ்மிருதி, 22-வது சுலோகமுங்காண்க.

† வால்மீகிராமாயணம், சுந்தரகாண்டம், 4-வது சருக்கம், 15-வது சுலோகங் காண்க.

மனேயே, யாயுங்காலையந்தணர்க்குரிய" என்பதால் விளங்கும். அவ்வேதசூற்றத்தாரை வாட்சூற்றத்தார் என்புழி உலகம் ஒப்புமா? அவ்விதமாவது அவர் குலத்தவர் முழுதிலும் அத்தொழிலைத் தெரிந்திருந்தனரா? குலமுழுதிலுந் தெரிந்திருப்பினும் அத்தொழிலை குலத்தொழிலெனக் கூற சாஸ்திரங்கள் சம்மதிக்குமா?

மநுஸ்மிருதி, பத்தாவ தத்தியாயம், 73-வது சுலோகம்.

அநார்யமார்யகர்மாணமார்யம் சாநார்யகர்மிணம் ।
ஸம்ப்ரதார்யாப்ரவீத்தாதா நஸமௌ நாஸமாவிதி ॥

(இ-ள்.) "பிராமணன் தொழிலைச்செய்தாலுஞ் சூத்திரன் பிராமணசாதி யாகமாட்டான், ஏனென்ருல் அவனுக்கு பிராமண சாதித்தொழிலில் அதிகாரமில்லையல்லவா? சூத்திரன் தொழிலைச் செய்தாலும் பிராமணன் சூத்திரசாதியாகமாட்டான். ஏனென்ருல் அவன் ஈனத்தொழிலைச் செய்தாலும் அவன் சாதி உயர்ந்ததல்லவா? இப்படியே இந்த விஷயங்களை பிர்மாவும் நிச்சயஞ் செய்திருக்கிருர்". இப்பிரயோகத்தில் ஒருகுலத்தவர் தொழிலை மறுகுலத்தவர் செய்யின் அது அவர்களுக்குக் குலத்தொழில் எனக் கூறலாகாவெனப்பட்டிருக்கின்றது. இதை நோக்க ஏனுதிநாத நாயனர் வேறு குலத்தவராயிருப்பின் சேக்கிழாருக்கு படைத்தொழிலை குலத்தொழிலெனக்கூற நாவெழுமா? சண்டேசுவர நாயனர் மாடுமேய்த்ததால் சேக்கிழார் அவரை இடையர் என்றனரா? அத்தொழில் அவருக்குக் குலத்தொழில் என்றனரா? இல்லை. "திகழுமரபினேதுவிக்குஞ் செய்கை" என்பதால், அவர் பிராமணராதலால் அவர் மரபிற்குரிய "ஓதுவித்தல்" அன்ருே அவருக்குக் குலத்தொழில் என்ருர். அரசர்கட்கோ படைத்தொழிலை குலத்தொழிலெனக் கூறவும், குலமுழுதிலுங் கற்கவும் நூற்கள் முன்னிற்கும். இத்திறத்தானே ஏனுதிநாதநாயனருக்கு படைத்தொழிலை குலத்தொழில் எனவும், அவர் குலத்தவர் முழுதிலுங் கற்றிருந்ததாகவும், சேக்கிழார் பெரியபுராணத்துள் சோனைமாரியாகப் பொழிந்தது.

பெரியபுராணம், ஏனுதிநாதநாயனர் புராணம், 9-வது, செய்யுள்.

தோள்கொண்ட வல்லாண்மைச் சுற்றத்தோடுந் துணையாக்
கோள்கொண்ட போர்மள்ளர் கூட்டத்தொடுஞ்சென்று

வாள்கொண்ட தாயம் வலியாரே கொள்வதென
மூள்கின்ற செற்றத்தான் முன்கடையி னின்றழைத்தான்.

| | |
|---|---|
| தோள் | தோளை |
| கொண்ட | (ஆயுதமாகக்) கொண்ட |
| வல்லாண்மை | வல்லமை பொருந்திய |
| சுற்றத்தோடும் | சாதியார்களோடும், |
| துணையாம் | (தனக்கு) உதவியாக (வரும்) |
| கோள் | கொள்கையை |
| கொண்ட | மேற்கொண்ட, உடைய |
| போர் | யுத்த |
| மள்ளர் | வீரர்களது |
| கூட்டத்தொடும் | தொகுதியோடும், |
| சென்று | போய் |
| வாள் | (தம்மரபிற்குரிய) வாளை |
| கொண்ட | கொண்டிருக்கும் |
| தாயம் | உரிமையை |
| வலியாரே | வலியவர்களே |
| கொள்வதென | கொள்வதற்குரியவர்களென்று |
| மூள்கின்ற | மிகுதியாகிய |
| செற்றத்தான் | கோபத்தோடு |
| முன்கடையில் | தலைக்கடையில் |
| நின்று | இருந்து |
| அழைத்தான் | போருக்கறை கூவினன். |

(இ-ள்). "தோளை ஆயுதமாகக் கொண்ட வல்லமை பொருந்திய சாதியார்களோடும், தனக்கு உதவியாகவரும் கொள்கையையுடைய யுத்தவீரர்களது தொகுதியோடும்போய், தம்மரபிற்குரிய வாளை கொண்டிருக்கும் உரிமையை வலியவர்களே கொள்வதற்குரியவர்கள் என்று கூறி, மிகுதியாகிய கோபத்தோடு தலைக்கடையில் இருந்து போருக்கழைத்தான்" என்பதாம். இதில் போர்த்தொழிலைக் குலத்தொழிலாகக்கொண்ட அதிசூரன் மரபினர்களை "தோள்கொண்ட சுற்றத்தார்" எனப்பட்டிருக்கின்றது. இதற்கு "தோளை ஆயுதமாகக் கொண்ட குலத்தவர்"* என்பது பொருள்.

* பிரமோத்தரகாண்டம், சிவராத்திரி மகிமை 19-வது, செய்யுள்.

தோளை ஆயுதமாகக்கொண்ட வம்ஸத்தவர்கள் அரசரே! அரசர்கள் தோளின் வலியைக்கொண்டு பகைவரைவென்று, நிலவுலகைத் தன்னடிப்படுத்துவதால் "தோள்கோண்ட சுற்றம்" எனப்பட்டது. அதனாலேயே அரசர்களை தோளில் உதித்ததாகக் கூறுவது. போர்த்தொழிலை குலத்தொழிலாகப் பெறாதபிறகுலத்தவர்களை "துணையாங்கோள் கொண்டபோர்மள்ளர்" என்றார். ".துணையாக வருங் கொள்கையை யுடையவர்கள்" எனப் பொருள்பட. அதாவது "குலத்தொழிலாகப் பெறாதவர்கள்" எனப்படும், அதை விளக்கவே "துணையாங்கோள்"* என்னுஞ் சொல்லைவைத்தது சேக்கிழார், இதனால் குலத்தொழிலாகப் பெற்றவர்களை "தோள்கோண்டசுற்றம்" எனவும், கரத்தொழிலாகப் பெற்றவர்களை "கோள்கொண்டமள்ளர்" எனவுங் கூறிமுடித்தார்,

இருக்குவேதம், புருஷசூக்தம், 13-வது, சுலோகம்.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 । 𑌬𑌾𑌹𑍂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑌃 ।
𑌊𑌰𑍂 𑌤𑌦𑌸𑍍𑌯 𑌯𑌦𑍍𑌵𑌈𑌶𑍍𑌯𑌃 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌅𑌜𑌾𑌯𑌤 ॥

ப்ராம்மணோஸ்ய முகமாஸீத் பாகூராஜந்யஃக்ருதாஃ
ஊருததஸ்யத்வைஸ்யஃ பத்ப்யாம் சூத்ரோ அஜாயதஃ†

(இ-ள்) பிராமணன் பிர்மாவின் முகத்திலும், க்ஷத்திரியன் தோளிலும் ‡ வைசியன் தொடையிலும், சூத்திரன் பாதத்திலும் பிறந்தனர்கள்.

மநுஸ்மிருதி முதலத்தியாயம், 87-வது, சுலோகம்.

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌗𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌮𑍁𑌖𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌜𑍍𑌜𑌾𑌨𑌾𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ॥§

---

* "கோள்" என்னும் முதனிலைத்தொழிற் பெயர் "அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை, வலிக்கும் வழிவலித்தலு மெலிக்கும் வழிமெலித்தலும், விரிக்கும் வழிவிரித்தலுந் தொகுக்கும்வழி தொகுத்தலும், நீட்டும் வழிநீட்டலும்' என வருந்தொல் காப்பியவிதியால் எதுகைநோக்கி "கோள்" என நீண்டது. "கொள்கை" எனப் பொருள்படும். The same as கொள்ளுதல், the act of getting, receiving or holding. (Rottler, Winslow.)

† சைவபுராணம், 69-வது, அத்தியாயம், 1, 2-வது, சுலோகங்கள், Census of India 1901 Vol XX Part I. P. 132.

‡ அயன் தோளுதித்தோர் :—அரசர் Those who sprung from the Shouldrs of பிர்மன், i. c. Kings and Soldiers (Rettler).

§ மநுஸ்மிருதி, முதலத்தியாயம், 31-வது, சுலோகம்.

(இ-ள்.) பிர்மாவானவர் இந்த உலகத்தைக் காப்பாற்றுதற்காக தன் முகம் தோள் துடை பாதம் இவைகளினின்று உண்டான பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரவருணத்தாருக்கு இம்மைக்கு மறுமைக்கு முபயோகமான கருமங்களைத் தனித்தனியாக வகுத்தார்.

சாதிநூல், சுத்தசாதியுற்பவம், 1-வது செய்யுள்.

ஆறுநான்முகன் முகத்தி லந்தணர் குலமுண்டாகத்
தோளினிலரசவர்க்கந் தோன்றிடத் தொடைகடம்மில்
மீளவும் வணிகர்தங்கள் மெய்க்குலமுதிப்பத்தூய
தாளிணைத்தனில் வேளாளர்சாதியுஞ் சனித்ததன்றே.

கூர்மபுராணம், வருணாசிரமதன்ம முரைத்தவத்தியாயம்
11-வது, செய்யுள்.

வேதியர்முகத்தில்வேந்தர் விறல்கெழுதுணைத் தோள்வெற்பிற்
றீதறுவணிகர்செம்பொற் குறங்கினிற் சதுர்த்தர்செய்ய
பாதபங்கயத்திலீன்றான் பதுமன்முன்படைத்த மூவ
ரோதியமகங்களியாவு மாற்றுதற் குரியராவார்.

"In the first creation, by Brahma; Brahmans proceeded, with the Veda, from the mouth of Brahma; **from his arms Kshatriyas sprung**; so from his thigh Vaisyas; from his poot Sudras were produced; all with their females". H. Bower's Essay on Hindu caste ch. I, P. I *

மேற்பகுதிகளில் "முகம் தோள் துடை பாதம்" என்னும் அங்கங்களினின்று "பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள்" உதித்ததாக விளங்குகின்றது. இந்நான்கு சாதிக்கும் ஏற்பட்ட "ஓதல் படைபயிற்றல், வர்த்தகஞ்செய்தல் ஏவல்புரிதல்" என்னும் நான்கு தொழில்களும் மேற்கூறிய நான்கு அவயவங்களின்மேல் நிற்ற

* விஷ்ணுபுராணம், முதலாமம்ஸம், ஆறுமத்தியாயம். அருணகிரி புராணம், வலம்புரிசருக்கம், 98-வது செய்யுள். Mysore and Coorg Vol. I. P. 317. Day's, The Land of the Perumall" ch. VII. P. 312; Revd Trevor's India, Para. 39; Colebrooke's "Essay on the Religion Para. 271.

லால், அவ்வவயவங்களினின்று உதித்ததாக கற்பனை யலங்காரமாகப் புராணங்களிற் படிக்கப்பட்டதேயன்றி வேறன்று.

"The Bhagvat gita, a work of great celebrity puts the following words in the mouth of Krishna. Mankind was created by me of four kinds, distinct in their principles and **in their duties**" Vide Colebrooke's Essay,* Vol. II. P. 178

"கிருஷ்ணன் பகவத்கீதையில் மனிதர்கள் தன்னால் சிருஷ்டிக்கப்பட்டதாகவும், அவர்கள் தொழிலால் வேறுபட்டதாகவுங் கூறப்பட்டிருக்கின்றது. இவற்றால் இப்பூவுலகில் வசியாநின்ற மானிடப்பிறவிகள் யாவரும் ஒரேதாயின் தந்தைவழியாய் வந்தவர்களேயன்றி வேறல்ல † அப்படிவந்தவர்களை பெரியோர்கள் நான்குவகுப்பாக வகுத்து, நான்குதொழில்களை அவர்களுக்கு ஏற்படுத்தினர்கள், காலஞ்செல்லச்செல்ல தடிப்பேறி இந்நான்கு தொழிலாளரும் நான்கு குலத்தவர்களாக மாறினர்கள். அதாவது:—பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் எனப்படும். இவர்கள் நான்காகப் பிரியினும் ஏககுலத்தவர்களே! அதை விளக்குவாம்.

## பிராமணருற்பத்தி.

"இரதிநாரனுடைய குலத்திலுதித்த க்ஷத்திரியராகிய ஆங்கீரரைப்பற்றி அவர்கள் பிறப்பின்படி க்ஷத்திரியராயிருந்தாலும் ஆங்கிர பிராமணரும், க்ஷத்திரியருமாயிருந்தார்கள்" என விஷ்ணு புராணம், நாலாமம்ஸம் 2-ம் அத்தியாயங் கூறுகின்றது, "ஆங்கீரர்கள் க்ஷத்திரியருக்குப் பிறந்தவர்களானபோதிலும் பிராமணர்களானார்கள்" என இலிங்கம், வாயுபுராணங் கூறுகின்றது. "இருக்குவேதம் எட்டாவது மண்டலத்தில் கானவரின் மரபுரைத்திருக்கிறது. இக்கானவ க்ஷத்திரியனின் குமாரனாகிய மேதாதிதி என்பவனிலிருந்து கானவாயனர் என்னும் பிராமணர்கள் உதித்தார்கள்." "கார்க்கர் சைநியர் என்று சொல்லப்பட்ட க்ஷத்திரியர் பிறப்பிலே க்ஷத்திரியராயிருந்தாலும் பிராமணரானார்கள்" என விஷ்ணு புராணம், நாலாமம்ஸம், 19-வது, அத்தியாயங் கூறு

* Vide, Charles Wilkins' Bhagwat gita, Lecture IV, P. 22.

† Vide. A Brief History of the Indian people, ch. VII, P. 79.

கின்றது. "கார்க்கனுடைய சகோதரனாகிய மகாவீரியனுடைய குமாரனாகிய உருக்ஷசயனுக்குப்பிறந்த குமாரர் மூவரில் இருவர் க்ஷத்திரியராயிருக்க, மூன்றாவது குமாரனாகிய கபி என்பவர் மாத்திரம் பிராமணரானார்"* "பாஞ்சாலர் என்னும் க்ஷத்திரியரில் முதல்வனான முடக்காலனிலிருந்து மாட்காகிய பிராமணர்கள் தோன்றினார்கள்" என விஷ்ணுபுராணங் கூறுகின்றது. ஆகிய இப்பகுதிகளால் பிராமணர்கள் க்ஷத்திரியர்களிலிருந்து பிரிந்ததாக ஏற்படுகின்றது. அதனாலேயே பிராமணரை புத்தமநுவில் க்ஷத்திரியருக்குக் கீழ்ப்பட்டவரெனப்பட்டிருக்கின்றது. "In the Buddhist Code of Manu the Brahmans rank below the Kshatriyas" P 82.† என்பதால்விளங்கும். இதனால் க்ஷத்திரியரே பிராமணரென விளங்குவர்.

## வைசியருற்பத்தி.

"வைவஸ்வத மநுவுக்கு இட்சுவாகு, நீருகன், திருஷ்டன், சர்பாதி, நரிஷ்பந்தன், நாபகன், திஷ்டன், கருசன், பிருஷத்திரன் என ஒன்பது மக்கள் பிறந்தனர்கள். இவர்களுள் திருஷ்டன் என்பவனுக்கு நாபகன் பிறந்தான். அந்த நாபகன் தன் செய்கையில் தாழ்ந்ததனால் வைசியனானான்." என விஷ்ணுபுராணம், நாலாமம்ஸம், முதலத்தியாயங் கூறுகின்றது. இப்பகுதியால் வைசியரும் க்ஷத்திரியரில் பிரிந்தவர்கள் என விளங்குகின்றது.

## சூத்திரருற்பத்தி.

"வைவஸ்வதமநுவின் ஒன்பது மக்களுள் பிருஷத்திரன் என்பவன் குருவாகிய வதிஷ்டருடைய பசுக்களைக் காத்துக்கொண்டிருக்கையில் அப்பசுக்கூட்டத்தின் இடையிற்புகுந்த புலியைக் கொல்லப்போய் பிசகிப் பசுவைக்கொன்றதினால் குருசாபம்பெற்று சூத்திரனானான்." என விஷ்ணுபுராணம் நாலாமம்ஸம், முதலத்தியாயங் கூறுகின்றது. ஆகிய இத்யாதிப் பிரமாணங்களால் க்ஷத்திரியரே பிராமணரும் வைசியரும் சூத்திரரும் ஆகப் பிரிந்தார்களெனப்பட்டிருக்கின்றது.

---

* Vide. The Book and its story ch. II. P. 26. விஷ்ணுபுராணம் முதலாமம்ஸம், 10-வது அத்தியாயம்.

† Vide. Tod's Rajasthan. Vol. I. ch. II. P. 34. 35.

" From all that had been stated it is clear that of the descendants of the Patriarchs, for the purpose of convenience and for the benefit of the society and of the primary source of all the mainfold institutions, viz, the sacrificial system, a few adopted the profession of Brahmins; **a few took up arms and became Kshatriyas.** a few adopted the profession allowed to the vaisyas and the rest devoted themselves to the service of the other three classes' Vide, The Ancient History of India. Vol. I, Part. II. Ch. XIII, P. 225. *

"கோத்திரத்தலைவனுடைய வம்சத்தவர்கள் வசதியைநோக்கியும், கூட்டத்தின் ஆதாயத்திற்காகவும், பலவித ஏற்பாடுகள் ஆரம்பகாலத்தில் ஏற்படுத்திக்கொண்டார்கள், அதாவது:—யாகஞ்செய்தலை சிலர் யேற்றுக்கொண்டு பிராமணரானூர்கள், சிலர் **ஆயுதமேடுத்துக்கோண்டு க்ஷத்திரியரானூர்கள்**, சிலர் வியாபாரஞ்செய்து வைசியர் ஆனூர்கள், மற்றவர்கள் மேற்கூறிய மூவருக்கும் தொழில்செய்தலை யேற்றுக்கொண்டு சூத்திரரானூர்கள்" இதனுல் சாதி என்பது தொழிலால் † அன்றி பிறப்பால் அல்லவெனத் துணியப்பட்டது, அப்படி பிரிந்தவர்கள்.

**பிராமணர்** :—பிரமத்தியானஞ் செய்யப்பட்டவர்கள் சாந்தம் தமை முதலானகுணங்கள் சிறந்திருக்கவேண்டி யிருப்பதாலும், புத்தி பக்தி முதலிய விலாசங்கள் பிரகாசிப்பது முகத்திலாதலாலும், ஓதல் முதலிய வேதாத்தியானங்களுக்கு முகமே முதற்கருவியாக நிற்றலாலும், பிராமணரை பிரமாவின்முகத்திற் பிறந்தவர்கள் என்றுங் கூறப்பட்டது. ‡

**க்ஷத்திரியர்**:—துஷ்டநிக்கிரகமும், சிஷ்டபரிபாலனமுஞ் செய்ய **புஜபலமே** வேண்டியிருப்பதாலும், யுத்தவித்தை முதலியது

* " The Brahmans possibly represent the Shamans or magicians of the prehistome Turanian immigrants into India; the Kshatriyas their Aryan congurerors; the vaisyas, the mixed Aryas and earlier settlers and aborigines; and the Sudras, the conquered earlier settlers, and true aborigines of India'' Vide. Dr. g. c. m. Birdwood's "The Industrial Arts of India, P. 38.

† சங்கலிகிதஸ்மிருதி, 2-வது, சுலோகம்.

‡ பகவத்கீதை. 18-வது அத்தியாயம், 42-வது சுலோகம்.

கள் புஜவலிமையாலேயே பிரகாசிக்க வேண்டியிருப்பதாலும் க்ஷத்திரியரை பிர்மாவின் புஜத்தில் பிறந்தவர்கள் என்று கூறப்பட்டது.*

**வைசியர் :**—ஏருழுதல் பயிர்செய்தல் கால்நடைகளைப் பாதுகாற்றல் தூரதேசங்களுக்குச்சென்று வர்த்தகஞ்செய்தல் முதலிய காரியங்களெல்லாம் துடையின் பலத்தினால் நிகழவேண்டியிருப்பதால் வைசியர்களை பிர்மாவின் துடையிற் பிறந்தவர்கள் என்று கூறப்பட்டது.†

**சூத்திரர் :**—யாதொரு கல்விக்கேள்விகளின்றி முதல் மூவருக்கும் பணிவிடை செய்யப்பட்டவர்களும், அடிமையைப்போல் அதிகத்தாழ்ந்தவர்களுமாதலால், இவர்களை பிர்மாவின் பாதத்தில் பிறந்தவர்களென்றுங் கூறப்பட்டது.‡

"At the beginning of the world, they said, the Brahman proceeded from the mouth of the creator, **the kshatriya from his arms**, the vaisya from his thighs or belly. and the Sudra from his feet. This legend is true so far, that the Brahmans were really the brain-power of the Indian people, **the kshatriyas its armed hands**, the vaisyas the food-growers, and the Sudras the down-trodden serfs". Vide. Hunter's Brief History of the Indian people Ch. IV P. 51.

"உலக ஆரம்பத்தில் பிராமணர் பிர்மாவின் வாயிலிருந்தும், **க்ஷத்திரியர் தோளிலிருந்தும்**, வைசியர் துடை அல்லது வயற்றிலிருந்தும், சூத்திரர் பாதத்திலிருந்தும் உதித்ததாகச்சொல்லப்படுகிறது. பிராமணர் புத்தியின் வல்லமையாலும், **க்ஷத்திரியர் ஆயுதத்தொழிலாலும்**, வைசியர் ஆகார உற்பத்தியாலும், சூத்திரர் ஏவல் அடிமையாலும் ஜீவிக்கவேண்டியிருப்பதால்; இந்நான்கு தொழில்களுக்கும் காரணபூதமாயுள்ள அவயவங்களை நோக்கி அதிலிருந்தே யுதித்ததாகக் கூறியது", இத்யாதிப் பிரமாணங்களால் பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னு நான்கு வகுப்புள்

* பகவத்கீதை, 18-வது, அத்தியாயம், 43-வது, சுலோகம்.
† பகவத்கீதை, 18-வது, அத்தியாயம், 44-வது, சுலோகம்.
‡ Vide. Mysore and Coorg, Vol. I. P. 317.

க்ஷத்திரியரது படைத்தொழில் தோளின் பேரிலேயே நிற்றலால், தோளில் உதித்ததாகக்கூறியது. இதை நோக்கியே சேக்கிழார் கிராமணிகுல ஞானநாதநாயனாரும், அவர் சுற்றத்தாரும் க்ஷத்திரியராதலால் அதை விளக்க "தோள்கொண்ட சுற்றம்" என்றது. (தோள்=தோளை, கொண்ட=ஆயுதமாகக்கொண்ட, சுற்றம்=தலம்.), தோளை ஆயுதமாகக் கொண்டவர்கள் க்ஷத்திரியரே!

∴ **"That the man of war, living by the strength of his arm** and ruling his fellows by the law of force, should be typified as created "from the God's shoulder." Vide Day's, The Land of the Perumauls, ch. VII, P. 297.

• புஜத்தினால் ஜீவிக்கிறவர்களும், சாஸ்திரங்களின் வலிமையினால் தம்மவர்களை யாளுகிறவர்களுமாகிய க்ஷத்திரியர்கள் புஜத்திலுண் டானார்கள்".

"**The profession of a warrior requires the constant use of the strength and vigor of his arms and therefore the arms of Brahma**". Vide. The Ancient History of India. Vol. I, Part. II. Ch. XIII. P. 223.

" யுத்தரங்கத்தவர்களது குலத்தொழில் தோள்பலத்திலேயே நிற்றலால், அவர்களை பிர்மாவின் தோளிலுதித்தார்கள் எனப்பட்டது"

மநுஸ்மிருதி, இரண்டாமத்தியாயம், 31-வது, சுலோகம்.

𑌮𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌬𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌧𑌨𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌤𑍁𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌿𑌤𑌮𑍍 ॥

(இ-ள்). பிராமணனுக்கு மங்களத்தையும், க்ஷத்திரியனுக்கு பலத்தையும், வைசியனுக்குப் பொருளையும், சூத்திரனுக்குத் தாழ்மையையுங் காட்டுகிறபெயரை இடவேண்டியது. *

மநுஸ்மிருதி, இரண்டாமத்தியாயம், 37-வது, சுலோகம்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑌕𑌾𑌮𑌸𑍍𑌯𑌕𑌾𑌰𑍍𑌯𑌂𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯𑌪𑌞𑍍𑌚𑌮𑍇 ।
𑌰𑌾𑌜𑍍𑌞𑍋𑌬𑌲𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌷𑌷𑍍𑌠𑍇𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑍇𑌹𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑍋𑌷𑍍𑌟𑌮𑍇 ॥

(இ-ள்.) "பிர்மதேஜஸை விரும்புகிற பிராமணருக்கு ஐந்து வயதிலும், பலத்தைவிரும்புகிற க்ஷத்திரியனுக்கு ஆறு வயதிலும்,

* Vide. Charles Wilkins' Bhagwat Gita, ch. XVIII. P. 85.

பொருளை விரும்புகிற வைசியனுக்கு எட்டுவயதிலும், உபநயனஞ் செய்யத்தக்கது.''

மநுஸ்மிருதி, 11-வது அத்தியாயம், 34-வது, சுலோகம்.

க்ஷத்ரியோ பாஹுவீர்யேண தரேதாபதமாத்மந: ।
தநேந வைஶ்யஶூத்ரௌ து ஜபஹோமைர்த்விஜோத்தம: ॥

(இ-ள்.) க்ஷத்திரியன் தன் புஜபலத்தினால் தன்னுடைய ஆபத்தைப் போக்கக்கடவன்.*'' இப்பகுதிகளில்கூறிய பலத்திற்கு இடமாய் நிற்பதும் தோளே! அதனாலேயே "தோள் கோண்டசுற்றம்" என்றது நாயனார் சுற்றத்தாரை. அரசனது நீதியை கோல்மேல் வைத்தும், அவனது தண்ணளியை குடைநிழலாகவைத்தும், தோளின் வலியை தோளாகவைத்தும் கூறுவது ஓரிலக்கணை. அது உபசாரவழக்கெனினும் பொருந்தும்.

பெரியபுராணம், திருநாட்டுச்சிறப்பு, 35-வது, செய்யுள்.

நற்றமிழ்வரைப்பினோங்கு நாம்புகழ் திருநாடென்றும்
பொற்றடந்தோளால்வையம் போதக்கடிந்தினிது காக்குங்
கொற்றவனநபாயன்பொற் குடைநிழற் குளிர்வதென்றால்
மற்றதன்பெருமை நம்மால்வரம்புற விளம்பலாமோ.

இதில் அரசர்கள் "தோளினால் நிலவுலகத்தைப் பிற அரசர்களுக்கு உரித்தாகும் பொதுமையை நீக்கி ஆள்பவர்" எனப்பட்டிருக்கின்றது. இதனால் தோள் அரசர்களுக்கு இன்றியமையாக் கருவியென்றேற்பட்டது.

பெரியபுராணம், மூர்த்திநாயனார் புராணம், 28-வது, செய்யுள்.

தாழுஞ்செய லின்றொரு மன்னவன் றாங்கவேண்டுங்
கூழுங்குடியு முதலாயின கொள்கைத்தேனுஞ்
சூழும் படைமன்னவன் றோளிணை காவலின்றி
வாழுந்தகைத் தன்றிந்த வையக மென்றுசொன்னார்.

---

* (க்ஷத்ரியாணாந்து வீர்யதா) ''க்ஷத்ரியாணாந்துவீர்யதா'' என்பதை நீதிசாஸ்திரம், 148-வது, சுலோகத்திற் காண்க.

இப் பாசுரத்தில் வரும் "மன்னன்றேளிணைக் காவலின்றி வாழுந் தகைத்திந்த வையகம்" என்பதற்கு "அரசனது இரண்டு புஜங்களாலுங் கார்க்குங் காவலல்லாமல், இவ்வையகம் வாழ்வடையும் தகுதியையுடையதல்ல" என்றார். இதில் தோளின்வலி அரசருக்கே சிறந்ததெனவும், அத்தோளைக்கொண்டே அரசன் ஆளவேண்டுமெனவுங் கூறிய சேக்கிழாரே, ஏனாதிநாதநாயனார் சுற்றத்தார்களை "தோள்கொண்ட சுற்றம்" என்றார், இதனால் அவர்க்குருத்தும் அரசரெனவே முடியும்,

சீவகசிந்தாமணி, சச்சந்தன் சரித்திரம்.
257-வது, செய்யுள்.

தோளினால் வலியராகித் தொக்கவர் தலைகள்பாற
வாளினாற் பேசினல்லால் வாயினாற் பேசறேற்றேன்
காளமேகங்கள் சொல்லிக் கருணையாற் குழைக்குங்கைகள்
வாளமர் நீந்தும்போழ்து வழுவழுத் தொழியுமென்றான்.

ஆகிய இப்பாக்களால் க்ஷத்திரியருக்குப் புஜமே பிரதானம் எனப்பட்டது. இதையனுசரித்தே அதிசூரன்மரபினர்களை "தோள்கொண்ட சுற்றம்" எனப்பட்டது. ஒருவனுக்குத் தோள் எவ்விதம் இன்றியமையாக் கருவியாயிருக்கின்றதோ அவ்விதமாகவே க்ஷத்திரியனுக்குப் போர்த்தொழில் தோளோடு நிற்கின்றது. இதனானே க்ஷத்திரியரை "புஜபலபராக்கிரம சாலிகள்" என்பது உலகம். அமரத்தாரும் க்ஷத்திரியர்களுக்குரிய பல பெயர்களில் "பாகுஜா" என்னும் பெயரும் ஒன்றென விளக்குகின்றார்.

அமரம், இரண்டாங்காண்டம், க்ஷத்திரியவர்க்கம்,
463-வது, சுலோகம்.

மூர்தாபிஷிக்தோ ராஜந்யோ
வாஹுஜ꞉ க்ஷத்ரியோ விராட்।

மூர்தாபிஷிக்தோ ராஜந்யோ
பாகுஜஃ க்ஷத்திரியோ விராட் ||

இதில் வரும் (வாஹுஜ꞉) "பாகுஜா" என்பது "பட்டாபிஷிக்தாளான அரசர்களுக்கும், அந்தவம்ஸத்தில் பிறந்தவர்களுக்கும் பெயர் என்றேற்படுகின்றது, "பாஹு" என்பது தோளையும், "பாஹுஜா" என்பது அரசனையும் விளக்கலால்;

தோள்கோண்ட சுற்றத்தார்களாகிய ஏனாதிநாதநாயனார் வம்ஸத்தவர்களும் அரசரே! இதனால் தோள்வலி க்ஷத்திரியர்களுக்கேயன்றி பிறகுலத்தவர்களுக்கு அன்று, அப்படியில்லாமையினாலேயே பிறகுலத்தவரை சேக்கிழார் "துணையாங்கோள் கொண்ட போர்மள்ளர்" எனக் கூறிமுடித்தது, துணையாக வரும் கொள்கையை மேற்கொண்டொழுகியவர்கள், அல்லது காரத்தொழிலாகப் பெற்றவர்கள், குலத்தொழிலாகப் பெறுதவர்கள் எனப்படும். ஆகிய இத்தியாதிப் பிரமாணங்களால் அரசரது குலத்தொழில் உலகாள்வதும் படைபயிற்றலும் என்றேற்பட்டது, அவற்றுள் படைபயிற்றலேயே குலத்தொழிலாக ஏனாதிநாத நாயனாரும் அவர் சுற்றத்தார்களாகிய கிராமணிகளும் புரிந்துவந்தது, அதைவிளக்கவே "தன்னாததங்கள் தொழிலுரிமைத்தாயம் (தன்னாத = தள்ளாக்கூடாத; தங்கள் = தங்களுடைய, தொழில் = படைத்தொழிலுக்கு; உரிமை = பாத்தியதையுடைய, தாயம் = சுற்றம்) எனவும், தங்கள் குலத்தாயத்தின் ஆனாத செய்தொழிலாம்" (தங்கள் = தங்களுடைய, குலம் = வம்ஸத்திலுதித்த, தாயத்தின் = சுற்றத்தார்களுக்கு; ஆனாத = நீங்காத, செய்தொழிலாம் = செய்யத்தகுந்த தொழிலாம்,) எனவும் "நந்தமது வாட்பயிற்றும் நற்றாயம்" (நந்தமது = நம்முடைய, வாட்பயிற்றும் = வாளைப்பயிற்றும், நற்றயம் = நல்ல உரிமை) எனவும்; "மறப்படைவாட் சுற்றத்தார்" (மறம் = சோலைபுரியும், வாட்படை = வாளாயுதத்தையுடைய, சுற்றத்தார் = குலத்தார்) எனவும் "தோள்கொண்ட வல்லாண்மைச்சுற்றம்" (தோள் = தோளை, கொண்ட = ஆயுதமாகக்கொண்ட, வல்லாண்மை = ஆண்மைபொருந்திய, சுற்றம் = குலம்) எனவுஞ். சேக்கிழார் கிராமணிகளை க்ஷத்திரியர்கள் எனவே சோனைமாரியாகப் பொழிந்தனர். இப்பிரசனைகளுக்கு முன்னெங்கே உமாபதிவாக்கிற் கிருப்பேர்ப்படும். அந்தோ! அவரது அற்பவிசாரணை என்ன! அனர்த்தஞ்செய்தது. மந்தபுத்தியுள்ளவன் பூமியிலிருந்தாலும், மலையின்மேலிருந்தாலும் உண்மையைக் காணமாட்டான்என்பது பாரதவாக்கு; "கல்லாவொருவன்குலநலம் பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே" என்னும் வாக்கியத்தை அதிவிரராமபாண்டியர் இவ்வுமாபதி சிவாச்சாரியார்க்கெனவே சேமித்தனர்போலும், அறியாமை! அறியாமை!!

காசிகாண்டம், சிவசன்மாவை யியமனெதிர்கொண்டவத்தியாயம்,

44-வது, செய்யுள்.

நெடியகந்தர மறைக்கிழவர் நேமியரசர்

படியில்வாழ் வணிகர்முன்னம் வெருவாது பழிகூர்ந்

தடிகணிட்டிய சதுர்த்தரையதோமுக மெனுங்
கொடியபாழ் நரகினிட்டுடல் குறைத்திடுதியால்.'

(இ-ள்.) "வேதியர் வேந்தர் வணிகர் என்னும் முக்குலத்தவர் சமூகத்தில் சதுர்த்தனுகிய சூத்திரன் அச்சமற்றவனுய் நீட்டியகாலை மூடிக்காதிருப்பானேயாகில் அப்படிப்பட்ட சூத்திரனைக் கொடிய பாழ்நரகில் தள்ளி அவனுடலைத் துண்டுதுண்டாக நறுக்கிக் குறுக்குங்கள்" என்பதாம். இதுவே சூத்திரனுடைய பூர்வஸ்திதி. இவ்வித ஸ்திதியையுடைய சூத்திரகுலத்தவனுகிய "சாம்புகன்" பிராமணருக்குரிய ஒழுக்கத்தை மேற்கொண்டு தவஞ்செய்தலை பொருக்காத ஸ்ரீராமர், ஏனதிராதரும், அவர் சுற்றத்தாரும் சூத்திரகுலத்தவராயிருப்பின், அவ்வரசத்தொழிலாகிய படைத்தொழிலை குலத்தொழிலாக மேற்கொண்டொழுக அரசர்கள் இடங்கொடுப்பர்களா? இதையாவது உமாபதி யோசித்தனரா?

மநுஸ்மிருதி, 10-வது, அத்தியாயம், 95-வது, சுலோகம்.

ஜீவெஷெதநாஜாஜாாவா ஒுயெவனவாஷ-யெமக்ஷா
நகெவஜாயஸீவ்யதீஹிஒெநாதகஹாவிக ॥

(இ-ள்). "க்ஷத்திரியன் சுவஜாதி விருத்தியினுலும், வைசிய விருத்தியினுலும், பிழைக்கக்கூடாதபோது இரசம் முதலான வியாபாரஞ் செய்தாவது பிழைக்கலாமே யல்லது எவ்வித ஆபத்தினுந் தனக்கு மேலானஜாதியான் தொழிலைச்செய்ய எண்ணங்கொள்ளக்கூடாது.*" ஆயின் க்ஷத்திரியனுக்கு ஆபத்துகாலம் வந்தவழியும் வேட்பித்தல் முதலிய வேதியன்தொழில் இழிந்ததேயாம்; தன் சாதிக்காயினும் மேல்வருணத்தார்க்குரிய சீவனத்தொழிலைத்தான் விரும்பலாகாது என்றும், க்ஷத்திரியனுக்கு ஆபத்துக்காலத்தில் பசுக்காத்தல் உழவுமுதலிய வைசியன்றொழிலால் ஜீவிப்பது சிறந்தது என்றும், தனக்குக் கீழ்ப்பட்ட சாதியினுடைய பாவமான சீவனவிருத்தியை அனுட்டிக்கவேண்டுமென்றும் வசிட்டரால் விதிக்கப்பட்டது, க்ஷத்திரியனே தனக்கு மேலான சாதியாகிய பிராமணன் தொழிலைச் செய்யப்படாதெனக் கூறும்போது

* Vide, Essay on Hindu Caste. Ch. I, P. 6, 11; Halled's Code of Gentoo Laws Ch. XXI P. 7.

ஏனாதிநாதநாயனார் சூத்திரராயிருந்து அரசத்தொழிலைச் செய்யின் அவர்கதி யென்னாகும்.

"In one part of Kistna yajur veda and also of chandogia Brahmana of Sama Veda, it is said that whatever had been stated or ordained by manu for the benefit of mankind must be received and used as medicine to the body", Vide, Ancient History of India Vol. I. Part, II. Ch, IX. P. 155.

"மநு, வேதங்களால் ஒப்பப்பட்டு, மனிதருக்கு ஓர் அவிழ்தமாகக் கொடுக்கப்பட்டது." அத்தகைய மநுவே உயர்ந்த சாதியான் தொழிலை, தாழ்ந்தசாதியான் செய்யப்படாது என்றார்.

மநுஸ்மிருதி, 10-வது, அத்தியாயம், 96-வது, சுலோகம்,

𑌯𑍋 𑌲𑍋𑌭𑌾𑌦𑌧𑌮𑍋 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾 𑌜𑍀𑌵𑍇𑌦𑍁𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃।
𑌤𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌨𑌿𑌰𑍍𑌧𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑌾𑌸𑌯𑍇𑌤𑍍॥

(இ-ள்.) "தாழ்ந்த சாதியான் பொருளாசையால் தனக்கு மேலான சாதியான் தொழிலைச்செய்தால் அவன் பொருண் முழுமையும் அரசன் கிரகித்துக்கொண்டு அவனையும் உடனே ஊரைவிட்டோட்டுக".* இச்சுலோகத்தை "பவர்" (Rev. H. Bower) ஆசிரியர் தாமியற்றிய "இந்து ஜாதி" (Hindu caste) என்னும்புத்தகம், 23-வது பக்கத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார்.

"A man of the lowest class, who through, covetousness lives by the acts of the highest, let the King strip of all his wealth, and instantly banish".†

---

* Vide, Ancient History of India Vol. I. Part II, ch, VI, P, 93. மநுஸ்மிருதி, 2-வது, அத்தியாயம், 72-வது, சுலோகம், சங்கலிகித ஸ்மிருதி, 15-வது, சுலோகம்.

† மநுஸ்மிருதி, 8-வது அத்தியாயம், 217-வது, சுலோகம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | ,, | ,, | 221-வது | ,, |
| ,, | ,, | ,, | 228-வது | ,, |
| ,, | ,, | ,, | 418-வது | ,, |
| ,, | 9-வது, | அத்தியாயம், | 224-வது | ,, |
| ,, | ,, | ,, | 225-வது | ,, |
| ,, | 10-வது, | அத்தியாயம், | 97-வது | ,, |

என்னுஞ் சுலோகங்களையுங் கவனிக்க,

மநுஸ்மிருதி, 8-வது, அத்தியாயம் 410-வது சுலோகம்.

வாணிஜ்யம்காரயெத்வைஶ்யம்குஸீதம்க்ருஷிமேவச ।
பஶூநாம்ரக்ஷணம்சைவதாஸ்யம்ஶூத்ரம்த்விஜந்மநாம் ॥

(இ-ள்). "அரசன் வைசியனை வர்த்தகம் வட்டிவாங்குதல் ப்யிரிடுதல் பசுவைக்காற்றல் இவைகளையும், சூத்திரனை துவிஜ ஜாதிகளுக்குப் பணிவிடையுஞ் செய்யச் சொல்லவேண்டியது, அப்படிசெய்யாவிட்டால் அவர்களைத் தண்டிக்க.*" இக்கருத்தைக் கொண்டாடுகின்றார் கோல்புருக்துரை.

"The king should order each man of the mercantile class to practise trade, money-lending or agriculture and attendance on cattle; and each man of the servile class to act in the service of the twice-born. If they refuse to do so, they should be amerced by the king." Vide, colebrook's Digest of Hindu Law, P 10.

புதஸ்மிருதி, 31-வது, சுலோகம்,

ஸ்வயம்ஸ்தாநம்ஸர்வவர்ணாநாமாஶ்ரமாணாஞ்ச ।

(இ-ள்). "பிராமணசாதியாருக்கும் பிர்ம்மாசரியம் முதலான ஆச்சிரமத்தார்களுக்கும் அவரவர்களுக்கு விதித்தபடி நடப்பது நன்மையாம்."

புதஸ்மிருதி, 32-வது, சுலோகம்.

விஹிதாகரணேஷ்வப்ரதிஷித்தஸேவநே நரகவாத: ॥

(இ-ள்.) "அவரவர்களுக்கு விதித்த காரியத்தைச்செய்யாமல் விதிக்கப்படாத காரியத்தைச்செய்தால் நரகங்கிடைக்கும்".

புதஸ்மிருதி, 33-வது சுலோகம்.

விஹிதகர்மஸ்வதர்மாந்ராஜாகாரயிதவ்யா: ॥

(இ-ள்.) "அவரவர்களுக்கு விதித்த யுக்தமான காரியத்தைச் செய்யாதவர்களுக்கு இராஜன் தக்க ஏற்பாடுசெய்து அவனவனுடைய குலதர்மத்தைச்செய்யும்படி சீர்திருத்தவேண்டியது"

* Vide. Mysore and Coorg. Vol I. P. 317.

பராசரஸ்மிருதி, ஆசாரகாண்டம், 1-வது, அத்தியாயம்,
37-வது, சுலோகம்.

చతుర్ణా మపివర్ణానా మాచారో ధర్మపాలకః।
ఆచారభ్రష్టదేహానాం భవే ద్ధర్మః పరాఙ్ముఖః ॥

(இ-ள்.) "நான்கு வருணத்திற்கும் தருமத்தைக் காக்கத்தக்கது ஆசாரம், அதைத்தவறின தேகமுடையவர்களுக்குத் தருமம் முகங்காட்டாதொழியும்."* என்பதாம், "ஆசாரத்தினால் ஆயுள் செல்வம் இகலோக பரலோகம் இவைகளைப் பெறுவார்கள். ஆசாரந் தவறினவர்கள் இவைகளைப் பெறுவதில்லை, ஸத்புருஷருக்கு ஆசாரம் லக்ஷணமாமென்று, பாரதம் அனுசாஸனிகபருவம் கூறுகின்றது." "ஆசாரம்" என்பது இச்சித்தப்பொருளைத்தருவது, எனவே, புண்ணியமுண்டாவது, ஆசாரம். ஒழுக்கம் என்பன ஒருபொருட் கிளவி. "பிராயசித்தம்" என்பது வெறுப்பைத்தருகின்ற பாவத்தை யொழிப்பது. இவ்வாசாரம் பிராயசித்தம் என்னுமிரண்டினாலும் உலகத்துள் யாவரும் புண்ணியலோகத்தை யடைகின்றனர் என்று வேதங் கூறுகின்றது. இத்யாதிப் பகுதிகளை நோக்க ஏனாதிநாதநாயனார் அரசரல்லாது வேறுகுலத்தவராயிருப்பின் அக்குலத்திற்குத் தாழ்ந்தசாதியான் தொழிலைச்செய்ய இடங்கொடுக்குமேயன்றி அரசத்தொழிலைச்செய்ய இடங்கொடுக்குமா? இதுவுங் கலியுகப் புலவரின் களிமண்மண்டையில் யேறவில்லையே! அந்தோ! நம் உமாபதி ஸ்மிருதிவழங்கும் ஊரிலுங் குடியிருந்தறியார் போலும்.

மனுஸ்மிருதி, 8-வது, அத்தியாயம், 41-வது, சுலோகம்.

ஜாதிஜாநபதாந் தர்மாந் ச்ரேணீதர்மாம்ஶ்ச தர்மவித் ।
ஸமீக்ஷ்ய குலதர்மாம்ஶ்ச ஸ்வதர்மம் ப்ரதிபாதயேத் ॥

(இ-ள்.) "அரசன் சாதித்தருமம் தேசத்தருமம் வியாபாரிகளின் தருமம் குலதருமம் இவைகளை நன்றாய் அறிந்து அதற்கு விரோதமின்றி தான் தீர்மானிக்கவேண்டியது"† என்பதாம்.

* புக்ஷஸ்மிருதி, 2-வது சுலோகம்.

† மனுஸ்மிருதி, 7-வது. அத்தியாயம், 35-வது, சுலோகங் காண்க. பராசர ஸ்மிருதி, ஆசாரகாண்டம், முதல் அத்தியாயம், 64-வது, சுலோகம்

சேந்தன் திவாகரம்,

வருணக்காப்பிற் பிறழாநெறிநிலை
பெறுதற்பொருளான் பேணும்பேற்றி
யறநிலையறமென் றறைந்தனர்புலவர்.

பிங்கல நிகண்டு.

" வருணக்காப்பிற் பிறழா நெறிநிலை
பெறுதற்குரித்தாய்ப் பேணும் பேற்றி
யறநிலையறமென் றறைந்தனர் புலவர்."

சூடாமணி நிகண்டு.

தந்தமின்வருணக் காப்பிற் றரும் பொருளாலேபேணல்
அந்தவாறியற்கை தம்மு ளறநிலையற மென்றாகும்.*

இச்சூத்திரங்களின் கருத்தை டாக்டர், உவின்சிலோ (Dr. Winslow) ஆசிரியர் தமது அகராதியில் " அறநிலை அறம்" One of the six அரசியல், " The duty of the king to preserve his subjects from breaking the rules of the respective Castes". என மொழிபெயர்திருக்கின்றார். அதாவது:— வேந்தன் தன்னாட்டில் வாழுகின்ற குடிகளை மநு பராசரவிதிகளை யனுசரித்து அந்தந்த குலத்திற்குரிய தொழில் வரம்புகள் கடந்து நடவாதிருக்கப் பாதுகாத்தல் அரசரது அறுவகையறத்தில் ஒன்றுயெனச் செப்புகின்றார். இரட்லரும் (Rottler) "அறநிலையறம்=to guard the Rights and Privileges of his subjects: தத்தம் வருணத்திற் பிறழாது நிலைபெறப்பாதுகாத்த லறநிலையறம்" என்றார். வியாசரும் " அரசன் யாகங்களைச்செய்து, ராஜ்யத்தை ஜெயித்து, அதிலுள்ள பிரஜைகளை ரக்ஷித்து, நான்கு வருணத்தாரையும் தம்தம் தர்மத்தில் நிலைநிற்கச்செய்து, ராஜ்யத்தை பாதுகாத்தல்வேண்டும்" என பாரதம் சாந்திபர்வம், இருபத்தைந்தாவது அத்தியாயத்தில் கூறுகின்றார். அப்படி வரம்பு கடந்தவனுக்குச் செய்யுந்தண்டனை சரீரதண்டனையென நாரதர் கூறுகின்றார், தருமமாக தண்டித்த க்ஷத்திரியன் அநேக யாகங்களைச் செய்தவனாகிறானென யாக்ஞிய வல்கியர்

* திருமந்திரம், இராஜதோடம், 10-வது செய்யுள்.

அறைகின்றார். வரம்பு கடவாதிருக்கப் பாதுகாத்த அரசன் அந்த பிரஜைகளின் தருமத்தில் ஆறிலொன்று அடைகின்றானென்று பாரதம் சாந்திபருவம் சாற்றுகின்றது. இவைகளைநோக்க கிரா மணிகுல ஏனாதிநாத நாயனார் அரசகுலத்தவரல்லாதிருப்பின், இம் மநு வாதிநூற்களின் விதியை யனுசரித்து, சாதித்தருமம், குலத் தருமம் இவைகளை மேற்கொண்டொழுகிய அரசர்கள் அவரையும் அவர்குலத்தவரையும் தண்டித்தேயிருப்பார், தண்டிக்காது விட் டது, அவர்கள் அரசகுலத்தவர்களாயினமையா லென்க.

"The respective duties of the four tribes of Brahman, Kshatriya, vaisya, and Sudra, are also determined by the qualities which are in their constitutions." vide, Charles Wilkins' Bhagwat gita ch. XVIII. P. 85.

"பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு சாதி களுக்கும் அவரவர்களுக்கேற்ற தொழில்களை ஏற்பாட்டின்பிர காரம் அவர்களது தன்மையைநோக்கி நிர்ணயஞ்செய்யப்பட்டது" இத்யாதிவிதிகளை யனுசரித்தே அக்காலத்தில் நடைபெற்று வந்த தாக, ஏனாதிநாதநாயனார் சரித்திரத்தைக் கூறிய சேக்கிழாரே செப்புகின்றார்.

பெரியபுராணம், திருநாட்டுச்சிறப்பு, 34-வது, செய்யுள்.

வீதிகள் விழவினார்ப்பும் விரும்பினர் விருந்தினார்ப்புஞ்
சாதிக ணெறியிற்றப்பா தனயரு மனையிற்றப்பா
நீதிய புள்ளுமாவு நிலத்திருப் புள்ளுமாவு
மோதிய வெழுத்தாமஞ்சு முறுபிணி வரத்தாமஞ்சும்.

பெரியபுராணம், சேரமான்பெருமாணயனார் புராணம்.
4-வது. செய்யுள்.

வேதநெறியின் முறைபிறழா மிக்கவொழுக்கந் தலைநின்ற
சாதிநான்கு நிலைதழைக்குந் தன்மைத்தாகித் தடமதில்சூழ்
சூதவகுள சரளநிரை துதையுஞ் சோலைவளநகர்தான்
கோதையரசர் மகோதையெனக் குலவுபெயருமுடைத்துலகில்

இவைகளில் அந்தணர்முதலிய சாதிகள் தத்தமக்குரிய குல ஒழுக்கத்தினின்று தம்பார்கள் எனப் பொருள்பட "சாதிகள்

நெறியிற்தப்பாது" என்றார் சேக்கிழார். இவரே சாதிகளினது குலத்தொழில் இன்னின்னவைகளெனத் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தில் தேடித் தீட்டியிருக்கின்றார். அவ்விதநெறியைத் தெரிந்தவர் ஏனாதிநாதநாயனார் வேறுகுலத்தவரா யிருப்பின் அவருக்குப் படைத்தொழிலே குலத்தொழில் என்பரா? அரசராயினமையாலன்றோ கூறி முடித்தது. இதையறியார் உமாபதி.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம் 6-வது செய்யுள்.

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினோர்
நலமுத னலியினும் நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினோர்.

இதில் அரசர்களுக்குரிய மந்திரிகள் அமைச்சியல் பூணற்குரிய நல்ல குலத்தினராயிருத்தல் அவசியமாதலால் "குலமுதற்றொன்மையும் பிறப்பின்மேன்மையும்" என்றார் கம்பர். இதுவே மறுவாதிகளின் சம்மதம். அதாவது கீழ்க்குலத்தவர் மேற்குலத்தவர்கள் தொழிலைக் கையாளப்படாதென்பது. "குலமும் குலாச்சாரமும் இல்லாதவர்களிடம் அரசர்கள் யுத்தஞ் செய்யமாட்டார்கள்" என பாரதம்* பகர்கின்றது. இவைகளை நோக்க ஏனாதிநாதநாயனார் சூத்திரருக்குக் கீழ்குலத்தவராயிருப்பின், அரசருக்கு ஆசாரியராயிருக்கவும், படைத்தொழிலை குலத்தொழிலாகப் பெறவுந் துணிவரோ? அரசனும் ஏற்பனோ? இதனாலும் நாயனார் மேற்குலத்தவர் எனவே துணியப்படும்.

"Rama Raya and Tirumala Raya heard of this. They sounded the alarm of war in open day light, and fell upon Salacam Timmanna's host which was before their face. The soldiers of his host said, This fellow is a (Golla=is the proper name of the Cow-Keeper Caste) herdsman ; being rich he has attempted to usurp dominion. If we aid him the divine aid cannot be granted us. So they quitted the battle-field. Sala-

* வியாசபாரதம், ஆதிபர்வம், 146-வது, அத்தியாயம்.

cam Timmanna was taken prisoner and lost his life.*" Vide C. P., Brown's, The Wars of the Rajas. ch. I, Para 7, P. 4.

" இதை இராமராயரும் திருமலராயரும் கேட்டு, பகலில் சண்டைதொனியைச் செய்துக்கொண்டு, அவர்கள் முன்னால் இருந்த சலகம் திம்மன்னாவினுடைய சேனையின்பேரில் பாய்ந்தார்கள்: அவன் சேனையிலுள்ள சிப்பாய்கள் இவன் இடையன் பொருளாளியானதால் இராஜ்யத்தைக் கவரமுயர்ச்சி செய்கின்றான். நாம் இவனுக்கு ஒத்தாசைசெய்தால் தெய்வ ஒத்தாசை நமக்கு ஏற்படாது என்றுசொல்லி யுத்தக்களத்திலிருந்து போய்விட்டார்கள். பிறகு சலகம் திம்மன்னா கைதுசெய்யப்பட்டு, கொலையுண்டிறந்தான்". இப்பகுதியில் தாழ்ந்த சாதியான் உயர்ந்த தொழிலைக் கவரமுயர்ச்சித்தலை ஊரார் ஒப்பவில்லை எனப்பட்டிருக்கின்றது. அப்படி ஒப்புக்கொள்ளாதகாலம் சாலிவாகன சகாப்தம், 1487-ம் வருடமாகும். அதாவது இற்றைக்கு 350-வருடங்களுக்கு முன்னெனக. அதுவும் மகமதியரால் இந்தியா மல்லு கொடுக்குங்காலம், அக்காலத்திலேயே அநந்தபூரில் † (Anantapur) சாதிவரம்பை கவனிக்கும்போது அதற்கு 1000 வருடங்களுக்குமுன் அதாவது மாணிக்கவாசகர்‡ காலத்திற்குபின் காலத்தின்கெதி என்னாகும்? ஏனாதிநாதநாயனார் வாழ்ந்தகாலம் மாணிக்கவாசகருக்குப்பின்பே! ஏனாதிநாதநாயனார் அரசரல்லாதிருப்பின், படைத்தொழிலை குலத்தொழிலாகப் பெற அக்காலத்தில் இடங்கொடுக்குமா? இதனாலும் நாயனாரும் அவர் வம்ஸத்தவர்களாகிய கிராமணிகளும் க்ஷத்திரியர்கள் எனத் துணியப்படும்.

The Members of the Caste in Madura perfer to be called Saurashtras. They say that they are Brahmans. The claim is no new affair, as in the reign of Queen Mangammall (1689-1704), eighteen of the members of

---

* மனுஸ்மிருதி, நான்காம் அத்தியாயம் 61-வது சுலோகம்.

† அநந்தபுரம், மைசூர் இராஜ்யத்திற்கு வடக்கிலும், பல்லாரிக்கும், கடப்பைக்கும் மைத்தியிலுமுள்ள ஜில்லா.

‡ மாணிக்கவாசகர் வாழ்ந்தகாலம் இற்றைக்கு ஏறக்குறைய 1800-வருடங்களுக்கு முன்னெனக. அதாவது அங்கிலேய வாண்டு முதல் நூற்றாண்டின் மத்தி யெனக.

the community were arrested by the governor of Madura for performing the Brahmanical ceremony of Upakarma, or renewal of the sacred thread. The queen convened a meeting of those learned in the Sastras to investigate the Patnulkarans, right to perform such ceremonies". Vide. Gazetteer of the Madura District, ch. III. P. 110, 111.

"இராணி மங்கம்மாள் அரசாளுங்காலத்தில் (1689 - 1704) மதுரையில்வசிக்கும் பட்டுநூல்காரர் பிராமணரெனக் கூறி, பிராமணருக்குரிய ஒழுக்கத்தோடு பூணூல்தரித்தார்கள். அப்படி தரித்தல் தவறு என மதுரைக் கவர்னர் பதினெட்டுபேர்களை ஜெயிலிலடைத்தார். இதைவிசாரிக்க இராணி மங்கம்மாள் சாஸ்திரத்தில் வல்லவர்களைக்கூட்டி சபைசேர்த்து, பட்டுநூல்காரர் உபநயனஞ் செய்துக்கொள்ள விதியுண்டாவென விசாரித்தாள்" எனப்பட்டிருக்கின்றது. இவ்விசாரணை யேற்பட்ட காலம் இற்றைக்கு 230-வருடத்திற்குமுன்னென்க. அக்காலத்திலேயே சாதிவரம்பைக் கவனிக்கும்போது, அதற்குமுன்காலத்தின் கதி என்னுகும். இதனுலும் நாயனர் க்ஷத்திரியர் எனத் துணியப்படும்.

" In Travancore there are many more of these Ootooparrahs than in cochin, for no Namboorie Brahman will reside in the former state although the Rajas have in vain tried by every means in their power, to induce them to do so. But the caste of the reigning family (Nair) is too low to suit the bigoted arrogance of these Numboories, who consequently prefer living in the dominions of the Kshatriya Prince of cochin where however they are not nearly so pampered". Vide, Day's, The Land of the Perumauls. ch. I, P. 23.

"திருவாங்கூர் அரசன் தாழ்ந்தசாதியானமையால், அதில் பிராமணர்வசிக்க இஷ்டப்படவில்லை, அதற்கு அரசனுல் எவ்வளவு முயர்ச்சிசெய்யப்பட்டும் பிரயோஜனப்படவில்லை." சாதிவரம்பில் அரசனையே மதிக்காதகுடிகள், ஏனுதிநாதநாயனுர் அரசரல்லாதிருப்பின், படைத்தொழிலே குலத்தொழிலெனக் கூறி அரசரென,

ம்திப்பர்களா? இதையாவது மதித்தனரா? உமாபதி. என்ன! அவர்குண அழுக்கின் கூற்று.

"Basoodeo jee first addressed Dewukee, saying, Krishnu and Buldeo have dwelt amongst strangers and haye ate and drank with them; and are not acquainted with the customs of their own caste. It is right, therefore that we should send for and consult the family priest, and act by his advice". Vide. The Prem Sagur, ch, XLVI, P. 100.

"வசுதேவர் தேவகியைப்பார்த்து கிருஷ்ணனும் பலராமனும் அன்னியரோடு வாசஞ்செய்து, உண்பனை தின்பனைசெய்தார்கள், அவர்கள் தங்களது சொந்தசாதியின் வழங்கப்பழக்கத்தைத் தெரிந்துக்கொள்ளவில்லை, ஆனமையால் நம்குடும்ப குருவை யோசனை செய்து அவர் உத்திரவின்பிரகாரம் நடத்தலே நியாயம்."

"It was easy to recognise for a Persian lady of some rank, since the garment which covered her from head to feet was white, and not striped with blue as the women of lower rank wear". Vide, Life in the Land of the Fire Worshippers, Vol. I. ch, III, P. 42.

பார்சு ஸ்திரீகளில் அந்தஸ்துள்ளவர்களை வெகு சுலபமாக தெரிந்துக்கொள்ளலாம். அவர்கள் பாதாதிகேசபரியந்தம் வெண்மையான உடுப்புகளைத் தரித்திருப்பார்கள். தாழ்ந்த அந்தஸ்துள்ளவர்களைப்போல் நீல உடுப்பு அணியார்கள்". எனப்பட்டிருக்கின்றது. பாரதத்தில் "இவ்வுலகத்தில் இவ்வாறு வெள்ளாடையுடுத்தி வெளிப்படையாகப் புஷ்பச் சந்தனங்களைத் தரித்திருப்பவர்கள் க்ஷத்திரியர்கள் தாமென்று எனக்குச் செவ்வையாகத்தெரியும்" என்றான் ஜராசந்தன். பிராம்மணாதி வருணங்கள் நாலுக்கும் கிரமமாக வெளுப்பு, சிவப்பு பொன், நீலம் இந்த நிறமுள்ள வஸ்திரங்கள் தரிக்கத்தக்கனவா மென்று பிருகுமுனி கூறுகின்றார். உபநயநகாலங்களில் பருத்தியினால் செய்யப்பட்ட வெளுத்த வஸ்திரம் பிராமணனுக்கும் சிவந்த வெண்பட்டு க்ஷத்திரியனுக்கும், மஞ்சள் நிறமுடைய வஸ்திரம் வைசியனுக்கும் உடுக்கத்தக்தென்று ஆபஸ்தம்பர் கூறுகின்றார். இவைகளால் நீல

வஸ்திரம் தாழ்ந்த சாதிக்குரியதென்றேற்பட்டது. இதனால் பார்சுதேசத்திலும் சாதிவரம்பைக் கவனிக்கப்பட்டதென விளங்குகின்றது.

"In this guise she sets out in her box-like carriage to pay her visits. She first goes to the wife of the Mollah, then to the wife of the Assantcha, then to the wife of the principal merchants ; according to their rank". Vide, Sketches of Kazan, Vol. II ch. I, P. 36.

"இவ்வித உடுபாவனையோடு சந்தித்தற்கு பெட்டியைப்போல் இருக்கும் வண்டியில் ஏறிக்கொண்டுபோவாள், முதலில் மொல்லா சாதி ஸ்திரியிடமும், பிறகு அசண்ட்சா ஸ்திரியிடமும், பிறகு வர்த்தகரிடமும் அந்தஸ்த்துக்குத் தகுந்தாப்போல் போவாள்."

"Should the lady by chance fall into the mistake of going first to the merchant's wife instead of, as rank required, to the Mollah's, the latter does not receive the proffered courtesy, but according to custom raises both her hands, the palms being turned forward as a mark of her displeasure and indignation" Vide, Sketches of Kazan, Vol. II ch I. P. 37.

"ஸ்தீரிகள் அசந்தர்ப்பத்தால் தப்பிதமாக அந்தஸ்த்தின் பிரகாரம் மொல்லாஸ்திரியினிடம் போகிறதற்குப் பதிலாக முதலில் வர்த்தக ஸ்திரியிடம் போய்வந்தால் மொல்லாஸ் தகுந்தமாதிரியாக அவர்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், அதற்கறிகுறியாக அவர்களது இரண்டு உள்ளங்கையையும் அவர்களுக்காகத் திருப்பி உயர்த்திக்காட்டுவார்கள்." ஆகிய இப்பகுதிகளால் தாழ்ந்தசாதிகள் உயர்ந்தசாதித் தொழிலை மேற்கொள்ளப்படாது எனப்பட்டிருக்கின்றது, இவ்விதியை இந்தியாவில் மாத்திரமன்று பார்சிகரும் ருஷியாவிலுள்ள கேசன் தேசத்தவரும் அந்தஸ்த்தையனுசரித்து வந்ததாக விளங்குகின்றது, இவ்வித அழுத்தமாக அக்காலத்தில் அனுசரிக்கப்பட்டு வந்த சாதிவரம்பைக்கடந்து ஏனாதிநாதநாயனார் உயர்குலத்தொழிலைக் கைப்பற்ற இடங்கொடுக்குமா? அவரை உபமன்னியரும், சேக்கிழாரும் க்ஷத்திரியர் என்றன்றோ போற்று,

கின்றனர்கள், அதனுலேயே அவரும் அவர்குலத்தவரும் அரசத்தொழிலைக் கைப்பற்ற இடந்தந்தது.

உபமன்னியர் ஏனாதிநாத நாயனாரைப் பிரஸ்தாபிக்கையில் "**சாக்ஷிகுலத்தவர்**" என்று சாற்றினர், இவ்வுபமன்னியர் வாக்கை பின்பற்றிய சேக்கிழார் அவரை "**சான்றார்குலத்தவர்**" என்று போற்றினர், அன்றியும் அவரை உபமன்னிர் "**ஸஸ்த்ரகலாச்சாரியர்**" என்று வாழ்த்தினர், சேக்கிழார் "**படைத்தொழிலர்**" என்று பணித்தனர், அவ்வளவிலமையாது உபமன்னியர் அச் சஸ்திரத்தொழிலும் அந்நாயனாருக்கு "**குலக்கர்மம்**" என்று மதித்தனர். சேக்கிழார் அப்படைத்தொழிலும் அவருக்குக் **குலத்தொழில்**" என்று துதித்தனர். இவர்மாத்திரம் அன்று இவர்குலத்தவரும் "**சஸ்த்ரகுலோத்பவர்**" என்று உபமன்னியர் சாதித்தனர், சேக்கிழார் "**மறப்படைவாட் சுற்றத்தார்**" என்று வாதித்தனர், ஆகிய இவைகளால் ஏனாதிநாதநாயனாரும் அவர் குலத்தவர்களாகிய கிராமணிகளும் க்ஷத்திரியரே யன்றி வேறன்று. உபமன்னியரும் சேக்கிழாரும் ஏனாதிநாதநாயனாரை "**சாக்ஷிகுலத்தவர், சான்றார்குலத்தவர்**" எனப் பிரஸ்தாபிக்கையால் **சூரியகுலத்தவர்**" என அவர்கள் மதிக்கும் வாய்மை வெளிப்பட்டது, அன்றியும் அவர்கள் நாயனாரை "**அஸ்த்ரகலாச்சாரியர், படைத்தொழிலர்**" என்கையால் அவரது தொழில் வெளியாகியது "**குலக்கர்மம், குலத்தொழில்**" என்கையால் அத்தொழிலும் அவர்குலத்தொழிலென ஊர்ச்சிதப்பட்டது. இப்பிரசனைகளையுற்று யோசிக்கில் ஏனாதிநாதநாயனாரை க்ஷத்திரியர் அன்றெனசாதிக்க வியலா. இதனை விசாரித்துணராமல் க்ஷத்திரியர் அன்றெனத் தலைவிரித்தாடுவர் பாமரர். இத்யாதி சுருதி யுக்தியனுபவத்திற்கு ஒத்து நிற்கும் உபமன்னியர் சேக்கிழார் வாக்கை உமாபதி புறக்கணித்தது. அறியாமையென்க பரிதாபம்! பரிதாபம்!!

## II சந்திரன் பரம்பரை.*

### ஏ. சந்திரன்.

1. சந்திரன் நவபிர்மாக்களுள் ஒருவராகிய அத்திரிபிர்மாவின் புத்திரன், இவன் பரம்பரையிலுதித்தவர்களையே சந்திரகுலத்தவர் எனச் சாற்றுவர், சந்திரனுக்கு புதனும், புதனுக்குப்

* Vide, Oriental Historical Manuscripts Vol. I, P. 218, to 227, 231 to 233.

புரூரவனும் உதித்தனர்கள் இப்புரூரவன்கங்கை யமுனைநதிகளின் சங்கமத்தில் "காண்டவபிரஸ்தம்" என ஒருநகரத்தைக் கட்டுவித்துக்கொண்டு அரசாண்டான் "காண்டவபிரஸ்தம் எனினும், "பிரயாகாபுரி" எனினும், "பிரதிஷ்தான்" எனினும் ஒக்கும். இந்நகரம் மநுவால் இளனுக்குக் கொடுக்கப்பட்டது, பிறகு இளனிடமிருந்து புரூரவன் அடைந்தான் இப்புரூரவனைச் சுட்டி:—

பாகவதம். நவமஸ்கந்தம், சந்திரன் மரபுரைத்த
வத்தியாயம், 18-வது, சுலோகம்.

ఇవనాగూర్పు తగ్గెరండు దగనీవెల్లప్పుడు గాచెదే।
నివవస్తుండవు గాక నాకడను దానీవుండు దేనిౕ విచే।
కవివృద్ధాయతనీవ నామతమునిక్రంబయ్యె నేనిౕ మనో।
జవినోదంబులనిస్సు దేల్తునగనే చంద్రాన్వయ గ్రామణీ॥

(இ-ள்.) "சந்திரான் வயக்கிராமணி என்னும் புரூரவச்சக்கிரவர்த்தி தபசுக்கேகுங்கால் ஊர்வசியைப் பார்த்துமோகிக்க, அதற்கிணங்கி ஊர்வசி நீர் தபவேடத்தை நீக்கி இராஜசின்னத்தோடு என்னுடன் சதாகாலமு மிருப்பையாகில் உன் மனோபிஷ்டத்தைத் தீர்ப்பேன்" என்பதாம். இதில்வரும் சந்திரான் வயக்கிராமணி என்பதற்கு, "வயம்=வெற்றியைத் தரத்தகுந்த, சந்திரான்=சந்திராயுதத்தை கையிற்றுங்கிய, கிராமணி=அதிபதி, அல்லது அரசன் (அமரம்) அதாவது சந்திராயுதத்தைக் கையிற்றுங்கிய வரசன் என்பது பொருள். அரசர்கள் ஆயுதக்கையர் ஆயினமையால் புரூரவனைச் சுட்டி "சந்திரான் வயக்கிராமணி" என்றனர் பாகவத நூலாசிரியர். இதைப்போல் சூரியகுல ஏனாதிநாதநாயனர் மரபினராகிய கிராமணிகளையும், "படைச்சுற்றத்தார்." என்றனர் சேக்கிழார். இதனால் இருகுலத்தவரும் அரசரெனத் துணியப்பட்டது.

2. புரூரவனுக்கு ஆயுசு, விஜயன்* என இருவருதித்தனர். இவர்களுள் ஆயுசுக்கு நகுஷனும் நகுஷனுக்கு யாதியும் உதித்தனர்கள். எயாதிக்கு எது துருகு, துருவசு, மநுஎன ஐவர் உதித்தனர்கள். இவர்களுள் எதுவின் † 24-வது, பரம்பரையில் நளன் உதித்தனன்.

---

* இவ்விஜயன் பரம்பரையிலேயே சேரன் உதித்தது.

† எதுவின் 18வது, பரம்பரையிலுதித்த கிருதனுக்கு குணி ரோமபாதன் என இருபுத்திரருண்டு, குணிபரம்பரையில் கிருஷ்ணனும், ரோமபாதன் பரம்பரையில் நளனும் உதித்தனர்கள்.

இங்ஙனமே பீமராஜன் புத்திரியாகிய தமயந்தியை மணந்த நிடதநாட்டரசன், இவனைச்சுட்டி:—

ஸ்ருங்காரநயிஷதம், 1-வது ஆசிவாசம், 3-வது பத்தியம்.

శ్రీమహితు పెద్దకొమరుఁడు
వేమక్షితిపాలరాజ్యవిభవకలార
ఘామణికి శింగసచివగ్రామణికిం
బాంఢ్యరాయ గజకేసరికిన్.

(இ-ள்.) "லட்சுமீகரம்பொருந்திய வேமக்ஷிதிபராஜன் குமாரன் சிங்கசசிவ கிராமணி" என்பதாம்.

ஸ்ருங்காரநயிஷதம், 3-வது, ஆசிவாசம்.

ఓమహారాంశవంశకల శోదధికౌస్తుభరత్న భూపతి
గ్రామణియస్మదీయమగు గాంక్షితమున్ వినుభీమపుత్రిపై
గామనసేసివచ్చితిమి గమ్ముసహాయముమాకునిక్కృపం
శ్రేమయుభక్తియుంగృపయుబెంపుగజేయుముదూతకృత్యమున్.

(இ-ள்.) "ஓ நளமகாராஜனே! மஹாவிஷ்ணு மார்பிற் தரித்திருக்கும் கவுஸ்துப மணியைப்போல் பிரகாசம் பொருந்தியவனே! இராஜாக்களுக்கெல்லாம் இராஜனே! அதாவது கிராமணியே! கேளும்" என்பதாம். இதில்வரும் கிராமணி என்பது அரசன் என்னும் பொருளில் அமைகின்றது. இவ்வேதுவால் கிராமணி யென்னும் பெயர் அரசருக்குரிய அநேகம் பெயர்களில் ஒன்றென முடிந்தது.

## அ. கிருஷ்ணன்.

**1.** கிருதனது 32-வது, பரம்பரையில் கிருஷ்ணன் உதித்தான். இக்கிருஷ்ணன் சந்திரகுல வசுதேவன் குமாரன். கம்ஸனது கொடுமையிலிருந்து மீட்பதற்கே இடைச்சேரியில் சேர்க்கப்பட்டது*. கிருஷ்ணன் இடையனல்ல, பிறகு கம்ஸனைக்கொன்று அரசாண்டான், கிருஷ்ணன் எதுவம்ஸத்திலுதித்தவனுதலால் "எது

* Vide. W. Holling's "The Prem Sagur." Ch. IV, P. 19. கூர்மபுராணம், கண்ணன் அவதரித்தவத்தியாயம், 26, 29-வது செய்யுள்கள்; இலிங்கபுராணம், சாத்தோதன் வங்கிசமுறைத்தவத்தியாயம், 22-வது, செய்யுள்.

குலத்தவன்" எனப்பட்டது, இக்கிருஷ்ணனும் "கிராமணி" என்னும் மகுடத்தைச் சூட்டப்பெற்றவனே.

பாகவதம், தஸமஸ்கந்தம், கிருஷ்ணன் கம்ஸனுடைய
பட்டத்துயானையைச் சங்கரித்தவத்தியாயம்,
8 - வது, சுலோகம்.

కాలంద్రొక్కి సలీలుఁడై నగవుతో గంభీరవేంద్రాకృతిఁ
గేలఁ భీషణదంతము ల్వెరికి సంతీర్ణంబు గామ త్రిగో
పాలగ్రామణివీరమౌళిమణియై ప్రాణంబులఁ బాపెనా
శైవేంద్రాభమ్రబాణలోభమును దంచత్సారగంధేభముఁ.

(இ-ள்). கம்ஸனுடைய குவலயமென்னும் பட்டத்துயானையைக் கீழேதள்ளி காலால்துவைத்து அதன்கொம்பைப்பிடுங்கியதைக் குத்திக்கொன்றவர் யாரென்றால் கோபாலக்கிராமணி என்னும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி என்பதாம். இதில் கிருஷ்ணனை கோபாலக்கிராமணி எனப்பட்டிருக்கின்றது. கோபாலன்=கிருஷ்ணன். கிராமணி=அரசன், அதிபதி. (அமரம்)

இக்கிருஷ்ணன் மரபிலுதித்த சந்திரகுல வரசர்கட்கு "கிராமணி" என்னும் பெயர் பூர்வமுதல் நாளதுபரியந்தம் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றது.

"**It is the Dravidian custom to call rulers by their title** and not by any personal name". Vide, The Manual of The Administration of the Madras Presidency 1885, Vol. I. P. 120.

"அரசர்களை பட்டப்பெயரால் அழைத்தல் திராவிடதேச வழக்கு." என மக்கிளின் துரை கூறியிருக்கின்றார். இதையொத்தே சான்றார்குலத்தவர்கள் அல்லது சூரியகுலத்தவர்கள் நாளதும் "கிராமணி" என்னும் பட்டப்பெயரையே குலப்பெயராகவும் வழங்கி வருகின்றனர்கள்.

கூ. பாண்டியன்,

1. சந்திரகுல யயாதியின் இரண்டாங்குமாரனும், எது சகோதரனுமாகிய துருவசுவை* தென்தேசத்திற் கரசனாக நியமிக்கப்பட்டு, தென்னவன் என்னும் பெயரை அளிக்கப்பட்டது.

* Vide, Oriental Historical Manuscript Vol. I. Ch. II. Notection I. P. 119, 120, 135, 138, to 242.

கூர்ம புராணம், சந்திரவங்கிசமுரைத்த வத்தியாயம்,
12-வது செய்யுள்.

தென்னந்திக்கினிற் றென்னனுகேனத் துருவசுவா
மன்னர்மன்னனை மணிமுடிபுனைந்து தென்கிழக்கிற்
பொன்னவாங்கழலெதுவினைப் புரத்தியென்றளித்து
பன்னுமெற்றிசையளிக்கெனத்துருகுவைப்பணித்தான்,

இலிங்க புராணம், சந்திரவங்கிசமுரைத்த வத்தியாயம்,
10-வது, செய்யுள்.

போற்றுந்தென்கீழ்பாற் தென்னனுகப் போர்வேற்றுருவசுவை
மாற்றில்பசும்பொன் மணிமவுலி புனைந்து வடமேல்பாற்றிசையிற்
கூற்றுமுட்கும் கொலைபுரியுங் குருதிவடிவேற் றுருகுவைத்தேன்
றாற்றுபணிநாண் மலர்மாலைச் சுடர்செய் மவுலிசூட்டினன்.

என்னும் பாக்களால் துருவசுவை * தென்தேசத்திற் கரசனுக நியமிக்கப்பட்டு, "தென்னவன்" என்னும் பெயரை அளிக்கப்பட்டதாக விளங்கின, பாண்டியன் துருவசு பரம்பரையிலுதித்தவனுதலால், துருவசுவுக்குக் கொடுக்கப்பட்ட "தென்னவன்" † என்னும் பெயரை பாண்டியனுக்குத் தேடிக்கொடுக்கப்பட்டது அது:—

செழியனே கூடற்கோமான்
தென்னவன் வேம்பின்தாரோன்.

என்னு நிகண்டால் நிலைப்படும், இதோடு துருவசு சந்திரகுலத்தவனுதலால் ‡ அவன்குலத்திலுதித்த பாண்டியனும் சந்திரகுலத்தவனே! § இதை பன்னூற்களால் தெளிக.

**2.** தென்னவன் என்னும் பாண்டியர்களால் ஆளப்பட்ட "நெல்வேலி, மதுரை" யையே "பாண்டியநாடு, பாண்டியமண்டலம்" எனப்படும், அதன் எல்லை :—

---

* துருவசு. Vide. Oriental Historical Manuscripts. Vol. I. P. XI, XII, 120; Vol. II. P. 74.

† திருவிளையாடற் புராணம், மாணிக்கம் விற்றப் படலம். 8. 92-வது, செய்யுட்களையும் காண்க. தென்னவன்=பாண்டியன் A titular name of a race of King in the South, at Madura (Rottler.)

‡ சந்திரகுலம் Oriental Historical Manuscripts. Vol. I. P. II

§ Oriental Historical Manuscripts Vol I, P. 185. 238.

கம்பர்.

வெள்ளாறது வடக்காம் மேற்குப்பெரு வழியாம்
தெள்ளார்புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்டகடல் கிழக்கா மைம்பத்தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி*.

எனக்கூறிப்போந்த எல்லைக்குட்பட்டதே! பாண்டியர்களுக்கு திருநெல்வேலி நாட்டிலுள்ள பழைய காயேலையடுத்த கொற்கைப் பதியே தலைநகரமாயிருந்தது. பாண்டியர்கள் இக்கொற்கைப்பதியிலும், இதையடுத்த சுற்றுப்புறங்களிலும் பரவியிருந்தனர். அவர்களுக்கு மாறன் என்னும் ஒருபெயருமுண்டு. அதனால் கொற்கையைச் சூழ்ந்தநாட்டிற்கு மறுகம் என்பது பூர்வநூல் வழக்கு பிறகே மதுரை தலைநகரமாகியது. கால்வல் பண்டிதர் (Dr. Caldwell) சொல்லுகிறபடி கொற்கை தாம்பிரவர்ணி முகத்துவாரத்தில் உள்ளது. கிருஸ்து பிறப்பதற்கு முந்தி அறுநூறும் நூற்றாண்டில் கொற்கைப்பதிக்கருகில் "பழையகாயேல்" என்றொரு நகரம் கட்டப்பட்டது. அது பதினோராம் நூற்றாண்டுமட்டும் பெயர்பெற்று விளங்கியது. பாண்டியனேடரசாண்ட சோழன் இராமருக்குச் சுமார் 600 - வருடங்களுக்குமுன் ஆண்டதாகவும், இவனுக்குப்பின்னால் இவன் மரபினர் ஆண்டதாகவும் "இராஜஸ்தான்" சரித்திர ஆசிரியராகிய (Tod) "டாட்" என்பவர் உத்தேசிப்பதால் பாண்டியனும் அக்காலத்தவனே! இதை தமிழ் நூற்களும் ஒத்துவருகின்றது.† இவ்விதமிருக்க ஸ்ரீராமர் வருங்காலத்து தென்தேசம் காடாயிருந்ததாகவும், அதையொரு சூத்திரனுக்கு கொடுத்ததாகவும், அவனே பாண்டியன் எனவுங் கூறுவர். தபசை மேற்கொண்டொழுகிய சூத்திரனைக் கொன்றவர் அரசைச் சூத்திரனுக்குக் கொடுப்பரா? அது பிசகு.

**The Pandya Kings of the Lunar race** are commonly believed to be of **the Kshatriya,** not of the

* Vide, Oriental Historical Manuscripts. Vol. I. Preface P.V. VI. Vol. II. appendix. D. P. 25.

† கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், ஆறுசெல்படலம், 51-வது செய்யுளிலும், நாடவிட்டப்படலம், 30-வது செய்யுளிலுங் காண்க.

Vellala or any other agricultural castes Vide, J. H. Nelson's Madura Manual, Part. III. Ch. II.P. 44.

"சந்திரகுலத்திலுதித்த பாண்டியராஜாக்கள் க்ஷத்திரியர்களேயன்றி வேளாளர்களுமல்ல, வேறெவ்வித விவசாயத்தொழில் செய்பவருமல்ல" என மதுரை மானியுல்" நூலாசிரியராகிய நெல்சன்துரை கூறுகின்றார்.

நைடதம், போர்புரிப்படலம், 6-வது செய்யுள்.

என்றலுங்கடவுட் டிங்களிருங்குல மிழிந்துக்கூற
நன்றுநன்றென்ன நக்குநாமவேல் வழுதிசீறி
உன்தலை துணிப்பனென்று வொளிருவா ளுறையினீக்கிக்
குன்றெரிவைரவொள்வாள் குரிசின்மேற்கனன்று சென்றான்.

இதில் வரும் "திங்கள்குலம்" என்பது சந்திரனை விளக்கி, அக்குலத்திலுதித்த பாண்டியனைத் தெரிவிக்கும். பாண்டியன் சந்திரகுலத்தவனு யிருந்தமையாலேயே, நளமகாராஜனது குலமாகிய சந்திரகுலத்தை இழிவாகக்கூறிய தேவேந்திரன்மேல் பாண்டியன் சிறியெழுந்தானு. மேல்கூறிவந்த வம்ஸாவளியை நோக்க பாண்டியனும் சந்திரகுலத்தவனே யாகுவன். அதனாலேயே அவனுக்குக் கோபம்பிறந்தது, சந்திரகுலம் சூத்திரனுக்குரியதன்று, இதனால் பாண்டியன் சூத்திரன் ஆகான், இதோடு ஸ்ரீராமர் தகப்பனாராகிய தசரதச் சக்கிரவர்த்தி புத்திர காமேஷ்டியாகஞ் செய்தபோது அந்தயாகத்திற்கு வங்க கலிங்காதி கீழ்நாட்டரசர்களும், சோளபாண்டியாதி தென்னாட்டரசர்களும், சிந்துசவ்வீராதி மேனாட்டரசர்களும், குருபாஞ்சாலி வடநாட்டரசர்களு வந்ததாக வால்மீகிராமாயணம், பாலகாண்டம், 13-வது, சருக்கத்தில் பகரப்பட்டிருக்கின்றது, இப்பாண்டியராஜ்யம் கிருஸ்து பிறப்பதற்கு, 600, 700, வருடங்களுக்கு முன்பே செழிப்படைந்திருந்ததாக பாண்டியராஜ்யத்தைப்பற்றியும், முத்துசலாபத்தைப்பற்றியும் எழுதிய "மெகத்தினீசு" என்கிற கிரேக்கவித்துவான் கிருஸ்துபிறப்பதற்கு முந்தி, 302-ம், வருடத்தில் பேசியிருக்கின்றார், கொற்கைக்கருகில் பழையகாயேல் *

* Vide Dr. Rev. Caldwell's Lecture or Tinnevelly and the Tinnevelly Mission. P. 2.

என்னு நகரம் கிருஸ்துபிறப்பதற்கு 600-வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது, அங்கிலேயவாண்டு, 1292-ல் "மெர்ரியோ போலோ" (Marea Polo) என்னும் வெனிஸ்நகர்ப் பிரயாணி யொருவன் பாண்டியநாட்டிற்கு வந்தபொழுது சீனம் அரபி முதலிய விடங்களிலிருந்து கப்பல்வியாபாரம் போக்குவரத்தாயிருந்த தாகவும் அக்காலத்து மதுரையையாண்டவன் சுந்தரப்பாண்டியன் எனவும் எழுதியிருக்கின்றது, ஆகிய இப்பிரமாணங்களால் பாண்டியர்கள் சந்திரகுல க்ஷத்திரியர்களெனவும், சூத்திரகுலத்தவர்களல்லவெனவும், ஸ்ரீராமருக்கு முன்பிருந்தே அரசாண்டுவருபவர்களெனவும், இவர்கள் இராஜ்யம் செழிப்படைந்திருந்த பூர்வீக ராஜ்யங்களோடொத்து எண்ணப்பட வேண்டுமெனவும் விளங்கின.

மேற்கூறிய துருவசுவுக்கு † 114-வது, பரம்பரையில் வந்த பராக்கிரம பாண்டியனைச் சாலிவாகன சகாப்தம் 1246-ம் வருடத்திற்குமேல் செல்லாநின்ற ருதிரோற்காரி வூ ஆனிமீ டில்லியிலிருந்துவந்த ஆதிசுல்தான் மலுக்கு நேமி என்னு மகமதியனால் ஜெயிக்கப்பட்டு, சிறையாகக்கொண்டு போகப்பட்டது. அதன்பின் துலுக்கர் 48-வருடம் பாண்டியநாட்டை ஆண்டு வந்தனர்கள். சகாப்தம், 1293-ம் வருடத்திற்குமேல் செல்லாநின்ற விரோதிகிருது வருடம் மைசூர் ராஜனின் தளகர்த்தனாகிய கம்பண்ண உடையார் பாண்டிய நாட்டையாண்ட துலுக்கனை வெட்டித் துரத்திப்போட்டு, சிம்மாசனத்திற்கு வரக்கூடிய சோமசேகர பாண்டியனுக்குப் பட்டங்கட்டிவைத்தார். இவனிலிருந்து 15-தலைமுறைகளாக வரசாட்சி செய்து கடசி பாண்டியனாகிய சந்திரசேகர பாண்டயனை வீரசேகரசோழன் சாலி, 1460-ம். வருடம், ஜெயித்து பாண்டியநாட்டைக் கைக்கொண்டான். சந்திரசேகரன் விஜயநகரம் கிருஷ்ணராயரிடம் முறையிட்டு உதவிவேண்ட, அவர் தன் தளகர்த்தனாகிய நாகப்பனாய்க்கனை அனுப்பி. சோழனை ஜெயித்து மதுரையை சந்திரசேகர பாண்டியனிடம் ஒப்புவித்து வரும்படி உத்திரவு அளித்தார். நாகமநாய்க்கன் அக்கட்டளையை சிறமேற்கொண்டு, சோழராஜனைசெயித்து, பாண்டிய

† The Oriental Historical Manuscripts, Vol. I, P. 13 to 33 and P. 195 to 206. The Manual of the Administration of the Madras Presidency Vol, I P. 123.

னிடம் ஒப்புவிக்காது அரசை தானேயாண்டு வந்தான், இதைக் கேள்வியுற்ற கிருஷ்ணராயர் கோபங்கொண்டு நாகப்பனாய்க்கனைப் பிடித்துக்கொண்டுவரும்படி அவன் குமாரனாகிய விஸ்வனாத நாய்க்கனையனுப்ப, அவன் தகப்பனென்றுபாராது பிடித்துக்கொண்டு வந்தமையால் கிருஷ்ணராயர் சந்தோஷித்து, சந்திரசேகர பாண்டியனுக்குப் பிறகு மதுரையை உனக்கு பட்டங்கட்டிவைக்கின்றேன் என்று உறுதிமொழியளித்தனன்.*

சந்திரசேகர பாண்டியன் சாலி, 1461-ம் வருடத்தில் இறந்துவிட்டான், இவனோடு பாண்டிய ராஜாக்களுக் கரசொழிந்தது. இவன் இறந்ததையறிந்த கிருஷ்ணராயர் விஸ்வனாத நாய்க்கனை அழைப்பித்து சந்திரசேகர பாண்டியன் இறந்துபோனதினால் நீ போய் அந்தப் பாண்டிய நாட்டை யாளென உத்திரவு அளிக்க, அவ்வுத்திரவை வடுககுலத்தவனாகிய விஸ்வனாத நாய்க்கன் மேற்கொண்டு மதுரைக்குச்சென்று, 1461-க்குச் செல்லாநின்ற ரவுத்திரிவருடம் மார்கழிமாதம் 11வய தினம் சிம்மாசனாதிபதியானான்.†

இவனிலிருந்து 15-தலைமுறைகள் வரிசைக் கிரமமாக வரசாண்டு கடசி வடுகவரசனாகிய, வங்காரு திருமலை நாய்க்கனால் 1736-ம் வருடம் வரைக்கும் மதுரை ஆளப்பட்டு, பிறகு மகமதியர் இம்சைக்குட்பட்டு‡, தற்காலம் ஆங்கிலேயரால் ஆளப்பட்டு வருகின்றது.

* "The Tanjore Maharatta Principality, Ch II. P. 42 and Oriental Historical Manuscripts, Vol. II. P, 9, 11, 18, 88, 93, 94. 107, 109,

† "Visvanatha was the first of the Naicka rulers of Madura (1559 to 1563) He took the country from his father Nagama who was the successful general of the Vejayanagar King had already subdued it. And himself proceeded to administer it with credit to himself and adventage to the country" Vide Pandian Coins P. 143. The Tanjore Maharatta Principality Ch.II. P. 42. Pope's History of India Ch.IV. P. 133; Oriental Historical Manuscripts Vol. I. Ch. IX. P. VIII; Vol. II. P. 117;

‡ "They, However, resumed their separate sovereignty, and retained it till 1736. A. D. when the ruling prince (Telegue) Naika was conquered by the Nahob of Arcot". Vide. History of India by J. Garrett. Ch. VI P. 64.

## ൯. குரு.

1. எயாதியின் இளையகுமாரனாகிய புருகாண்டவபிரஸ்த தத்திற்கரசனாக நியமிக்கப்பட்டான். இப்புருவின் 18-வது பரம்பரையில் அஸ்தன் உதித்து தலைநகராகிய காண்டவப் பிரஸ்தத்தைவிட்டு, வேறொரு நகரத்தைப் புதுக்கியரசாண்டதால், இவன் பெயரே அந்நாட்டிற்காய் "அஸ்தினாபுரம்" என்றழைக்கப்பட்டது. அஸ்தனது, 4-வது பரம்பரையில் குரு உதித்தான். இக் குரு ராஜனால் சந்திரகுலத்திற்கு "குருகுலம்" எனவும், அவனாண்டபூமிக்கு "குருக்ஷேத்திரம்"* எனவும் பெயருண்டாயிற்று, "குருக்ஷேத்திரம்" மச்சம் அதாவது அஜ்மீருக்கும், பாஞ்சாலம் அதாவது பஞ்சாப்புக்கும் மத்தியிலுள்ளது, குருவின் மூன்றுவது, தலைமுறையில் சந்தனு உதித்தான், இச்சந்தனு சூரியகுல வசுராஜன் வீரியத்தால் உதித்து, வலைஞர்க்கதிபதியாகிய தாசனால் போஷிக்கப்பட்ட மச்சகந்தி என்னும் பெண்ணை மணந்து மகிழ்வுற்றிருந்தனன், சிலர் மச்சகந்தியை வலைஞர்பெண் என்பர், அதுபிசகு:—

நல்லாப்பிள்ளை பாரதம், ஆதிபருவம், வியாசு
ற்பவச் சருக்கம், 30-வது, கவி.

பிடித்தனரனைய மீனம்பிளந்தனர் மகனும் பெண்ணு
மடுத்ததினிருந்த ஞேக்கியற்புத மடைந்துளாராய்
வடுத்தவிர் தாதராஜனவையிடை வைத்துரைத்தா
ரெடுத்தவன்வளர்த்தான் சாபமிவளொழிந் துலகஞ்சார்ந்தாள்.

31-வது செய்யுள்.

அன்னவன்வளர்க்கு நாளிலப்பெரும் புதல்வன்மச்ச
னன்னிலையவனிக் கெல்லாநாயக னாகிநின்றான்
றுன்னிய மச்சகந்தியெனப்பெயர் சொற்றதோகை
பன்னியயமுனைக் கோடம்பணிப்பவ ளாயிருந்தாள்.

என்னும் பிரயோகங்களால் இனிதுவிளங்கும், இதையொத்து அங்கிலேயரும் அறைவர்.

"That the King of the Parawas, who resided on the banks of the Jamna, having found an infant girl in

* Vide. Ancient History of India, P. 117.

the belly of a fish, adopted her as his own daughter, giving her the name of Machchakandi, and that when she grew up, she was employed (as was customary with the females of the Parawas tribe) to ferry passengers over the river. Her great personal charms afterwards induced king Santanu, of the Lunar race, to admit her to his royal bed". Vide, The Journal of the Royal Asiatic Society. Vol. IV. P. 130. 134.*

"சம்ஞநதிக்கரையில்வசித்த பரவருக்கதிபதி அதாவது நெய்த நிலத்தலைவன் மீன்வயற்றில் கண்டெடுத்த பெண்குழந்தையைத் தான் புத்திரியாகவேற்று, மச்சகந்தி என்னு நாமகரணமிட்டு, தம் பரவக்குலத்தொழிலாகிய ஓடம் விடுதலை கற்பித்துக்கொடுத்து வளர்த்துவந்தான். பிறகு சந்திரகுலத்திலுதித்த சந்தனுராஜன் அவளழகால் அவளைக் கலியாணஞ்செய்துக்கொண்டான்." என வங்கிலேயர் கூறுகின்றனர். பரவர்=பரதவர் (சதுரகராதி) "பரதவர் நுளைவரோடு பஃறியர் திமிலர் சாலர், கருதிய கடலர் கோலக் கழியரே நெய்தன்மாக்கள்". (நிகண்டு.) இவ்வங்கிலேயப் பகுதி மேற்கூறிய பாரதப்பகுதியை யொத்தே பேசுகின்றது. இவைகளால் மச்சகந்தியை வளர்த்தவன் பரவன் எனவும்; மச்சகந்தி அரசவம்ஸத்தவள் எனவும், தாதன் நெய்தநிலத்தலைவன் எனவும் ஓடம் விடுதலே அவன் குலத்தொழில் எனவும் நூற்கள் துணிந்து நிற்கின்றன.

சந்தனுவுக்கு விசித்திரவீரியன் பிறந்தான். இவன் குமாரர்களே திருதராஷ்டிரன் பாண்டு என்பவர்கள். இவர்களுள் திருதராஷ்டிரனைக்குறித்து :—

பாரதம், கர்ணபருவம், 1-வது ஆசிவாசம், 155-வது சுலோகம்,

భల్లంబొక్కటఁద్రుంచె నూతుని జితుర్వ్యాణీహతిన్వ్యాజులన్
డొల్లంజేసె నిశాతపంచవిశిఖాటోపంబునం జించెధీ
రోల్లాసంబు వికాసముం బొలయ మేనుక్కడినీసంనుం
డెల్లంజూడఁగ బారియొండొక రంథబెస్కున్ గురుగ్రామణీ.

* Vide. On the Original Inhabitants of Bharatavarsa of India. P, 62.

31

(இ - ள்). "குருக்கிராமணியாகிய திருதராஷ்டிர மகாரா ஜனே! கேளும், பீமனானவன் சௌபாலராஜனுடைய புஜபல பராக்கிரமங்களையடக்கி பூமியில் புரட்டிவிட்டான்" என்று சஞ் சயன் சொன்னான் என்பதாம். இதில் திருதராஷ்டிரனை "குருக் கிராமணி" எனப்பட்டிருக்கின்றது, குரு = குருமகாராஜன், (வம்சத்திலுதித்த), கிராமணி=அரசன் எனப்படும். திருதராஷ்டி ரன் குருமகாராஜன் பரம்பரையிலுதித்தவனாதலால் "குருக் கிராமணி" எனப்பட்டது. இத்திருதராஷ்டிரனுக்கு துரியோதனன் முதலிய நூறுபுத்திரர்கள் பிறந்து அஸ்தினாபுரியை யாண்டார்கள்.

பாரதம், பீஷ்மபருவம்
**2-வது, ஆசிவாசம், ஏழாநாள் யுத்தம்.**

భీముడుదగ్రదర్పమున భీష్మునిపైఁజనఁడడ్డపైకురు
గ్రామణి భల్లపంచకయుగంబున నాతనిమేనుసించుడుఁ
భీముదృఢ క్షురప్రచయ భిన్నశిరస్కునిజేసెనాతఁడా
భూమిపునిట్లునీదు ప్రియపుత్రకులొండొరుతోడఁబోరఁగన్.

(இ-ள்.) "பீமன் கெதாயுதபாணியாய் பீஷ்மர் எதிர்செல்ல **குருக்கிராமணி**யாகிய திரியோதனன் இருவருக்கும் மத்தியில் வந்து நின்றான்" என்பதாம். இச்சுலோகத்தில் துரியோதனனை "**குருக்கிராமணி**" எனப்பட்டிருக்கின்றது. "**கிராமணி**" என் னும் பெயர் அரசருக்குரிய அநேகம் பெயர்களில் ஒன்றெனத் துணியப்பட்டது. அதனானே அரசகுலத்திலுதித்த **சான்றேன் குலத்தவர்கள் நாளதும் கிராமணி** என்னும் பெயரை குலப்பெய ரும் பட்டப்பெயருமாய்ப் பெற்றுவருகுவது. திருதராஷ்டிரன் சகோதரனாகிய பாண்டுவுக்கு தருமன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என ஐவர் உதித்து இந்திரப்பிரஸ்தத்தை யாண்டனர் கள். காண்டவப்பிரஸ்தம் இந்திரனால் புதுக்கியதால் இந்திர பிரஸ்தம் எனப்பட்டது.

"The Raja Joodisthur sent for his four brother, and giving them armies, sent them in four different directions. Suhdeo Jee went to the south, **Nukool to the west**, Urjoon to the north, and Bheemsen to the East." Vide. The Prem Sagur ; Ch. LXXII1, P. 224.

"பாண்டவர்கள் இராஜசூயாகஞ் செய்ய திக்குவிஜயஞ்செய்த காலத்தில் தருமர் தன்னுடைய சகோதரர் நால்வரில் பீமனை கிழக்கிலும், அர்ச்சுனனை வடக்கிலும், நகுலனை மேற்கிலும், சத்துருக்கனை தெற்கிலும் உள்ள தேசங்களின்மேல் படையெடுத்துச்செல்ல ஆக்யாபித்தனர்."* இவர்களுள் நகுலன் சென்றது சிந்து தேசத்தின்மேல், சிந்துதேசம் இந்திரப் பிரஸ்தத்திற்கு மேற்கிலேயேயுள்ளது. அது இந்து நதிக்கரையிலாகும்.

"Jayadratha was the King of Sindhu, Souvera at the time of the war of Mahabharata, and was a great warrior". Vide. Ancient History of India, Vol. 1. Part II, Ch. VII. P. 114.

"பாரதம் சுயம்வர காலத்தில் ஜெயாத்ராதன் என்னும் அரசன் சிந்து தேசத்தை யாண்டுவந்தான்" இச் ஜெயாத்ராதனும் இவன் குலத்தவர்களும் "கிராமணி" என்னும் அரசபட்டத்தை யுரியவராகுவர்.

வியாசபாரதம் நகுலன் மேற்குதிக்கு விஜயபருவம்,
32–வது, அத்தியாயம். 8-வது, சுலோகம்.

గణానుత్సవసంకేతాన్ వ్యజయత్పురుషర్షభః।
సింధుకూలాశ్రితయేచ గ్రామణీయా మహాబలాః॥

(இ-ள்.) பாண்டவர்கள் திக்குவிஜயஞ் செய்தகாலத்தில் நகுலன் சிந்துதேசத்தையடுத்து, அதை அரசுபுரிந்திருந்த பலசாலிகளாகிய கிராமணிகளை சமரிற் ஜெயித்து திரைவாங்கிக்கொண்டு வந்தான்" என்பதாம், இச்சுலோகம் சிந்துதேசத் தரசர்கள் 'கிராமணி' என்னும் பொன்முடியைப்பூண்டவர்கள் எனப்படுகின்றது, கிராமணி என்பது அரசர்களது பல குலப்பெயர்களுள் ஒன்று. இக்கிராமணி என்னும் பெயரை சிந்துதேசத்தரசர்கள் குலப்பெயரும் பட்டப்பெயருமாய் வகித்துவந்ததைப்போல் அக்குலத்திலுதித்த அரசர்களுக்கு அதுவே குலப்பட்டப்பெயராய் பூர்வவழக்கை யனுசரித்து நாளது பரியந்தம் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றது. இப்பிரமாணத்தால் சான்றன்குலக் கிராமணிகளும் க்ஷத்திரியகுலத்தவர்கள் என்பதே துணிந்த முடிபு.

* பாரதம், சபாபருவம், இராஜசூயாகச்சருக்கம், 67, 68, 69-வது செய்யுட்களைக்காண்க.

பாண்டவருள் ஒருவனாகிய அர்ச்சுனனுக்கு அபிமன்னனும், அபிமன்னனுக்கு பரிட்சித்தும், பரிட்சித்துக்கு ஜனமேஜயனும், ஜனமேஜயனுக்கு நரேந்திரன் சதாநீகனும் உதித்தனர்கள். நரேந்திரன் புத்திரனாகிய சாரங்கதாரன் மணம்பெறாது சிவபதவியடைந்தான். நரேந்திரன் சகோதரனாகிய சதாநீகன் அரசுக்கு வந்தான். இவனிலிருந்து றிபுஞ்செயன் வரைக்கும் 43-பரம்பரை ஏற்பட்டு அரசாண்டனர்கள்*. சிலர் சாரங்கதாரனோடு சந்திரகுலம் அழிந்ததெனக்கூறுவர். அப்படிக்கூறுங்கதை பரீட்சித்துவுக்குப் பின்னால் ஜனமேஜயன், நரேந்திரன், சாரங்கதாரன் என முடிவு கட்டுகின்றது, புராணங்களோ ஜனமேஜயனுக்குப் பின்னால் நரேந்திரன் சகோதரனாகிய சதாநீகன் வம்ஸத்தவர்கள் பரம்பரையாக ஆண்டுவந்ததாக வரையறுக்கின்றதுகள், இதில் புராணக்கூற்றையொப்பி, மற்றதை துப்புதலே யமைவுடைத்து, ஒரு அரசனுக்குப் பல புத்திரருண்டென்பது நூற்றிறம், பீஷ்மரைப்போல் சாரங்கதாரனுக்கும் சந்ததியில்லை, சந்ததியில்லாத பீஷ்மரையொதுக்கி சந்ததியுடைய விசித்திரவீரியன் பரம்பரையை விகசிதப்படுத்தியதைப்போல், சந்ததியில்லாத சாரங்கதாரன் பரம்பரையை நீக்கி, சந்ததியுடைய சதாநீகன் பரம்பரையை புராணங்கள் புகல்கின்றதுகள், இதனால் சாரங்கதாரனோடு சந்திரகுலம் அழிந்ததெனல் அறிவின்மையென்க.

## ௰க சேரன்.

சந்திரனுக்குப் புதனும், புதனுக்குப் புரூரவனும், புரூரவனுக்கு ஆயுசு † விஜயன் என இருவரும் உதித்தனர்கள். விஜயனது, 8-வது, பரம்பரையில் குசன் உதித்தான். இச்சந்திரகுலக் குசனுக்கு நான்கு புத்திரருண்டு.

கம்பராமாயணம், பாலகாண்டம், வேள்விப்படலம், 7-வது, கவி.

குசன்குசநாபன் கோதில்குணத்தி னதூர்த்தன்கொற்றத்
திசைசெழுவசுவென்றோறு மிவர்பெயரிவர்கடம்மில்
குசன்கவுசாம்பி நாபன்குளிர்மகோதய மதூர்த்தன்
வசையிறன்மவனமற்றை வசுகிரிவிரசம் வாழ்ந்தார்.

---

* Vide, Garrett's History of India. Ch. V. P. 60

† ஆயுசுபரம்பரையில் கிருஷ்ணன், பாண்டவர் முதலியவர்கள் உதித்தது.

கூர்மபுராணம், இராமனவதரித்த வத்தியாயம், 27-வது, செய்யுள்.

ஆங்கவனன்கு மைந்தர்ப்பெற்றனளவரின் மூத்தோன்
வீங்குதோட்குசனுபப்பேர் விறல்கெழுவேந்தர்வேந்த
னோங்கெழின்மாடமுற்று மகோதயமேன்னவோதுந்
நீங்கறுநகரங்கோலித் திருவின்வீற் றிருந்தானன்றே.

இப்பாக்களில் சந்திரகுலக் குசனுக்கு குசன் குசனுபன் ஆதூர்த்தன் வசு என நால்வருதித்து, குசன் கௌசாம்பி நாட்டையும், குசனுபன் மகோதயநாட்டையும், ஆதூர்த்தன் வசந்த ஆரணியத்தையும், வசு கிரிவிரசத்தையும் ஆண்டார்களெனப் பட்டிருக்கின்றது. இதில்வரும் மகோதய * நாட்டை யாண்ட சந்திரகுலக் குசனுபனே சேர ராஜாக்களுக்கு மூலபுருடனாகுவன்.

பெரியபுராணத்திற்குட்பட்ட சேரர்குல நாயன்மார்கள் சந்திரகுல குசனுபன் பரம்பரையிலுதித்தவர்களாதலால், அக்குசனுபனால் புதுக்கிய மகோதயநாட்டை குலப்பதியாகப்பெற்று, மகோதயர் என்னும் பெயரை குலப்பெயராகவும் வகித்து வந்தனர்கள்.

பெரியபுராணம், சேரமான்பெருமாணயனார் புராணம்,
4-வது செய்யுள்.

வேத நெறியின்முறைபிறழாமிக்க வொழுக்கந்தலைநின்ற
சாதிநான்குநிலைதழைக்குந் தன்மைத்தாகித் தடமதில்சூழ்
சூதவகுளசரளநிரை துதையுஞ்சோலை வளநகர்தான்
கோதையரசர் மகோதையெனக் குலவுபெயருமுடைத்துலகில்

இப்பாசுரத்தில் சேரமான்பெருமாணயனாரை "கோதையரசர்" எனவும், "மகோதையர்" எனவுங் கூறப்பட்டிருக்கின்றது. "மகோதயம்" என்னும் நாடு சந்திரகுல குசனுபன்பரம்பரையார் ஆண்டது. அக்குசனுபன் பரம்பரையாரே "மகோதையர்" எனப்படுவர், சேரன் குசனுபன் பரம்பரையாராகிய மகோதையர் வம்சத்தில் உதித்தவனாதலால் "மகோதையர், கோதையர்" என்னுங் குலப்பெயரைப்பெற்றனன், இதனாலும் சேரன் சந்திரகுலத்தவனே யாகுவன்.†

* மகதநாட்டரசர்கள் தென்திசைவந்து தென் ஆர்க்காட்டையும், சேலத்தையும் ஆண்டதால் அத்தேசம் "மகோதயம்" எனப்பட்டது.

† நம்பி அந்தாதி, 64-வது செய்யுள்; Mysore and Coorg. Vol. I. P. 309.

நம்பியாண்டார் நம்பித்திருவந்தாதி, 47-வது, செய்யுள்.

நாதன்றிருவடியே முடியாகக் கவித்துநல்ல
போதங்கருத்திற் பொறித்தமையா லது கைகொடுப்ப
வோதந்தழுவிய ஞாலமெல்லா மொரு கோலின்வைத்தான்
கோதைநெடுவேற் களப்பாளனாகிய கூற்றுவனே.

இதில் சேரகுலத்திலுதித்த கூற்றுவநயனாரை "கோதையர்" எனப்பட்டிருக்கின்றது, "மகோதையர்" என்பது முதற்குறைந்து "கோதையர்" * எனநின்று சேரனைத்தெரிவித்தது. "கோதையர்" என்பது சேரனது பல பெயர்களில் ஒன்று.

நிகண்டு.

"கொல்லிவெற்பன் குடக்கோக் குட்டுவன்குடகன் கோதை"

திவாகரம்.

"கொல்லிச்சிலம்பன்கோதை கேரளன்."

என்னும் பிரமாணங்களால் சந்திரகுல குசனுபன் வம்ஸத்தவர்களுக்குரிய "மகோதையர்" என்னும் பெயரை சேரராஜாக்கள் குலப்பெயராகப் பெற்றிருத்தலால், சேரர் சந்திர குலத்தவர்களே யாகுவர் என்பது நூன்முடிபு. இன்னும்:—

பழநித்தலபுராணம், கௌசலசேரன் அருச்சனைச் சருக்கம், 2-வது, செய்யுள்.

கற்றவர்க்கொருதுணை கலிக்கிருநிதிக்கடவுள்
பற்றலர்க்கரிமாவடைந்த வர்க்கருட்பரவை
மற்றைநீணிலங்குளிர்ப் புறவருமதிக்குலவன்
கொற்றவெண் குடைக்கோமனங்குசத்துசவரசன்

3-வது, செய்யுள்.

இழைத்தமாதவத்துதித்தசே யின்பமன்பூறிக்
குழைத்தநெஞ்சினன் ஞானநூற் கேள்வியன்கொண்மூத்
தழைத்தசெங்கையன் றடவுவாட்படையினன் றாளக்
கழைத்தடஞ்சிலைக் காமவேள் கவுசலனென்போன்

* கர்மசாக்ஷி என்பது முதற்குறைந்து, சாக்ஷி என நின்றும் சூரியனைத் தெரிவித்தலைப்போலென்க.

38-வது, செய்யுள்.

அங்கவர்கன்றாரண்ண லகத்தினுள் விழித்திருந்தா
னுங்குலத்தோன்ற லுட்டநுதலியை வழுத்தக்கோங்கந்
தங்கியவனத்தடைந்தானென்று மார்த்தாண்டன்மேல்பாற்
றிங்களுக் குவகைசொல்லச் செல்லலைப்போலச்சென்றான்

53-வது, செய்யுள்.

இதுகுய்யமியாவருமெய் துதற்கரியதென்றோனை
விதுவின்றோல்குலவேந்தன் போற்றிமிளிர்விமலைபதப்
பதுமங்காண்பதற் கொன்றுபகர்கெனத் தாழ்ந்தனன்கமல
மதுமென்றார் மறைமுனிவன் வருந்தலையென்றருள்வழங்கி.

நகர்செய்சருக்கம், 7-வது செய்யுள்.

கூறுமோர்திசைக் கைந்து குரோசங்கொண்
டிறினன்கு திசையுமியம்பிடின்
மாறில்புண்ணிய மாத்தலமாயிடை
யூறிப்பல்கலை யோண்மதித்தோன்றலே,

இச்செய்யுள்களில் சேரனாட்டை யாண்டவரசர்களுள் கௌசலச்சேரன் என்பவனும் ஒருவன் எனவும், அவன் அங்குசத்துசச்சேரன் குமாரன் எனவும், இவர்கள் சந்திரகுலத்தவர்கள் எனவும், இவனால் பழநித்தலம் கௌசலாபுரம் என்றழைக்கப்பட்டதெனவும் கூறியுள்ளது. பழநித்தலம் சேரநாட்டி*லேயே யுள்

---

* சேரநாட்டின் எல்லை; வடக்கு:—கோழிக்கோடென்னுங் கள்ளிக்கோட்டை, மைசூர், தென்பெண்ணை நதி; கிழக்கு:—வங்காளக் குடாக்கடல், திரிசிரபுரம், பழனிமலை, திருநெல்வேலியின் மேற்றிசையிலுள்ள செங்கோட்டை, தென் காசி; தெற்கு :—கன்னியாகுமரி ; மேற்கு:—யவனக்கடல் (Arabian Sea). இவ்வெல்லைக்குட்பட்ட நாடானது "மகதநாடு, கொங்குநாடு, மலைநாடு" என மூன்றாகப் பிரியும். அவற்றுள் ; மகதநாடு :—தென் ஆற்காட்டையும், சேலத்தையுமுள்ளடக்கும்; கொங்குநாடு :—கோயம்புத்தூராகும் ; மலைநாடு:—மலையாளத்தின் தென் பகுதியையும், திருவாங்கூரையும் உள்ளடக்கும். இம்மூன்று நாட்டையும் சேரராஜாக்கள் ஆண்டமையினாலேயே "கொங்கன், கேரளன், மலையன்" என்னும் பெயர்களைக் குலப்பெயர்களாகப் பெற்றது. Vide, The Land of the Perumauls. Ch. I. P. 42. The manual of the Administration of the Madras. Presidency. Vol. I. P. 126, 127. The Kongu History. P. 2. The Mysore and Coorg. Vol. I. P. 197, Oriental Historical Manuscripts, Vol. II. Appendix D. P. 26.

ளது. இதனாலும் சேரர் சந்திரகுலத்தவர்கள் எனப்படும். சிலர்:— ஆஸ்பத்திரி கம்பவுண்டர்களைபோல், சூரியனை சந்திரனில் கலந்தும், சந்திரனை அக்கினியில்கலந்தும், மூன்றையும் ஒன்றாக்கி, சேரசோழ பாண்டியர்களை ஏககுலத்தவர்கள் என்கின்றார்கள், இந்தமுன்றை பூர்வநூலாசிரியர்கள் தெரிந்துக்கொண்டார்களில்லை, பாரதத்தில் * அக்கினி சூரியனிற் கலந்தானெனக் கூறியிருத்தலால் அக்கினிகுலமும் சூரியகுலமும் ஒன்றென்பர், அது காண்டவ வனத்தை அக்கிநி தகிக்கும்போது சூரியன் அதிதீட்சண்யமாய்க் காய்ந்தமையால், அக்கினியும் சூரியனும் ஒன்றாய்க்கலந்து கொளுத்தியதெனக் கூறியதேயன்றி வேறன்று, வீடு அனலால் தகிக்குங்காலத்து உலகவழக்கை யறிந்திருப்பாரேல் அப்பொருள்கொள்ளார். இன்னுஞ் சிலர் சேரனை யக்கினிகுலத்தவன் என்பர் அப்படிக்கூறுதலும் அறிவின்மையே!

நைடதம், போர்புரிப்படலம், 2-வது, செய்யுள்.

விரிகதிர்ப்பருதி முன்னர்வெண்மதி மழுங்குமல்லாற்
பரிதியுமதியுந் தோன்றிற்படரொளி மழுங்கலுண்டோ
வரசர்காணீர் வெய்யோனருங்குலத் துதித்துந்திங்கள்
மரபின்மன்னவர்க்கு நுங்கண்மாணெழில் மழுங்கினீரால்.

இப்பாவில் தமயந்தின் சுயம்வரத்தைக் காணும்பொருட்டு விதர்ப்பதேசம்,† வந்த அரசர்களை "சூரியசந்திரகுலம்" என்னு மிருகுலத்தி லடக்கியிருக்கின்றது. மேற்படி சுயம்வரத்திற்கு சேரனும் வந்ததாக சுயம்வரப்படலம், 159-வது பிரயோகத்தில் "கோழரையரம்பை சாய்க்குங் குடகுநா டாளும் வேந்தே" எனப் பிரகாசப்படுவதால், சேரன் அவ்விருகுலத்திலேயே யடங்குவன். அது சந்திரகுலம்‡ எனப்படும். சேரன் குடகுநாட்டை யாண்டமையால் "குடக்கோக் குட்டுவன் குடகன்." என்னும் பெயர்களைப்பெற்றனன்.

---

* பாரதம், ஆதிபர்வம், காண்டவதகனச் சருக்கம், 67—வது செய்யுள்

† விதர்ப்பதேசம்:— தற்காலம் "பீரார்" என்றழைக்கப்படுகின்றது. பீரார் ஐதராபாத்திற்கு வடக்கில், 73-மயில் தூரத்திலுள்ளது, பீமராஜனால் ஆளப்பட்டது.

‡ சேரனை சூரியகுலத்தவனெனவுங் கூறப்பட்டிருக்கின்றது. Vide, Mysore and Coorg, Vol. I. P. 197. On the Original Inhabitants of India or Bharatavarsa, P. 96, Salem District Manual. Ch. I. P. 17.

இதனாலும் சேரன் அக்கினி குலத்தவன் அல்லவெனத் துணியப்படும்.

" The first Kingdom mentioned by Hindu writers is that of Oudh, where two dynastirs, known as the races of the Sun and of the Moon, are supposed to have Originated." Vide. History of India; Ch. I. P. 8.

" இந்துசாஸ்திரிகள் அயோத்தியை முதல் இராஜ்யமாகக் கூறுகின்றனர்கள். அங்கிருந்து சூரியவம்ஸம், சந்திரவம்ஸம் என இருவம்ஸம் உதித்தது. இவைகளை பூர்வவம்ஸமாக எண்ணப்படுகின்றது.

" It is there that the Solar and Lunar races* have their origin and from thence the princes of all other countries are sprung." Vide. Garrett's History of India, Ch. V.P. 58.

"சூரியசந்திர வம்ஸமே முதன்மையானது அதிலிருந்தே எல்லா தேசத்தரசர்களும் உதித்தனர்கள்†" எனவும், கோல்புரூக் (Mr. Colebrooke) ஆசிரியரும் "சாகத்தீவிலிருந்து சம்புத்தீவிற்கு நுழைந்த க்ஷத்திரியர்கள் சூரியசந்திர வம்ஸத்தவர்கள்" என்கின்றனர். இப்பகுதிகளும் சூரிய சந்திரவம்ஸத்தோடு அக்கினி வம்ஸமும் அரசருக்குண்டெனத் தெரிவிக்கவில்லை, அதனால் அக்கினிகுலம் ஆரியவாசருக் கில்லையென்பது துணிபு,

" I venture to place the establishment in India proper of these two grant races, distinctively, called those of Surya and Chandra‡ at about 2256 Years before the Christian era". Vide. Tod's Rajasthan Vol. 1, Ch. III, P. 43.

இப்பகுதி இந்தியாவை யாண்டவரசர்கள் சூரியசந்திர குலத்தவர்களேயன்றி, வேறு குலத்தவர்கள் அல்லவெனப் படுகின்றது.

---

* Vide Tod's Rajasthan, Vol. I, Ch. I, II, III, and Table 1.

† வியாசபாகவதம், தஸமஸ்கந்தம் முதலத்தியாயம், முதற் சுலோகம்.

‡ Vide Pope's History of India, Ch. I, P. 35. இரகுவம்ஸ காவியம் 6-வது சருக்கம் 8, 9 வது சுலோகங்காண்க,

" The Kshatriya or Royal caste, is said to have emanated from Brahma's shoulders..................It is divided into two great divisions, The Solar race who came from Brahma's right Shoulder, and the Lunar race, who issued from his left " Vide. The Land of the Perumall, Ch. VII. P. 312.

'க்ஷத்திரியர் அல்லது அரசவம்ஸம் பிர்மாவின் தோளிலிருந்து உதித்ததாகச் சொல்லப்படுகின்றது. அது இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்பட்டு, சூரியவம்ஸம் பிர்மாவின் வலது புஜத்திலிருந்தும், சந்திரவம்ஸம் பிர்மாவின் இடது புஜத்திலிருந்தும் வந்ததாகக் கூறப்படுகின்றது."

" Shree Shookdeo jee said :—Raja ! listen with attention and I will now relate how raja joodisthur performed the sacrifice, and Sissoopal was slain, when the twenty thousand eight hundred rajas went there all the other rajas from the surrounding countries, and from every quarter, whether descendants of the Sun or descendants of the Moon, came also and were ready at Hustinapoor" Vide, Captain W. Holling's The Prem Sagur, Ch. LXXV, P. 231.

"ஸ்ரீமத் சுகருஷி சொல்லுகின்றார் :—அரசனே! கவனமாய்க் கேள். நான் இப்பொழுது தருமராஜன் அஸ்வமேதயாகஞ் செய்ததைச் சொல்லுகின்றேன். அந்த யாகத்திற்கு அஸ்திநாபுரியை சூழ்ந்திருக்கும் தேசத்திலும் திக்குகளிலும் இருந்து சூரிய சந்திர குலத்திலுதித்த இருபதினாயிரத்து எண்ணூறு அரசர்கள்வந்து நிறைந்து இருந்தார்கள்" என்பதாம். இப்பகுதிகளும் சூரிய சந்திர குலத்தைச்செப்பி, அக்கினிகுலம் இல்லையெனத் துப்பியதால் அக்கினிகுலத்தை அப்பாலொதுக்கினம்.

இலிங்கபுராணம், அனுக்கிரமணி, 19, 20-வது, செய்யுள்.

"விரித்தசெங்கதிரோன்செய்ய மரபினைவிரித்தவாறும்."
" மலர்கதிர்விரிக்குமந்தண் மதிமரபுரைத்தவாறும்",

கூர்மபுராணம், அனுக்கிரமணி 10, 12-வது, செய்யுள்.

" இருட்குறும் பெறியும்வெய்யோன் மரபினிதிசைத்தவாறும்".
" தெண்டிரை முகட்டிற்றோன்றுந் திங்கணன் மரபினுற்ற
வொண்டிறல் வேந்தர்தூய மரபினை யுறைத்தவாறும்".

முதலிய பதினெண்புராணங்களும் சூரியன் மரபுரைத்த வத்தியாயம், சந்திரன் மரபுரைத்த வத்தியாயம் என்னு மிருவத்தியாயத்தால் இருகுலமாகிய சூரிய சந்திர குலத்தை விளக்கி வேறு குலம் இல்லையென மறுப்பதால் சேரன் அவ்விரு குலத்திலேயே அடங்குவன்*. அது சந்திரகுலமெனச் சாற்றப்படும். ஆயின் வில்லிபாரதம் ஒன்றே சேரனை அக்கினிகுலத்தவன் எனக் கூறும் நூல். இந்நூல் ஏழாம் நூற்றாண்டின் மூற்பகுதியிலேற்பட்டது.

வில்லிபாரதம், பாயிரம், 22-வது கவி.

பிறந்துய்யக்கொண்டனிப் பேருலகம்பெருவாழ்வு கூருநாளி
னிறைந்தபுகழ்ச்சனிநகர்வாழ் வில்லிபுத்தூரனைநோக்கி நீயுநானும்
பிறந்ததிசைக்கிசைநிற்பப்பாரதமாம் பெருங்கதையைப் பெரியோர்தங்கள்
சிறந்தசெவிக்கமுதமெனத் தமிழ்மொழியின் விருத்தத்தாற்செய்கவென்றான்,

அருணகிரிநாத சுவாமிகள் புராணம்,
வில்லிபுத்தூராழ்வார் கலகச்சருக்கம், 7-வது செய்யுள்.

கொங்குமன்னவன் வேண்டலிற் குருகுலத்தினர்சீர்
பொங்குதீஞ்சுவைத்தமிழ்க் கவியான்மிகப் புகன்றோன்
றங்குசாருவ பூமனென்றொருபெயர் தரித்தோன்.
மங்குல்போற்கவி பொழியுமோர்துணைவனை வாய்த்தோன்.

இவ்விருபகுதியாலும் ஆட்கொண்டான் என்னுஞ் சேரன் வில்லிபுத்தூராரை பாரதம் பாடக்கேட்டுக்கொண்டதாக விளங்குகின்றது. அப்படிக்கேட்டுக்கொண்ட சேரனை சிறப்பிக்குமாறு பரமசிவத்தின் திரிநேத்திரங்களாகிய சோம சூரியாக்கினி என்னும் முச்சுடரை முக்குலமாகப் பாவித்து, அதில் சேரனை அக்கினிகுலத்தவன் எனக் கற்பனையலங்காரமாகச் செய்யப்பட்டதேயன்றி வேறன்று. அது இராமாயணம் பாடக்கேட்டுக்கொண்ட சடையப்பமுதலியாரை கம்பர் பலவிடத்தில் வருவித்து அரசருக்கொப்பாக சிறப்பித்திருத்தலைப்போலென்க. அதனால் முதலியார்

* Vide. Pope's History of India Ch. I, P. 35.

அரசராகுவரா ? இல்லை, அப்படிச் சேரன் அக்கினிகுலத்தவனு யிருப்பின் அவ்வில்லிபாரதத்திற்கு முதனூலாகிய வியாசபார்தம் விளம்பல்வேண்டும், அன்று அக்கினிகுலம் எனக் கூறிய தலைவா வில்லாதகதையை தடவியெடுத்த வில்லிபுத்தூரா ராவது, தாம் பாடிய பாரதத்தில் சூரியன் பரம்பரையையும், சந்திரன்பரம்பரையையும் விளக்கி, அவர்களாண்டவூரையும் தெரிவித்திருத்தலைப் போல், அக்கினிபரம்பரையையும் அவர்களாண்ட வூரையுந்தெரிவித்திருத்தல்வேண்டும், அவ்வக்னிகுலம் மணம்பெற, அதுவுமில்லை இவ்வில்லியைப்போல் பாரதம்பாடிய பெருந்தேவனார் பேசினரா? இல்லை, இன்னும் மற்றப்புராணங்களும் சூரிய சந்திர பரம்பரையை மறவாது பிரஸ்தாபித்து அக்கினி பரம்பரையை இல்லையெனத் துப்புகின்றது.' இதனால் சேரன் சந்திரகுலத்தவனேயன்றி, அக்கினி குலத்தவன் அல்லவென்பது நூன்முடிபு. அக்கினி குலத்தவர்களை நூற்கள் அன்னாரியர் யென்கின்றதுகள்*.

"If the origin of the Agnikulas throughout India can be eventually proved as Non-Aryan, a very important historical fact will have been ascertain." Vide On the Original Inhabitants of India or Bharatavarsha Ch. VI, P. 121.

"இந்தியாவில் பரவியிருக்கும் அக்கினிகுலத்தவர்கள் அன்னாரியவம்ஸத்தவர்கள் என்றே ருஜூப்படுத்தப்படும், இதைமுக்கியமான சரித்திரங்களால் ஸ்தாபிக்கப்படும்." இப்பகுதி அக்கினி குலத்தவர்களை ஆரிய க்ஷத்திரியரில் சேர்க்காது அன்னாரியர் என அப்பாலொதுக்குகின்றது. சேரன் சந்திரகுல குசநாபன் வம்ஸத்தவனுதலால் ஆரியன் ஆகுவன், அச்சேரன்தலையில் அக்கினிகுலத்தையேற்றி அன்னாரியராக்கப்பார்த்தல் அசம்பவமாகும், சம்பவக் கதையாபிருப்பின் புராணங்களில் வினியோகித்திருக்கும். இது நிற்க.

கடசிச் சேரனுகிய வஞ்சி பலராம வர்மனோடு சோழனும் பாண்டியனுங் கூடி, சாலி. 740-ம் வருடத்தில் சண்டை செய்து ஜெயித்து சேரனுட்டை தங்களுக்குள் பாகித்துக்கொண்டனர்

*' இன்னூல், 35, 36, 37-வது, பக்கங்களில் காண்க.

கள்*. இதோடு சேர ராஜ்யம் ஒழிந்தது. சேரனுடாகிய மலேயாளம் பிற்கு பாண்டியனுக்குட்பட்டு அவனுல் ஏற்படுத்தப்பட்ட ஓர் பிரதிநிதியால் ஆளப்பட்டு வந்து, அதற்குப்பிறகு தாமுத்திரி ராஜா வால் கைபற்றி பதினைந்தாம் நூற்றுண்டிலிருந்து, அவன் வம்ஸத்தவர்களால் ஆளப்பட்டு வந்தது. 1770-ம், வருடத்திலிருந்து பாலக்காட்டரசன் ஐதர் ஆலிக்குக் கப்பங்கட்டி வந்தான். அதுமுதல் சிறிது சிறிதாக அந்நாடு திப்பு சுல்தானுல் கைபற்றப்பட்டு பாழாக்கப்பட்டது. 1799-ம், வருடத்தில் அங்கிலேயர் வசமாயிற்று.

## கஉ. முடிவுரை.

இவ்வாரிய சூரிய சந்திர குலத்தி லுதித்த க்ஷத்திரியர்கள் மநுநீதி வண்ணம்நண்ணி இவ்விந்துதேசத்தை அரசாண்டுவருங்காலத்தில் கலியுகம் எதிர்ப்பட்டதால் அதன்கொடுமை மேலிட்டது.

இலிங்கபுராணம் கலியுகத்தியற்கைசொன்ன வத்தியாயம், 1-வது செய்யுள்.

கடையுகத்திற் றருமநிலேவேர்சாயப் பொய்மை கொடுங்களவுவஞ்ச
மடுகொலேமற் றிவைமுதலபாவங்கடழைத்திடலா லனிகள்பாட
மடலவிழுங்கமலத்தார்மறையவர்வார்கழல்வேந்தர் வணிகர்தொல்லே
யொடிவின்மறைநவில் கலாரொழுகாத நெறியதனிலொழுகுவாரே.

(இ - ள்.) நான்கு யுகத்தின் கடையுகமாகிய கலியுகத்தில் தர்மமானது ஒழிந்து, பொய் களவு வஞ்சனே கொலே முதலாகிய பாவங்கள் விசேஷப்படலால் பிர்ம க்ஷத்திரிய வைசியர் என்னும் மூவர்க்கங்களும் வேதத்திற்கூறிய பழமையாகிய குலாசாரங்களே விட்டு ஒழுகுவார்கள்," எனவும்,

The earth said, " O incarnation of justice! I also cannot remain in this age, because men of the Soodru Caste, having become Rajas, will inflict very many acts of injustice on me, the weight of which I shall not be able to endure." Vide. The Prem Sagur." Ch. I. P. 6.

" பூமிதேவி (பரிட்சித்து மகாராஜனே நோக்கி) சொன்னதாவது:—நீதியே ஒரு ருவமாயுடையவனே! நானும் இக்கலியுகத்

* Mysore and Coorg Vol. II. P. 17,277 ; Oriental Historical Manuscripts. Vol. II, P. 62.

தில் வசியேன். சூத்திரர்கள் அரசராகி அநீதியை அனுசரிப்பார்கள், அது என்னால் தாங்கமுடியாது" என பாகவதத்தில் கூறிய தாக அதன் டிரான்ஸ்லேடர் தெரிவிக்கின்றார். இப்பகுதிகளுக்கிணங்க கலியின்கொடுமை ஆரிய வர்த்தத்தையாண்ட க்ஷத்திரியர்களை யண்டினமையால் திராவிடராலும், யவனராலும், பீடிக்கப்பட்டு அவர்கள் கையில் அரசை ஒப்புவித்தனர். அதுபோல் இச்சென்னை இராஜதானியின் பெரும்பாகமாகிய திராவிடதேசத்தையாண்ட **சூரியகுல கிராமணி வம்ஸத்தவர்களாகிய சோழ ஈழ ராஜாக்களும்** அரசை பிறர்கையில் ஒப்புவித்தனர்கள். அரசொழிந்தமையால்,

"மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க்கொளி". (திருக்குறள்)

(இ-ள்). "அரசருக்குச் செங்கோன்மையே புகழாம், அக்தில்லாவிடில் அப்புகழுண்டாவாம்" என்பதையொத்து அவர்களடையவேண்டிய புகழ்களெல்லாம் அடங்கி, வடுகராலும் துலுக்கராலும் ஒடுங்கினமையால் அவர்களது அறிவுங், சீலாச்சாரமும் நெகிழ நேரிட்டது.

சங்கலிகித ஸ்மிருதி, 2-வது, சுலோகம்.

ஒவெஸ்வஷெவெ நயெஷீ நாகூகிஷெ நவிவஜீ-ட்தா ஃ।
ஷவெ-ிெதவ்ரஷ்ஷாஜெஞயா ஃ வ்ராதூவெஷாகூவிமிஜா ஃ॥

(இ-ள்). "பிராமணர்கள் வேதமோதினவர்களாக விருந்தாலும், அவர்கட்குள் எவர்கள் வைச்வதேவமும், அதிதி பூசையும், செய்யாதவர்களோ அவர்களெல்லொரும் சூத்திரர்களென்று அறியத்தக்கவர்கள்" எனவும்*.

"மறப்பினுமோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்." (திருக்குறள்)

(இ-ள்.) "பார்ப்பான் வேதத்தைமறந்தாலும் கற்கலாம், குல ஒழுக்கங் குறைந்தால் இழியகுலனுவான்" என்பதுகளுக்கிணங்க இவ்வரசகுலத்தவர்களாகிய கிராமணிகள் அடையவேண்டிய

* ஜந்நாஜாயதெ ஶூத்ர ஃ கூஷ்ணாஜாயதெ த்விஜ ஃ

குலவொழுக்கங்களோடு, கல்வி ஆள்வினை பொருள் தவம் என்னும் நான்கும் குலமேன்மைக் குறியனவாகினும் இராஜாங்க மாறுதலடைந்தகாலத்தில் இச் சூரியகுலகிராமணிகளை விட்டகன்றமையால் தாழ்ந்தவர்களைப்போல் தோற்றப்பட்டனர்.

பாரதம், ஆரணியபருவம், மார்க்கண்டர் கதையுரைத்த சருக்கம், 153-வது, செய்யுள்.

உண்டிவிற்பர்மறை யோர்மறைவிற்ப
ரோதுகற்புடைமைமீதிவிடுத்தே ;
கொண்டலொத்த குழன்மங்கையர்வேறோர்
கொழுனனுக்கு முலைவிற்பர் குலஞ்சேர்
தெண்டிரைக் கதிபராகிய மன்னர்
தேயமெங்குமுழல்வார் நிலைகெட்டே
மிண்டுரைத்தகுல வீனர்கள் போரில்,
வெற்றிகொண்டு விசயம் புனைவாரே,

(இ - ள்) "வேதியர் வேதத்தையும், தின்பண்டங்களையும் விற்பர், பெண்கள் பரபுருஷரை இச்சிப்பர், அரசர்கள் அவர்களது நிலைகெட்டு உழல்வர், ஈனர்கள் வெற்றியையடைவர், என்பதாம் இப்பாசுரத்திற் கூறியவாறு இச்சான்றான்குலக் கிராமணிகள் இகலரசரால் இடுக்கணடைந்து இழிந்த தொழில்களைப் புரிந்துழல லாயினர். இது கலியுகத்தியற்கை.

ஷை சருக்கம், 145-வது செய்யுள்.

வேதமோதனியமஞ் செபமோமம்
வேதவித்தகர் விடுப்பவர்பின்னோர்
காதலாலிவைசெலுத்துவர் மன்னர்
கவினுந்தேசு மொழுக்கங்களுமற்றே
யேதிலாரெனவியங்குவர் நன்னீ
ரின்பனல்குபல பண்டமனைத்தும்
போதனல்லுரிசை பொய்க்குமரங்கள்
பூத்தல்காய்த்தல் சிறிதேபலனுமே.

(இ - ள்.) "வேதம் ஓதல் நியமம் ஜெபம் ஓமம் இவைகளை வேதியர் விடுப்பர், சூத்திரர்கள் இவைகளை அன்போடு

புரிவர்; அரசர்கள் தங்களது அழகு பிரகாசம் ஒழுக்கம் இவைகளற்று யாரோ எவர்களோ வென (கலியுகத்தில்) கூற விளங்குவர்; தின்பண்டங்கள் ருசியற்றும், மரங்களின் பலன்கள் குறைந்தும் விளங்கும்.'' சாமம், யஜசு, இருக்கு இவ்வேதங்களினுடைய பயனை அடைவதற்குக் காரணமாகிய வருணாசிரம ஒழுக்கங்களையுடைய நடை கலியுகத்தில் மனிதருக்குள் இல்லாமல் ஒழியும் என விஷ்ணுபுராணத்திலுங் கூறப்பட்டிருக்கின்றது.

மநுஸ்மிருதி, 10–வது, அத்தியாயம் 43-வது, சுலோகம்.

ஶநகைஸ்து க்ரியாலோபாதிமா꞉ க்ஷத்ரியஜாதய꞉।
வ்ருஷலத்வம் கதா லோகே ப்ராஹ்மணாதர்ஶநேந ச॥

(இ–ள்.) "பிராமணனிடத்தில் வணங்காமையாலும், உபநயன முதலிய கர்மலோபத்தினாலும், மேற்சொல்லும் க்ஷத்திரிய ஜாதிகள் இவ்வுலகத்தில் வரவர சூத்திரத்தன்மையை யடைந்தார்கள்."

மநுஸ்மிருதி, 10-வது, அத்தியாயம், 44-வது, சுலோகம்.

பௌண்ட்ரகாஶ்சௌட்ரத்ரவிடா꞉ காம்போஜா யவநா꞉ ஶகா꞉।
பாரதா꞉ பஹ்லவாஶ்சீநா꞉ கிராதா தரதா꞉ கஶா꞉॥

(இ-ள்.) "பௌண்டரம், ஔண்டரம், திராவிடம்* போஜம் பாரதம் முதலிய தேசங்களை யாண்டவர்கள் அனைவரும் மேற்சொன்னபடி சூத்திரர்களாய் விட்டார்கள்" எனப்பட்டிருக்கின்றது. இதன் மொழிபெயர்ப்பு.

" Manu says the same thing (Vide verses. 44. and 45. Chapter. 10) Poundrakas, Odhras **Dravidas** &c. were the members of the first two classes. **But by neglect of their duties in the performance of the holy rites** and in seeing the Brahmans have become degarded." Vide. "The Ancient History of India". Part. II, Ch. VII. P. 113.

" **In the Kalee-yooga, the vaisyas like the Kshatriyas are said to have fallen to a level with the Soodras.**" Vide. Ward's. Account of the Hindoos Vol. III. P. 66.

* வியாச பாரதம், சபாபர்வம், 96-வது, அத்தியாயங் காண்க.

“கலியுகத்தில் வைசியர்கள் க்ஷத்திரியர்களைப்போல் சூத்திரர் களை யொத்திருக்கின்றார்கள்” என்னும் பகுதியின்பிரகாரம் க்ஷத்திரி யர்கள் (கலியில்) சூத்திரத்தன்மை யடைந்தார்கள் அதிலும் திரா விட அரசர்களாகிய சேர சோழ பாண்டிய ஈழ தொண்ட ராஜாக்கள் சூத்திரராய் விட்டார்கள் என மநு கூறுகின்றார் இதை பின்பற்றியே பாரதநூலாசிரியரும் “மன்னர் கவினுந்தேசு மோழுக்கங்களு மற்றே யேதிலாரென விளங்குவர்” என்றது. “மன் னர்=அரசர், கவினும்=அழகும், தேசும்=பிரகாசமும், ஒழுக் கங்களும்=குலாச்சாரங்களும், அற்று=நீங்கி, ஏதிலாரென=அய லார் என்று சொல்லும்படியாக, விளங்குவர்=வசிப்பர்” எனப் பொருள்படும். அரசரது குலவொழுக்கங்கள் “ஓதலே வேட்ட லீதல் உலகோம்பல் படைபயிற்றல், மேதகுபோர்செய்தீட்டல் வேந்தர்செய் தொழிற்களாறும்.” என்னு நிகண்டால் நிலைப் படும், இக்குலவொழுக்கங்கள் அற்றே அரசர்கள் சூத்திரத்தன் மை யடைந்தது, இதுகாலவன்மையே*. காலமானது தண்டத் தை யோங்கி யார்தலையையும் உடைப்பதில்லை, காரியங்களைமா றாகக் காண்பிப்பதுதான் காலத்தின்வன்மை, அதாவது இஷ் டங்கள் அனிஷ்டமாயும், அனிஷ்டங்கள் இஷ்டமாயும், சுகம் துக்கமாயும், துக்கம் சுகமாயும் பிராணிகளிடம் மாறிக்கொண் டுவரும். இதையொத்தே “சாக்ஷிகுலக் கிராமணிகள்” பிற அரசரின் இடுக்கணால் அழகும், பிரகாசமும்,ஒழுக்கங்களும் அற்று ஏதிலரைப்போல் இழிந்ததொழில்களை ஜீவனார்த்தத்தின் பொரு ட்டு புரிந்துவருகின்றமையால் கிராமணிகளை க்ஷத்திரியர் என்பதற் குச் சந்தேகப்படுகின்றனர்.

மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 95-வது சுலோகம்.

ஜீவெதெ௳தநாஜநூஸ்வெ௩ணாவுநயம்ஐத:।
நவெகுவஜ்யாயவீம்வூத்திஹிதெநூதக்ஷ௩விது॥

(இ-ள்.) “க்ஷத்திரியன் சுவசாதி விருத்தியினாலும், பிராமண ருக்கு விதித்த வைசியவிருத்தியினாலும் பிழைக்கக்கூடாதபோது, இரசம் முதலான வியாபாரஞ்செய்தாவது பிழைக்கலாம்” எனவும்

* வான்மீகிராமாயணம், சுந்தரகாண்டம், 116-வது சருக்கம், 3-வது சுலோகம்.

“க்ஷத்திரியன் தனக்குக் கீழ்ப்பட்ட இழிந்த தொழில்களைப்புரிவது ஆபத்து தருமம்” எனவும் மநு கூறுகின்றார். “அவ்வித ஆபத்துக்காலத்தில் வேதியன் முதலிய நான்கு வருணத்தாருக்கும் முறையே விதிக்கப்பட்ட இன்றியமையாத சீவனத்தொழில்களாகிய வேட்பித்தல், உலகோம்பல், உழவு பசுக்காத்தல், இருபிறப்பாளர்பணி முதலிய தொழில்கள் ஆபத்துக்காலத்தில் ஒருவன்றொழில் ஒருவனுக்குமாக மாறுதலுண்டு, அந்த ஆபத்து ஒழிந்தபின்பு, வேறுபாட்டினை யொழித்துவிட்டு,முறைபோலத் தத்தந்தொழிலில் முயலவேண்டுவதே வழக்கு. அவ்வாறின்றி, ஆபத்தொழிந்தபின்பும், அந்த வேற்றுக்கருமத்தை விடாவிட்டால் அவன் மகன் பேரன் முதலிய பரம்பரையாரும் அந்த அந்நியத்தொழிலை விடமாட்டார்கள். ஐந்தாறு தலைமுறையிற் பிறந்த சந்ததிகள் அந்த விருத்திக்குத்தக்க சாதியோடு ஒத்த சாதியாகும்” என்றார் யாஞ்ஞவல்கியர். “எந்தபிராமணன் வேதம் ஓதாமலே வேறு வகையால் பயிற்சி செய்கிறானோ? அவன் தன் மரபோடு பிழைத்திருக்கும்போதே, சூத்திரத்தன்மையை அடைகிறான்” என்றார்கள் மநுவும், கௌதமரும்; இதைப்போல் எந்த க்ஷத்திரியன் படைப்பயிற்சியின்றி வேறு தொழிலைச் செய்கிறானோ அவனும் சூத்திரனாகுவானென உபலக்கணவிதியால் கொள்ளப்படும். இத்யாதி விதிகளை யொத்தும், இகலரசர் இடுக்கணாலும் கிராமணி குலத்தவர்களுக்கு இழிந்த தொழில்கள் ஏற்பட்டது. இத்தொழில்கள் அக்கிராமணி குலத்தவர்களுக்குக் குலதர்மம் அல்ல. “படைத்தொழிலே” அவர்களுக்குக் “குலதர்மம்” என உபமன்னியரும், சேக்கிழாரும்வற்புறுத்தலால்; தற்காலம் ஜீவனார்த்தத்தின்பொருட்டு புரியுந்தொழில்கள் ஆபத்துத்தருமம் எனப்படும்.

“Darker days then followed on the loss of Independence. **Kshatriyas** and vaisyas were equally **prostrated**. The bold myth was then proclaimed that all who were not Brahmans were Sudras”.* Vide. “Ancient India” by Romesh Chunder Dutt. Book V. Ch. XV.

“ஆரியவரசர்கள் தங்களது சுதந்தரத்தை இழந்ததும் தாழ்வை யடைந்தார்கள். அதனால் பிராமணர்கள் அல்லாதவர்களெல்

* Vide. “Essay on Hindu caste”. Ch. I.P. 5. and “The History of India” by Talbays Wheeler. Ch. II.

லாம் சூத்திரர்கள் எனத் தைரியமாகச் சொல்லப்பட்டது". அப்படி க்ஷத்திரியர் ஜீரணமானுர்களென்னும் பொய்யானது, ஆரிய க்ஷத்திரியருடைய வல்லமைகுன்றி, மகமதியர் சூத்திரர்* இவர்கள் அரசாட்சி ஸ்தாபிக்கப்பட்ட 10-வது, 11-வது. நூற்றுண்டுக்குப்பின்னல் தான்சொல்ல ஆரம்பித்தார்கள் என்பதாக "ரோமஷ்சந்ரடற்று" தாமியற்றிய "பூர்வ இந்தியா" என்னும் புத்தகத்தில் புகன்றிருக்கின்றூர். அப்படிக்கூற ஆரம்பித்தது இகலரசர்களுக்குமுன் ஆரிய க்ஷத்திரியர்கள் தங்களது சுதந்தரத்தை யிழந்து தாழ்த்தப்பட்டார்கள், அப்படி தாழ்த்தப்பட்டமையால், ஆரிய க்ஷத்திரியர் அருகிவிட்டார்கள் என்னும் பொய்யை பார்ப்பாரால் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டது, "கலியில் எக்குலத்தவனுறைலும் பலவானெவனே அவனே யாவர்க்கும் மரசனுவான், எவன் விசேஷமாய்ப் பொருள்கொடுப்பானே அவனையே ஜனங்கள் சுவாமியென்று கொள்ளுவார்களேயன்றி நற்குலப்பிறப்பைக் கொள்ளமாட்டார்கள்" என விஷ்ணுபுராணம், ஆறுமம்ஸத்தில் கூறப்பட்டிருக்கின்றது. பார்ப்பார் எக்காலத்திலும் வேஷக்காரர்கள், அவர்கள் முகஸ்துதிபேசி வயறுவளர்க்கக்கூடியவர்கள்† ஆரிய அரசர்கள் அரசாட்சிகாலத்தில் அவர்களை தேவர்கள் ஆக்கி வணங்கி வயறுவளர்த்தார்கள், அவர்கள் அரசாட்சி அழிந்தபின்பு அருகிவிட்டார்கள் எனப் பொய்யைப்புனைந்து "பார்ப்பார் அல்லாதவர்கள் யெல்லாம் சூத்திரர்கள்" எனச்சொல்லி அங்கிலேயரை வஞ்சித்துவருகின்றூர்கள்.

"In 1303, A. D. to prevent their falling into the hands of the Mahammadans, the beautiful Queen Padmani (of Oodeypore) and thousand of Rajput women were shut up in caves till they perished after which the

* Vide. P. 146. Ch. XI. of "A Brief History of The Indian people" by W. W. Hunter ; P. 27, 31, 38 of The Native states of India and their Princes; P. 4. 42, 93. 164, 179, 210. Ch. V. of History of India by Pope ; P. 66. No. 37. Vol. XVI. of Madras Journal. 1850; The Indian Companion or General Statistics of India P. 565, 568, 594. Oriental Historical Maniscripts. Vol, II. P. 57.

† Vide. Ch. II. of "The History of India" by Talboys Wheeler.

warriors rushed out and died fighting*. Vide. "The Native states of India and their Princes. P. 14.

1303-ம், வருடத்தில் மகமதியரின் கையில் சிக்கிக்கொள்ளு தலைதடுக்கும்பொருட்டு உடைப்பூர் அரசியாகிய பத்மினியையும், இன்னும் ஆயிரம் அரசஸ்திரிகளையும் அழியும்பரியந்தம் குகையில்போட்டு மூடிவிட்டு, பிறகு அரசர்கள் அதாவது யுத்தவீரர்கள் யுத்தத்தில்மாண்டார்கள் எனப்பட்டிருக்கின்றது, உடைப்பூர் என்பது இராஜஸ்தானத்திலுள்ள ஓர் பகுதி.

"On hearing this, Tippoo said, Are there any more of the family?" Mir Khasim the commandant of the fort replied, "There are Sidda Ramapa, his two sons, and two grand sons, and some ladies, and some sons-in-law, and others". On hearing all this Tippoo Sultan replied, "as soon as you return to Anantapuram, hang up all the elder sons and sons-in-law and send the rest of the people to my presence in Siringapatam"......... ........."According to these orders, he hanged up on hooks......... ........Thus the family here was ruined". Vide "The Wars of the Rajas". Ch. VIII. P. 73.

"அநந்தபுரத்து ஆந்திர அரசவம்ஸத்தவர்களையெல்லாம் தூக்கிடும்படியாக திப்புசுல்தான் ஆக்கியாபிக்க, அதன்பிரகாரம் அவன் சேனாதிபதியாகிய மியர்காசீம் சிலரை தூக்கிவிட்டு, மற்றவர்களை சீரங்கபட்டணம் அனுப்பினான்."

"They said, If we cut off their hands and feet, it will spread our fame greatly. Accordingly Niamatkhan and Fattih Sahib, caused the hands and feet of all their prisoners†. to be cut off‡" Vide. "Wars of the Rajas" Ch. VIII, P. 78.

---

* Vide. P. 66. Ch. II. of The History of India by Pope.

† Vide. P. 24. Ch. XLIV. Part. II. of "The Mahavansa. by Wijesinha.

‡ Vide. P. 53, 56, 66, 72, 105. of History of India by Pope. P. 100 Letters. X. of The Letters to Indian youth. P. 21. Ch. 1. of Chingalput District Manual. P. 228. Vol. I. and P. 272. Vol. II. of Mysore and Coorg. P. 100. Vol. II, of Oriental Historical Manuscripts P. 9. Vol. I. Orme's History of Industan, The Indian Companion or General Statistics of India. P. 1261.

"நாம் அவர்களது கைகளையும் கால்களையும் வெட்டிவிட்டால், நமக்குக் கீர்த்தியுண்டாகும் என்றுசொல்லி அதன் பிரகாரம் நய்யாமித்கானும் பிட்டாசாயபும் கைதிகளின் கால்களையும் கைகளையும் வெட்டிவிட்டார்கள்" "உடைப்பூர், ஆந்திர" அரசர்கள் மேற்கூறிய பிரகாரம் மகமதியர்களால் ஒடுக்கப்பட்டு, இக்கதியிலிருக்கும்போது, இவ்வாந்திர வரசர்களுக்கு முன்னரசர்களாகிய சோழக்குலக்கிராமணிகள் கதி என்னயிருக்கும்? அவர்கள் அரசர்களென முன்வரின் என்னகும்? எங்கனமெனின் இத்திராவிட தேசத்தின் தமிழரசர்களின்* ஆளுகை ஆந்திர வரசர்களின் ஆளுகைமேலிட்டதனல் குறைந்தும், ஆந்திர வரசர்களின் ஆளுகை மகமதிய வரசர்களின் ஆளுகை மேலிட்டதனல் குறைந்தும், மகமதிய அரசர்களின் ஆளுகை அங்கிலேயவரசர்களின் ஆளுகைமேலிட்டதனல் குறைந்தும், நாளுக்குநாள் பலமாறுதல்கள் அடைந்து தங்கள் முன்னேர்களின் நடையுடைபாவனைகளை முற்றும் மறக்கநேரிட்டது, "அரசிழந்த ராஜாக்கள் உடுத்துக்கிழிந்த துணியைப்போலும், அணிந்துவாடிய மலர்மாலையைப்போலும், அரசிழந்த வேந்தன் திறமையற்றவனே!" என்றார் வான்மீகரும்.†

பகவத்கீதை, 1-வது, அத்தியாயம், 40-வது, சுலோகம்.

𑌕𑌲𑌕𑍍𑌷𑌯𑍇𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌕𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌃𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌃 ।
𑌧𑌰𑍍𑌮𑍇𑌨𑌷𑍍𑌟𑍇𑌕𑌲𑌂𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑌉𑌤 ॥

குலக்ஷயேப்ரணஸ்யந்திகுலதர்மாஸ்ஸநாதநா ஃ
தர்மேநஷ்டேகுலம்க்ருத்ஸ்நமதர்மோபிபவத்யுத ஃ

(இ-ள்.) குலக்ஷயே=குலநாசமானது, ஸ்தி=உண்டாகுங்கால், ஸநாதநா=அநாதியாயிருக்கிற, குலதர்மா=குலாச்சாரங்கள், ப்ரண்ஸ்யந்தி=முற்றிலும் நாசமடையும், தர்மேநஷ்டே=ஆசாரம் நசித்தால், க்ருத்ஸ்நம்குலம்=குலமுழுமையையும், அதர்ம:=ஆனசாரமானது, அபிபவதி=வியாபிக்கும் என்பதற்கிணங்க இச்

* தமிழ் அரசர்கள் = சேரசோழபாண்டிய ஈழதொண்ட ராஜாக்கள்.

† வான்மீகிராமாயணம், ஆரணியகாண்டம், 33-வது சருக்கம் காண்க.

சூரியகுல கிராமணிகளது குலதர்மங்கள் * ஒதுங்கின. உலகசரித்திரங்களைப்படித்தவர்களுக்கு இது ஒருநூதனமல்ல: தமிழ் அரசுக்குப்பிந்தி 250-வருடங்களுக்குமுன் அரசாண்டவடுகருடைய நிலமையையும் 100வருடங்களுக்குமுன் அரசாண்ட மகமதியருடைய நிலமையையும் கவனித்தால் மயக்கத்திற் கிடந்தராது.

"Then a number of bad people collected in Paris and they put the King and queen and all their family in prison, and they cut off the heads of the King and queen and the King's sister and of a great many lords, ladies". Vide. "Little Arthur's History of England by Lady call coott. Ch. LVII. P. 248.

"பாரிசிலுள்ள கொலைபாதகர்கள், 1792-ம், வருடத்தில் ஒன்றுசேர்ந்து அரசனையும், அரசியையும் அவர்கள் வம்ஸத்தவர்களையும் கைதுசெய்ததோடு, அவர்களின் தலைகளையும் கொய்தெரிந்தனர்கள்."

"Edmund Ironsides, was a brave and wise prince and was made King after his father; but I am sorry to tell you that he was Killed in a very short time, and then the Danes drove all the princes of England away, and made one of their own princes King of England., The princes of Alfred family were forced to go into foreign countries; some went to a part of France called Mormandy, and some to a very distant country indeed called, Hungary".† Vide. Little Arthur's History of England. Ch. XII. P. 38.

"எட்மன்யிரான் சையிட் என்னும் அரசன் நீதியும் தைரியமுமுள்ளவரசன். இவனை அதிசீக்கிரம் கொல்லப்பட்டு, இங்கிலாந்து

* கிராமணிகளது குலதர்மம் படையயிற்றலே இது க்ஷத்திரியதர்மம், உபமன்னிய பக்தவிலாசம். ஏனாதிநாதர் சரித்திரம் 3, 4, 6 - வது, சுலோகங்களையும், பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம், 3, 5, 7, 9, 12 13-வது, பாடல்களையுங் காண்க.

† Vide. P. 41. Ch. XIII. of Little Arthur's History of England.

ப்த்தாம் நூற்றாண்டின் கடசியில் டேன்ஸ் (Danes) சாதியா ரால், பிடிக்கப்பட்டு, தங்கள் வம்ஸத்து அரசன் ஒருவனை இங்கி லாந்திற்கு அரசனுக நியமிக்கப்பட்டு, இங்கிலாந்து அரசவம்ஸத் தவர்களை ஊரைவிட்டுத் துரத்தப்பட்டது.” சிறைப்பட்ட அர சர்களை சிரச்சேதஞ்செய்தும், கொளுத்தியும் அழிக்கப்பட்டது*. பதினும் நூற்றாண்டில் ஸ்காச்சாதியார் இங்கிலாந்தைப்பிடித்து, அவ்வங்கிலேய கோயில்களையும், லார்டுகளையும் கொலைசெய்ய சூழ்ச்சிசெய்யப்பட்டது.† அங்கிலேயர் பதினோராம் நூற்றாண் டின் மத்தியில் சென்லாக் (Senlac) என்ற இடத்தில் நார்மன்னிய ருடன் யுத்தஞ்செய்து தோற்றுவசப்பட்டபின் அவர்களும் அவர் கள் பாஷையும் ஈனமடைந்து சுமார் 300-வருடத்திற்குள் “நானும் அங்கிலேயன் என்று நினைத்தாயா” என்பதாய் நார்மன்னியர் சபதஞ்செய்யும்படி யாயிற்றே! இவைகளை யுற்றுயோசிக்கில் அரசகுலத்தவர்களுக்கு பிற அரசர்களால் இடுக்கண்வருதல் சகஜ மென வறியலாம். இராஜாங்கமாறுதல்காலத்தில் ஏற்படும் எவ் வித இடுக்கணும் அரசகுலத்தவரையே பொருத்தது. இது சர்வசரித்திர சம்மதம்.

Bishop Caldwell says, inhis Comparative Grammar, “In a civilized age, the conquerors may be content with governing and taxing the conquered; but in a ruder age, and especially in a tropical climate, where labour is distasteful, the vanquished are ordinarily reduced to the condition of slaves”.‡

“இந்நாகரீககாலத்தில் வென்றோன் வெல்லப்பட்டவனிட மிருந்து வரும் வரியாலும், ஆளுதலாலும் திர்ப்தியடைவார்கள். ஆனல் அநாகரீககாலத்தில் அதாவது மகமதியர்காலத்தில், சாதா ரணமாக உஷ்ணமுள்ளதேசத்தில் வழக்கப்படி வெல்லப்பட்ட வர

* Vide, P. 84, 87, 96, 107, 117. } Little Arthur's History of England.
† Vide. P. 190. Ch. XLVII.

‡ Vide. P. III. to 115. under. “Captive. and Captivity” of Biblical Cyclopadia or Biblical Dictionary by John Eadie D. D. L. L. D.

சர்களுக்கு அருவருப்பான வேலையைக்கொடுத்து, அடிமை அந்தஸ்துக்குத் தாழ்த்தப்பட்டார்கள்." என்றார் பிஷப் கர்ல்வெல்துரை, இப்பகுதியின் பிரகாரம் சூரியக்குலக் கிராமணிகள் இழிவுபடுத்தப்பட்டு, ஈனத்தொழிலை கையாளச் செய்யப்பட்டது, இது அநாகரீகமுன்ற.

"It is customary with the Kavaries as with other Naikans to wear the sacred thread. But I am informed the descendants of the Naikan Kings, who are now living at Vellie Kuriechi do not conform to this usage on the ground that they are at presant in a state of impurity and to degardation, and consquently ought not to wear the sacred emblem." Vide. Nelson's Madura District Manual. Part. II. P. 86.

"வடுக வரசர்கள் பூணூல்தரிப்பது வழக்கம், ஆனால் வெள்ளிக்குரிச்சியில் வாசஞ்செய்யும் வடுகநாய்க்க வம்ஸத்தவர்கள், தங்கள் அரசாட்சியை இழந்துவிட்டகாரணத்தால், இராஜகுலமகிமையற்றோராய், ஈனப்பட்டுப்போனதி நிமித்தம் இக்காலத்தில் பூணூல் தரியாது வருகின்றார்கள் என்று அறிந்துக்கொள்ளலாயினேன்." என்றார் "நெல்சன்" துரை. தாமியற்றிய மதுரைசரித்திரத்தில். வடுகு குலப்பார்ப்பாரும், வடுகுகுலச் செட்டிகளும் பூணூல்தரித்துவர; வடுகுகுலவரசர்கள் மாத்திரம் பகைஞரது துன்பமேற்று குலாச்சாரத்தைவிட்டொழுக நேரிட்டது. இதைப்போல் சோழ ஈழவம்ஸத்திலுதித்த தமிழ் அரசர்களாகிய கிராமணிகளும் வடுகு மகமதியர்களால் பீடிக்கப்பட்டு, குலாச்சாரத்தைவிட்டொழுக நேரிட்டது.

"In spite of the abilities they exhibit when suitably employed, and in spite of the reputation of their ancestors which has survived to this day, the descendants of the ancient rulers of the land have now lost nearly everything and are reduced to the most abject condition". Vide, On the Original Inhabitants of India or Bharatavarsha. Ch. IV. P, 75.

*Vide. Oriental Historical Manscripts. Vol. II, P. 47, 49.

"பூர்வீக அரசர்கள் அவ்வளவு கீர்த்தியுள்ளவர்களாயிருந்த போதிலும், அவர்கள் தற்காலம் அவர்களுக்குரிய வெல்லா அங்கங்களும் தோற்கப்பட்டு, தாழ்த்தப்பட்டிருக்கின்றார்கள்" என்றார் ஒபர்ட்துரை, இதற்கிணங்க இச்சோழக்குலக் கிராமணிகள் தாழ்வு பட்டுப் போயினர்.

யூதகுலத்தவர்கள் நானூறு வருடகாலம் எகிபதியரால் என்ன பாடுபட்டார்களோ, அதைப்போல் இச்சூரியகுலக் கிராமணிகள் வடுகு மகமதியரால் பட்டனுபவித்து தாழ்ந்த ஸ்திதியை யடைந்தார்கள். இத்திராவிட தேசத்தில் நான்கு வகுப்பான குலத்துள் தமிழ்ப்பார்ப்பாரும், தமிழ்ச்செட்டிகளும், தமிழ்ச் சூத்திரரும் ஆகிய மூன்று வகுப்பிருக்க, மற்ற ஒருவகுப்பினராகிய அரசர்க்ள் என்னுயினர். அவர்கள் அரசிலாது பிறதொழிலைப் புரியினும் அரசகுல அபிதானத்தை யடைந்தேயிருப்பர். அத்தகையோரை அரசகுலத்தவர் எனக்கூறுதலே அறிவுடையோர்க்கழகு. இதுவே சாஸ்திர சம்மதி. இகலரசர்கள் இராஜ்யத்தையும், குலத்தொழிலை யுந்தான் பிடுங்கிக்கொள்ளுவார்களேயன்றி, குலப்பெயரை பிடுங்கிக்கொள்ளுதற்கு அவர்களால் ஏலாது. அதனாலேயே இச் க்ஷத்திரியர்களது சாதிப்பெயர்கள் இவர்களைவிட்டு ஒதுங்கவில்லை. "சாக்ஷிகுலம், சான்றான்குலம், சான்றேன்குலம், சூரியகுலம்" என்னுமரசகுலப் பெயரையும், கிராமணி, இராஜா" என்னு மரசகுலப் பட்டத்தையும் இக் கிராமணி குலத்தவர்கள் பொருந்தப் பெற்றிருத்தலால் க்ஷத்திரிய குலத்தவர்கள் என்பதே நூன்முடிபு.

இதையறியார் இக்கிராமணிகளை வேறுகுலத்தவர்கள் எனக் கூறுவர், இக்கிராமணிகள் க்ஷத்திரியர் அல்லாது வேறு குலத்தவராயிருப்பின் அக்குலத்திற்குரியதென திவாகரநிகண்டார் வெளிப்படுத்தும் சாதிப்பெயர்களுள் ஏதாவதொன்றை அடைந்தேயிருப்பர், "முதலி வாணியன் அமட்டன் பறையன்" என்னுந் திவாகர நிகண்டிற்குப் பிற்பட்டப் பெயர்களை சாதிப்பெயராகவைத்து வழங்குங் குலத்தவரும் "வேளாளர் செக்கார் நாவிதன் புலையர்" என்னும் பெயரையும் பெற்று திவாகரநிகண்டிற் குட்பட்டே யிருக்கின்றனர்கள், "பார்ப்பார், செட்டி, தட்டார், தச்சர், கைக்கோள்வர் குயவன் வண்ணார்" என்பவர்களுந் திவாகரநிகண்டிற் குட்பட்டவர்களே! இதைப்போல் கிராமணிகள் பிறரால் கூறப்

படும் சாதியாயிருப்பின் திவாகரநிகண்டிற் கூறும் அச்சாதிக்குரிய குலப்பெயரை விட்டொதுங்கார், அச்சாதியைச்சார்ந்தவரா யில்லாமையினாலேயே, கிராமணிகள் க்ஷத்திரியசாதிப் பெயர்களையன்றி, பிறசாதிப்பெயர்களை பெறுதற்கு இடமில்லை என்பது துணிபு, மநு தருமசாஸ்திரம், 9-வது, அத்தியாயம், 317-வது, சுலோகத்தின்படி மூடனாயிருக்கிற பிராமணன் தன் சாதித்தன்மைக்குறைந்து சூத்திரனாகாமல் பிராமணனாயிருப்பதுபோல், க்ஷத்திரியன் தன் உபநயனம் முதலிய கர்மலோபத்தினாலும், காலபேதத்தினாலுங் குறைந்திருந்தபோதிலும் க்ஷத்திரியர்கள் க்ஷத்திரியர்களே ! "மாசுபடினு மணிதஞ்சீர்க்குன்றாவாம்." அதாவது "மாணிக்கம் மாசு பட்டப்பெறினும், அதனது பிரகாசங் குறைபாது."* என்பதையும், "கெட்டாலு மேன்மக்கள் மேன்மக்களே." அதாவது "பல இடுக்கணால் மேற்குலத்தவர் கீழ்க்குலத்தவராகக் காணப்படினும் மேற்குலத்தவர் மேற்குலத்தவரே" என்பதையும் ஒத்து "பிராமணன் சூத்திரன்தொழிலைச் செய்தாலுஞ் சூத்திரசாதியாக மாட்டான்" என மநுவுங் கூறுகின்றார், இதனால் இழிந்தொழில்களைப் புரியினுங் கிராமணிகள் க்ஷத்திரியரே யாகுவர்.

"பேக்நீர்" என்னுந் தேசம் ஜாட்பூருக்கு வடக்கில் இராஜஸ்தான் எல்லைக்குட்பட்டது, அதில் வசிக்கும் "பிராமணர்களுக்கு முக்கியதொழில் பயிர்மூலஜீவனம்" எனப்பட்டிருக்கின்றது.

"Brahmans (in Bikaneer) about 56000 in number, are also mostly agriculturies". Vide. "The Native states of India and their Princes. P. 20.

"கருலை" என்னும் ஊர் இராஜஸ்தனத்திற்கு வடகிழக்கிலும்; குவாலியருக்கும் ஜெயிப்பூருக்கும் மத்தியிலும், ஆக்கிராவுக்குத் தென்மேற்கில் 75-மையில் தூரத்திலும் உள்ளது. அதில் வசிக்கும் பிராமணர்களைச்சுட்டி.

"The, Brahmans, (in Karauli) next in number, are chiefly petty traders, who carry their merchandise on small pack-cattle, which are their own property". Vide. "The Native states of India and their Princes. P. 24.

* P. 21. Appendix C. of Oriental Historical Manuscripts.

"குடிமதிப்புத் தொகையில் பிராமணர்கள் அடுத்தவர்கள். அவர்கள் முக்கியமாக சிறிய வர்த்தகர்கள். அவர்கள் வர்த்தகச் சாமான்களை பொதிமாட்டின்மேரில் கொண்டு போவார்கள். அதுவே அவர்களது ஆஸ்தி."

"செம்பா" என்னும் ஊர் காஷ்மீருக்கு தென்கிழக்கி லுள்ளது. அதிலுள்ள பிராமணர்களைச் சுட்டி :—

"The Rajaputs (in Chamba) to which caste the Chief belongs, are few in number. There is a considerable Brahman population, engaged in agriculture and as shepherds in the winter months". Vide, The Native states of India and their Princes. P. 57.

இத்தேசத்தில் பிராமணர்கள் பயிரிடுதலையும்,* மழைகாலத்தில் ஆடுமாடு மேய்த்தலையுமே தொழிலாக வுடையவர்கள்". இவ் வங்கிலேயப்பகுதிகள், பிராமணர்கள் "பசுக்காற்றல், பயிரிடல், வர்த்தகம் புரிதல்" என்னும் முத்தொழில்களையே சாதித்தொழிலைப்போல் நாளதும் செய்துவருகிறதாக கூறுகின்றதுகள். இத்தொழில்கள் திவாகர நிகண்டால் வைசியரது குலத்தொழில்கள் என விளங்குகின்றது. அப்படி பிராமணர் வைசியத்தொழிலைச் செய்தது சுயவரசொழிந்தமையால் அவர்களது வேதாதி புராணங்கள்பயன்படாமையாலென்க. மேற்கூறிய "பயிரிடல் பசுக்காற்றல் வர்த்தகம் புரிதல்"† என்னும் முத்தொழிலையே பிராமணருக்கு ஆபத்து தருமம் என மநு கூறுகின்றார். அதாவது "ஒரு சாதியான் தனக்குக் கீழ்ப்பட்ட சாதியான் தொழிலைச் செய்து பிழைத்தல்" என்ப்படும். அப்படி மநுக்கூறிய முத்தொழிலை இராஜஸ்தான் தேசத்திலுள்ள பிராமணர்கள் சிரசாகவகித்து, ஆபத்துதரும

* Vide P. 94. Ch. VI. Vol. III. of Bengal District Gazetteer and P. 46, 222, 329. Vol, IV, Statistical account. of Bengal P. 180. Vol. I. of Salem District Manual. and P. 254. No. 88. Vol, XVI. of Madras Journal. 1850.

† மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 82-வது சுலோகம். A Statistical Account of Bengal Vol. IV, P. 46. Indian Companion or General Statistics of India P, 930.

மாக நாளதும் புரிந்துவருகின்றனர்கள். இதனால் அவர்கள்குலம் தாழ்வுபடாது.

"The Rajaputs of Gaya, like the Babhans, generally follow agricultural pursuits*. They were probably among the earliest Aryan settlers in the district, which they wrested from the aboriginal tribes which had hitherto held it" Vide. Bengal district gazetteers Vol. III. Ch. VI. P. 94.

"கயாவிலுள்ள அரசவம்ஸத்தவர்கள் பயிரிடுந் தொழிலைப் பின்பற்றுகின்றனர்கள். அவர்கள் அச்சில்லாவிற்கு பூர்வ ஆரியக் குடிகளாகும்."

"Kshatriyas now to be found in Bengal at the present day instead of forming a Warrior class, they are returned in the census as a trading caste." Vide. A Statistical Account of Bengal. Vol. IX. P. 286.†

"இப்பொழுது பெங்காலில் காணப்படும் க்ஷத்திரியர்கள் குடிமதிப்பில் யுத்தசாதியாக (க்ஷத்திரியராக) யிருப்பதற்குப் பதிலாக, வர்த்தகசாதியாக (வைசியராக) மாறியிருக்கின்றார்கள்." இதைப்போல் **படைத்தொழிலுக்குரியவர்களாகிய ‡ கிராமணிகள் :—" க்ஷத்திரியன் இரசம் முதலான வியாபாரஞ்செய்துலாம் "§** என மநு கூறியிருப்பதால்; அம்மநுவாக்கியத்தை மேற்கொண்டு வர்த்தகத்தை ஆபத்துதருமமாக அநுஷ்டித்து வருகின்றார்கள், இதனால் அக்கிராமணிகள் குலம் தாழ்வுபெறாது அப்பிராமணர்கள் மேற்கூறிய வைசியத்தொழிலைச் செய்தும் வைசியர் என விளங்காது பிராமணரெனவே விளங்கலைப்போல், இக்கிராமணிகளும் ஆபத்துக்காலத்தால் இவர்களது குலத்தொ-

*The Indian Companion or General Statistics of India P.596. 654.

† Vide A Statistical Account of Bengal Vol. IV. P. 48.222. 225. 329, 330.

‡ பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம், 3, 5, 7, 9, 12, 13-வது செய்யுட்களைக் காண்க.

§ மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 95-வது சுலோகம்.

ழில் அழிவுரினும் இவர்களது குலப்பெயர்கள் இவர்களைவிட்டொழி ங்காது, க்ஷத்திரியர் எனவே இப்பிரபந்தத்தால் பிரகாசப்படுவர்.

"வடதேசத்திலுள்ள தூரர் (Turas) தங்கள் வீட்டிற்குள் பிராமணன் நுழைந்தால் அவ்வீடு தீட்டுப்பட்டுப் போயினதென்று யெண்ணி அவ்விடத்திலுள்ள சமயல்செய்யும் மட்பாண்டங்களை யள்ளி வெளியே யெறிந்துவிடுகின்றார்கள்."* இதனால் பிராமணன் தாழ்ந்துபோகமாட்டான்.

நாற் குலத்தில் சூத்திரசாதிக்கு மேற்குலத்தவராகிய வைசியர் வீட்டில் "அம்பட்டன், வண்ணான் பணிச்சவன்" முதல் நாளதும் தாகசாந்திசெய்கிறதில்லை, சூத்திரர்வீட்டில் செய்கின்றார்கள், இதுவலங்கை இடங்கைகட்டு, இதனால் வைசியர் சூத்திரருக்குத் தாழ்ந்தகுலத்தவர் ஆகார். இதைப்போல் இச் சூரியகுலக்கிராமணிகள் தாழ்ந்ததொழிலைப்புரிந்து, தாழ்வுபட்டிருப்பினும், தாழ்குலத்தவர் ஆகார்.

"ஊழிபெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மை
காழியெனப்படுவார்." (திருக்குறள்)

(க-ரை.) "உயர்ந்தோர்கள் காலம் வேறுபடினும் அவர்கள் வேறுபடார்." எனக் கூறிப்போந்த பாவினத்திற்கிணங்க இவ்வரசகுலக் கிராமணிகளது நடையுடைதொழில் வேறுபடினும் க்ஷத்திரியர் எனப் பொருள்படும்படியான இவர்கள் குலப்பெயர்கள் மாறுபடாது நாளதும் நிலைத்து நிற்கின்றது.

கண்ணபிரானது பிரதிஜ்ஞை.

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத ।
அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் ॥

எந்த எந்த ஸமயத்தில் தர்மத்திற்கு வாட்டமும் அதர்மத்திற்குச் செழிப்புமுண்டாகின்றதோ, அப்போது நான் அவதாரம் செய்கிறேன், எனவும்,

இலிங்கபுராணம், கலியுகத்தியற்கை சொன்ன
வத்தியாயம், 10-வது, செய்யுள்.

மதிமரபிற் புவிநிழற்று மாலைநெடுந்
தனிக்குடையோன் மன்னன்றோன்றி

* P. 88. On the Original In habitants of India for the sussion 1887.

கதிருமிழ் வெம்படை யேந்தி
யந்தணர்தம்மொடுங் கூடிக்கலியீற்றின்க
ணதிர்திரைநீர்க் கடலுலகினருமறையி
னெறியொழுகா தகன்றோராவி
கோதியழல்வெஞ்சிலைந்திருகு கொடுங்
கூற்றுமுணவிருந்து கொடுக்குமாதோ.

என்னும் பிரமாணத்தையுமொத்து இச்சூரிய குலக்கிராமணி கள் தங்கள் சுய அரசாட்சி காலத்தில் எவ்விதம் மகிமைபெற்றிருந்தார்களோ அவ்விதமாகவே இனி பரம்பொருளாகியபரமசிவம் ஏற்றகாலத்தில் மகிமைபெறச்செய்வார் என்பதற்கு ஐயமில்லை.

மறையவர்வாழ்க மாமறைவாழ்க
மதிரவிகுலத்தினிலுதித்த
இறையவர்வாழ்க வணிகர்சூத்திரரோ
டெக்குலத்தவர்களும் வாழ்க
பிறையணிசடையானென்னை யாளுடையான்
பித்தனென்றுரைத்திடுமந்தக்
கறையணிகண்டத்தையனு மவனைக்
கலந்தநற்றையல் வாழியவே.

**க்ஷத்திரியகுல விளக்கம்.**

**முற்றும்.**